# ஆல மர விழுதுகள்

பி. வி. ஆர்.

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

வானதி முதற் பதிப்பு : டிசம்பர், 1995
உரிமை : ஆசிரியருக்கு.

திருநாவுக்கரசு தயாரிப்பு

21203
விலை : ரூ. 60-00

3777960

சென்னை மாவட்ட கிளை நூலகம்
99.

அச்சிட்டோர் :
[illegible] பிரிண்டர்ஸ்,
13, குமரன் காலனி,
சைதை, சென்னை-15.

# காணிக்கை

எப்போதும் நான் என் மனத்தில்
தெய்வங்களாக வடித்து வைத்த
என் தாய்க்கும் தந்தைக்கும்
இது காணிக்கையாக இருக்கட்டும்.

# முன்னுரை

**'வானதி'** பதிப்பகத்தார் இந்தப் புத்தகத்துக்கு ஒரு முன்னுரை எழுத வேண்டும் என்று பல முறை எனக்கு அன்புக் கட்டளை விடுத்தார்கள். என் மனம் எப்போதுமே முன்னுரை எழுதுவதில் லயித்ததில்லை. ஓர் ஆசிரியனின் படைப்பைப் படித்து முடித்ததும், ஒவ்வொரு வாசகரும் தம் மனத்தில் வடித்துக் கொள்ளும் எண்ணமும் கருத்தும்தான் அவசியம் என்று நான் எண்ணுகிறேன். வாசகரின் எண்ணமும் கருத்தும் ஆசிரியனின் படைப்பையும் ஆற்றலையும் எடை போடும் பின்னுரையாக அமையும்போது, ஆசிரியன் ஏன் முன்கூட்டியே தலை காட்ட வேண்டும்? இருப்பினும் 'வானதி' பதிப்பகத்தாரின் ஆசையை நான் புறக்கணிக்க விரும்பவில்லை.

இதோ, சொல்ல வேண்டியதை ரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

முன்னொரு காலத்தில் கூட்டுக் குடும்பம்—ஆங்கிலத்தில் சொல்லுவதானால் 'Hindu Undivided Family'- என்ற அரிய அமைப்பு இருந்தது. என்னுடைய சிறிய பருவத்தில் இந்த அமைப்பைப் பிற குடும்பங்களிலும், என் தந்தை வழிப் பாட்டனார் குடும்பத்திலும் கண்டிருக்கிறேன். இந்த அமைப்பு பெரும்பாலும் கிராமங்களில்தான் சீராக ஓடிக் கொண்டிருந்தது.

இப்போது?

பணம், வசதி, தனி மனிதனுக்கு உள்ள பொருள் ஈட்டும் திறன், அவனுடைய விதம் விதமான கல்வித் திறமைகள், எல்லாவற்றுக்கும் மேலாகக் கலியாணமான பெண்களின் சுதந்தர தாகம் எல்லாமாகச் சேர்ந்து, இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்பைத் தலை தூக்க முடியாமல் அழித்து விட்டன. தற்போது வருமான வரிச் சலுகைகளுக்கு மட்டுமே, ஒரு ஏமாற்று வித்தைக்காக 'Hindu Undivided Family' செயல் படுகிறது. இந்த வரிச் சட்டத்தின் கீழ், குழந்தையே இல்லாத தம்பதி கூட HUS என்று சொல்லிக் கொள்ளலாம்!

நான் குறிப்பிட்ட அந்தக் காலத்தில் குடும்பத்துக்கு ஒரு தலைவர் இருந்தார். அவருக்குப் பிள்ளைகளும் பெண்களும், பேரன்களும் பேத்திகளும் இருந்தார்கள். விவசாயம் அல்லது பிற தொழில்களை எல்லா ஆண்களும் ஒற்றுமையாகத் தலைவரின் கண்காணிப்பில் நடத்தி வந்தனர். பல பிள்ளைகள் அல்லது சகோதரர்கள் தனித் தனியாக ஈட்டிய பணம், கூட்டுக் குடும்பத்தின் பொதுப் பணமாகச் சேர்க்கப் பட்டது. பெண்களின் திருமணங்களும், வீட்டின் மற்றச் சடங்குகளும் தங்கு தடையின்றி நடந்து வந்தன. பெண்டிருக்கு வேண்டிய சுதந்தரமும் அளிக்கப் பட்டிருந்தது. சுருங்கச் சொன்னால், ஒவ்வொரு குடும்பமும் ஒரு தனித்துவத்துடன், ஒரு சின்னஞ் சிறு அரசாக விளங்கி வந்தது. தகப்பனார் என்ற ராஜாவின் பெயரைச் சொல்லித்தான், பிள்ளைகள், பெண்கள் என்ற பிரஜைகளை மற்றவர்கள் அடையாளம் காட்டினார்கள்.

இப்போது நிலைமை அடியோடு மாறி விட்டது. மாறிய நிலைமையின் அவலங்களை



நான் எடுத்துக் கூற அவசியமில்லை. நீங்களே உணர்கிறீர்கள்.

ஆனால் இதற்குக் காரணம் என்ன? இதன் விளைவுகள் என்னென்ன?

பிள்ளையின் எலும்பு முற்றி அவன் தனியே செல்லத் துடிக்கிறான். அவனுடைய சுயநலம் ஒரு மனைவி வந்ததும் வெற்றி அடைகிறது. தன் கணவன் ஒரு என்ஜினீயர் அல்லது டாக்டர் அல்லது வக்கீல் அல்லது பெரிய ஆபீஸர். அவன் சம்பாதிப்பது தனக்கும் தன் குழந்தைகளுக்கும் மட்டுமே என அவனும் அவளும் நினைக்கிறார்கள். இந்த நினைப்பு எல்லாப் பிள்ளைகளுக்கும் உண்டாகும்போது கூட்டுக் குடும்பம் உடைகிறது. வயதான தாய் தகப்பன்கள் பெரும்பாலும் சிதிலமடைந்த கிராம வீட்டில் ஏங்கித் தவிக்கிறார்கள். அல்லது பெரிய பங்களாவின் இருட்டு அறைகளில் முடங்கிக் கிடக்கிறார்கள்.

விளைவுகள்—?

பல குடும்பங்களின் சேர்க்கைதான் ஒரு சமூகம். குடும்பத்தின் ஆணி வேர் பிடுங்கப்பட்ட பின், குடும்பம் ஏது? ஒரு புருஷனும் மனைவியும் சேர்ந்தால் ஆங்கிலத்தில் Family என்று நாசூக்காகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் குடும்பம் எங்கே? அன்பு பரிவு, தாட்சண்யம், இரக்கம் என்ற மென்மையான உணர்வுகள் எங்கே?

இனிக் கூட்டுக் குடும்பத்துக்கு மறு வாழ்வு நிச்சயமாக இல்லை. சுயநலம் மேலோங்கி நிற்கும் போது, தாய்ப் பாசமும், தகப்பன் பாசமும், சகோதர வாஞ்சையும் தெருவோரச் சருகுகள் தாம்.

ஆனால் அது மீண்டும் வர வேண்டும் என்ற ஆசை என்னுள் பல வருடங்களாக இருக்கிறது. சின்னச் சின்ன வைரங்கள் பல சேர்ந்தால்தான் ஒரு பிரகாசமான, ஆபரணம் உண்டாக முடியும். சின்னச் சின்னக் கூட்டுக் குடும்பங்கள் சேர்ந்தால் ஓர் அழகான சமூகம் பிறக்கிறது. பல சமூகங்கள் ஏற்படும்போது தேர் வடத்தின் வலு வந்து விடுகிறது.

இந்த வலு நம் புண்ணிய பூமிக்குத் தேவை.

இந்தத் தேவை பூர்த்தியாக வேண்டும் என்ற நைப்பாசையில் நான் இந்த நாவலை எழுதினேன்.

தற்காலத்திய இளைஞர் வட்டத்துக்கு என்னுடைய கதை பிடிக்க நியாயம் இல்லை. ஆனால், அவர்கள் படித்தால், நாம்- முந்திய தலைமுறையினர்- எப்படி இருந்தோம் என்ற எண்ணமாவது அவர்களுக்கு ஏற்படலாம்.

இனியும் வளர்த்துவது தப்பு. கதையைப் படியுங்கள்... ஆங்... ஒரு நிமிடம்.

இந்தப் புத்தகத்தை அழகாக மிளிரச் செய்த 'வானதி' பதிப்பகத்தாருக்கு எனது உளம் கனிந்த நன்றி.

—பி. வி. ஆர்.

21203
377960

# ஆல மர விழுதுகள்

## 1

அனந்தராமனுக்கு அடையாறு ஆல மரத்தைப் பார்த்து ரசிப்பது என்றால் தனி மோகம். திடீரென்று நினைத்துக் கொள்ளுவார். மாடியிலிருந்து அவசரத்துடன் இறங்குவார் வீட்டில் உள்ளவர்கள் அவருடைய விரைவைக் கண்டு அமைதியுடன் ஒதுங்கி நிற்பார்கள்.

அவர் போர்ட்டிகோவுக்கு வருவார். டிரைவர் இருந்தால் சரி. இல்லாமற் போனால் அவர் ஏறிப் புறப்படுவார். கார் சீறிக் கொண்டு வேகத்துடன் கிளம்பும்.

ஆல மரத்துக்குச் சற்று தூரத்தே கார் நிற்கும். அதன் பின் அனந்தராமனை ஒரு மணி நேரத்துக்கு யாராலும் இந்த உலகத்துக்குச் சுண்டி இழுக்க முடியாது.

நூற்றுக் கணக்கான விழுதுகளுடன், அமைதியான கம்பீரத்துடன், உயரத்திலிருந்து ஒரு நிதானத்துடன் இறங்கி வந்து முத்தத்தின் மிருதுவுடன் மண்ணில் உறைந்து நிற்கும் காட்சியில் அவர் தம்மை மறப்பார். விழுதுகள், விழுதுகள், விழுதுகள்தாம். மரத்தின் கீழே மண்டிக் கிடக்கும் பழுத்த இலைகளோ, சருகுகளோ என்றுமே அவர் கண்ணை ஈர்த்ததில்லை. அடி மரம்; விழுதுகள். ஒரு சாம்ராஜ்யம் கண் முன் தோன்றும். அசோகர், சந்திரகுப்தன் எல்லாரும் வந்து போவார்கள். பேரரசி விக்டோரியா தோன்றி மறைவாள்.

அவர் மரத்தை ஒரு தடவை வலம் வருவார். அலங்கோலமாகப் பின்னிக் கொண்டு கட்டுப்பாடு இல்லாமல் வளரும் விழுதுகள் அவருடைய கண்ணுக்கு ரம்யமான கல்யாணப் பந்தலின் கால்களாகத் தோன்றும். ஊசிக் காதில் நூல் நுழைவது போல, விழுதுகளின் இடைவெளி வழியாகப் பிரவேசிப்பார். அவருடைய தளதளவென்ற பொன்னிற மேனி விழுதுகளில் படும்போது. சந்தனம் பூசிய குளிர்ச்சி ஏற்படும். பட்டுத் துணியின் இதம் உண்டாகும். ஆல மரத்தின் அடிமரம், விழுதுகளின் தாய் உன்னதமான மயக்கத்தில் அவரை ஆழ்த்திவிடும்.

கண்கள் பொங்க அவர் நின்று கொண்டிருக்கையிலேயே மரம் திடீரென்று விழுதுகளே இல்லாத ஒரு தனித் தண்டாக, தனி மரமாக மாறிவிடும். சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த சக்கரவர்த்தி அரை வேட்டியுடன் நிற்பதாகப் படும். அவர் பார்த்த நூற்றுக் கணக்கான விழுதுகளெல்லாம் தனித் தனி மரங்களாக நிற்பது தெரியும். ஒவ்வொரு விழுதும் புதிதாகப் பிறந்த ஆணவத்துடன், தாய் மரத்தை விட்டு விலகிப் போய், கிளைகள் இல்லாத் திமிருடன் ஒவ்வொரு மரமாகத் தோன்றும்.

அனந்தராமன் தம்முள் அழுவார். வந்தபோது இருந்த உற்சாகம் மறைந்து போய் மனத்தில் துக்கம் பிறக்கும்.

அமைதியாகக் காருக்குத் திரும்புவார். வீட்டை அடைவார். எழுபது வயசிலும் ஏழு வயதுப் பிள்ளையின் அழுகை அவருள் கேவிக் கொண்டிருக்கும்.

• • •

அன்று அவர் பிற்பகல் மூன்று மணிக்குத் திரும்பிய போது திண்ணைப் படியில், மூர்த்தி நிற்பதைக் கண்டார். இருபத்தெட்டு வயதுப் பிள்ளையிடம் அவர் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். மற்றப் பிள்ளைகளும் பெண்



களும் மூர்த்தியின் பாசத்துக்கும் நேசத்துக்கும், ஏன், பக்திக்கும் கூடத்தான், பற்பல அர்த்தங்களைக் கொடுத்தார்கள். பம்பாய்ப் பெண் சீதா ஒரு தடவை நேரடியாகவே, மூர்த்தியின் உள்நோக்கம் என்ன என்பதைத் தெளிவாகக் கூறி விட்டாள். ஆனால் அனந்தராமன் ஒரு காதில் வாங்கிக் கொண்டு இன்னொரு காது வழியாக அவளுடைய பேச்சு ஒலியை வெளியேற்றினார்.

மூர்த்திக்கும் அவருக்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. அவன் உயரம், ஐந்தே முக்கால் அடி. அவர் குள்ளம், ஐந்தே கால். அவன் ஒல்லி; அவர் குண்டு. அவருடைய பொன்னிற மேனிக்கு அவனை மா நிறம் என்று சொல்லுவதுகூடத் தவறு. கறுப்பு என்று ஒதுக்க வேண்டிய நிறம் இந்த இருபத்தெட்டில் அவனுடைய கம்பீரப் பார்வையோ, அமைதியாக வாய்க்குள் சிரிக்கும் அழகோ, சாந்தமான குணமோ, அவருக்கு அவருடைய இருபத்தெட்டு வயதில் இருந்ததில்லை.

இம்மாதிரி எத்தனையோ வேற்றுமைகள் அவர்களுக்கிடையே இருந்த போதிலும், மூர்த்தி தம்முடைய மறு பதிப்பு, கண்ணாடியில் தெரியும் பிரதி பிம்பம் என்று அனந்தராமன் எண்ணினார். அவருடைய மனத்தின் சங்கீதத்துக்கு அவன் சுருதி. அந்தச் சங்கீதம் என்றாவது ஒரு நாள் நின்று விடும். ஆனால் அன்று சுருதியே சங்கீதமாய் உயிர் பெற்று எழுந்து விடும். இதை அவர் உறுதியாய் நம்பினார். அவருடைய நம்பிக்கை வீண் போகாது என்று அவருக்குத் தெரியும். அவர் என்றுமே தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டதில்லை. மறு பதிப்பு ஏமாற்றாது. அதனால் ஏமாற்ற முடியாது.

போர்ட்டிகோவில் கார் நின்றதும், மூர்த்தி படியிலிருந்து இறங்கி வரவில்லை. அவருக்காக அவன் காத்திருந்தான்.

அரைக் கைப் பனியனும் வேட்டியுமாய் நின்ற அவனைப் பார்த்து முறுவலித்துக் கொண்டே காரிலிருந்து இறங்கிய அனந்தராமன், பிள்ளை ஏதோ சொல்ல வார்த்தைகளைத் தயார் செய்து கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்தார். என்ன பேசப் போவதாக இருந்தாலும், முதலில் அவர் தனியாகக் காரை ஓட்டிச் சென்றதற்குக் கடிந்து கொள்ளுவான். அவர் தயாரானார்

அவர் திண்ணையை அடைந்த பிறகும் மூர்த்தி அசையவில்லை. அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. கோபமா? எதற்கு?

அவர் கம்பளம் விரித்த ஹாலுக்குள் பிரவேசித்துச் சோபாவில் உட்கார்ந்து கொண்டார்.

ஆல மரத்துக்குப் போய்ப் பார்த்து விட்டு வெயிலில் திரும்பி வந்ததில் தொண்டை வறண்டு போய்க் கிடந்தது ராஜம்மா உள்ளே இருக்கிறாள். அவர் வந்திருப்பது தெரிந்தால் வெள்ளித் தம்ளரில் மோர் கொண்டு வருவாள். பிள்ளை மூர்த்தியிடம் சொல்ல மனம் வரவில்லை. அவன் கோபமாய் இருக்கிறான். யார் மீது? அவரைத் தவிர, வேறு யார் மீதும் அவனுக்குக் கோபம் வராது; வர நியாயம் இல்லை.

திடீரென்று மூர்த்தி ஹாலுக்குள் வந்து அவரைத் தாண்டி விரைந்தான்.

கூப்பிடலாமா?

எதற்கு?

அவனாகப் பேசட்டும்!

விரைந்து சென்ற மூர்த்தி மறு நிமிடமே வெள்ளித் தம்ளருடன் வந்தான். அவருக்கு முன்னால் இருந்த டீப்பாயின் மேல் வைத்தான். மனத்தோடு மனம் பேசுவதாகப் பட்டது அவருக்கு. அவன் மனம் விழைந்ததை



இன்னொரு மனம், மனத்திலிருந்து பிரிந்து தனியாக நிற்கும் மனம், புரிந்து கொண்டு விட்டது.

அவர் மோரைக் குடித்துவிட்டுத் தம்ளரை வைத்தார்.

''அப்பா!''

''என்னடா?''

''ஆலமரத்தின் போட்டோ வீட்டில் இருக்கு.''

''தெரியும்.''

''அதைப் பார்த்தால் போதும்.''

''சரி.''

''இன்னிக்குக் கார்த்தாலே வாங்கின மாத்திரை அப்படியே இருக்கு.''

''பிளட் பிரஷர் இல்லை.''

''யார் சொன்னார்கள்?''

''இருந்தாத் தெரியும்.''

''மத்தியான வேளைகளில் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டால் என்னவாம்?''

''எடுத்துக்கறேன்.''

''பச்சைத் தண்ணீரில் குளிக்கப் படாதுன்னா, குளிப்பேன்; கார் ஓட்ட வேண்டாம்னா, ஓட்டுவேன்; கோர்ட்டுக்குப் போக வேண்டாம்னா, போவேன் என்கிறீர்கள். வர வர ஒரு குழந்தையை விடப் பிடிவாதம் அதிகமாயிண்டு வர்றது.''

''பாக்கி?''

''வர்ற ஜனவரி நாலாம் தேதி எழுபது நிறையறது.''

''தெரியும், தொளாயிரத்துப் பத்தில் பிறந்தேன். மார்கழி மாசம், அவிட்ட நட்சத்திரம்.''

''இதுக்கு ஒண்ணும் குறைவில்லை. பம்பாயிலிருந்து அக்கா போன் பண்ணினா.''

''சரி''

''அம்மா சௌக்கியமாப் போய்ச் சேர்ந்துட்டாளாம்!''

''சந்தோஷம்.''

''அம்மாவை ஸெகண்ட் கிளாஸ் ஸ்லீப்பரில் ஏற்றி அனுப்பியதுக்கு அக்கா பொரிந்து தள்ளினாள்.''

''திருப்பி அனுப்பறப்போ ஏர் கண்டிஷன்லே ஏத்தி விடட்டும்.''

''அதைத்தான் நானும் சொன்னேன்.''

''சொன்னாயா?''

''அழுத்தந் திருத்தமாச் சொன்னேன். இவ யார் உங்களைக் கண்டிக்க?''

''அதுதானே? நீ இருக்கியே.''

''அம்மாவின் போக்குச் சரியில்லை அப்பா. நான் சொன்னால் கேட்கறது இல்லை.''

''ஏன், என்ன செய்யறா? மாடர்னாப் புடைவை கட்டிண்டு, பவுடர் போட்டுண்டு லேடீஸ் கிளப்புக்குப் போறாளா?''

''உங்களுக்கு எல்லாம் விளையாட்டாப் போயிடுத்து. உங்களுக்கு எழுபதுன்னா அவளுக்கு...''

''அறுபத்தஞ்சு.''

''இந்த வயசிலே பொண்ணைப் பார்க்கணும், பேத்தியைப் பார்க்கணும்னு ரெயிலேறி இறங்கிக் கொண்டிருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?''



''கெட்டுப் போகும்''

''கிண்டலா?''

''என்னை என்னடா செய்யச் சொல்றே? பொண்கள் பாம்பே கல்கத்தான்னு இருக்கா. ரெண்டு பேத்திகளில் ஒருத்தி டில்லி, இன்னொருத்தி டேராடுன். பாவம், தண்டவாளத்திலே ரெயில் அவளை இழுத்துண்டு போறது.''

''சரி, அம்மாவுக்குப் பாசம் பொங்கி வழியட்டும். ஆனா அவர்களுக்கு வேண்டாமா? எங்கே போச்சு?''

''இருக்கிறதை யெல்லாம் உன் அம்மாவே வச்சுண்டா, பாக்கிப் பாசம் எப்படி இருக்கும்? இப்ப நவம்பர். பொண்களை முடிச்சுண்டு வருவா. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல்லே டேராடுன், முஸௌரி. கிட்ட வரச்சே அப்புறம் மெட்ராஸ். மறுபடியும் ஆகஸ்ட்லே ஒரு மாசம் டில்லி. அங்கிருந்து பூஜா ஹாலிடேஸுக்குக் கல்கத்தா. உங்க அம்மாவின் டூர் ப்ரோகிராம்தான் உலகப் பிரசித்தி ஆச்சே!''

''போகிறாளே, அங்கே ஓய்வு எடுத்துக் கொள்ளுவாள்னு நெனைக்கிறீர்களா?''

''ஓய்வு எடுத்துக் கொண்டா உன் அம்மாவுக்கு உடம்புக்கு வந்துவிடும். ஓடற இயந்திரம் ஓடிண்டே இருந்தாத்தான் நல்லது. நடுவிலே கொஞ்ச நாள் என்ஜினை அணைச்சுட்டா அவ்வளவுதான். என்னை ரிப்பேர் பண்ற மாதிரி உன் அம்மாவையும் ஒர்க்ஷாப்புக்கு அனுப்ப வேண்டியிருக்கும்.''

''கறிகாய் நறுக்குவதிலிருந்து குழந்தைகளைக் குளிப்பாட்டி விடறதுவரை...''

''டேய் மூர்த்தி, உனக்கு ஒரு பாட்டியின் மனம், ஒரு அம்மாவின் குணம் இன்னும் தெரியலேடா.''

''ஒரு மனைவியின் குணமுந்தான் புரியலே.''

''என்னடா சொல்றே ?''

''இங்கே உங்களுக்குச் சுச்ருஷை செய்யட்டும். நீங்க அவளுக்குச் சுச்ருஷை செய்யுங்கோ. ஒரு தலைவலி, பிளட் பிரஷர்னு வர்றப்போ உங்க பக்கத்திலே யார் இருக்கா ?''

''ஏன், நீ இல்லையா ?''

''எனக்கும் ஆபீஸ் வேலைன்னு இருக்கு.''

''நீ இல்லாதபோது ராஜம்மா இருக்கா !''

''சமையற்காரியா ?''

''முப்பது வருஷமா இருக்காடா.''

''முந்நூறு வருஷம் இருக்கட்டுமே, சம்பளக் கடன் தானே ?''

''இப்ப என்ன செய்யணும்னு பொரியறே ?''

''பாம்பேயிலிருந்து அம்மா திரும்பி வந்ததும், அவ மெட்ராஸை விட்டு நகரப் படாதுன்னு நீங்க உத்தரவு போடணும். அம்மா, பாட்டின்னு அவர்களுக்கு ஆசா பாசம் இருந்தா அவர்கள் இங்கே வந்து அதையெல்லாம் கொட்டிட்டுப் போகட்டும் அம்மா இல்லாத வீடு வீடாவே இல்லை.''

''அக்கா வேறே என்ன சொன்னா ?''

''சாரு யூரோப் போறாளாம்.''

''எதுக்கு ?''

''சுத்திப் பார்க்க. காலேஜ்லேந்து போறா. வயசு வந்த பொண்ணை அயல்நாடுகளுக்கு அனுப்புவானேன் ?''

''அது அக்கா பாடு, மாப்பிள்ளை பாடு. நீ ஏன் புலம்பறே ?''



''பொண்கள் படிக்கலாம் ; ஆனா, கூத்தடிக்கக் கூடாது. பாடலாம் ; ஆனா விஸில் அடிக்கக் கூடாது.''

''எனக்குச் சாருவை ரொம்பப் பிடிக்கும்டா. அவளைப் பத்திக் குறை சொல்லாதே.''

''எனக்கு என் அக்கா பொண் மீது ஆத்திரம்னு சொல்றேளா ?''

''அது தெரியாது. அது சரி, ஏன் ஜட்ஜையும் காணோம், அவர் பொண் ஜானாவையும் காணோம் ?''

''முந்தா நாள் ரெண்டு பேருமா வேர்க்கடலை கொரித்தீர்களே.''

''ஆமாம். திருவண்ணாமலைக் கடலை. உள்ளே இருக்கான்னு பார். இருந்தா, ராஜம்மா கிட்டே கொஞ்சம் வறுத்துக் குடுக்கச் சொல்லு. வேர்க்கடலை யிலே வைடமின் இருக்கு ; புரோடீன் இருக்கு.''

''குறிச்சு வச்சுக்கறேன். டாக்டர் தர்ற மாத்திரையை மட்டும் மறந்துடுங்கோ, வேர்க் கடலை நினைவிலே.''

''நீயும் சாப்பிடு. அது ஆத்திரத்தை அடக்கும்.''

''ஏன் எனக்கு இப்படி யெல்லாம் கோபமும் ஆத்திர மும் வர்றது தெரியுமா ?''

''அப்புறமாத் தெரிஞ்சுக்கறேன். அதோ ராஜம்மா வர்றா. ராஜம்மா, ஒரு பிடி வேர்க் கடலை வறுத்துண்டு வா ! ஏண்டா, மாப்பிள்ளை என்னிக்கு ஜப்பான்லேந்து திரும்பறான் ?''

''நாளைக்கு.''

''சீதா சொன்னாளா ?''

''இல்லாமப் போனா எப்படித் தெரியுமாம் ?''

''சரி, சரி !''

''அப்பா, அண்ணா வந்திருந்தான்.''

''சின்னவனா, பெரியவனா ?''

''பெரிய அண்ணா.''

''சரி.''

''உங்களைப் பார்க்கணும்னு வந்தான்.''

''போயிட்டானோ இல்லையோ ?''

''எதுக்கு வந்தான் தெரியுமா ?''

''தெரிய வேண்டாம்.''

''உங்களுக்குத்தான் பேரன் பேத்தின்னா கொள்ளை ஆசையாச்சே !''

''அதுக்கு ?''

''மாலுவுக்கு ஒரு நல்ல வரன் அமைஞ்சிருக்காம்.''

''புள்ளை என்ன செய்யறான் ?''

''ஐ. ஏ. எஸ்.''

''இப்பத்தான் அதுக்கு மவுஸே இல்லையே ! மந்திரிகாரைத் தெறந்து விடற பதவியாயிட்டதே !''

''இருந்தாலும் ஐ.ஏ.எஸ். ஐ.ஏ.எஸ்.தான் யாரோ ஒண்ணு ரெண்டு பேர் தங்க கௌரவத்தைத் தாழ்த்திண்டா, பதவியின் மதிப்புப் போயிடுமா ? புள்ளை ரொம்பக் கெட்டிக்காரன். பார்க்க நன்னா இருக்கான். நாஸிக்கில் இருக்கான்.''

''சந்தோஷம்.''

''அண்ணா வந்தது...''

''பண விஷயந்தானே ?''

''ஆமாம்ப்பா.''



''அடுத்த வாட்டி வந்தா, பேத்தி மாலையும் கழுத்துமா நமஸ்காரம் பண்றப்போ, பத்தாயிரம் ரூபா ஆசிர்வாதமாக் குடுப்பேன்னு சொல்லு.''

''என்னப்பா இது ?''

''ரெண்டு பொண்கள் கல்யாணத்துக்கு ரெண்டு கால்லே நிக்கறப்போ, இவனை யார் லட்சத்து இருபதாயிரத்துக்கு வீடு கட்டச் சொன்னா ? நான் அவனுக்குச் சேர வேண்டிய பிதுரார்ஜிதத்தைக் கூறு போட்டுக் குடுத்தாயிட்டது. என் சொந்தப் பணத்தில் அவனுக்குச் சல்லிக் காசு இல்லை.''

''வீடு கட்டினது தப்பா, அப்பா ?''

''இது என்ன, வீடாப் படலையா ? ஆறாயிரம் சதுர அடி. மாடியிலே மூணு பெட்ரூம், கிச்சன் ; கீழே மூணு பெட்ரூம், கிச்சன். நாளைக்கு எனக்குக் கொள்ளி போட வேண்டியவன். நான் போறபோது எனக்கு முன்னால் சட்டியைத் தூக்கிண்டு போக வேண்டியவன், இப்ப உயிரோடு நான் இருக்கறப்போ என்னுடன் இருக்கப் படாதோ ?''

''இருக்கலாம்ப்பா. ஆனா...''

''நீ வக்காலத்து வாங்க வேண்டாம்.''

''அண்ணா வந்து விட்டுப் போனதை...''

''சொல்லியாச்சு, இல்லையா ? போ.''

''சரி''

''இதோ, வேர்க்கடலை வர்றது, வா !''

''எனக்கு வேண்டாம்.''

''அப்ப எனக்கும் வேண்டாம்.''

''என்னப்பா இது ?''

''உட்கார்டா.''

''சுடறது.''

"ஜானா என்ன சொல்றா? இந்தா ராஜம்மா கொஞ்சம் வெல்லம் கொண்டா. ஜட்ஜ் என்ன சொல்றான் தெரியுமா?"

"ஏன் தோலோடே வாயிலே போட்டுக்கறேள்? உரிச்சுச் சாப்பிடுங்கள்."

"தோல் ருசி உனக்குத் தெரியாதுடா."

"எனக்கு எவ்வளவோ தெரியாது, அப்பா!"

"இனிமே எனக்குக் கவலை இல்லை. உன்னை நீயே புரிஞ்சுண்டிருக்கே. ஜானா ஏன் உன்னையே சுத்திச் சுத்தி வர்றா? அவ அப்பாவுக்கு ஆசை. ஆனா, பேசப் பயப்படறார்."

"ஜானாவைப் பத்தி நாம பேசாம இருக்கிறது நல்லதுன்னு எனக்குப் படறது."

"பேசி ஒரு முடிவுக்கு வர்றது நல்லதுன்னு எனக்குப் படறது."

"உங்க குமாஸ்தா சாயங்காலம் வருவான். டிஸ்கஸ் பண்ணுங்கோ."

"எங்கேடா எழுந்திருக்கிறே?"

"காஃபி. ஸி ஓ எஃப் எஃப் ஈ ஈ."

"ஈ இல்லே. இ."

அனந்தராமன் சிரித்தார். மூர்த்தி சிரித்தான்.

ஜானா அவனுக்குப் பிடித்தவள்; அவருக்குப் பிடிக்காதவள்.

## 2

**தி**ருவான்மியூர்க் கடற்கரையில் உள்ள சிறு குடியிருப்புகளில் ஒன்று சதானந்தம் காலனி. ஹைகோர்ட் ஜட்ஜ் சதானந்தந்தான் கடைசியாக வீடு கட்டினார்.



ஆனால் காலனியின் பெயர் அவருடைய பதவி காரணமாகச் சதானந்தம் காலனி என்று ஆகியது. இதுபற்றி ஜட்ஜுக்கு நிரம்பவும் பெருமை காரில் வரும்போதும் போகும்போதும் பெயர்ப் பலகைகள் கண்ணில் படுகையில் மனம் பூரிக்கும். 'ஜட்ஜ் சதானந்தம் காலனி' என்ற வார்த்தைகள் அவர் போன பிறகும் நிலைக்கப் போகின்றன. சரித்திரத்தில் அவர் ஓர் அத்தியாயமாக இருக்கப் போவதில்லை. ஆனால் ஒரு குறிப்பாக ஆகிவிடுவார்.

அன்று அவருடைய மனம் ஒரு பக்கம் மகிழ்ச்சியில் திளைத்திருந்த போதிலும் இன்னொரு பக்கம் பயத்திலும் ஆதங்கத்திலும் வாடியிருந்தது

ஒரே பெண் ஜானாவுக்கு அன்று இருபத்து இரண்டு முடிந்து விட்டது. இரண்டு வருடங்களுக்கு முன் இதே பங்களாவில், ஊஞ்சல் பலகையில் சங்கிலியைப் பிடித்து உட்கார்ந்தவாறே நெஞ்சு வலியில் உயிர் துறந்த அவருடைய அம்மா, ஜானாவின் கல்யாணத்தைப் பற்றி நாளுக்கு இரண்டு தடவையாவது நச்சரித்து வந்தாள். என்னதான் நாகரிக மோகம் தலை விரித்தாடினாலும், உரிய வயதில் பெண்ணை ஒரு நல்ல மாப்பிள்ளை வசம் ஒப்புவித்துவிடவேண்டும் என்பது அம்மாவின் சித்தாந்தம். இதை அவர் மனம் அன்று ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் செயலாற்ற முடியவில்லை. பி. யு. ஸி., பி ஏ ,பி.எல். என்று மேலும் மேலும் பெண் கல்லூரிக்குத் தாவிக் கொண்டிருக்கையில் அவளை எப்படிப் பிடித்து இழுத்து மணமேடையில் உட்கார வைக்க முடியும்? ஜானாவும் சரி, அவருடைய மனைவி சுசீலாவும் சரி, அவருடைய அம்மாவின் கருத்துக்களை என்றுமே லட்சியம் செய்ததில்லை. ஜானாவுக்குப் பாட்டி என்றால் உயிர். பழைய கதைகளை அவளிடம் இரவு நேரம் போவது தெரியாமல் கேட்பாள். பாட்டியின் கால்களை மணிக் கணக்காக வருடுவாள். வேண்டிய சுச்ருஷைகள் எல்லாம்

செய்வாள். ஆனால் பாட்டியின் கொள்கைகள், சித்தாந்தங்கள் எதுவும் அவள் காதில் ஏறாது. சின்னஞ்சிறு வயதிலேயே கல்யாணம் செய்து கொள்ளுவதைப் போல மடத்தனமான காரியம் இருக்க முடியாது என்பது அவளுடைய எண்ணம்.

சதானந்தம்,பெண்ணின் பிறந்த நாளன்று, பழையதை எல்லாம் நினைத்துப் பார்த்தார் வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் அவருடைய ஏகாந்த சிந்தனை ஒரு பாரமாக இருந்தது. அருகே பலர் இருக்கும்போது சிந்திக்க முடிவதில்லை. தனியாக இருக்கையில் சிந்தனையின் கூடவே பயமும் எழுகிறது.

அவர் வீட்டினுள் சுற்றிச் சுற்றி வந்தார். சுவர்க் கடிகாரம் எட்டே கால் என்று உணர்த்தியது. மயிலாப்பூருக்குக் காலை ஆறு மணிக்கே சென்றவர்கள் திரும்பி வர ஏன் இத்தனை தாமதம்? எல்லாக் கோவில் களையும் முற்றுகையிடுகிறார்களா?

திடீரென்று கார் சத்தம் கேட்கவே, பின் கட்டி லிருந்து அவசர அவசரமாக வாசலுக்கு வந்தார் சதானந்தம்.

தலை நிறைய மல்லிகைப் பூவுடன், நெற்றியில் குங்குமம் பளபளக்க, விபூதிக் கீற்றுப் பிரகாசிக்க, சிவப்புப் பட்டுப் புடைவையில் ஜானா திகழ்ந்தாள். கார் சாவி விரலில் விளையாடியது. சுசீலா ஒரு கையில் பையும் இன்னொன்றில் பூக்கூடையுமாக இறங்கினாள். அன்றைய ஒல்லி சுசீலாவுக்கும் இன்றைய பருமன் சுசீலாவுக்கும் உள்ள வித்தியாசம் அவர் கண்ணை ஒரு தடவை அடித்து வருத்தியது.

''தரிசனம் எப்படி அம்மா?"

''பிரமாதம், அப்பா! கற்பகாம்பாள் சிரித்துக் கொட்டினா. அப்படியே கேசவப் பெருமாள், ஆஞ்சநேயர், நவசித்தி விநாயகர் எல்லாரையும்..."



ஜானாவை இடைமறித்தாள் சுசீலா.

''இதெல்லாம் போறாதுன்னு ஸ்விம்மிங் பூலுக்கும் போகணும்னா; நான் முடியாதுன்னேன்."

''நீஞ்சி நாலு நாள் ஆறது, அப்பா."

''நாளைக்குப் போகலாம். நானும் வரேன்"

''இந்தாருங்கள், பிரசாதம்." சுசீலா நீட்ட, அவர் வாங்கிக் கொள்ள, திடீரென்று டெலிபோன் மணி அடித்தது.

ஜானா ஓடினாள். அவளுக்குத் தெரியும், யார் போன் பண்ணுகிறார்கள் என்று.

''யெஸ், ஜானா பேசறேன்."

''என்னன்னிக்கும் நீ இருபத்து மூணாவே இருக்கணும், ஜானா!"

''தாங்க் யூ, மூர்த்தி."

''ரெண்டு தடவை போன் பண்ணினேன். யாரும் எடுக்கல்லே."

''இப்பத்தான் கோவில்லேந்து நானும் அம்மாவும் வந்தோம்."

''அப்பா?"

''அவர் எதையாவது நெனைச்சு அசை போட்டுண்டிருந்திருப்பார். காதிலே விழுந்திருக்காது. சாயங்காலம், நினைவிருக்கு இல்லையா?"

''எப்படி மறக்க முடியும்? ஆபீஸிலேந்து வீடு, குளியல் அப்புறம் நேரே..."

''என்னை டீஸ் பண்ணணும்னு, வயலட் கலர் ஷர்ட் போட்டுக் கொண்டு வராதீங்க."

''சரி.''

''முதல் முதலா வயலட் கலர் ஷர்ட்டை உங்ககிட்டே தான் பார்த்தேன்.''

''நான் வாங்கறப்போ கடையிலே ஒரு பீஸ் இருந்தது.''

''சகிக்கலே ! க்ரீம் கலர்லே புள்ளி புள்ளியா...''

''அதையே போட்டுக்கறேன், போறுமா ?''

''போறும்.''

''இன்னும் யார் யார் டின்னருக்கு வர்றாங்க ?''

''சந்தியா வர்றா.''

''போர் !''

''என் சித்தி பெண்.''

''இருந்தாலும் போர் !''

''ரஞ்சித் ?''

''சாப்பிட விடமாட்டான். கிரிக்கெட்டைப் பத்தியே பேசுவான்.''

''மாமா பிள்ளை, ஞாபகம் இருக்கட்டும்.''

''நல்ல வேளை, உன்னை விட ரெண்டு வயசு சின்னவன். உன் மாமா கையிலே மட்டையை வச்சிண்டு, ரேடியோ காமன்ட்டரி கேட்கிறவர். மாமா பிள்ளை, ரேடியோ ஸ்டேஷனுக்கே போறவன்.''

''போன ஞாயிறு, லீக் மாட்ச்சில் செஞ்சுரி போட்டான்.''

''ஸீ லீகா, டீ லீகா ?''

''எதானால் என்ன ?''

''நான் ஏ லீகில் ஏழு தடவை....''

''உங்க பிரதாபம்...''



''டக் அடிச்சிருக்கேன்னு சொல்ல வந்தேன். அது சரி ; என்ன பரிசு உனக்குப் பிடிக்கும் ?''

''நீங்கள் !''

''நான் பரிசு பத்திக் கேட்டேன். பலி போடறது பத்திக் கேக்கலே.''

''யாருக்கு யார் பலின்னு காலம் சொல்லட்டும், மூர்த்தி !''

''மோதிரம் ?''

''வேஸ்ட்.''

''புடைவை.''

''நெறைய இருக்கு.''

''ஜவரியில் ஏதானும் ?''

''உங்க இஷ்டம்.''

''அப்ப, கொண்டை ஊசி ஒரு டஜன் வாங்கிண்டு வரேன். மூணு ரூபாயோடு விஷயம் முடியும்.''

''டின்னர் காஸ்ட்லி.''

''எப்படிக் காஸ்ட்லி ?''

''ரியல் பாதாம் போட்டுக் கீர். கிலோ நூத்து முப்பது ரூபா. நீங்க ஒரு லிட்டர் குடிப்பேள். அதுவே...''

''ஒகே, நாலு டஜன் கொண்டை ஊசி. அது சரி, ஜட்ஜ் என்ன செய்யறார் ?''

''அம்மாகிட்டே பேசிண்டிருக்கார்.''

''அன்னிக்கு ஆரம்பிச்சது இன்னமுமா முடியலே ? என் அப்பாகிட்டே பேசச் சொல்லு.''

''நான் எப்படிச் சொல்றது, மூர்த்தி ?''

''அம்மா மூலமா.''

''அந்தப் படலம் ஆயிடுத்து.''

''என் அப்பா என்ன நெனைக்கறார்னு தெரியலே.''

''உங்க அப்பா ஆல மரத்தைச் சுத்திண்டு இருக்கட்டும்.''

''என் அப்பா மனசு உனக்குப் புரியாது, ஜானா. தம் குடும்பம் சின்னாபின்னமாய்ப் போயிடுத்தேன்னு தினசரி உருகறார்.''

''சின்னபின்னமா எங்கே போச்சாம்?''

''பிள்ளைகள் பேரன் பேத்திகளெல்லாம் ஒரே வீட்டில் அவர் கீழே இருக்கணும்னு அவர் ஆசைப் படறார்.''

''ஒரே குடும்பமாவா?''

''ஆமாம்.''

''இந்தக் காலத்திலே அதுக்கு அர்த்தம் இல்லே. உங்களுக்குப் பொருளாதாரம் தெரியுமா, மூர்த்தி? ஐ மீன் எக்னாமிக்ஸ்!''

''அப்புறமாக் கத்துக்கறேன்.''

''ஹிண்டு அன்டிவைடட் ஃபேமிலி, இன்கம் டாக்ஸ் ஒண்ணுக்குத்தான் இப்ப உபயோகப் படறது. இதை உங்க அப்பா மண்டையிலே ஏத்துங்க.''

''சரி, போனை வச்சுட்டு அதைச் செய்யறேன்.''

''சாயங்...''

அவன் ஏற்கனவே டெலிபோனை வைத்த ஒலி கேட்டது.

''யார் ஜானா?''



''மூர்த்தி.''

''வர்றானா?''

''உம்.''

''ஜானா!''

''என்னம்மா?''

''மூர்த்தி நல்லவன்.''

''உம்.''

''கெட்டிக்காரன்.''

''சொல்ல வேண்டியதை யெல்லாம் ஒரே மூச்சில் சொல்லிடு, அம்மா. கட் பண்ணி, கட் பண்ணி...''

''சரி, சொல்லிடறேன். அவனை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு, ஜானா. ஆனா அந்தக் குடும்பம் நமக்கு வேண்டாம். போன நூற்றாண்டில் இருக்க வேண்டிய வருடைய புள்ளை உனக்கு...''

''அம்மா!''

''ஏன் சுசீலா, பொறந்த நாளும் அதுவுமா அவ மனசைப் புண்படுத்தறே!''

''இன்னிக்குச் சொன்னாத்தான் நம்ம பொண் மண்டையிலே நன்னாப் பதியும்.''

''அம்மா, என் கல்யாணம் என் சொந்த விஷயம். முடியும்னா நீயும் அப்பாவும் ஊரார் மெச்சும்படியா நான் நெனைக்கிறவருக்கு என்னைத் தாரை வார்த்துக் குடுங்க. இல்லாமப் போனா...''

''நான் இப்ப என்ன சொல்லிட்டேன்னு நீ இப்படிக் கத்தறே, ஜானா?''

''நீ பேசாம உள்ளே போ, சுசீலா. ஜானா, கவலைப் படாதே! ஒரு நாள் இது பத்தி அனந்தன் கிட்டே பேசறேன்.''

''கோமதிக்கு ஒரு பேத்தி இருக்கா, நெனைவிருக்கட்டும்!'' என்றாள் சுசீலா.

''நீ இன்னும் போகலையா?''

''அவள் என் பொண். எனக்கும் அக்கறை உண்டு. என் ஒரே பொண். முன் மேலேதான் நடப்பேன்னு பிடிவாதம் புடிச்சா, என்னால் எப்படிச் சும்மா இருக்க முடியுமாம்? நீங்க வேறே அவளைத் தட்டிக் குடுக்கறேள். கோமதியின் மூத்த பெண் சீதா பம்பாயில் இருக்கா. நம் புள்ளைக்குப் பேத்தி சாருவை வாங்கிக்கணும்னு கோமதி துடியாய்த் துடிக்கறா.''

''போறும் சுசீலா. உன் இடி தாங்க முடியாம ஜானா உள்ளே போயிட்டா. நிறுத்து.''

''இன்னிக்கு ரெண்டு புள்ளைகளையும் ஒதுக்கிவைச்ச மாதிரி நாளைக்கு மூர்த்தியையும் அனந்தராமன் ஒதுக்கி வைக்க மாட்டார்னு என்ன நிச்சயம்?''

''அப்படிச் செஞ்சா நமக்குத்தான் நல்லது, சுசீலா!''

''எப்படியாம்?''

''ஜானா கல்யாணமாகிப் போயிட்டா 'நானும் நீயுமடி எதிரும் புதிருமடி'ன்னு நீயும் நானும் இங்கே ஒருத்தர் மூஞ்சியை ஒருத்தர் பார்த்து, வெறுப்பு உமிழ வாழ்வோம். பொண்ணும் மாப்பிள்ளையும் இங்கே இருந்துட்டா வீடு கலகலப்பா...''

''அது நடக்காது. என் பொண் கௌரவமா இருக்கணும்னா புருஷன் வீட்டுலதான் இருக்கணும். மாப்பிள்ளையும் மாமனார் வீட்டுக்கே வந்து விட்டா அப்புறம் அவன் மாப்பிள்ளை இல்லை; மாட்டுக்காரன்.''

''உன் கூடப் பேசிப் புண்ணியம் இல்லை, சுசீலா.''

''அந்தப் பாவத்தை நான் தொடங்கி வைக்கவில்லை.''



சதானந்தம் மௌனமானார். சுசீலா நல்லவள் தான். வாய்க்கு ருசியாகச் சமைத்துப் போடுகிறவள் தான். அவருக்குத் தலைவலி என்றால் கூடப் பதறிப் போகிறவள்தான். ஆனால் வார்த்தைப் போர் என்று வந்து விட்டால் சளைக்கமாட்டாள். ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு 'ரெடிமேட்' பதில் வைத்திருப்பாள். கடைசி வார்த்தை தன்னுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்ற முரட்டுப் பிடிவாதம் அவளுடைய இரத்தத்தில் ஊறிப் போயிருந்தது.

அவருடைய மௌனம் சுசீலாவைப் பாதித்திருக்க வேண்டும்.

''காபி கொண்டு வரட்டுமா?'' என்றாள்.

அவர் தலை அசைத்தார்.

• • •

**அ**ன்று மாலை ஆறு மணியிலிருந்தே ஜானா மூர்த்திக்காகக் காத்திருந்தாள். காணவில்லை. ஆறரைக்கு டெலிபோன் செய்தாள். மணி அடிக்கவில்லை. யாரோ தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

ஏழு மணிக்குச் சந்தியா வந்தாள். ரஞ்சித் வந்தான். கிட்டிய உறவுக்காரர்கள் எல்லாரும் வந்தார்கள். மூர்த்தி வரவில்லை.

ஏன்?

ஜானாவுக்கு டின்னர் சோபிக்கவில்லை. அதன் பின் அவள் கலந்து கொண்ட 'ஓபன் ஹவுஸ்' விளையாட்டு ரசிக்கவில்லை. நாலு டஜன் கொண்டை ஊசியுடன் வருவதாகச் சொன்ன மூர்த்தி இல்லாத டின்னரும் விளையாட்டும் என்ன டின்னர், என்ன விளையாட்டு?

ஒரு வேளை... ஒரு வேளை அவளுடைய அம்மாவே ஏதாவது விஷமம் செய்திருப்பாளோ?

அடுத்த கணமே மனத்தைக் கடிந்து கொண்டாள். அம்மாவிடம் அவ்வளவு அநாகரிகம் இன்னும் பிறக்கவில்லை, பிறக்காது.

இரவு டிவி நியூஸைப் பார்த்தார்கள். தலைப்புச் செய்திகளில் கல்கத்தா அருகே ஒரு விமானம் ஒரு விபத்துக்குள்ளான செய்தி அறிவிக்கப்பட்டது.

விவரங்களில், விமான விபத்தில் ஒருவர்கூட உயிர் பிழைக்கவில்லை என்றும், 202 பேர் உயிர் இழந்தார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

காலையில் அம்மாவின் எதிர்ப்பு, மூர்த்தி வராதது, இப்போது விமான விபத்து.

அவளுடைய இருபத்து மூன்றாவது பிறந்த நாள் சரியான வேளையில் உதயமாகவில்லையோ ?

நெஞ்சைக் கையில் வைத்துக்கொண்டு, டெலிபோனை எடுத்தாள். டயல் செய்தாள்.

மூர்த்தியின் குரலையாவது கேட்கலாமே !

ராஜம்மா பதில் கொடுத்தாள்.

''நான்தான் ஜானா பேசறேன், ராஜம்மா !''

''மூர்த்தி சாயங்காலம் பிளேனில் கல்கத்தா போயிருக்கான்.''

''எதுக்கு ?'' விமான விபத்து மனத்தை இடித்தது.

ராஜம்மா ஆரம்பித்தாள்.

''ட்ரங்க் கால் பாம்பேயிலிருந்து. உங்க போனை வச்சுடுங்க.'' டெலிபோன் இலாகாவின் உத்தரவு.

''அப்புறம் பேசறேன் ராஜம்மா, உங்களுக்குப் பாம்பேயிலிருந்து கால் வந்திருக்கு.''

கல்கத்தா—பாம்பே, விமானம்.



விபத்து.

மூர்த்தி பறக்கிறான்.

ஏன் ?

எதற்கு ?

மூர்த்தி போயிருக்கிறான் என்றால், விபத்தில் யார் போயிருக்கக் கூடும் ?

ஜானா குழம்பிப் போனாள்.

## 3

அனந்தராமனுடைய மனைவி கோமதி அன்றும், என்றும் போல, அதிகாலையில் எழுந்து சமையலறைக்குள் பிரவேசித்தாள். காஸ் அடுப்பை ஏற்றிக் காபிக்கு வால் பாத்திரத்தில் தண்ணீரை வைக்கும்போது, முந்தின நாள் சாருவும் மனோஜும் கைமுறுக்குப் பண்ணச் சொன்னது நினைவில் முட்டியது எப்போது பம்பாய், கல்கத்தா, டில்லி, டேராடூன் என்று புறப்பட்டாலும், குறைந்தது நூறு முறுக்குகளாவது அலுமினியம் அல்லது தகர டப்பாக்களில் இருக்கும். தூய வெள்ளை வேட்டியை விரித்துப் பிள்ளையார் பிடித்து வைத்து விட்டு, அடிக்கடி தேங்காய் எண்ணெயை மாவுக்கு உறவாக்கி முறுக்குச் சுற்ற அவள் ஆரம்பித்ததும் மூர்த்தி கத்த ஆரம்பிப்பான். பெண்களும் பேத்திகளும் முறுக்குச் சுற்றக் கற்றுக் கொள்ளவில்லை யென்றால் அவர்கள் முறுக்கு இல்லாமல் போக வேண்டியதுதான். விதம் விதமான உதட்டுச் சாயங்களையும் வண்ணப் பொருள்களையும் கையாளும் விரல்கள் ஏன் ஒரு கை மாவை வைத்துக்கொண்டு தினசரி பயிற்சி பெறக் கூடாது ? பிழைப்புக்கு என்று வேறு ஊர்கள்தாம் கதி என்று சரண் அடைந்து விட்டால் அந்த அந்த ஊர்களில் என்ன கிடைக்கிறதோ அதைத்தான் அவர்கள் அநுபவிக்க

வேண்டும் என்பது மூர்த்தியின் சித்தாந்தம். பெற்ற மனம் பித்தாக இருப்பதில் தவறு இல்லை. ஆனால் பித்தும் ஓர் எல்லையுடன் நிற்க வேண்டும். வயது காலத்தில், பிறரைத் திருப்திப் படுத்த வேண்டும்; தான் செய்து போடுவதை அவர்கள் ரசித்து ருசிப்பதைக் கண்டு பெருமையும் மகிழ்ச்சியும் பெறவேண்டும் என்று தன்னைத் தானே வருத்திக் கொள்வது முட்டாள்தனம் என்று மூர்த்தி அவளிடம் சாதிப்பான். கோமதி பதில் கூற மாட்டாள். சில சமயங்களில் பிள்ளை நெகிழ்ச்சியுடன் கடிந்து கொள்ளும் போது, "உனக்கு நாளைக்குப் பொண்ணும் புள்ளையும் பொறந்து அவர்கள் உன்னை விட்டு விலகி வாழும்போதுதான்டா, நான் இப்பச் செய்வதின் அர்த்தமும் தாத்பர்யமும் புரியும்!" என்பாள்.

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாக அவளுக்குப் புரிந்தது. (ஃபில்டரில் ஏழு தேக்கரண்டி காபித் தூளைப் போடவும், தண்ணீர் கொதிக்கவும் சரியாக இருந்தது. அவள் ஃபில்டர் நிறைய வெந்நீரை ஊற்றினாள்.)

மூர்த்தி அவளைக் கடிந்து கொள்ளுகிறான் என்றால், அது அவன் மீதுள்ள எரிச்சலினால் அல்ல; அன்பினால், பாசத்தால், அம்மா கஷ்டப்படுகிறாளே என்ற தாபத்தினால். (வால் பாத்திரத்தில் மிஞ்சியிருந்த வெந்நீரை ஒரு தம்ளரில் கொட்டிவிட்டு, பாலை ஊற்றினாள் டிகாக்ஷன் இறங்கச் சற்றுத் தாமதமாகும். அதற்குள் பால் கொதித்து விட்டதால், காஸ் அடுப்பில் ஜுவாலையைத் தாழ்த்தினாள்.)

அவளுக்கு அடிக்கடி இருமல் வரும். அதுவும் இரவு வேளைகளில், இருமல் ஒலி கேட்ட உடனே மாடியிலிருந்து மூர்த்தி இறங்கி வருவான். கோமதி ஒரு போர்வையை விரித்துக் 'கொள கொள'வென்றிருக்கும் ஒரு தலையணையை இரண்டாக மடித்துப் படுத்துக் கொண்டிருப்பாள். வீட்டில் தாண்டவமாடும் செல்வத்தில் அவள் ரப்பர் மெத்தையில் உயர் ரக விரிப்புகளுடன் சயனிக்க



லாம். அவள் கிடக்கும் கோலத்தைக் கண்டு மூர்த்தி இரைவான். "என்னம்மா, இப்படி இருமறே?"

"ஒண்ணும் இல்லேடா, மூர்த்தி. ஏதோ இருமல். நீ ஏன் இறங்கி வர்றே? நீ போ."

"ஏம்மா, நான் எவ்வளவு சொன்னாலும் காதில் போட்டுக்காம இப்படி அலட்சியமா இருக்கே? டாக்டர் கிட்டேயும் போகமாட்டேன் என்கிறே? அப்பாவுக்காக அவர் வந்தபோதிலும்கிட்டே போகமாட்டேன் என்கிறே. நாளைக்கு உன்னைக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு நான் ரத்தப் பரிசோதனை பண்ண ஏற்பாடு செய்யப் போகிறேன்."

"சரி, இப்ப நீ போ. இருமல் மருந்தைக் குடிக்கிறேன். நீ போ."

"ஃபானைப் போடறேனே!"

"வேண்டாம். தூசியைக் கிளப்பும். நான் தூங்கிக்கறேன். அப்பா ரூம்லே ஏன் இன்னும் விளக்கு எரியறது? பழங் கணக்குப் பார்க்கிறாரா?"

"அம்மா, நீ ஏன்தான் இப்படி இருக்கியோ?"

"என் ஜன்மம் அப்படி. ஜானா நல்ல பொண்ணு. ஆனா..."

"நான் போறேன் அம்மா. தலைமாட்டிலே மாத்திரையை வைச்சுட்டுப் போறேன். வேணும்னாப் போட்டுக் கொள்."

(ஃபில்டரின் அடிப் பாத்திரத்தைத் தொட்டாள். டிகாக்ஷன் இறங்க ஆரம்பித்து விட்டது. ஜ்வாலைக்குப் பதவி அயர்வு கொடுத்தாள். பால் பாத்திரத்தின் உள் விளிம்பில் கொப்புளித்து முத்துக் கட்டலாயிற்று. அகப்பையால் கிளறினாள். மஞ்சள் நிற வெண்ணெய்யின்

கொழுப்பு பாலில் கலந்து இழைந்தது. பிறகு மெல்ல மெல்லக் குமிழிகள் ஒவ்வொன்றாய், சிறு கொத்துக்களாய், பிறகு ஆவேசமாய்க் கிளம்பின. பால் பட்டிராத பாத்திரத்தின் மேல் பகுதி உறுமியது. பொங்கும் பால் விளிம்பைத் தாண்டும் முன் ஜ்வாலையைப் பதவி நீக்கம் செய்தாள்.)

மூர்த்திக்குக் காய்ச்சி இறக்கிய பாலில் முதல் டிகாக்ஷனைக் கலந்து அரைச் சர்க்கரையில் காபி குடிக்கப் பிடிக்கும் இந்த ரசனையை அவன் கற்றுக் கொண்டது அல்லது ஏற்றுக் கொண்டது அவளிடமிருந்துதான். ஆனால் ஒரு வித்தியாசம். மூர்த்திக்குக் காபி கொதிக்கக் கொதிக்க இருக்க வேண்டும். கையால் தம்ளரைத் தொட முடியாது. ஆனால் அது தொண்டைக்கு இதமாக இருக்கும். அவளுக்குக் காபி நன்றாக ஆறி இருக்க வேண்டும் அண்டாத் தண்ணீரில் பாத்திரத்தை மிதக்கவும் வைப்பாள், சீக்கிரம் ஆற வேண்டும் என்பதற்காக

இப்போது மூர்த்தி என்ன செய்து கொண்டிருப்பான்? ராஜம்மா நல்லபடியாக மனம் அறிந்து செய்து போடக் கூடியவள்தான். இருந்தாலும் மூர்த்திக்கு அம்மா செய்து தந்தால்தான் அலாதி இன்பம். அவளுடைய கைக்கே தனி ருசி இருக்கிறதாம்! இந்தத் தனி ருசி இன்னும் எத்தனை நாட்களுக்கு? நாளைக்கு ஒரு பெண்டாட்டி வந்தால் எல்லா ருசிகளும் மாறுவது போல, நாக்கின் ருசியும் மாறிவிடும். ஆனால் மூர்த்தியைப் பற்றி அவ்வளவு உறுதியாகவோ நிச்சயமாகவோ சொல்லிவிட முடியாது. மூத்தவன் ரங்கா சாந்தி முகூர்த்தமான மறு நாளே மாறிவிட்டான். அன்று இரவு சொர்ணம் என்ன பொடிலய அவன் மீது தூவினாளோ அல்லது என்ன மாயாஜாலங்களைக் காட்டினாளோ? இவ்வளவுக்கும் சொர்ணம் அழகு என்று கூடச் சொல்ல முடியாது.

தொண்டையில் ஆறின காபி இறங்கியபோது தண்மையே ஓர் இளம் சூடாகப் பட்டது. மடக் மடக்



கென்று குடித்தாள் மூர்த்தி காபியை ஒவ்வொரு வாயாக, ஏன், அரை அரை வாயாகக் குடிப்பான். நாக்கில் காபியின் கசப்பு ஒட்டி உறவாட வேண்டும். கடைசி வாய் முடிந்ததும் பச்சைத் தண்ணீரால் வாயை அலம்புவான். இது ஏனோ? குடிக்கும்போது இனிக்கும் கசப்பு; குடித்த பின் கசப்பு ருசி கெட்டு விடுகிறது போலும்.

திடீரென்று சிந்தனை தடைப்பட்டது.

"என்ன அம்மா, காபி குடிச்சியா?" என்று கேட்டுக் கொண்டே சீதா வந்தாள்.

"ஹங்! என்ன கேட்டே?"

"ஓ, மெட்ராஸ் ஞாபகத்திலே மூழ்கிப் போயிட்டயாக்கும்!" சீதா சிரித்தாள்.

அவள் சிரிப்புக்கு எப்போதுமே அர்த்தம் கிடையாது என்று கோமதிக்குத் தெரியும். அக்காவின் சிரிப்பு பொய்ச் சிரிப்பு என்று மூர்த்தி அடிக்கடி சொல்லுவான்.

"காபி இப்பத்தான் குடிச்சேன். இரு, உனக்கும் கலந்து தர்றேன்."

"வேண்டாம் அம்மா. சாரு பல் தேய்க்கிறா. எனக்கும் அவளுக்கும் நான் கலந்து கொள்றேன்"

"மனோஜ் கார்த்தாலேயே போயிட்டான்..."

"சிவாஜி பார்க்குக்குப் போய் ரெண்டு மைல் ஓட்டம். ஒரு மணி நேரம் தண்டாலும் பஸ்கியும் எடுக்கலைன்னா நாள் அன்னிக்கு அவனுக்கு நாளாக இருக்காது. இப்படி ஒரு ஜன்மம்!" என்றாள் சீதா.

"இன்னிக்கு என்ன பண்ணலாம்னு சொல்றே, சீதா?"

"நீ இஷ்டம் போல வை. உன் பாலக்காட்டு எரிசேரிக்கு இதுகள் ரெண்டும் ஜீவனை விடும். முருங்கைக் காய் இருக்கு."

''அது என்னடீ, என் பாலக்காடு ?''

''நீ பாலக்காடுதானே ?''

''அப்ப நீ ?''

''தஞ்சாவூர். சாருவின் அப்பாவுக்குத் தஞ்சாவூர் தானே ? உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே !''

''மலபார்லே நிறையத் தேங்காய் மலிவாக் கெடைக்கிற காரணத்தாலே, ஒவ்வொரு வீட்டுப் புழக் கடையிலும் அஞ்சாறு தென்னை காய்க்கிற காரணத் தாலே, தேங்காயை வீண் பண்ணாமல் சமையலுக்கு உபயோகிக்கிறா. இதிலே என்ன தப்பு ? ருசி இல்லையா?''

''நான் ருசியைப்பத்தி ஒண்ணும் சொல்லலை, அம்மா. எதைச் செய்தாலும் அதிலே ஒரு தேங்காயா ?''

''உங்க தஞ்சாவூர் ஜில்லாவிலேதான் நாகப்பட்டினம் இருக்கு. அங்கேயும்...''

''தெரியும் அம்மா. கொஞ்சம் நகரு. காபி கலந்து கொள்றேன்.''

''சீதா !''

''என்னம்மா ?''

''மத்தியானம் முறுக்குச் சுத்தலாம்னு இருக்கேன். அவசரமாப் பொறப்பட்டு வந்ததில் கொண்டு வரலை. அதை உன் பொண்ணும் பிள்ளையும் சொல்லிச் சொல்லிக் காட்டறா.''

''நீ முறுக்கைச் சுத்துவியோ என்ன செய்வியோ எனக்கு லட்சியமில்லை. இன்னிக்கு எனக்கு ஆயிரம் இடம் போகணும். கடைசியா ஆறு மணிக்கு ஏர்போர்ட்டிலே அவரை எதிர்கொண்டு அழைக்கணும்.''

''சரி.''



''டோக்கியோவிலிருந்து வாங்கிண்டு வர ஒரு லிஸ்டு கொடுத்திருக்கேன். என்ன வாங்கிக்கொண்டு வர்றாரோ?''

''உன் புருஷர் என்ன வாங்கிக் கொண்டு வர்றாரோ என்னமோ ? நிச்சயமா அஞ்சாறு பாட்டில் விஸ்கி இருக்கும்.''

''அது என் தலை எழுத்து ஒருத்தன் குடிக்கிறது அவன் தலை எழுத்து.''

''ஒருத்தன் குடிக்கிறது அவன் தலை எழுத்து இல்லையடீ, சீதா. மூளைக் கொழுப்பு. பொண்டாட்டிகள் புருஷாளுக்கு வெறும் படுக்கைத் தோழியா மட்டும் இருக்கப்படாது. நல்லது பொல்லாததை எடுத்துச் சொல்லி நம்ம வழிக்கு இழுக்கவும் முயற்சி பண்ணணும்.''

''நீ அப்பாவை எத்தனை தடவை உன் வழிக்கு இழுத் திருக்கே ? சொல்லு. எல்லாம் ஊருக்குத்தான் உபதேசம்.''

''உன் அப்பாகிட்டே ஏதானும் ஒரு கெட்ட பழக்கம் இருக்கா ? சொல்லு. அதோ சாரு வந்துட்டா !''

''அம்மம்மா, காபி !''

''உன் அம்மா கலக்கறா, சாரு.''

''நீ கலந்து தா. அம்மா சர்க்கரையை அள்ளிப் போட்டுடுவா !''

கோமதி சிரித்தாள்.

சாரு காபியை வாங்கிக் கொண்டு வெளியேறினாள். கோமதியின் மனத்தில் மூர்த்தி தோன்றினான்.

''என் ஆசையை நீ காதிலேயே போட்டுக்கவில்லை, சீதா.''

''என்ன அம்மா, உன் ஆசை ?''

''சாரு...!''

''...மூர்த்தி !''

''ஆமாண்டி. சொந்தமும் விட்டுப் போகாது. பேத்தியா மாட்டுப் பெண்ணா...''

''அம்மா !''

''ஏண்டி கத்தறே ?''

''இந்தப் பேச்சை இனிமே எடுக்காதே ! போன மாசம் டில்லியில் ஒரு ஐசிஎஸ்ஸின் பிள்ளை ஐஏஎஸ்ஸைச் சிபார்சு பண்ணினா. வேண்டாம்னு சொல்லிவிட்டோம். நாங்க மனசிலே வச்சுண்டிருக்கற மாப்பிள்ளை வேறே. மூர்த்தி வேறே.''

''உன் தம்பி...''

''தம்பியானா என் பொண்ணைப் பலி கொடுக்கணுமா ? உன் புள்ளை எப்படி உனக்கு ஒசத்தியோ அப்படித்தான் எனக்கு என் பொண்.''

''சரிடி அம்மா, பேசலை.''

''பேசப்படாது.''

''எனக்கு ஜானாவை ரொம்பவும் பிடிச்சுத்தான் இருக்கு. ஆனாலும் மூர்த்தி அவளோடு எந்த ரீதியில் பழகுகிறான்னு இன்னும் புரியல்லை. இதுவரையில் ரெண்டு பேரும் கலியாணப் பேச்சையே எடுக்கலை. எடுப்பதற்கு முன் நாம பேசிக் கொண்டால் என்னன்னு தோணித்து. அவ்வளவுதான்.''

''இன்னிக்குச் சாருவைக் கொத்திக் கொண்டு போக, ஆயிரம் லட்சாதிபதி வீட்டுப் புள்ளைகள் காத்திருக்கிறா. இது தெரியுமா அம்மா, உனக்கு ?''

''எனக்குக் கழுகுகளைப் பார்க்கப் புடிக்காது.''

''ஆனா இப்ப நீயே ஒரு கழுகா இருக்கே ! இது புரியறதா ?''



''என்னமோ கேட்டுட்டேன். தப்பு !''

கோமதி ஹாலில் சமையலறையை விட்டு வெளியே வந்தாள். சாரு ஒரு சூடை இருக்கையில் உட்கார்ந்து, கால்களை டீப்பாயின் மேல் போட்டுக்கொண்டு தினசரியில் மூழ்கி இருந்தாள்.

''ஏன் அம்மம்மா, விரலைக் கொடுக்கிற, கடிபட்டுக்கிறே ?'' என்றாள் சாரு, கோமதி வந்ததை உணர்ந்ததும்.

''என்னடீ சொல்றே, சாரு ? நீ பேப்பர்லே தியானமா இருக்கேன்னு நினைச்சேனே !''

''உங்க ரெண்டு பேர் பேச்சையும் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன், அம்மம்மா.''

''சீதா பொரிந்து தள்ளிவிட்டா...''

''மூர்த்தி என் மாமாதானே ? சின்ன வயசிலே என்னைத் தூக்கிக் கொண்டிருக்கிறான். விளையாட்டுக் காட்டியிருக்கிறான். ஒரு தடவை மெட்ராஸிலே எனக்கு ஃப்ளு வந்தப்போ, ராத்திரி பூரா என் பக்கத்திலே படுத்துண்டு, அப்பப்ப ஐஸ் பையை நெத்தியிலே வைச்சிருக்கான்.''

''அதுக்கு என்னடீ இப்ப ?''

''அம்மம்மா, உனக்கு ஒண்ணு புரியலே. நான் அவனுடைய அக்கா பொண். மருமாள் மேலிருக்கிற வாஞ்சையிலே அவன் இதையெல்லாம் செஞ்சிருக்கிறான். எங்களுக்குள்ளே ஆறு வயது வித்தியாசம். எனக்குப் பத்து நடக்கறப்போ அவனுக்குப் பதினாறு. எனக்குப் பதினாறு நடக்கறப்போ மூர்த்திக்கு இருபத்திரண்டு.''

''என்னடி நீட்டி முழக்கறே ?''

''பத்துக்கும் பதினாறுக்கும் வித்தியாசம் ஆறுதான் அம்மம்மா. இருபத்திரண்டுக்கும் இருபத்தெட்டுக்கும்

உள்ள வித்தியாசமும் ஆறுதான். ஆனா ரெண்டு வித்தியாசங்களுக்கும் உள்ள வித்தியாசம் வெறும் ஆறு இல்லை."

"என் மூளை குழம்பறது."

"இப்ப அம்மா பாத்ரூம் போயிருக்கா. காபி சாப்பிட்டா அவ பாத்ரூம் போயிடுவா. வர்றதுக்குள்ளே சொல்லிடறேன்; கேட்பியோ?"

"சொல்லு."

"அஞ்சு வருஷம் முன்னாடி மூர்த்தி மாமா இங்கே ஒரு தடவை வந்திருந்தான். மெட்ரோ தியேட்டரில் ஒரு பிரமாதமான படம் ஓடிண்டிருக்கு, கூட்டிண்டு போறியான்னு மாமாகிட்டே கேட்டேன். சரின்னான். டிக்கெட்டும் வாங்கினான். அம்மாகிட்டே சொன்னேன்; அவ்வளவுதான்."

"நெய்யிலே வேகற அப்பம் மாதிரி பொரிஞ்சாளா?"

"ஊஹூம். எப்பப் பொரியணும், எப்பப் பொரியப் படாதுன்னு அம்மாவுக்குத் தெரியும். பொரியலை. என்னை அழைச்சுண்டு அந்தேரிக்குப் போனா."

"உன் அத்தை வீட்டுக்கா?"

"ஆமாம். அம்மாவுக்கு அத்தைன்னா கரப்பு, எட்டுக் கால் பூச்சி மாதிரி. மூர்த்தி சாயங்காலம் வந்தப்போ நான் இல்லை. ஏன், அவன் மெட்ராஸ் திரும்பிப் போற வரைக்கும் நான் அத்தை வீட்டில்தான் இருந்தேன்."

"இதை மூர்த்தி ஒரு தடவைகூடச் சொன்னதில்லை, சாரு"

"மூர்த்தி ஒரு ஜென்டில்மேன், அம்மம்மா!"

"சீ! என்ன மனுஷி?"

"இதிலேந்து உனக்கு என்ன புரியறது?"



"தன் தம்பி அயோக்கியன்னு நெனைக்கிறா."

"அப்படி யார் வேணும்னாலும் நினைக்கலாம். தன்னுடைய பதினேழு வயசுப் பொண் பேரிலும் பெத்த தாயாருக்கு நம்பிக்கை இல்லை. சின்ன வயசிலே தம்பி, பொண் நெத்தியிலே ஐஸ் பை வைக்கலாம். ஆனா அதே பொண்ணை அவ சந்தோஷத்துக்காகச் சினிமாவுக்கு அழைச்சுண்டு போகப்படாது?"

"உலகம்னா அப்படித்தான்டி இருக்கும்!"

"அதெல்லாம் இல்லை, அம்மம்மா! அம்மாவுக்குத் தாத்தாவைக் கட்டோடு பிடிக்கலை. அஞ்சாறு வருஷமா என் அப்பா கூடச் சரியாப் பேசறதுகூட இல்லை."

"இன்னிக்கு ஏர் போர்ட்டுக்குப் போகப் போகிறாளே!"

"அதெல்லாம் நாலு பேர் கண்ணுக்காக. சாப்பிடறபோது எங்க திருப்திக்காக நாலு வார்த்தை பேசுவாள். அப்பா மனசு எப்படிக் கஷ்டப்படறது தெரியுமா?"

"மனோஜ் என்ன சொல்கிறான்?"

"நானாவது அம்மாலைக் கொஞ்சம் லட்சியம் செய்யறேன். அவன் அது கூட இல்லை. என் அம்மா உன் பழைய பொண் இல்லை! நீ வர்றப்போ இங்கே பார்க்கிற அம்மா, வர்றத்துக்கு முன்னாடியும் வந்து போனப் புறமும் வேறு விதமா மாறிடுவா!"

"சரி, அப்புறம் பேசலாம். பாத்ரூம் தெறக்கிற சத்தம் கேட்கிறது," என்றாள் கோமதி.

முதல் முதலாக, ஏன் பம்பாய்க்கு வந்தோம் என்ற கேள்வி எழுந்தது. கோமதி அலுத்துக் கொண்டாள். மூர்த்தி அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் திடீரென்று நினைவுக்கு வந்தன.

"நீ ஏம்மா மூட்டையைக் கட்டிண்டு ஓடறே? உன்னைப் பார்க்கணும்ங்கற ஆசையும் பாசமும் அவர்களுக்கு இருந்தால் அவர்கள் இங்கே வரட்டுமே!"

பாசம் அவளைப் பொறுத்த வரையில் ஓர் எலிப் பொறி. பெண்கள், பேத்திகள் அந்தப் பொறிக்குள் ஆகாரங்களாக இருக்கிறார்கள்.

அவள் ஓர் எலி. மயங்குகிறாள். மாய்ந்து போகிறாள். மனக் குதூகலத்தில், ஓர் உணர்ச்சி வேகத்தில் பாய்கிறாள். பொறியில் சிக்கிக் கொள்கிறாள்.

விடுதலை!

அவளை எல்லோரும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். ஒருவரும் உபயோகமாக இல்லை.

மூர்த்தி மூர்த்திதான். பெண், பிள்ளை எல்லாம் ஓரளவு தூரத்துக்குத்தான் உறவு. உறவை அவள் மிகைப் படுத்தி, எதிர் உறவை அதே அளவில் எதிர்பார்ப்பது அறிவீனம்.

ஆனால் அவளுக்கு விடுதலை இல்லை. அது கிடைக்காது.

பெண்களும் பிள்ளைகளும் பேரன்களும் அவளுடைய இதயத்திலிருந்து பிறந்து வளர்ந்து விழும் விழுதுகள். ஒரு விழுதைப் பிய்த்து இழுக்க அவள் நினைத்தாலே போதும். இதயம் கசியத் தொடங்கிவிடும்.

விழுதுகளின் கனம், சாரு சொன்ன சம்பவத்தைக் கேட்ட பிறகும் குறையவில்லை.

இரண்டாவது பெண் அகிலா சென்ற வருடம் கான்ஸருக்கு இரையான பிறகு சீதா இன்னும் ஆழமாக அவள் மனத்தில் ஊன்றிப் போயிருக்கிறாள். அவளிடம் என்ன குறைகள் எவ்வளவுதான் இருக்கட்டுமே, அவள் கோமதியின் பெண்; சீமந்த புத்திரி,



கோமதி முருங்கைக் காய் எரிசேரி தயார் செய்யத் தன்னைத் தயார் செய்து கொண்டாள்.

## 4

கடந்த ஏழு ஆண்டுகளாகச் சீதாவும் அவளுடைய கழுத்தில் தாலியைக் கட்டின எஸ். எஸ். நாத்தும் புற உலகத்துக்குத்தான் தம்பதியாக, அம்மா அப்பாவாக, பெண் மாப்பிள்ளையாக இருக்கிறார்கள்.

ஏழு வருடங்களுக்கு முன் ஒரு நாள், பூனாவுக்கு ஒரு மாதர் சங்க விழாவை முன்னிட்டுச் சென்றிருந்த சீதா எதிர்பாராத வண்ணம் (மாதர் சங்க விழாவில் பூசல். விழா ரத்தாகியது.) பம்பாய் திரும்பினாள். ஜுஹூவில் இருக்கும் வீட்டை அடைந்தபோது இரவு மணி பத்து. காரியாலய அலுவலாகத் தான் கல்கத்தா செல்லக் கூடும் என்று எஸ். எஸ். நாத் அவள் புறப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னமேயே சொல்லியிருந்ததால், பத்தொன்பது வயது மனோஜையும் பதினைந்து வயது சாருவையும் அந்தேரியில் இருக்கும் நாத்தனார் வீட்டில் சேர்த்துவிட்டுப் பூனாவுக்குச் சென்றாள்.

கணவர் கல்கத்தா சென்றிருப்பதால், வீட்டில் ஒன்றும் இருக்காது என்று நினைத்தவள், விளக்கு எரிவதைப் பார்த்ததும் ஆச்சரியம் அடைந்தாள். கணவருடைய கல்கத்தாப் பயணம் ரத்தாகி இருக்கக் கூடும் என்ற அநுமானத்துடன் படி ஏறிய அவள், தன்னிடம் உள்ள சாவியால் கதவைத் திறந்த சத்தம், படுக்கை அறையிலே இருந்த எஸ்.எஸ். நாத்துக்குக் கேட்டிருக்க நியாயம் இல்லை. ஏனெனில் அந்த அறை உள்ளே தாழிடப் பட்டிருந்தது.

பெட்டியையும் கைப்பையையும் டீப்பாயின் மேல் வைத்த போது, பக்கத்து அறையில் இரண்டு மூன்று

கண்ணாடித் தம்ளரும் ஒரு பாட்டிலும் அவளுடைய கண்ணில் பட்டன. கணவர் மாலை வேளையில் யாரோ நண்பர்களை அழைத்துக் குடித்திருக்கிறார். இப்போது உறங்குகிறார் என்று அவள் நினைத்தாள். ஏன் இப்படி அவர் குடித்துக் குடித்துத் தம்மையும் கொடுத்துக் கொண்டு வீட்டில் இருக்கிறவர்களுக்கும் மன வேதனை கொடுக்கிறார் என்று அவள் நொந்து கொண்டிருக்கையில், திடீரென்று படுக்கை அறைக் கதவு திறந்தது. அடுத்த கணம் சீதா சிலையானாள். சிலை வடித்தாற் போன்ற ஒரு பதினெட்டு வயதுப் பெண்! அவள் இன்னும் சீதாவைக் கவனிக்கவில்லை. முக்காலே மூன்று வீசம் நிர்வாணமாகக் குளியலறையை நோக்கி நடந்து போனாள்.

சீதாவின் மனத்தில் எல்லா விதமான உணர்ச்சிகளும் ஒரே சமயத்தில் ஊற்றெடுத்துப் பிரவாகமாயின. அவளால் பேச முடியவில்லை.

அப்பெண்ணைப் பின் தொடர்ந்து எஸ். எஸ். நாத் இடுப்பில் ஒரு டவலைச் சுற்றியவராய் வந்தார். வந்தவர் மனத்தில் உள்ளுணர்வாக ஒரு பயம் பிறந்திருக்க வேண்டும். பார்த்தார்.

சீதா அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். எஸ். எஸ். நாத்தும் வாய் திறக்கவில்லை.

குளியலறையில் அழுக்கைக் கழுவிவிட்ட பின் வெளியே வந்த பெண் வெட்கமில்லாத ஒரு சிரிப்புச் சிரித்துக் கொண்டே படுக்கை அறைக்குள் பிரவேசித்தாள்.

சீதா சிலை நிலையிலிருந்து இன்னமும் திரும்பவில்லை. எஸ். எஸ். நாத் மட்டும் அறைப் பக்கமாகத் திரும்பி அவசர அவசரமாக ஏதோ முணுமுணுத்தார்.

''உங்களுக்கு எல்லாவற்றிலும் அவசரம். ட்ரெஸ் பண்ணிட்டுத்தானே வரணும்?" என்ற குரல் சீதாவின் காதில் கேட்டது.



கைப்பையுடன் அவள் படுக்கை அறையிலிருந்து வெளியேறி வாசற் கதவை நோக்கி நடக்கையில்தான் சீதாவைப் பார்த்தாள்.

''ஓ, நீதான் அடுத்த பொண்ணா? ஹாய், இவளையும் வரச் சொல்லியிருக்கிங்கன்னு என் கிட்டே ஏன் சொல்லலே? ரொம்ப சரி. போம்மா போ! குஷாலாய் இரு!"

கைப்பையை வீசிக் கொண்டு அந்தப் பெண் சென்றாள்.

சிலை நகர்ந்தது. சோபாவில் உட்கார்ந்தது.

எஸ். எஸ். நாத் அவள் அருகே வந்தார். எதிரே உட்கார்ந்தார். சீதா எழுந்து, விஸ்கி பாட்டில் இருந்த அறைக்குள் சென்று, உட்பக்கம் தாழிட்டுக் கொண்டாள். இருவரும் அன்று நடந்ததைப் பற்றிப் பேசிக் கொள்ளவில்லை. அவசியம் இல்லை என்று சீதா நினைத்தாள் பேச ஒன்றும் இல்லை என்று எஸ். எஸ். நாத் நினைத்தார்.

மூன்றாம் நாள் சீதா விவாகரத்து கேட்டாள். கோர்ட் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றார் நாத். அது இயலாத காரியமாகப் பட்டது சீதாவுக்கு. சாட்சியங்கள் இல்லை. அந்தப் பெண் யாரோ, எங்கே இருக்கிறாளோ? மேலும் அவளுடைய நாற்பத்தோராவது வயது ஓர் இரண்டும் கெட்டான் வயதாக இருந்தது. பத்தொன்பது வயதுப் பிள்ளையும் பதினைந்து வயதுப் பெண்ணும் என்ன நினைப்பார்கள்? 'பாம்பே நாகரிக சமுதாயத்தில் சீதா ஒரு பெரிய புள்ளி அல்ல என்றாலும் ஒரு தெரிந்த புள்ளி. ஒரு பெரிய சர்வ தேசக் கம்பெனியில் உயர் பதவியில் இருந்து கொண்டு மாதம் ஏழாயிரம் வாங்கும் நாத், தம்முடைய நாற்பத்தாறாவது வயதிலும் இரவுக்கு ஒரு பெண்ணாக வாடகைக்கு எடுக்க வசதி

படைத்தவர். அவரை எதிர்த்துப் போராடுவதில் அர்த்தம் இல்லை. கோபித்துக் கொண்டு குழந்தைகளுடன் சென்னைக்குச் செல்லுவதும் அறிவீனம். நஷ்டம் அவளுக்குத்தான்.

விவாக ரத்துக் கோரிக்கை பிசுபிசுத்தது. கணவனுடைய வாழ்க்கை முறை என்ன என்று புலப்பட்டு விட்டது. திருட்டைக் கண்டு பிடித்த பிறகுதான் ஒருவன் திருடன் ஆகிறான் என்பது போல, அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகுதான் நாத்தின் உண்மைச் சொரூபம் புரிந்தது. அந்தச் சொரூபத்தை அவரிடமே சுட்டிக் காட்டினால், அவருக்கு நன்மை ஏதும் கிடைக்காது. அவர் மேலும் மேலும் தம் விளையாட்டுகளில் மூழ்குவார்.

வேறு எந்த நல்ல வழியும் இல்லாத ஒரே காரணத்தால், சீதா தொடர்ந்து நாத்துடன் இருந்தாள். ஆனால் வாழவில்லை. அவருடைய சுண்டு விரல் கூடத் தன் மீது படாமல் பார்த்துக் கொண்டாள்.

உறவினருடைய திருப்திக்காக அவருடன் கலியாணங்களுக்கு, விழாக்களுக்குச் சென்றாள். ஆனால் அவள் அவருடன் உறவாடவில்லை. குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக அவள் அவருக்கு உணவு பரிமாறினாள். ஆனால் உள்ளத்தைப் பரிமாறவில்லை.

இதை எஸ். எஸ். நாத்தும் புரிந்து கொண்டு, அவளுடைய மனத்தின் வழியே நடந்தார். அவளுடைய ஒரு பிறந்த நாளுக்கு வைர நெக்லஸ் பரிசாக அளித்தார். இன்னொரு பிறந்த நாளுக்கு ஃபியட் கார் வாங்கிக் கொடுத்தார்.

அவளுக்கு எல்லாம் கிடைத்தன. ஆனால் எதையும் அநுபவிக்க முடியவில்லை. அவர் கொடுத்த ருசிகளை அவளால் ரசிக்க முடியவில்லை. அவர்களுக்கு இடையே இருக்கும் இந்த ரகசியம் இதுவரையில் குடும்பத்தைப்



பாதிக்கவில்லை. பாதிக்கக் கூடாது என்று அவள் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள்.

அன்று மகாலட்சுமி கோவிலுக்குச் சென்று அப்படியே வொர்லியில் இருக்கும் சிநேகிதி பூர்ணாதேவியைச் சந்தித்து விட்டு, ஸான்டா குருஸ் விமான நிலையத்தை அடைந்தாள் சீதா. நேரம் மாலை நான்கு மணி. ஜப்பான் விமானம் கல்கத்தாவை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்று ஒலிபெருக்கியில் அறிவித்தார்கள். கல்கத்தாவில் வேறு விமானம் ஏறினால் பம்பாய் வந்து சேர ஏழரை ஆகும் என்று மனம் கணக்குப் போட்டது.

ஜப்பான் விமானம் சரியாக மூன்று மணிக்குக் கல்கத்தாவை அடைய வேண்டும். அப்படி அடைந்தால் பம்பாய் விமானத்தை மூன்றே முக்காலுக்குப் பிடிக்கலாம். ஆறு அல்லது ஆறே காலுக்குப் பம்பாயை அடையலாம். என்ன செய்ய? ஜுஹூவுக்கே திரும்பிப் போய் விட்டால்? அம்மா போர் அடிப்பாள். சாருவையும் மூர்த்தியையும் இணைத்துப் பேசுவாள்.

எவ்வளவு நேரந்தான் விமான நிலையத்தில் காத்திருக்கிறது?

திடீரென்று பம்பாய் விமான நிலையம் அலறியது. சிப்பந்திகள் அலறினார்கள்; ஓடினார்கள்.

அவர்கள் போட்ட சத்தத்தில் அலறிக் கொண்டே இருந்த ஒலிபெருக்கி என்ன சொல்லுகிறது என்று யாருக்கும் புரியவில்லை.

சீதாவுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. விமான விபத்து. எந்த விமானம்? எங்கே நொறுங்கியது?

பம்பாய் விமான நிலையம் இப்படி அலறுகிறது என்றால் அந்த விபத்து இங்கே எங்கேயோ அருகேதான்

ஏற்பட்டிருக்க வேண்டும். எங்கே? எந்த ஊரிலிருந்து வரும் அல்லது எந்த ஊருக்குச் செல்லும் விமானம் நொறுங்கி யிருக்கிறது? எவ்வளவு பேர் உயிர் இழந் தார்கள்?

சீதா தன்னந் தனியாக உட்கார்ந்தாள். அவளுடைய கழுத்தில் தாலி கட்டியவனைத் தாங்கி வந்த விமானந் தான், சில நிமிடங்களுக்கு முன் கல்கத்தா அருகே விழுந் திருக்கிறது என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை.

உண்மை ஐந்து மணிக்குத் தெரிந்தபோது, அவள் சிலையாக உட்காரவில்லை. எழுந்தாள். இருந்த அத்தனை பேரும், மொத்தம் 202 பேர் உயிர் இழந்திருக்கிறார்கள். ஏழு வருடங்களுக்கு முன்பேயே, அவளைப் பொறுத்த வரை மரணமடைந்து விட்ட எஸ். எஸ் நாத்தும் அவர் களில் ஒருவர்.

அவளுக்காக அவர் வாங்கி வந்திருக்கக் கூடிய ஜப்பானியப் பொருள்கள் என்ன என்னவாக இருக்கும் என்ற கேள்வி அவளுடைய சலனமற்ற மனத்தில் எழுந் தது. இந்த எண்ணத்தினூடே அவள் காரை ஓட்டத் தொடங்கினாள்.

வீட்டை அடைந்தாள். தேங்காய் எண்ணெய் காயும் மணம் வீட்டினுள் பரவிக் கிடந்தது. ஏற்கனவே ஆளுக்கு இரண்டாக வைத்து மனோஜும் சாருவும் முறுக்கைக் கொறித்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் டெலிபோனை எடுத்தாள். அண்ணனும் தங்கையும் கேள்வி கேட்கும் முன்பே அவளுடைய பேச்சு பதிலாக அமைந்தது.

''அப்பா, சீதா பேசறேன். விமான விபத்து. உடனே மூர்த்தியைக் கல்கத்தாவுக்கு அனுப்புங்கள். மனோஜை இங்கிருந்து அனுப்பறேன். என்ன சொல்றீங்க? தலையிலே இடியா? என்ன செய்யறது? என் தலையிலே என்னிக்கோ



இடி விழுந்தாகி விட்டது. இல்லே, நான் போகலை. சடலம் எல்லாம் வெறும் கரிக்கட்டையா ஆகியிருக்காம். உடனேயே மூர்த்தியை அனுப்புங்கள்!''

அவள் போனை வைத்தாள். சாரு ஓவென்று அலறி னாள். மனோஜ் மௌனமாக நிற்க, நீர் தாரை தாரை யாகப் பெருகியது. விஷயமறிந்த கோமதி அடுப்பை அணைத்து விட்டு ஓடி வந்தாள்.

''என்னடி சீதா, என்ன? என் வயித்திலே நெருப்பை அள்ளிக் கொட்றியே!''

''மனோஜ், சீக்கிரம் புறப்படு. நான் விமான நிலையத் திலே உன்னை விடறேன்.''

''சீதா!''

''கத்தாதே, அம்மா. உன் மாப்பிள்ளை விமான விபத் திலே போயிட்டார். அவர் சடலம் அடையாளம் தெரியாமே கருகியிருக்கும். மனோஜ் போறான். மூர்த்தியை அனுப்பச் சொல்லி யிருக்கேன். மனோஜ், கிளம்புடா!''

''ஐயோ தெய்வமே!'' சாரு அழ ஆரம்பித்தாள்.

''என் மாப்பிள்ளைக்கு இப்படியா நேரணும்?''

''ஒரு விசேஷம் பார்த்தாயா, அம்மா? உன் மாப்பிள்ளைக்கு மனோஜ் கொள்ளி போடறது என்பது ஒரு மரியாதைக்காக; ஒரு வழக்கத்துக்காகத்தான். அவருக்குப் பிளேனே கொள்ளி போட்டுட்டது.''

தன் தாயார் துக்கத்தின் எல்லையைத் தாண்டி நின்று பிதற்றுகிறாள் என்று சாரு நினைத்தாள். அப்பாவின் மரணத்தை அவளால் நம்ப முடியவில்லை. அவர் அவள் கண் முன் வந்து வந்து போனார். அந்தப் பதினெட்டு வயதுப் பெண் சீதாவின் கண்முன் வந்து வந்து போனாள். அவளுடைய கணவருடன் இருவருமே ஒரே படுக்கையைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அப்பெண் வாங்கிக் கொண்டது ஒரு நாள் கூலி. அது காரணமாக அவள் இப்போதும் சுமங்கலியாக இருக்கிறாள்.

சீதா வாங்கிக் கொண்டது ஜன்மாந்தரக் கூலி. அதனால்தான் அவளுக்கு அவருடைய மரணம் ஒரு புதுக் கோலத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டது.

## 5

அனந்தராமன் சீதாவுடன் டெலிபோனில் பேசிக் கொண்டிருக்கையிலேயே, மேற்கொண்டு என்ன என்ன செய்ய வேண்டும் என்று தம்முள் யோசிக்கலானார். யோசனைக் கிடையே சீதாவின் குரலில் ஏன் அழுகையின் எதிரொலிகள் இல்லை என்ற ஆச்சரியமும் திகைப்பும் தோன்றின. அவளைப் பொறுத்த வரையில் என்றைக்கோ இடி விழுந்தாகி விட்டதாமே! இதற்கு என்ன அர்த்தம்? அவளுடைய குரலில் முழுக்க முழுக்க லௌகிகந்தான் ஒலிக்கிறது. தன் கணவர் ஒரு சில மணி நேரங்களுக்கு முன் கல்கத்தா அருகே விமான விபத்தில் கருகிப் போயிருக்கிறார் என்பதை எந்த விதமான உணர்ச்சிக் கலவையும் இல்லாமல் தெரிவிக்கிறாள். ஒரு மனைவியின் குரலாக இல்லை. ஒரு வேதாந்தியின் ஞானமும் இல்லை. யாரோ ஒரு வியாபாரி தன்னுடைய சரக்கு பற்றிப் பேசுவது போல் சீதா பேசுகிறாள். ஏன்? சீதா இப்படிப் பேச என்ன காரணம்?

அவர் இன்னும் பேச நினைத்தார். பேரக் குழந்தைகளைச் சமாதானம் செய்ய, ஆறுதல் சொல்ல விரும்பினார். ஆனால் சீதா அதற்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை. டெலிபோனை அவளே முடித்துக் கொண்டாள்.

பேசி முடிந்த பின்னர் அனந்தராமன் டெலிபோன் அருகேயே சில நிமிஷங்கள் நின்றார். மாப்பிள்ளை!



ஐம்பத்து மூன்று வயதில் இப்படி ஒரு முடிவு. பம்பாயில் ஒரு பெரிய சர்வதேசக் கம்பெனியில் சிறந்த பதவி. கிட்டத்தட்ட ஏழாயிரம் ரூபாய் மாத வரும்படி. கலியாணமாகாத பெண். இன்னும் உடலின் திடகாத்திரத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கும் பிள்ளை. இருவரையும் பெற்ற ஒருத்தி, ஒரு யதார்த்தவாதி. தன் பிள்ளையைக் கல்கத்தாவுக்கு உடனடியாக அனுப்புகிறாளாம். அவர் மூர்த்தியைச் சென்னையிலிருந்து அனுப்பி, ஏற்கனவே விமானம் கொள்ளி போட்டு விட்ட அவளுடைய கணவனின் கரிக் கட்டையை மீட்க வேண்டுமாம்.

அனந்தராமனுடைய நெஞ்சம் கேவியது. போன வருடம் இதே நாளில் அவருடைய பெண் அகிலா கான்ஸரில் இறந்து போனாள். பெண்ணின் மரணம், அவரும் சரி, மற்றவர்களும் சரி, மூன்று மாதங்களுக்கு மேலாகவே எதிர்பார்த்திருந்ததுதான். அது சம்பவித்த போது பெரும் அதிர்ச்சி ஏதும் அவரைப் பாதிக்கவில்லை. அவருடைய ரத்தத்தினின்றும் தோன்றிய ரத்தம் உறைந்து போனது நெஞ்சில் ஒரு தீராத புண்ணைத் தோற்றுவித்தது. அவருடைய மடியிலும் தோளிலும் விளையாடிய ஒரு ஜீவன், பூத்துக் குலுங்கும் வயதில் மறைந்து போனது புண்ணில் ரணத்தை ஏற்படுத்தியது.

ஆனால் இந்த மரணம் ஓர் இடி போன்றது. எஸ். எஸ். நாத்தைப் பற்றி அவருக்கு அப்படி ஒன்றும் மனம் பூரிக்கும் படியான நல்ல குணங்களோ சிறப்பு அம்சங்களோ இல்லை. அவன் குடிப்பான். ஆனால் குடிப் பழக்கம் கீழ் மட்டத்தில்தான் குடியைக் கெடுக்கிறது. மேல் மட்டத்தில் ஒருவன் குடித்தால் அது அவனுடைய அந்தஸ்தின் அளவைக் காட்டுகிறது. கம்பெனியின் நிமித்தம் குடி மன்னிக்கக் கூடிய குற்றம்.

மாப்பிள்ளை எஸ். எஸ். நாத்தின் கலகலப்பு அவர் காதில் ஒலிக்க ஆரம்பித்தது. அவர் பம்பாய் சென்றால், மாப்பிள்ளை கொடுக்கும் உபசாரமே தனி. ரெயிலடி

அல்லது விமான நிலையத்தில் கார் நிற்கும். அதன் பின் டிரைவர் முழுக்க முழுக்க அனந்தராமனைப் பார்த்துக் கொள்வான். மாப்பிள்ளையைப் பார்ப்பதோ அவனுடன் சேர்ந்தாற் போலப் பதினைந்து நிமிஷங்கள் பேசுவதோ துர்லபம். ஆனால் சதா அவர்களிடையே அவன் இருப்ப தான பிரமையை ஏற்படுத்தி விடுவான். மாமனாரிடம் நாத்துக்குத் தனி மரியாதையும் மதிப்பும் உண்டு. "பேசும் லட்சியம் ஒன்று. செய்யும் காரியம் இன்னொன்று என்ற இயல்பு இல்லாதவர் மாமனார்!" என்று பிறரிடம் பெருமையுடன் அவன் கூறிக் கொள்ளுவதாக அவர் கேள்விப் பட்டிருக்கிறார்.

அந்த மாப்பிள்ளை இன்று இல்லை. முகம் தெரியாமல், அங்க அடையாளங்கள் தெரியாமல் ஒரு பிணக் குவியலில் கிடக்கிறான்.

அனந்தராமன் சற்றே நகர்ந்தார். குளியலறையி லிருந்து மூர்த்தி ஹாலுக்கு வந்தான்.

"மூர்த்தி!"

"என்னப்பா?"

"கையிலே எவ்வளவு பணம் வச்சிருக்கே? அதாவது கரன்ஸி நோட்டுக்களாக..."

ஒரு நிமிடம் மூர்த்தி ஆச்சரியத்தில் உறைந்து போனான். அவனுக்குத் தெரிந்து இதுவரை இப்படி ஒரு கேள்வியை அவர் அவனிடம், ஏன், யாரிடமும் கேட்ட தில்லை இன்று ஏன் கேட்கிறார்?

"சொல்லேன்டா"

அவருடைய குரல் அவரைக் காட்டிக் கொடுத்து விட்டது. வழக்கமான வெண்கலக் கம்பீரக் குரலில் இல்லை. தொண்டையில் அடிபட்டிருக்கிறது. அதில் கசிவு உண்டாயிருக்கிறது.



"நூறு ரூபாய் சில்லறை இருக்கு."

"சரி. ரெண்டு மூணு நாளுக்கு வேண்டிய துணிமணி களை ஒரு பொட்டியில் போட்டுக்கொள். இன்னும் அரை மணி நேரத்தில் தயாரா இருக்கணும். டிரைவர் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருப்பான். அவனைப் போக வேண்டாம்னு சொல்லு. நான் பணத்துக்கு ஏற்பாடு செஞ்சுட்டு அப்படியே இண்டியன் ஏர்லைன்ஸுக்குப் போன் செய்கிறேன்."

"என்னப்பா சொல்றீங்க?"

"நாத் போயிட்டான்."

"எ... என்ன... என்ன சொன்னேள்? அத்திம்பேர் போயிட்டாரா?"

"விமான விபத்து. கல்கத்தா அருகில். உம்! புறப்படு. மனோஜ் நேரே அங்கே போறானாம்."

"ஜப்பானீஸ்..."

"ஆமாம்"

மீண்டும் அனந்தராமன் டெலிபோனுக்கு வந்தார்.

இண்டியன் ஏர்லைன்ஸ்.

விஷயத்தைக் கூறியதும் காரியம் எளிதாக முடிந்து விட்டது. நெருங்கிய உறவினர் என்றால் பயணம் இலவசமாம்.

அடுத்தபடியாக அட்வகேட் கிருஷ்ணனுக்குப் போன் செய்தார்.

"மூர்த்தி வந்து கொண்டே இருக்கிறான். ரெண்டா யிரமோ மூவாயிரமோ பணமாக் குடு. அவன் செக் தருவான்."

கிருஷ்ணன் ஒரு காலத்தில் அவரிடம் ஜூனியராக இருந்தவன். அவனுடைய இரு தம்பிகளும் ஐந்து

நட்சத்திர ஓட்டலின் அதிபர்கள். பெட்டியில் எப்போதும் பணம் குவிந்திருக்கும்.

''செக் அனுப்பவேண்டாம். அப்புறமா நானே வந்து வாங்கிக் கொள்கிறேன்.''

கிருஷ்ணன் காரணம் ஏதும் கேட்கவில்லை. கேட்க மாட்டான். பெரியவரிடம் அவனுக்கு, ஒரு பிள்ளையிடம் கூடக் காண முடியாத பக்தி, அன்பு, அபிமானம் எல்லாம் உண்டு.

''கிருஷ்ணா, நாத் இன்னிக்கு விமான விபத்திலே போயிட்டான். சாயங்கால வேளையிலே கையிலே ரொக்கமா நிறைய இல்லை.''

''மாப்பிள்ளை நாத் போயிட்டாரா? நான் இப்ப அங்கே வர்றேன். வந்து கொண்டேயிருக்கேன்.''

''வேண்டாம். மூர்த்தி அங்கே வர்றான். நீ பணத்தைத் தயாரா வை.''

அவர் டெலிபோனை வைத்துவிட்டுத் திரும்பினார்.

மூர்த்தி பெட்டியுடன் வந்தான்.

''அக்காவும் மனோஜுடன் புறப்படறாளா?''

''இல்லை.''

''இல்லையா?''

''இல்லை.''

''ஏனாம்?''

''கரியாப் போயிட்ட புருஷனுடைய உடலைப் பார்க்க மனசு கஷ்டப் படாதா? சரி, சரி, நீ கிளம்பு. போற வழியில் ஆழ்வார்ப்பேட்டையில்...''

''ஆழ்வார்ப் பேட்டை போற வழியில் இல்லை, அப்பா.''



''சரி, கிருஷ்ணன் வீட்டுக்குப் போ. பணம் தருவான். ஏர்லைன்ஸில் ஆபரேடிங் டிபார்ட்மெண்டுக்குப் போய் விஷயத்தைச் சொல்லு. உன் பெயரில் டிக்கெட் காத்துண்டிருக்கு.''

''அப்புறம்?''

''அவ்வளவுதான்.''

''பாடி?''

''சீதா பேசின பேச்சைப் பார்த்தால் அவள் அதைப் பம்பாயில் எதிர்பார்க்கவில்லை. அதான் மனோஜை அனுப்புகிறாள்.''

''அப்போ, பாடியை...''

''எப்படி வேணும்னாலும் டிஸ்போஸ் பண்ணிட்டு வா.''

''சரி, நான் புறப்படறேன், அப்பா.''

''ஏதாவது சாப்பிட்டாயா?''

''வேண்டியிருக்கலே.''

''வயிறு காயும்.''

''நான் வர்றேன்.''

மூர்த்தி நடந்தான்.

''இருடா.''

''என்னப்பா?''

''நானும் கூட வர்றேன்.''

''கல்கத்தாவுக்கா?''

''இல்லேடா, மீனம்பாக்கம் வரையில். நீ சீக்கிரம் வந்து விடு. என்ன? ரங்காகிட்டே சொல்லணும், ராமுவுக்குச் சொல்லணும்.''

''அவர்களுக்கு நீங்க இன்னும் சொல்லலையா ?''

''ஏது நேரம்? சீதாவுடன் பேசின கையுடன் உன் கிட்டே சொன்னேன். அப்புறம் டிக்கெட்டுக்கு ஏர்லைன்ஸ். பணத்துக்குக் கிருஷ்ணன். ரங்கா, ராமு கிட்டே இப்பவே சொன்னாத்தான் ஆச்சா ? மெதுவாத் தெரிந்து கொள்ளட்டும்.''

''இப்பவே நான் பண்ணிட்டு வந்துடறேன். பெரிய அண்ணா கிட்டே சொன்னா, சின்ன அண்ணாவிடம் அவன் தகவல் கொடுப்பான்.''

''பேசாம காரில் ஏறு.''

மீனம்பாக்கத்தைக் கார் அடைந்ததுமே, ''அப்பா, எப்பப் பிளேன் புறப்படும்னு நிச்சயமாச் சொல்ல முடியாது. என்னை மாதிரி எத்தனை பேர் இன்னிக்குக் கல்கத்தா போகிறார்களோ ? அதனாலே, நீங்க இப்பவே திரும்பிப் போய்விடுங்கள்,'' என்றான் மூர்த்தி.

''சரிடா.''

''போனதும் மாத்திரையைப் போட்டுக் கொள்ளுங் கள்.''

''சரி. வர்ற சித்திரைக்கு நாத்துக்கு ஐம்பத்து மூணு நிறையும்.''

''இனிமே பேசி என்ன புண்ணியம் ?''

''சீதா பாம்பேயில் இனிமேல் எப்படி இருப்பாள்டா?''

''அதைப்பத்தி இன்னிக்குப் பேசுவானேன் ? நிறைய டயம் இருக்கு. நீங்கள் புறப்படுங்கள்.''

''ஒரு வேடிக்கையைப் பார்த்தாயா, மூர்த்தி ?''

''என்னப்பா ?''



''அலுத்துக்காமக் கேளுடா. நான் போயிடறேன். விமான விபத்திலே போயிட்ட ஒருத்தனைப் பார்க்க அதே விமானந்தான் அவசியப்படறது இப்ப. மனுஷனுடைய நம்பிக்கை அசைக்க முடியாத ஆல மரமா ? இல்லை, முட்டாள்தனமான கண் மூடித்தனமா ?''

''பறக்கிற பிளேனெல்லாம் கீழே விழறதுன்னு ஆயிட்டா, அப்புறம் காத்தாடியைக் கூட யாரும் தொட மாட்டா, அப்பா !''

அவன் விடைபெற்றுக் கொண்டு கைப் பெட்டியுடன் நடந்து சென்றான்.

அனந்தராமன் காரில் திரும்பினார்.

வீட்டை அடைந்தபோதுதான் ரங்காவின் கார் கண்ணில் பட்டது.

ரங்காவுக்கு எப்படி விஷயம் தெரிந்திருக்கிறது இல்லை, அவன் வேறு காரியமாகப் பெண் மாலுவின் கல்யாணத்துக்குப் பணம் கேட்க வந்திருக்கிறானோ ?

திண்ணையில் ராஜம்மாள் நின்று கொண்டிருந்தாள்.

''ரெண்டு பேரும் பெண்டாட்டிகளுடன் வந்திருக் கிறார்கள்.''

''விஷயம் அவர்களுக்கு எப்படித் தெரியும், ராஜம்மா ?''

''நீங்க போனதும் நான் டெலிபோன் பண்ணினேன்.''

''நீ டெலிபோன் பண்ணினயா ?'' அனந்தராமன் வியப்புடன் ராஜம்மாளை நிமிர்ந்து பார்த்தார்.

''ஆமாம். மூர்த்தியும் இல்லை. இவ்வளவு பெரிய வீட்டில், ராத்திரி தன்னந்தனியா நீங்க இந்தத் துக்கத் தைச் சுமந்து கொண்டு எப்படி இருப்பேள் ?''

''அவர்களுக்குக் காபி குடு.''

''குடுத்தாச்சு.''

''சரி. சாப்பாட்டுக்கு வழி பண்ணு.''

''இதோ!''

அப்பாவின் வருகை அறிந்ததும் மூத்தவன் ரங்காவும், இரண்டாமவன் ராமுவும் ஹாலுக்கு வந்தார்கள். சொர்ணமும் ருக்மிணியும் உடன் வந்தார்கள்.

''நீங்களெல்லாம் ஏன் இப்படிச் சிரமப்பட்டு வந்திருக்கிறீர்கள்?'' என்றார் அனந்தராமன்.

யாரும் பதில் சொல்லவில்லை.

''ஏண்டா ராமு, சுஜாவுக்கு இப்ப எப்படி இருக்கு?''

ருக்மிணி பதில் சொன்னாள்:

''டைஃபாய்டுதான். க்ளோரோமைசிடின் கொடுக்கிறது. இப்ப ஜுரம் அடங்கியிருக்கு.''

''ஆனா, படுக்கையை விட்டு எழுந்திருக்கப் படாது. அவ காலேஜுக்கு ஒரு மாசம் போக வேண்டாம்.''

''டிசம்பர்லே பரீட்சை,'' என்றான் ராமு.

''மாலு எப்படியடா இருக்கா?''

''நன்னாயிருக்கா.''

''அவளுக்கு எதுக்கு இந்த ஸ்கூல் டீச்சர் வேலை?''

சொர்ணம் பதில் சொன்னாள்.

''வீட்டிலே போர் அடிக்கிறதாம். கார்த்தாலே எட்டரைக்குப் போனால் சாயங்காலம் அஞ்சு மணி ஆறது. கத்திக் கத்தித் தொண்டை ரணமாயிட்டது.''



''பாலைக் காய்ச்சறப்போ கொஞ்சம் மிளகை உடைச்சு அதிலே போட்டுக் குடிக்கச் சொல்லுடா, ரங்கா.''

''சரிப்பா.''

''ஏன் எல்லாரும் நிக்கறேள்? ஓ, நான் இன்னும் உட்காரலேன்னா?'' அவர் சோபாவில் உட்கார்ந்து கொண்டார். முன்னால் டீப்பாயின் மேல் எலுமிச்சை நிறத்தில் அரைச் சந்திர வடிவத்தில் விநோதமான ஒரு டிரான்ஸிஸ்டர் இருந்தது. அது கண்ணில் பட்டது.

''இது நாத் சிங்கப்பூரில் வாங்கியது!'' என்றார். அனந்தராமன்.

''வயசுக் காலத்தில் இப்படி ஒரு துக்கம் வந்திருக்க வேண்டாம்!'' என்றாள் ருக்மிணி. அவளுக்கு ஏதாவது பேசிக் கொண்டே இருக்கவேண்டும். அதுவும் சமயத்துக்கு ஏற்றாற் போலப் பேசுவதில் கெட்டிக்காரி.

''போன வருஷம் அகிலா...'' என்றான் ரங்கா.

''ஏன் ஞாபகப் படுத்தறே, ரங்கா? நானே மறக்கணும்னு பார்க்கிறேன். ஆமாம், மாலுவுக்குப் புள்ளை பார்த்துட்டாயாமே?''

''ஆமாம்.'' என்றாள் சொர்ணம்.

''மூர்த்தி சொன்னான். ஐ ஏ. எஸ் னு சொன்னான்.''

''இப்ப என்னப்பா கல்யாணத்தைப் பத்திப் பேச்சு?'' என்றான் ரங்கா.

''ஏதானும் பேசிண்டே இருந்தாத்தான் மனசு வெடிக்காம இருக்கும்!'' என்றாள் ருக்மிணி.

''ஆனா ரங்கா சொல்றதும் சரிதான். இந்தவேளையிலே நான் கல்யாணத்தைப் பத்திப் பேச்சு எடுத்திருக்கப் படாது.''

21203.
3777960
99.

''என்ன செய்யறது? எனக்கு ஒண்ணுமே புரியலே.''

''சீதா அக்கா தைரியசாலி. துணிச்சலுடன் சமாளிப்பாள்!'' என்றாள் ருக்மிணி.

'ராமு...''

''என்னப்பா?''

''அதோ அந்த ஷெல்ஃபிலே சீட்டுக் கட்டு இருக்கு. அதை எடு.''

''சரிப்பா.''

''எல்லாரும் உட்காருங்கள். கழுதை ஆட்டம் ஆடலாம். அஞ்சு பேர் இருக்கோம்.''

''என்னப்பா இது?''

ரங்கா முணுமுணுத்தான்.

''ஆடலாம்டா. பேசிக் கொண்டே போனா, திரும்பத் திரும்ப நாத், சீதா, அகிலா எல்லாரும் வருவா. நான் சம்பந்தா சம்பந்தம் இல்லாம ஏதானும் உளறுவேன். கொஞ்ச நேரம் ஆடுவோமே!''

''அப்பா சொல்றதைக் கேட்போமே!'' என்றாள் சொர்ணம்.

அவரையும் மீறி உள்ளூரச் சிரிப்பு வந்தது. இப்போது, 'அப்பா சொல்றதைக் கேட்போமே!' என்று கூறும் இதே சொர்ணந்தான், கல்யாணமான ஒரு வருஷத்துக்குள் கணவனை முன்றானையில் முடி போட்டுத் தனியாக அழைத்துக் கொண்டு சென்றவள், அன்று அவர் அதைத் தடுக்க என்ன முயன்றும் பலிக்கவில்லை.

அன்று ரங்காவைத் தனிக் குடித்தனம் நடத்தச் சொல்லாமல் இருந்தால், ராமுவும் அவருடன் இருந்திருப்பான்.



இரு பிள்ளைகளும், மருமகள்களும், பேரன் பேத்திகளும் இந்தப் பெரிய வீட்டில் 'ஜேஜே' என்று இருந்திருப்பார்கள்.

ஆல மரம் கண்ணில் பட்டது.

விழுதுகள், விழுதுகள்.

அவை எங்கே?

திடீரென்று ராமுவின் குரல்: ''க்ளாவர் ஜாக்கி இல்லை, அப்பா!''

''ஜோக்கர்தான் கிளாவர் ஜாக்கி!'' என்றார் அனந்தராமன். ஆட்டம் ஆரம்பித்தது.

## 6

மனோஜ் ஒரு சிறு பெட்டியுடன் காரிலிருந்து இறங்கி அம்மாவுக்காகக் காத்திருந்தான். சீதா காரை மெதுவாக ஓட்டியபடியே அதை நிறுத்த இடம் தேடினாள். எளிதில் கிடைக்கவில்லை. நூற்றுக் கணக்கான கார்கள் ஒன்றோடு ஒன்று தொட்டு உராய்ந்து கொள்ளத் துடிப்பது போல் நின்று கொண்டிருந்தன.

தகுந்த இடத்தில் நிறுத்திப் பூட்டி விட்டு அம்மா திரும்பி வரக் குறைந்தது கால் மணி நேரமாவது ஆகும் என்று நினைத்த மனோஜ், அம்மா ஓட்டும் கார் செல்லும் திசைகளை யெல்லாம் கூர்ந்து பார்த்துக் கொண்டேயிருந்தான். அம்மா எங்கே போகிறாள்? பல அணிகளையும் வரிசைகளையும் தாண்டிச் செல்லுகிறாள்.

மனோஜ் நின்றான்.

அவனுக்குக் கால் வலிக்கவில்லை. கைப் பெட்டி பாரமாகப் படவில்லை. கீழே வைத்தால் சௌகரியமாக

இருக்குந்தான். ஆனால் பயந்தான். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் எவனாவது தூக்கிக் கொண்டு கூட்டத்தில் மறைந்து விடுவான். அம்மா கொடுத்து வைத்திருந்த நாலாயிரம் ரூபாய், பாண்ட், ஷர்ட் எல்லாம் பெட்டியில் இருக்கின்றன

பெட்டி கையிலேயே இருக்கட்டும்.

அப்பா விமான விபத்தில் இறந்து விட்ட செய்தி மனோஜை வெகுவாகத் தாக்கி யிருந்தது. அப்பா அவனைப் பொறுத்த வரையில் ஒரு வழிகாட்டி. இனி மேலும் அவனுக்கு யாரும் வழி காட்டத் தேவை இல்லை. என்றாலும் அவர் திடீரென்று இறந்தது அவனுடைய சக்தியையே பிழிந்து விட்டது போலத் தோன்றியது.

அவன் பி.டெக்.கை முடித்ததும் ஒரு பெரிய கம்பெனி யில் அப்பாவின் சிபாரிசு இல்லாமலேயே வேலை கிடைத்தது. ஆனால் அப்பா அந்த வேலையில் சேர வேண்டாமென்று மேலே படிக்க வைத்தார். அமெரிக்கா வுக்குப் போனான். திரும்பி வரும் பொழுது அவன் ஒரு எம். பி. ஏ. வயது இருபத்து நான்கு. மீண்டும் ஒரு பெரிய வேலை. மாதம் இரண்டாயிரம். அப்பா மீண்டும் தடுத்தார். ஆனால் மேற்படிப்புக்கு அனுப்பவில்லை. அவருடைய மனத்தில் ஒரு திட்டம் உருவாகி யிருந்தது.

பம்பாயில் ஓர் உற்பத்தி நிறுவனம் துவங்க வேண்டும். அதை மனோஜ் நடத்த வேண்டும். அந்தத் தொழிற்சாலை யில், எஸ். எஸ். நாத் வேலை பார்க்கும் சர்வ தேசக் கம்பெனிக்குத் தேவையாக இருக்கும் சில இயந்திரக் கருவி களைத் தயாரிக்க வேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகளில் ஆண்டுக்குக் குறைந்தது பதினைந்து லட்சம் ரூபாய்க் காவது வியாபாரம் ஆகும். சிறு இயந்திரங்கள் தயாரிப் பதில் இருக்கும் லாபம் பெரும் இயந்திரங்களில் இல்லை.

ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள மோட்டார் காரில் இருக்கும் !சிறு சிறு பாகங்களின் தனித்தனி அடக்க



விலைக்கும் விற்பனை விலைக்கும் சம்பந்தமே இல்லை. ஒரு கார்பரேட்டர், ஒரு பிஸ்டன் ரிங், ஒரு ஃபான் பெல்ட் அல்லது ஸ்பீடோ மீட்டரின் உற்பத்தி விலையை விடக் குறைந்தது எட்டு மடங்காவது விற்பனை விலை இருக்கும். கார் தயார் செய்யும் தொழிற்சாலைகள் உபகரணங் களைத் தனியாகத் தயார் செய்வதில்லை. தங்களுடைய தேவைக்கேற்பப் பல சிறு தொழில் அலுவலகங்களிலிருந்து வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

மனோஜின் தந்தை எஸ். எஸ். நாத் இதைக் கண்கூடாக அநுபவ ரீதியில் பார்த்து அறிந்தவர். பம்பாயி லிருந்து சில மைல்கள் தள்ளி ஒரு தொழில் கூடம் அமைத் தால் வருங்காலத்துக்குக் கவலையே இல்லை என்பது அவர் எண்ணம்.

மனோஜுக்கு அப்பாவின் எண்ணமோ திட்டமோ பிடிக்கவில்லை. படித்து முடித்தபின் வீட்டில் விருதாவாக இருப்பானேன்? அப்பாவின் திட்டம் இன்னும் சிந்தனை அளவில்தான் இருக்கிறது. செயல்பட இன்னும் எத்தனை மாதங்கள் அல்லது ஆண்டுகள் ஆகுமோ? அதற்குள் அவன் துருப் பிடித்துப் போய்விடுவான். என்ன செய்ய?

தன் நன்மைக்காக, தன் எதிர் காலத்துக்காகத்தான் அப்பா இப்படி அவனை ஒரு வேலையில் சேராவண்ணம் தடுக்கிறார் என்பதை அவன் அறிவான். இந்தக் காரணத் தினால் அவனுக்குத் தகப்பன் மீது தாபமோ கோபமோ ஏற்படவில்லை. அம்மாவின் சில சில பழக்க வழக்கங் களையும் போக்குகளையும் மனத்துள் வெறுத்துங்கூட, அவனுக்கு அம்மாமீது என்றுமே கோபம் அல்லது எரிச்சல் அல்லது கசப்பு ஏற்பட்டதில்லை. ஒரு பெரிய கம்பெனியில் பெரிய பதவியில்அமர்ந்துவிட்டால் அங்கே ஞான மார்க்கத் துக்கு வழி இல்லை. வியாபார முன்னேற்றத்துக்காக 'ஒயினிலிருந்து வுமன் வரை' எல்லாம் தர்ம நியாயங்கள் தாம்.

அப்பா எவ்வளவோ பலவீனங்களுடன் இருந்த போதிலும் அவனுக்குப் பலமாக இருந்தார். இந்த விஷயத்தில் அவருக்கும் அம்மாவுக்கும் அதல பாதாள வித்தியாசம். அம்மாவுக்குக் குற்றஞ் சொல்லத்தான் தெரியும். எது செய்தாலும் அப்படிச் செய்யக் கூடாது, இப்படித்தான் செய்திருக்க வேண்டும் என்று குறை கூறத்தான் தெரியும். ஆனால் அப்பா அப்படி இல்லை. செய்தது குற்றமானாலும் குறையானாலும் விட்டு விடுவார். அமைதியாக, ஆனால் ஆழமாகக் கற்றுக் கொடுப்பார். அநுபவம் என்பதே தவறுகளிலிருந்து ஏற்படும் படிப்பு என்பது அவருடைய சித்தாந்தம்.

இன்னோர் எண்ணமும் மனோஜின் மனத்தில் தோன்றியது. சீதா அவனை எப்போதும் அப்பாவுடன் இணைத்தே பேசினாள். அம்மாவுக்குச் சாரு என்றால் தனி அபிமானம். இதை அவன் ஒரு குறையாக எடுத்துக் கொள்ளவில்லை. அப்பா இரண்டு குழந்தைகளையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கையில் அம்மா மட்டும் ஏன் சற்று வித்தியாசமாக நடந்து கொள்ளவேண்டும்? இதற்குக் காரணம் ஒருவேளை, முகச் சாயலில், நடக்கும் அசைவில், கண்களின் பார்வையில் அவன் தன் அப்பாவைக் கொண்டிருக்கிறான் என்பதாக இருக்குமோ? சாரு முழுக்க முழுக்க அம்மா, உயரத்திலும் சரி, நிறத்திலும் சரி. அம்மா அப்பாவை வெறுக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியும். அவருடைய சாயலில் பிள்ளையும் இருக்கிறான் என்று அவனையும் அம்மா உள்ளூர வெறுக்கிறாளோ? ஆனால் இது எப்படிச் சாத்தியம்? எந்தத் தாயும் தான் பெற்றதை வெறுக்க மாட்டாளே!

அம்மாவும் அப்பாவும் கடந்த சில ஆண்டுகளாக வெறும் தம்பதிக் கோலத்தில்தான் இருக்கிறார்கள் என்பதை மனோஜ் அறிவான். அவன் பள்ளிக்கூடத்திலும், ஏன், கல்லூரியிலும் படிக்கிற நாட்களில் அம்மாவும் அப்பாவும் பரஸ்பரம் செய்து கொள்ளும் சேஷ்டைகளைக் கண்டு தலை குனிவான்.



ஒரு சம்பவம் இன்று நடந்தது போலக் கண் முன் நின்றது.

அவனுக்கு வயது எட்டு.

சாருவுக்கு வயது நாலு.

அப்பாவும் அம்மாவும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு இரவு பத்து மணிக்கு வீட்டுக்கு வந்தார்கள். சாரு தூங்கிக் கொண்டிருந்தாள். அவன் இன்னும் தூங்கவில்லை.

நட்ட நடு ஹாலில்—

அப்பா அம்மாவைத் தூக்கி இரு கைகளிலும் ஏந்தினார்; அம்மாவின் புடைவை விலகியது.

''இங்கே வேண்டாம்!'' என்றாள் அம்மா. ''குழந்தைகள் விழித்துக் கொள்ளும்''

அப்பா விடவில்லை.

அம்மா வெட்கத்தில் திமிறியிருக்க வேண்டும். அவரிடமிருந்து விடுபட்டு, உள் பாவாடையும் வெறும் பாடியுமாகப் படுக்கை அறைக்கு ஓடினாள்.

அன்று நீண்ட நேரம் மனோஜ் தூங்கவில்லை.

ஆண் பெண் உறவைப் பற்றியோ, செக்ஸ் விஷயங்களைப் பற்றியோ அறியாத வயதானாலும், அப்பா அம்மாவுக்கிடையே என்ன என்னவோ விஷயங்களெல்லாம் உண்டு என்று புரிந்து கொண்டான்.

இந்தச் சம்பவத்தைப் போல் பல சம்பவங்களை அவன் பார்த்திருக்கிறான்.

இதனால்தானோ என்னவோ, அவன் வாலிபனானதும் பெண்களின் ரகசியங்களை அறிய முற்பட்டான். பம்பாயில் காசு கொடுத்தால் எல்லாம் கிடைக்கும். எதுவும் கிடைக்கும். ஓரிரு நண்பர்கள் மூலம் சிவப்பு விளக்குப் பகுதிக்குச் சென்றான்.

அங்கே அவனுக்குத் தோன்றிய முதல் உணர்ச்சி அருவருப்பு.

உடலை விற்கும் தொழில் அவனைப் பாதிக்கவில்லை. ஆனால் தொழிலை நடத்தும் விதந்தான் அவனுடைய சிந்தனையைக் கிளறியது. ஒருவன் ஒருத்திக்கு முப்பது ரூபாய் கொடுத்தான் என்றால், தரகனுக்கும், அந்த ஒருத்தியைப் பாதுகாக்கிறவனுக்குந்தான் பணம் போகிறது. அந்த ஒருத்திக்குக் கிடைப்பது துணியும் சோறும் அடிமை வாழ்வுந்தான்.

ஒரு நாள் அநுபவமே வாழ்க்கைப் பாடமாக அமைந்தது இரவு நேரங்களில் உறக்கம் பிடிக்காமல் அவன் படுக்கையில் புரளுகையில் பைத்தியக்காரக் கற்பனைகள் அவனுள் ஓடும்.

எத்தனையோ ஏழைக் குடும்பங்களைப் போல இருந்திருந்தால் ?

அவனுடைய உயிருக்கு உயிரான தங்கை சாருவை ஒரு கயவன் கடத்திச் சென்று கம்மாத்திபுராவில் விற்றிருந்தால் ?

கண்ட கண்டவர்கள் அவனுடைய தங்கை சாருவை எப்படி எப்படியெல்லாம் அலங்கோலப் படுத்துவார்கள் ?

சாருவுக்கு அந்த மாதிரி ஒரு கதி ஏற்படவில்லை என்றால் அதற்குக் காரணம் வசதிகள் ; பொருளாதார பலம்.

திடீரென்று கற்பனை வேறு விதமாக ஓடும்.



எத்தனையோ பணக்கார வீட்டுப் பெண்கள் குடித்துவிட்டுத் தரக்குறைவாக நடந்து கொள்கிறார்களே, ஏன் ?

அதுவும் பொருளாதார வசதிகளின் பலம் காரணமாகத்தான். செக்ஸ், கடவுள் தந்திருக்கும் விளையாட்டுக் கருவி என்கிற ஓர் எண்ணம் பெரிய பெரிய கம்பெனி அதிபர்களும் அவர்களுடைய மனைவிமார்களும் இரவு நேரங்களில் நட்சத்திர ஓட்டல்களிலும், தனியார் விடுதிகளிலும் கும்மாளம் அடிக்கிறார்களே ! அவர்களை என்ன செய்ய ? யார் திருத்த ? நாளைக்குச் சாரு ஒரு பெரிய பணக்காரனுடைய மனைவியானால் அவளும் இவர்களைப் போல... மனோஜ் கண்களை மூடிக் கொள்வான்.

சாரு அப்படி எல்லாம் நடந்து கொள்ள மாட்டாள் என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்வான். ஏன் சாரு மட்டும் ஒரு விலக்கு என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் அவள் அப்படி இருக்கமாட்டாள் என்ற நம்பிக்கை மேலோங்கி இருந்தது. இந்த நம்பிக்கையே தங்கை மீது எல்லை கடந்த வாஞ்சையையும் பாசத்தையும் வளர்த்தது.

ஒரு நேர்முக அநுபவத்துக்குப் பிறகு அவன் செக்ஸையே மறந்தான். இயற்கை எதிர்த்தது. அவன் இயற்கையை வெல்ல முயன்றான். அமெரிக்காவிலேயே வெற்றி கிட்டிய பிறகு அவனுக்குப் புதுத் தெம்பும் தைரியமும் பிறந்தன. இருப்பினும் சில சமயங்களில் உடலின் வெறி மண்டையில் இடிக்கத்தான் இடித்தது.

ஒரு நாள் ஒருவன் சொன்னான். "தேகப்பயிற்சி செய். செக்ஸை மறக்க அதுவும் ஒரு வழி"

அதன் பிறகுதான்—

தாதர்,

சிவாஜி பார்க்

தேக அப்பியாசங்கள்.

அம்மா தாரத்தே வந்து கொண்டிருந்தாள்.

கணவர் கல்கத்தாவில் கருகிக் கிடக்கிறார். மனைவி சலனம் இல்லாத சந்நியாசினியைப் போல நிதானமாக வருகிறாள்.

ஏன் ?

மீண்டும் பழைய நினைவுகள். கடந்த சில ஆண்டுகளாக இருவரும் ஒரே படுக்கை அறையில் தூங்குவதில்லை.

என்ன காரணம் ?

வெளியே தம்பதியாக இருப்பவர்கள் உள்ளூர விலகி நிற்கிறார்களா ?

இந்தக் கேள்விக்கு இரண்டு பேர்கள்தாம் பதில் சொல்ல முடியும். அவர்களில் ஒருவர் போய் விட்டார். இன்னொருத்தியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது.

ஏனென்றால் அவள் அவனுடைய தாய்.

மனோஜ் காத்து நின்றான்.

சிதா வந்து கொண்டிருந்தாள்.

## 7

ஜானாவுக்கு எதிலும் பிடிப்பு ஏற்படவில்லை. தினசரி அவளும் மூர்த்தியும் சந்தித்துக் கொள்ளுவார்கள் ; அல்லது தொலைபேசியில் பேசிக் கொள்ளுவார்கள். ஒருவரை ஒருவர் சீண்டி விளையாடுவது அவர்களுடைய பொழுது போக்கு. இந்த எட்டு நாட்களாக மூர்த்தி இல்லை சூரியன் உதித்தது தெரியாது, அஸ்தமித்தது



தெரியாது. பகலெல்லாம் சூரியன் இருந்தும் ஜானாவுக்கு எல்லாம் இருட்டாகத் தெரிந்தது.

எட்டாம் நாள் மாலை அவள் அனந்தராமன் வீட்டுக்குப் போனாள். ஏற்கனவே அப்பா சதானந்தமும் அம்மா சுசீலாவும் துக்கம் விசாரிக்கப் போய், ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாகி விட்டது. ஒரு மாப்பிள்ளையைப் பறி கொடுத்தவரைப் போல அனந்தராமன் நடந்து கொள்ளவில்லை என்று சுசீலாவுக்கு அவர் மீது எரிச்சல். ஜானாவுக்கு அனந்தராமனுடைய குணம் தெரியும். உணர்ச்சிகளை உமிழ்ந்து வெளிப்படுத்துவதே மனித பலவீனம் என்று நினைக்கிறவர் அவர். அவர் எப்படி வாய் விட்டு அழுவார் ? இதை அவளுடைய அம்மா புரிந்து கொள்ளவில்லை. தன்னையும் அப்பாவையும் கண்டதுமே அனந்தராமன் கேவிக் கேவிக் கரைய வேண்டும் என்று சுசீலா எதிர்பார்த்திருப்பாள். அது ஏமாற்றத்தில் முடிந்திருக்கும். ஜானாவுக்குத் தெரியும், அனந்தராமன் தம்முடைய உள்ளக் குமுறல்களை, கோப தாபங்களை, வேதனை விகாரங்களை எல்லாம் தம் நெஞ்சினுள்ளே புதைத்துக் கொண்டு, வெளி உலகம் பிரமிக்கும்படியாக நடந்து கொள்ளுவார் என்று. ஒரு சிறு சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது.

போன ஆண்டு.

கான்ஸர் நோயில் அகிலா- அனந்தராமனுடைய பெண்- இரு பெண்களை அநாதைகளாக்கி விட்டு இறந்து போனாள். டெலிபோன் மூலம் செய்தி வந்த போது ஜானா மூர்த்தியுடன் செஸ் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது மாலை மணி ஆறு இருக்கும்.

டெலிபோன் அடித்தது. மூர்த்தி எழுந்திருக்க முற்பட்டான். ஆனால் அனந்தராமன் முந்திக் கொண்டார். 'செஸ்' விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த அவர், ''நீ ஒரு நாள் கூட ஜானாவை ஜெயித்து நான் பார்த்தது

இல்லை!" என்று சொல்லிவிட்டு டெலிபோனை கவனிக்கச் சென்றார்.

மூர்த்தி உள்ளூர அந்தச் செய்தியை எதிர்பார்த்திருக்க வேண்டும். ஒரு வார காலமாகவே தன்னுடைய அக்காவின் உடல்நிலை கவலைக்கு இடமாகிக் கொண்டு வருகிறது என்று அவள் கூறியிருந்தாள். அக்காவைப் பற்றிய தகவல்தான் இப்போது வந்திருக்கிறது என்று அவன் ஊகித்து, 'செஸ்' விளையாட்டை விட்டு அப்பா இருக்கும் திசையில் பார்த்தான்.

அனந்தராமன் பேசினார்.

"அப்படியா? எத்தனை மணிக்கு?"

"..."

"மூன்று மணிக்கா? எனக்காகக் காத்திருக்க வேண்டாம். கோமதிதான் இருக்கிறாளே! நான் வந்து என்ன செய்யப் போகிறேன்? நீங்கள் எல்லாரும் இங்கே வந்து விடுங்கள். காரியங்களை இங்கேயே நடத்தலாம்."

மூர்த்தி எழுந்து நின்றான். ஜானாவும் நின்றாள்.

டெலிபோனை வைத்துவிட்டுத் தம்முடைய இயல்பான நிதான நடையில் அனந்தராமன் திரும்பி வந்தார்.

"ஏண்டா ஆட்டத்தை நிறுத்திட்டே?"

"அப்பா!"

மூர்த்தி கத்தினது அவருக்குப் பிடிக்கவில்லை.

"ஏன் கத்தறே? அகிலா போயிட்டா, மூணு மணிக்கு"

"நான், நான் உடனே போறேன்," என்றான் மூர்த்தி.

"நீ போறதிலே எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனா நீ போய் என்ன செய்வே? அவர்களை இங்கே வரச் சொல்லியிருக்கிறேன்."



"ரொம்ப வருத்தமா யிருக்கு. நிஜமாவே இருக்கு!" என்றாள் ஜானா.

"அதெல்லாம் சரி. எனக்கு மூணு பெண். ஒருத்தி இன்னிக்குப் போயிட்டா. இருந்தாலும், உங்களுக்கு எத்தனை குழந்தைகள்னு யாரானும் நாளைக்குக் கேட்டா இவளைக் கழித்து விட்டா பதில் சொல்லுவேன்? இவளையும் சேர்த்துத்தான்."

"அப்பா உட்கார்ந்து கொள்ளுங்கள்."

"ராஜம்மா கிட்டே சொல்லி அரைத் தம்ளர் காபி கலக்கச் சொல்லு."

"நான் கொண்டு வர்றேன்," என்று ஓடினாள் ஜானா.

தம் பெண்ணின் மரணம் அவரை உள்ளூர நன்றாகப் பாதித்திருந்தது. ஆனால் அவர் சிறிதும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. வேதாந்தியைப் போலப் பேசவும் இல்லை. 'செஸ்' விளையாட்டில் காய்கள் நகர்கின்றன. ஒவ்வொரு கட்டத்துக்கு அவை போகும் போதும் ஒரு பலன். ஒரு பயன், ஒரு விளைவு உண்டாகிறது. உலகமே ஒரு 'செஸ்' பலகைதான். ஒவ்வொரு கட்டமும் விதியின் மூலஸ்தானம். அதனை நகர வைக்கிறவன் யாருடனும் சேர்ந்து விளையாடுவதில்லை. தனியாக, விருப்பு வெறுப்பு இன்றி, வேதனை மகிழ்ச்சி இன்றிச் செயல் படுகிறான் அவன். இன்று அகிலா ஒரு கட்டத்தை வந்து அடைந்தாள் என்றால் அது 'செஸ்' பலகையை விட்டு வெளியேற வழி செய்து கொண்டாள் என்று அர்த்தம்.

ஜானா இம்மாதிரி ஒரு வேதாந்தக் கற்பனையில் இருக்கையில் அனந்தராமன் அரைத் தம்ளர் காபி குடித்துக் கொண்டிருந்தார்.

**ஜா**னா பழைய நினைவுகளைத் தாங்கிக் கொண்டே அனந்தராமன் வீட்டை அடைந்தாள், அவர், பங்களா முன் மரகதப் பச்சையாக விரிந்த புல் தரையில், ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார். கடல் காற்று வேலை நிறுத்தம் செய்திருக்க வேண்டும். வானம் சலனம் இல்லாமல் இருந்தது.

''நமஸ்காரம், மாமா !"

''யாரு? ஜானாவா? வா. மூர்த்தி இல்லை, அதான் நீயும் வரலை."

''தினமும் வரணும் வரணும்னுதான் நெனைச்சுப்பேன். ஆனா..."

''புறப்படற சமயத்தில் மனசு பின் வாங்குமாக்கும்?"

''அப்படி இல்லை."

''ஏன் நிற்கிறாய்? உட்கார்."

அங்கிருந்த ஒரு வர்ண நைலான் நாற்காலியில் ஜானா உட்கார்ந்தாள்.

''அப்பா அன்னிக்கு அம்மாவையும் அழைச்சுண்டு வந்தார். அதற்கு அப்புறம் காணோம். ரிடயர்டு ஜட்ஜுக்கு என்ன வேலை? என்னைப் போல அட்வகேட்னா ஏதாவது இருந்து கொண்டே இருக்கும்."

''யாருக்கும் மனசு சரி இல்லை, மாமா."

''ஏன்? என்னாச்சு?"

ஜானாவுக்கு எப்படிப் பதில் சொல்வது என்று தெரியவில்லை. இந்த வீட்டில் ஒரு சம்பவம் நடந்திருப்பது காரணமாக அவள் வீட்டில் யாருக்கும் மனச் சமாதானம் இல்லை என்ற உண்மையை அவள் எப்படி எடுத்துக் கூறுவாள்? மௌனமாக உட்கார்ந்திருந்தாள்



''மூர்த்தி நாளன்னிக்கு வர்றான்."

''அப்படியா?"

''சீதா, சாரு, மனோஜ் எல்லோரும் வருகிறார்கள்."

''பாம்பே ஃப்ளாட்?"

''கொஞ்ச நாளுக்குப் பூட்டியிருக்கும். அப்புறம் சீதா அதை என்ன செய்வாளோ, என்னவோ!"

''பெரிய அதிர்ச்சி."

''எது?"

''இப்படி ஓர் இழப்பு."

''மொத்தம் இருநூற்று இரண்டு இழப்புகள், ஜானா. அதிலே எஸ். எஸ். நாத் ஒன்று."

ஜானா பதில் சொல்லவில்லை.

''நாம நம்ம கண்ணோட்டத்தில், நம்ப ஆம்படையான், நம்ப அப்பா, நம்ப மாப்பிள்ளைன்னெல்லாம் ஒரு குறிப்பிட்ட இழப்பை நெனைச்சுப் பார்க்கிறோம். மொத்தத்திலே பார். உலகத்தில் தினசரி ஏதானும் ஒரு இடத்தில் ஏதானும் ஒரு விபத்து நடந்து கொண்டுதான் இருக்கு. அதில் நூத்துக் கணக்கான பேர் இறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பேப்பரில் படிக்கறப்போ எந்த விபத்து நம்மை அழ வைக்கிறது?"

''என்ன இருந்தாலும்..."

''இப்பவெல்லாம் நீ நீஞ்சப் போறதில்லையா?"

திடீரென்று அனந்தராமன் பேச்சின் திசையை மாற்றினார். ஜானா புரிந்து கொண்டாள்.

''போய்ப் பத்து நாள் ஆறது."

"ஏன் ?"

"வெறிச்சுன்னு இருக்கு."

"அப்ப உன் மனசு தூங்கிண்டிருக்குன்னு அர்த்தம். இன்னிக்கு மெர்ச்சண்ட் ஆஃப் வெனிஸ் புத்தகத்தைப் புரட்டினேன். ஷைலக் அப்படி ஒண்ணும் இருதயமில்லாதவன் இல்லேன்னு பட்டது."

"ஷேக்ஸ்பியரை இன்னும் யாரும் சரியாப் புரிஞ்சுக்கலே போலிருக்கு."

"வால்மீகியை யார் நன்னாப் புரிஞ்சுண்டிருக்கா ? பிரவசனம் பண்றவாள்ளே பாதிப் பேர் வாயார உளர்றா. ஜோக் அடிக்கறா. சாரீரம் நன்னா யிருந்து, திக்கித் திக்கிப் பேசாம இருந்துட்டாப் போதும். யார் வேணும்னாலும் பிரவசனம் பண்ணிடலாம். அங்கங்கே வேதாந்தத்தைத் தெளிக்கணும் வால்மீகி சொல்லாததையெல்லாம் சொன்னாருன்னு முழங்கணும்."

"நீங்க ரொம்பவும் மட்டம் தட்டிப் பேசுகிறீர்கள், மாமா."

"இல்லை, ஜானா. நான் யாரையும் மட்டம் தட்டிப் பேசலே. அம்பது வருஷத்துக்கு முன்பேயும் பொய் பித்தலாட்டங்கள் இருந்துது. ஆனா, பிரயோகம் செய்தவர் எண்ணிக்கை இவ்வளவு இல்லை. இப்பத் தொட்டதுக்கெல்லாம் பொய், சால்ஜாப்பு, பித்தலாட்டம். ரேஷன் கார்டிலிருந்து ஆஸ்பத்திரிப் பரிசோதனைவரை எல்லாம் பொய். இது நாகரிகமாகி விட்டது."

"பழைய மதிப்புப் போயிட்டதுன்னு சொல்றேள்."

"மதிப்பு இருக்கு. அது என்னிக்கும் போயிடாது. ஆனா இப்ப அதை எண்றவா எண்ணிக்கைதான் குறைஞ்சுட்டுது"

"மூர்த்தி எந்த ரெயில்லே வர்றார் ?"



"ஓ ! இப்ப நீ பேச்சை மாத்தறாயா? தாதர்லே வர்றான். நாத்தின் சடலத்தை அடையாளம் கண்டு பிடிக்க முடியலையாம் எல்லாச் சடலங்களையும் சேர்த்து வைச்சுப் பெட்ரோலை ஊத்தி எரிச்சாளாம். ஏற்கனவே எரிஞ்சு போன உடல்கள்..."

"பாவம் !"

"இப்ப அவன் இல்லாதது ஒண்ணுதான் குறை. ஆனா, கொஞ்ச நாள்ளே எல்லாம் மறந்துவிடும். சீதாவுக்கும் குழந்தைகளுக்கும் லட்சம் லட்சமாக் கிடைக்கும். பணம் இருந்தா மன நிம்மதி இருக்கோ இல்லையோ, நிச்சயமாச் சௌகரியங்கள், வசதிகள் அதனால் கிடைக்கிற சுகங்கள் எல்லாம் கிடைக்கும்."

"நாத்துக்கு அம்மா இருக்காளா?" ஜானா கேட்டாள்.

"நல்ல வேளையா அவனுக்கு அம்மாவும் இல்லை ; அப்பாவும் இல்லை. ஒரு அக்கா மட்டும் அந்தேரியில் இருக்கிறாள்"

"நல்ல வேளைன்னா ?"

"ஒரு பிள்ளை அல்லது பொண்ணைப் பறி குடுத்தா, துக்கம் பெத்தவாளை எரிக்கிற வரையில் இருக்கும், ஜானா. எந்தச் சுமையையும் ஒருவன் எளிசாச் சுமந்திடலாம். பெத்த தாயால் மட்டும் பெத்ததைப் பறி குடுத்த துக்கத்தைத் தாங்க முடியாது. தினசரி அது நெஞ்சைக் கிழிச்சுண்டே இருக்கும்."

"புரியறது."

"ஒரு சமாசாரம்."

"என்ன ?"

"நீயும் மூர்த்தியும் நன்னாப் பழகிண்டு வர்றேள், இல்லையா ?"

ஜானா தலை குனிந்தாள்.

''ஏன் வெட்கப் படறே? அந்தக் காலத்திலே சின்ன வயசிலே பெரியவர்கள் பார்த்துத் தங்கள் குழந்தைகளுக்குக் கலியாணம் செஞ்சு வைச்சா. இந்தக் காலத்திலே எலும்பு முத்தறவரைக்கும் பேசாம இருக்கா. அவனவன் அவளவளைத் தேடிக் கொள்றான். மூர்த்தி உன்னைத் தேடி வச்சிருக்கான். சரிதானே?"

''நீங்களே எல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கிறீர்கள், மாமா."

''அதனால்தான் இப்ப ஒரு எச்சரிக்கை குடுக்கப் போறேன்."

''என்ன மாமா?"

''பயப்படாதே. என் பொண் சீதா வர்றாள். அவள் என் பொண்தான். இருந்தாலும் அவளைப் பத்திப் பெருமைப்படும்படியாச் சொல்ல ஏதும் இல்லை."

ஜானா இடைமறிக்கவில்லை. கேட்டுக் கொண்டு வந்தாள்.

''சீதா இங்கே வறாள்னா, திரும்பவும் பாம்பே போவாள்னு சொல்ல முடியாது. இந்தப் பெரிய வீட்டிலே நெறைய இடம் இருக்கு. இங்கே நீ இருக்க வேண்டாம்னு அவகிட்டே நான் சொல்ல முடியாது; சொல்லவும் மாட்டேன். அப்படி அவ இங்கே வந்துட்டா, சாருவும் இங்கேயேதான் இருப்பா. என் பேத்தி சாருவை மூர்த்திக்கு வாங்கிக்கணும்னு எனக்கும் சரி, கோமதிக்கும் சரி, ஒரு ஆசை உண்டு."

ஜானாவுக்குத் திகைப்புப் பிறக்கவில்லை. பிரமிப்புத்தான் ஏற்பட்டது. அவளுடைய அம்மா சுசிலா கூடப் பல முறை மூர்த்தியையும் சாருவையும் இணைத்துப் பேசியிருக்கிறாள்.



''இதுதான் எச்சரிக்கையா, மாமா?"

''ஆமாம். இதுவரை சீதா எங்க ஆசையை லட்சியம் செய்யல்லே. ஆனா நாத் போனதில் அவள் மனசை மாத்திக்கலாம். அப்படி மாத்திண்டா உன் பாடு கஷ்டமாயிடும்."

''அவ மனசு மட்டும் மாறினால் போதுமா, மாமா? மூர்த்தியின் மனசும்..."

''மூர்த்தி கெட்டிதான். இருந்தாலும் இரக்கம் அதிகம் உண்டு. மோகத்தை விட இரக்கத்துக்குப் பலம் அதிகம். அது சரி, நீங்க உங்களுக்குள்ளே ஏதானும் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கேளா, ஜானா?"

''பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனா முடிவுன்னு..."

''நான் கேள்வி கேட்டதே முட்டாள்தனம், ஜானா. ஒரு ஆணும் பெண்ணும் மனசாரப் பழகிட்டா முடிவு பேசாமலே தீர்மானமாகி விடும்."

''எனக்கு என்ன செய்யறதுன்னு தெளிவாத் தெரியலே."

''ஆனா, சாரு மனசிலே என்ன இருக்குன்னு தெரியலே. உனக்கு அவள் போட்டியா வந்தால் நீ என்ன செய்வே?"

''என்ன செய்ய முடியும்?"

''நீ ஒண்ணு செய்."

''என்ன மாமா?"

''என்னதான் எனக்குப் பேத்தி சாரு மருமகளாகவும் வரணும்னு ஆசை இருந்தாலும், உன்னை மருமகளா ஏத்துக்க வேண்டாம் என்கிற எண்ணம் இருந்தாலும், நீ நாளன்னிக்கு ஸென்ட்ரலுக்குப் போ. தாதர் எக்ஸ்ப்ரஸில் வர்ற மூர்த்தியைப் பார்."

"எதுக்கு மாமா?"

"சாரு, சீதா ரெண்டு பேரும் உன்னைப் பார்க்கட்டுமே!"

"ஏற்கனவே பார்த்திருக்கிறா என்னை."

"இப்பப் பார்க்கறப்போ அது வேறு கோணத்தில் இருக்கும். முக்கியமா, சீதா புதுப் பார்வையில் பார்ப்பாள்."

"மாமா!"

"என்ன ஜானா?"

"உங்களை என்னால் புரிஞ்சு கொள்ளவே முடியலே. நான் மருமகளா வரக் கூடாதுன்னு நெனைக்கிறீர்கள். அதே சமயம் மூர்த்தியையும் சந்திக்கச் சொல்லுகிறீர்கள்."

"நியாயப்படி உனக்குத்தான் உரிமை ஜாஸ்தி. என் மனசு என்ன நெனைச்சாலும் உன் உரிமையை நானாகப் பறிக்கக் கூடாது, இல்லையா? நானோ உன் அப்பாவோ, உன்னையோ மூர்த்தியையோ ஒதுக்கறதை விட, நீயும் மூர்த்தியும் ஒருவரை ஒருவர் ஒதுக்கிக் கொள்றதுதான் சரி. எங்கள் பேரில் பழி வராது. பார்!"

"இவ்வளவு ஒளி மறைவு இல்லாமல் பேசியவர் யாரையும் நான் கண்டதில்லை."

"உள்ளே போய் ஒரு அரைத் தம்ளர் காபி வாங்கிண்டு வர்றியா? நீயும் குடி."

"இதோ!" ஜானா எழுந்தாள்.

"ஜானா!"

"என்ன மாமா?"

"அப்படியே, ஒரு கை ப்ரோமடீனும் அள்ளித் தட்டிலே போட்டுண்டு வா. ஹார்லிக்ஸ் பாட்டில்லே இருக்கும்."



"எனக்கும் வேர்க்கடலை பிடிக்கும், மாமா!"

"நாமெல்லாமே குரங்கு ஜன்மங்கள்தானே?" என்றார், அனந்தராமன்.

# 8

கல்கத்தா விமான விபத்து நாட்டையே, ஏன் உலகத்தையே, கலக்கியது. எஸ். எஸ். நாத்தின் மரணம் அவர் பணி புரிந்து வந்த ஸ்தாபனத்தையே ஸ்தம்பிக்க வைத்தது. காரியாலயச் சிப்பந்திகள் கண் கலங்கினார்கள். பலர் குலுங்கிக் குலுங்கி அழுதார்கள்.

எஸ். எஸ். நாத் அலாதியானவர். இளகிய மனம். ஏற்றத் தாழ்வு இல்லாமல் எல்லோருடனும் இனிமையாக, சரளமாகப் பேசும் குணம். பிறர் தங்கள் கஷ்டங்களை, தாபங்களைக் கூற வரும்போது, காது கொடுத்துக் கேட்டு, அவர்களுடைய உணர்ச்சிகளுடன் ஒன்றிப் போகிறவர். பியூனிலிருந்து உதவி மானேஜர்வரை அவரை நேசித்தார்கள். யாராவது கஷ்டம் என்று வந்தால் அவர் கண் கலங்குவார். மணி பர்ஸில் இருக்கும் பணத்தை அள்ளிக் கொடுப்பார். யாருடைய பெண்ணுக்காவது கலியாணம் என்று தெரிந்தால், அழைப்பிதழ் வருவதற்கு முன்பே ஒரு புடைவை அல்லது திருமாங்கல்யத்துக்கு உண்டான தொகையைப் பரிசாக அளிப்பார்.

அலுவலகச் சிப்பந்திகள் அனைவருக்கும் அவருடைய மற்ற பழக்கங்கள் தெரியும். மதுவும் மங்கையும் குணங்கள் அல்ல, பழக்கங்கள் என்று அவர்கள் பாகுபடுத்தி உணர்ந்தார்கள். நாத்தின் அன்பும் அபிமானமும் அவருடைய இரத்தத்தோடு பிறந்தவை. மதுவும் மங்கையும் இரத்தத்தினால் ஏற்பட்டவை. பிறந்தது இறவாது. இடையே

ஏற்பட்டது ஒரு நாள் மறையலாம். சிப்பந்திகள் அவருடைய குணங்களை மட்டுமே மதித்தார்கள்.

இப்படிப்பட்ட நாத் விமான விபத்தில் அகாலத்தில் உயிர் இழந்தார் என்றால் ஏன் அலுவலகம் கண்ணீர் வடிக்காது ?

அவர்கள் அனைவரும் அவருடைய வீட்டை நோக்கி ஓடி வந்தார்கள். ஜெனிவாவிலிருந்தும், ஸிட்னியிலிருந்தும், நியூயார்க்கிலிருந்தும் கேபிள்கள் வந்து குவிந்தன. சர்வ தேசக் கம்பெனியின் வைஸ்-பிரஸிடெண்ட் இருபதாயிரம் அமெரிக்க டாலர்களைச் சீதாவுக்கு அனுப்பி, ஆறுதல் கடிதமும் எழுதினார்.

வீட்டில் ஒரு ஈயின் ரீங்காரம் கூட இல்லை, நாத்தின் மனைவி சீதா ஒரு நடிகையாக மாறித் துக்கம் கொண்டாடினாள், இரண்டு நாட்களாக அப்பாவையே நினைத்து நினைத்து, அவருடைய மரணத்தையே நம்ப முடியாமல் தவித்து, பாட்டியைச் சரண் அடைந்தாள் சாரு. கோமதி தன் நெஞ்சுத் துக்கத்தை உள்ளடக்கிக் கொண்டு பேத்தியைச் சமாதானப் படுத்தினாள்.

சீதாவின் போக்குத்தான் தாயாருக்குப் புரியாமல் இருந்தது. செய்தி வந்ததிலிருந்து இதுவரை சீதா ஒரு பொட்டுக் கண்ணீர்கூட உகுக்கவில்லை. இப்படி ஒரு மனைவி இருக்க முடியுமா என்ற கேள்வி கோமதியை உலுக்கி எடுத்தது.

ஐந்தாம் நாள் அன்று மாலை மூர்த்தியும் மனோஜும் கல்கத்தாவிலிருந்து திரும்பப் போவதாக டெலிபோன் செய்தி வந்தது.

''அம்மா !'' என்று அழைத்துக் கொண்டே சீதா கோமதி உட்கார்ந்திருந்த அறைக்குள் பிரவேசித்தாள்.

''என்னம்மா ?''



''இன்னிக்கு ஆபீசுக்குப் போன் பண்ணினேன்.''

''எதுக்கு ?''

''எதுக்குப் போன் பண்ணுவா ? அவர் போயிட்டார். அவருக்குச் சேர வேண்டியது...''

''இருபதாயிரம் டாலர் வந்திருக்கே ?''

''அதுக்கும் அவருடைய சர்வீஸுக்கும் சம்பந்தமில்லை. அது கம்பெனியின் வைஸ்-பிரஸிடெண்ட் பிரத்தியேகமாக அனுப்பியிருக்கிற நிதிப் பணம். பிராவிடண்ட் ஃபண்ட், கிராஜ்யுட்டி, கம்பெனி விஷயமாகப் பிரயாணம் செய்த போது மரணம் ஏற்பட்டதால் தர வேண்டிய நஷ்ட ஈடு— இவை பற்றியெல்லாம் பேச வேண்டாமா ?''

''பேசினாயா ?''

''பேசினேன். ஃபைனான்ஷியல் அட்வைஸர் மனோஜை நேரில் வரச் சொன்னார். பிராவிடண்ட் ஃபண்டில் மனுஷர் கடன் வாங்கியிருக்கிறார். ஆனா மற்றத் தொகை நிறைய வர்றது. இது தவிர, இன்ஷூரன்ஸ், விமானக் கம்பெனி தர்ற நஷ்ட ஈடு, விமான இன்ஷூரன்ஸ் இதெல்லாம் வேறே.''

''ஏன் இப்பவே மண்டையைப் புண்ணாக்கிக்கறே, சீதா ? உன் நெஞ்சிலே துக்கம் வெள்ளமா ஓடறப்போ...''

''அம்மா !''

பெண்ணின் குரல் அதட்டலாகக் கேட்டது.

''என்னடீ ?''

''என் புருஷர் போயிட்டார். அது குடும்பத்துக்கு ஒரு இழப்புத்தான். இல்லேன்னு சொல்லலை. ஆனா அதையே நெனைச்சுண்டு, நான் பூராத் தலையை விரிச்சுப்

போட்டுண்டு உட்கார நான் முட்டாளுமில்லை ; என் நெஞ்சில் எதுவும் வெள்ளமாக ஓடவும் இல்லை "

"அப்படியா ?"

"அப்படித்தான். வீடு இடிஞ்சுட்டா, இடிஞ்சு விழுந்த செங்கல்லையும் கதவையும் பார்த்துப் புலம் பறதில அர்த்தமில்லை. அதை மறுபடியும் சிராக்குவது எப்படின்னு யோசிக்கணும். அதுதான் விவேகம்."

"தாலியைக் கட்டின கை இடிஞ்சு போயிட்டா அது எனக்கு இடிஞ்ச வீடு மாதிரி தெரியலே, சீதா. கருகிப் போன மரம் மாதிரிதான் தெரியறது."

"உனக்கு எப்படி வேணும்னாலும் தெரியட்டும். இப்ப நான் என்ன சொல்லிண்டு வந்தேன்னா..."

"சொல்லு."

"எல்லோருக்கும் டிக்கெட் வாங்கி யிருக்கேன். நாளை மறு நாள் தாதரில் புறப்படப் போறோம் இன்னிக்குச் சாயங்காலம் மனோஜும் மூர்த்தியும் வருகிறார்கள். நாளைக்கு ரெண்டு பேரும் ஆபீஸுக்குப் போய் என்னென்ன செய்யணுமோ அதை யெல்லாம் செய் யட்டும்."

"பரவாயில்லை ; நீ சம்பிரதாயங்களை மறக்கலே!" என்றாள் கோமதி.

"என்ன சம்பிரதாயம் ?"

"இப்படி ஆயிட்டா, பொண்ணை அவளுக்கு என்ன வயசானாலும் சரி, ஒரு நடை பொறந்த வீட்டுக்கு அழைச்சுண்டு போய் வருவா. அதுவும் பத்து நாட்களுக் குள்."

"நான் சம்பிரதாயமாப் போகலை. மூட்டை முடிச் சோடு போறேன்."



"அப்படியா ?"

"அப்பாவுக்கு இப்பத்தான் டெலிபோன்லே சொன் னேன்."

"என்ன சொன்னார் ?"

"என்ன சொல்லுவார் ? சரின்னார் "

"பாவம் ! வேறே என்ன சொல்ல முடியும் ?"

கோமதிக்கு உள்ளூரக் கோபமும் எரிச்சலும் வந்தன. என்னதான் சீதா மீது அவள் பாசத்தை எல்லாம் கொட்டி இருந்தாலும், அவளுடைய சுயநலம் ஆத்திரத்தைக் கிளப்பியது. எத்தனை தடவை அவளும் அவரும் பெண்ணைச் சென்னைக்கு அழைத்திருக்கிறார்கள் ! சில நாட்களாவது குழந்தைகளுடன் தங்கச் சொல்லி யிருக் கிறார்கள். 'பம்பாயை விட்டு ஒரு நாள் என்னால் வெளியே போக முடியாது !' என்று அவள் பெருமையாக அலறுவாள். இப்போது அதே சீதா, தானாக ஒரு முடிவு எடுத்து, அதை நிறைவேற்றவும் தயாராகி விட்டாள். இனிமேல் சாய்கால் பம்பாயில் இல்லை ; சென்னையில் தான் இந்த முடிவு யாருக்காக ? கோமதிக்கும் அனந்த ராமனுக்கும் மனச் சாந்தி வேண்டும் என்றா ? இல்லை. சீதாவுக்குச் சௌகரியமும் பலமும் வேண்டுமென்று.

அனந்தராமன், தம் பிள்ளைகள் மூவரும் ஒரே வீட்டில் ஒரே குடையின் கீழ் இருக்க வேண்டும் என்று தான். ஆசைப்படுகிறார். ஆனால் வீணாகிப் போய் விட்ட பெண் தானாகப் பிரவேசிக்கத் தயாரா யிருக் கிறாள். நிச்சயமாக இதை அனந்தராமன் விரும்ப மாட்டார். ஏன், கோமதியே விரும்பவில்லை. சீதா சென்னையில் குடியேறினால் திருவான்மியூர் வீட்டில் தான் வசிப்பாள். சீதா, மனோஜ். சாரு ஒரு குடும்பம் ; சிறியதே ஆனாலும் ஒரு குடும்பம். எப்படி ஒரு குடும்பம் இன்னொரு குடும்பத்துடன் மன ஐக்கியத்துடன் நடக்க

முடியும்? இதை யெல்லாம் ஏன் சீதா யோசித்துப் பார்க்கவில்லை?

தாயாரின் மௌனம் சீதாவின் வாயை அடைத்திருக்க வேண்டும். அவள் சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

திடீரென்று ஒரு புதுக் கோணம் கோமதியின் கண் முன் தோன்றியது.

சாரு, மூர்த்தி இருவரும் ஒரே வீட்டில் தொடர்ந்து இருந்தால்? பழகினால்? அவளுடைய நெடு நாளைய ஆசை ஒருவேளை பலிக்கலாம். சீதா தன் பிடிவாதத்தைத் தளர்த்த ஒரு புது நிலை ஏற்படலாம்.

திடீரென்று தோன்றிய எண்ணத்தில் புது உற்சாகம் அவளுள் பிறந்தது.

''சரி, சீதா!''

''ஆபீஸ்காரா இந்த ஃப்ளாட்டைக் காலி செய்து, சாமான்களை மெட்ராஸுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வா. அப்புறம் இதை விற்கவும் உதவி பண்ணுவா.''

''இப்ப இருக்கிற நெலவரத்தில் ரெண்டு லட்சம் பொறாது?''

''ரெண்டரைக்குக் குறைஞ்சு குடுக்க மாட்டேன்.''

''உலகம்னா இவ்வளவுதான்!'' கோமதி முணுமுணுத்தாள்.

''என்னம்மா சொன்னே?''

''உன் புருஷன் சாம்பலாகி முழுசா எட்டு நாள் ஆகலே. அதுக்குள்ளே பணக் கணக்குப் பெரிசாப் படறது! எல்லாம் பணத்தில்தான் ஆரம்பமாறது, முடிகிறது!''

''நான் என்னிக்கும் ஆன்மிக உலகத்துக்குள் நுழைஞ்சு பார்த்ததில்லை, அம்மா. அதில் அர்த்தமும் இல்லை



புருஷன் உசிரோடே இருக்கறப்ப மட்டும் பொண்டாட்டிக்குச் சோறு போட்டுத் துணிமணி வாங்கிக் குடுத்தால் போறாது. தான் போனப்புறமும் அவள் வயிறு வாடாமல் பார்த்துக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு உண்டு.''

''புரியறது''

''நான் என்ன சுகத்தைக் கண்டேன்? ரெண்டு குழந்தைகளைக் குடுத்தார். வாங்கிண்டேன். சுமந்தேன் பெத்தேன். புதுப் புடைவையும் நகைகளும் வீடும் வாசலுந்தான் சுகம்னா, நான் சுகப்பட்டவள்தான். ஆனா யதார்த்த உலகத்தில் இதெல்லாந்தான் உண்மையான சுகம்னு நாம நெனைச்சுண்டிருக்கோம். அவர் எனக்குக் குடுத்ததெல்லாம் வசதிகள், சௌகரியங்கள். என்னிக்கும் நான் அவர்கிட்டே சுகப் பட்டதில்லை. என் நெஞ்சிலே ஏற்கனவே ஆயிரம் புண்கள். ரத்தம் வடிந்து கொண்டிருக்கும் போது, அவருடைய சாவு புதுசா ஒரு காயத்தை ஏற்படுத்தலே. ஒரு விதத்தில் இப்ப நிம்மதியாக் கூட இருக்கு''

''சாருவும் மனோஜும் என்ன சொல்றா?''

''சாருகிட்டே சொல்லியாச்சு அவள் என் நிழலைத் தொடர்ந்து வர்ற பொண்; மனோஜ்கிட்டே சாயங்காலம் சொல்லப் போறேன்.''

''சரி. மணி நாலாகப் போறது. காபி போட்டு, ஏதானும் டிபனும் பண்றேன்.''

''அவல் இருக்கு.''

''புளி அவல் பண்றேன்''

''ஏன், வெல்ல அவலும்...''

''நீ வேணும்னாப் பண்ணிச் சாப்பிடு. மாப்பிள்ளை செத்துப் பத்து நாளுக்குள்ளே தித்திப்புப் பண்ணிக் கொட்டிக்கற அளவுக்கு என் மனசிலே மிருகத்தனம் ஏற்படலே!'' என்றாள் கோமதி.

''என்னமோ செய் !''

சரியாக ஐந்து மணிக்குச் சீதா காரை எடுத்துக் கொண்டு விமான நிலையத்துக்குப் புறப்பட்டாள்.

கோமதி சாருவைத் தேடிக்கொண்டு வந்தாள்.

''என்ன அம்மம்மா ?''

''டிபன்.''

''வேண்டாம் அம்மம்மா.''

''காத்தாலேயே நீ ஒண்ணும் சரியாச் சாப்பிடலே, சாரு ''

''வேண்டியிருக்கலே.''

''உடம்பு என்னத்துக்கு ஆகும், சாரு ?''

''ஏன் அம்மம்மா, உன்னாலே ஒரு கவளம் முழுசாப் போட்டுண்டு ருசிச்சு முழுங்க முடிகிறதா ?''

''என்னை விடு. நீ சிறிசு.''

''போயிருக்கிறது என்னுடைய அப்பா, அம்மம்மா !''

''உன் அம்மாதான் புளி அவலும் வெல்ல அவலும் பண்ணச் சொன்னா. நான் வெல்ல அவல் பண்ண மாட்டேன்னுட்டேன்.''

''எனக்கு அவல் புடிக்கும். ஆனா வேண்டியிருக்கலை.''

''ஒரு வாய் தின்னுட்டுக் காபியைக் குடி.''

''நீயும் திங்கறயா ?''

''சரி, திங்கறேன்.''

''அம்மம்மா !''

''என்னடீ குழந்தே ?''



''மெட்ராஸுக்குக் குடியேறறதுன்னு அம்மா முடிவு எடுத்திருக்கா.''

''சொன்னா.''

''எனக்குப் புடிக்கலே.''

''ஏன் ?''

''யாருக்கும் யாரும் பாரமா இருக்கப்படாது.''

''இதில் என்ன பாரம் இருக்கு, சாரு ? உன் அம்மா என் பொண். நீ என் பேத்தி.''

''சொந்தமெல்லாம் தூரத்தில் இருந்து கொண்டாட வேண்டியவை, அம்மம்மா. பந்தத்துக்கும் சொந்தத்துக்கும் வித்தியாசம் தெரியலே, அம்மாவுக்கு.''

''உள்ளூர உனக்குப் புடிக்கலையா ?''

''இல்லை ஆனா என்ன செய்யறது ? ஒருத்தன் என்னை அழைச்சுண்டு போறவரைக்கும் நான் அம்மா பின்னாலேதானே போகணும் ?''

''நாத்துக் கிழவி மாதிரி பேசறே !''

''என் அம்மா எனக்கு நல்லவ. ஏன்னா அவ என் அம்மா. ஆனா மத்தவா மனசிலே சீக்கிரம் வெறுப்பை ஏற்படுத்தி விடற தன்மை அவகிட்டே இருக்கு.''

''என் மனசிலேயும், தாத்தா மனசிலேயும் என்னிக்கும் வெறுப்பு ஏற்படாது, சாரு.''

''அம்மா இப்பவே லாபத்தை எண்ண ஆரம்பிச்சுட்டா, அம்மம்மா. நஷ்டம் அவ கண்லே ஏன் படலேன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு.''

''லாபம் பெரிசாத் தெரியறப்போ, நஷ்டம் எப்படி இருக்கும் சாரு ? அப்பா ஒரு நஷ்டந்தானே ! இன்ஷூரன்ஸ், கிராஜ்யுட்டி, வீடு...''

''அவல் இப்ப இளம் சூட்டில் இருக்கு. அது ஆறணுமா ? வா, சாரு."

''உன்னால் என் மனசைப் புரிஞ்சு கொள்ள முடியலை, அம்மம்மா."

''புரிஞ்சுண்டிருக்கேன். அதான் டிபன் சாப்பிடக் கூப்பிடறேன்."

''உம். இருபத்திரண்டு வயசுவரை பம்பாயில் ஓடியாச்சு. இனிமே மெட்ராஸ். அது எத்தனை நாளைக்கோ?"

சாரு எழுந்தாள். நடந்தாள். அப்பா எஸ். எஸ். நாத் கூடவே வருவது போன்ற பிரமை ஏற்பட்டது.

அன்று சாயங்காலம் கல்கத்தாவிலிருந்து அவர் வர மாட்டார். ஏன், அவருடைய சாம்பல்கூட வராது அவர் தனிப் பிணமாக எரியவில்லை. குவியலில் ஒன்றாக எரிந்திருக்கிறார். சாம்பல் எப்படிக் கிடைக்கும் ?

சிற்றுண்டி சாப்பிட உட்கார்ந்த போது, திடீரென்று மூர்த்தியின் உருவம் கண் முன் தோன்றியது. உடனே அன்றையச் சம்பவம் நினைவுக்கு வந்தது.

ஒரு சினிமா. அவனுடைய ஆவல். அம்மாவின் சூழ்ச்சி. அந்தேரி அத்தையின் வீடு. மூர்த்தி கண் முன் தோன்றினான். அவனுடைய கள்ளங் கபடு அற்ற புன்னகை தவழும் முகம் அவளை ஆட்கொண்டது.

அவள் அவலையும் மறந்தாள். தன் அம்மம்மாவையும் மறந்தாள்.

## 9

**த**ன் தந்தை விமான விபத்தில் உயிரிழந்தார் என்று கேட்டதுமே நிலை பெயர்ந்து நின்ற மனோஜ், மற்றப் பிரயாணிகளின் கரிக் கட்டைகளைக் கண்ட பிறகு திடீரென்று மனம் தேறினவனைப் போல மாறினான்.



அவனுடைய தகப்பனார் அவனுக்கு ஒரு தனி மனிதர் ; அவனுடைய உலகத்தின் சக்கரவர்த்தி. ஆனால் இரையாகிய மற்ற இருநூற்றொரு பேர்களுடன் இணைத்துப் பார்க்கையில், எஸ். எஸ் நாத் ஒரு புள்ளி விவரத்துக்கு உட்பட்ட ஒரு புள்ளி. அந்த ஒரு புள்ளியைப் பற்றியே நினைத்து நினைத்துப் பெரிதுபடுத்திப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை. அப்பா போயிருக்கக் கூடாது ; ஆனால் போய் விட்டார். இனிமேல் யாராலும் எதுவும் செய்வதற்கில்லை

கட்டிலில் உட்கார்ந்து உட்கார்ந்து பொழுதைப் போக்கிய அவன் மூர்த்தியின் மௌனத்தைக் கண்டு பிரமித்தான். இதுவரையில் ஒரு வார்த்தை கூட ஆறுதலுக்காகவோ தேறுதலுக்காகவோ மூர்த்தி பேசவில்லை. மனோஜ் பம்பாயிலிருந்து புறப்பட்டான். மூர்த்தி சென்னையிலிருந்து வந்தான். இருவரும் டம்டம் விமான நிலையத்தில் சந்தித்துக் கொண்டார்கள். அன்று இரவே, விபத்து நடந்த இடத்துக்கு இருவரையும், மற்ற நூற்றுக் கணக்கான பேர்களுடன் அதிகாரிகள் அழைத்துச் சென்றார்கள். என்னதான் ஆயிரம் வாட்ஸ் பல்புகளைப் போட்டு வெளிச்சம் காட்டினாலும், சடலங்களைக் கண்ட மனோஜின் இருள் அகலவில்லை. மூர்த்திக்குப் பின்னால் பிரமை பிடித்தவனாய் அவன் நின்றான். பிணங்கள் குவியல்களாகக் கிடந்தன. சில சிதறிக் கிடந்தன. நவராத்திரிப் பொம்மைகளைச் சீர்படுத்தி வைப்பது போல, இனிமேல் சடலங்களைச் சீர்படுத்தி வைப்பார்கள். மோதிரம், கைக் கடிகாரம், பாதரட்சை போன்ற பொருள்களின் அடையாளங்களால்தான் இழந்த உயிர்களை அடையாளம் காண முடியும். ஆனால் விபத்து நடந்த உடனேயே எத்தனை மனிதக் கழுகுகள் பணத்தையும் பொருள்களையும் நெஞ்சின் ஈரத்தைத் துடைத்து விட்டுக் கொத்த வருகின்றன!

திடீரென்று அவனுக்கு ஏற்பட்ட ஓர் அநுபவம் நினைவுக்கு வந்தது

எஸ். எஸ். நாத் அவனுக்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்திருந்தார். பம்பாயில் ஸ்கூட்டர் அநாவசியம் என்பது சீதாவின் கருத்து. ஆனால் மனோஜ் ஆசைப் பட்டான் ஆசைகளை நிறைவேற்றி வைப்பதில் நாத்துக்கு அவரே நிகர். ஒவ்வொருவர் நான்கு வருடம் ஐந்து வருடம் என்று காத்துக் கொண்டிருக்கையில், யாருக்கோ போன் செய்து ஐயாயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கி மனோஜுக்குப் பிறந்த நாள் பரிசாக அளித்தார்.

சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்ட பின், ஆரம்ப நாட்களில் சதா அறுபது நாழிகையும் சைக்கிள் மீதே காலத்தைக் கழிக்கும் சிறு பையன்களைப் போல, மனோஜ் பதினெட்டு வயதில் ஸ்கூட்டர் உலகத்திலேயே இருந்தான். அடுத்த தெருவுக்குப் போவதானால் கூட ஸ்கூட்டர்தான்.

அந்த ஸ்கூட்டரில் அவன் மாதுங்கா சென்றான்; சிவாஜி பார்க்குக்குக் கிரிக்கெட் ஆடவும் உடற் பயிற்சி செய்யவும் சென்றான்

ஒரு நாள் அவன் ஒரு காரியமாக அந்தேரிக்குச் செல்ல வேண்டியிருந்தது. அத்தை வீட்டில், ஊரிலிருந்து வந்த ஊறுகாயைக் கொடுக்க வேண்டும். வீட்டில் பணி புரியும் இரண்டு சிப்பந்திகளில் ஒருவனை அனுப்பலாம் என்று சீதா தீர்மானித்திருந்தாள். சிப்பந்தியிடம் இரண்டு ரூபாயைக் கொடுத்து ஊறுகாய் ஜாடியை வாங்கிக் கொண்ட மனோஜ் ஸ்கூட்டரை எடுத்தான். இன்னும் அவனையும் ஸ்கூட்டரையும் ஒன்று சேரப் பார்த்திராத அத்தை இப்போது பார்த்ததும் நிச்சயமாகத் திருஷ்டி சுற்றிப் போடுவாள் என்று நினைத்தான் அவன்.

எஸ். வி. சாலை எப்போதும் உயிரோட்டத்துடன் இயங்குவது. ஆயிரக் கணக்கான வாகனங்கள் தலை மயி



ரைப் பிய்த்துக் கொண்டு ஓடும்; கார்கள், பஸ்கள், லாரிகள், வேன்கள், சாலையின் இரு மருங்கிலிருந்தும் புறப் படும் அநேக வீதிகள்.

இந்த எஸ். வி. சாலையில் மனோஜின் ஸ்கூட்டர் ஓடியது. முதன் முதலாக நெரிசல் நிறைந்த சாலையில் செல்லும் போது பயமோ பீதியோ இல்லாவிடினும் அவனுள் ஓர் எச்சரிக்கை மணி அடித்துக் கொண்டே இருந்தது. காதைக் கிழித்துக் கொண்டு கார்களும் லாரிகளும் தாண்டிச் சென்றன. மற்ற ஸ்கூட்டர்காரர்கள் அவனுடைய நிதானத்தைக் கண்டு ஏளனம் செய்வது போலப் பார்த்தார்கள்.

மனோஜுக்குக் கோபம் வந்தது. என்றுமே எதற்குமே கலங்காதவன் பயப்படுகிறானா? பயம் கோழையின் பலம். ஆனால் அவனைப் போன்றவர்களுக்குப் பலவீனம் இருபது நாட்களாக ஸ்கூட்டர் ஓட்டி வரும் அவன் எதற்கு இந்த எஸ். வி. சாலையைக் கண்டு அஞ்ச வேண்டும்?

அப்பா பரிசு அளித்தபோது சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. "ஸ்பீடாப் போவதில் தப்பு இல்லை; ஆனா 'ராஷா' ஓட்டக் கூடாது. அந்தச் சமயத்தில் ரொம்ப மெதுவாக ஓட்டினால் நல்லது என்று நினைக்காதே. உனக்குப் பின்னால் வருகிறவர்களுக்குப் பொறுமை இருக்காது. மற்ற வாகனங்களின் வேகத்தை அனுசரித்து ஓட்டு."

மனோஜ் பார்த்தான். எதிரும் புதிருமாக வாகனங்கள் மின்னல் அடித்துக் கொண்டிருந்தன. கிளை பிரியும் வீதிகளிலிருந்து கார்களும் லாரிகளும் நெடுஞ்சாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

நடுச் சாலையில் ஓட்ட முடியாது. கூடாது. ஒரே ஓரமாகவும் போகக் கூடாது. கிளை வீதிகள் இடிக்கும். இரண்டுங் கெட்டானான பாதையில் ஒரே சீராக ஐம்பது கிலோ மீட்டர் வேகத்தில் போவதுதான் சிறந்தது என்று நினைத்தான்.

வேகம் அதிகமாகியது. நாற்பது ஐம்பதுக்கு ஏறி, ஐம்பத்தைந்துக்கு உயர்ந்து அறுபதையும் எட்டியது. திடீரென்று முன்னால் பெரிய பார வண்டி ஊர்ந்து செல்வது தெரிந்தது. வலது புறத்தில் சாரி சாரியாகக் கார்கள் ஒன்றை ஒன்று முத்தமிட முயன்று கொண்டிருந்தன பார வண்டியை இடது புறமாகக் கடக்கலாம் என்றால், ஒரு லாரி பிளாட்பாரத்தை ஒட்டினாற் போல நின்று கொண்டிருந்தது

வேகத்தைத் திடீரென்று குறைத்தான். அவன் அப்படித் திடீரென்று குறைத்ததைப் பின்னால் வந்த ஒரு கார் கவனிக்கவில்லை. இடிக்கத் துடித்தது.

பார வண்டியை அவன் நெருங்கிய போதுதான், மனோஜ் இந்த நிலைமையை உணர்ந்தான். திடீர் பிரேக். வண்டி நின்றது. ஆனால் அதன்மேல் மனோஜ் இல்லை!

தூக்கி எறியப்பட்டான். லாரியின் பின் சக்கரத்தில் தலை, மயிரிழையில் தப்பியது. அப்புறம் என்ன நடந்தது என்பதை அவன் அறியான்.

கண் விழித்துப் பார்த்தபோது தான் ஒரு தனியார் மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்தான். மயக்கத்தில் வீழ்ந்திருந்தானே தவிர, மற்றப்படி அதிகக் காயங்கள் இல்லை. முழங்காலில் நல்ல அடி; வலித்தது. இடது கையைத் தூக்க முடியவில்லை. எலும்பு முறிந்திருக்க வேண்டும்.

நேரம் என்ன என்று அறிய வலது மணிக்கட்டைப் பார்த்தான். அங்கே கைக் கடிகாரம் இல்லை. மோதிர விரலில் மோதிரத்தையும் காணவில்லை

ஒரு நர்ஸிடம் விசாரித்த பிறகுதான் விஷயம் புரிந்தது. அவனை யாரோ ஒருவன் டாக்ஸியில் கொண்டு வந்து சேர்த்தானாம். உடனடியாகச் சிகிச்சை ஆரம்பிக்கப் பட்டதாம். அவன் குறிப்பிடும் கைக்கடிகாரம், மோதிரம், மணி பர்ஸ் ஏதும் இருக்கவில்லையாம்



மனோஜ் வருத்தப்பட்டான். அப்பா ஸ்விட்ஸர்லாந்திலிருந்து வாங்கி வந்த கைக் கடிகாரம், அம்மா அவனுக்குப் பண்ணிப் போட்ட வைர மோதிரம், நாற்பது ரூபாய் பணம் இவை யெல்லாம் நஷ்டப் பட்டது வருத்தத்தை அளிக்கவில்லை. அடிபட்டுக் கீழே விழுந்து விட்ட அவனுக்கு உதவி செய்யும் சாக்கில் அவனுடைய உடைமைகளை அபகரித்த செயல்தான் வருத்தத்தை அளித்தது. ஒருவனுடைய இயலாமையை இன்னொருவன் சாதகமாக்கிக் கொண்டு களவாடுகிறானே; இது எந்த மனித தர்மத்துக்கு உட்பட்டது? ஈவும் இரக்கமும் பச்சாதாபமும் இருக்க வேண்டிய மனித உள்ளத்தில், பேராசையும் வஞ்சகமும் துரோகமும் பிறப்பது ஏன்? பொருளாதாரத் தேவை என்று ஒரு முழக்கம் செய்யலாம். அப்படியானால் மனிதன் ஒரு கவளம் சோற்றுக்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாமா?

அன்று அவனுக்கு ஸ்கூட்டர் விபத்தின் போது ஏற்பட்ட அநுபவம் நினைவுக்கு வரக் காரணமாக இருந்த விமான விபத்து மனத்தைப் பாதித்தது இரு நூற்றிரண்டு பேர்கள் கண் மூடித் திறப்பதற்குள் எரிந்து போயிருக்கிறார்கள் சாக்கடைகளில் உலோகத் துண்டுகளைத் தேடுவதில் தப்பு இல்லை. ஆனால் பிணங்களிடம் திருடுவது...?

திடீரென்று மூர்த்தி வருவதை மனோஜ் உணர்ந்தான்.

"அக்காவுக்குப் போன் செய்தேன்," என்று கூறிக் கொண்டே மூர்த்தி பிரவேசித்தான்

"என்ன சொல்றா?"

"சடலத்தை அடையாளம் கண்டுபிடிக்க முடியாவிட்டால் உடனடியாகப் புறப்பட்டு வரச் சொன்னா."

"அப்புறம்?"

''உன் அப்பா ரோலக்ஸ் வாட்ச் கட்டியிருப்பாராம். கிட்டத்தட்ட ரெண்டாயிரம் பெறுமாம். அப்புறம் இடது கையில் ஒரு வைர மோதிரம் இருக்குமாம். எப்போதும் டையில் ஒரு தங்க ஊசி உண்டாம்.''

'அதற்கென்ன ?''

''இவற்றையெல்லாம் மீட்க முயற்சி செய்யணுமாம்.''

''இதெல்லாம் கிடைக்கிறதானால் எங்கிருந்து கிடைக்கும் ? பிணத்திலிருந்துதானே ? பிணமே கிடைக்கலே. எல்லாமே மூளியாக் கிடக்கு.''

''தெரியும்.''

''அம்மாகிட்டே சொன்னாயா ?''

''இல்லை.''

''ஏன் ?''

''அக்கா புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை.''

''ஏன், கோபமா இருக்காளா ?''

''இல்லை.''

''மோதிரமும் கடிகாரமும் பறி போய்விடக் கூடாதே என்று அம்மாவுக்கு...''

''சரி மனோஜ். மணி என்ன, பார். பன்னிரண்டு. சாப்பிட்டு விட்டுப் புறப்படலாம்.''

''உனக்குச் சாப்பாடு வேண்டி யிருக்கிறதா, மூர்த்தி ?''

''உனக்கு வேண்டி யிருக்கவில்லையா ? கார்த்தாலே 'ப்ரெட் டோஸ்ட், கார்ன் ஃப்ளேக்ஸ்' எல்லாம் சாப்பிட்டாயே !''

''வயிறு இரைகிறது. ஆனா நாக்குக்கு ருசியில்லை. ஒரு கவளம் எடுத்தாலும் அப்பா நினைவு வந்துவிடுகிறது.



''சரி, வா. இப்போதும் உன் வயிறு இரைகிறது. நெஞ்சிலே துக்கம் இருக்கிறப்போ, பசியும் அதிகமாகும்.''

''நீ என்ன நெனைக்கிறாய், மூர்த்தி ?''

''எதைப் பத்தி?''

''என் அம்மாவைப் பத்தி ?''

''ஒன்றும் நெனைக்கவில்லை.''

''நான் என்ன நெனைக்கிறேன், தெரியுமா ?''

''தெரியாது, தெரிந்து கொள்ளவும் விருப்பப் படலே.''

''என் மனசில் உள்ளதைக் கொட்டித் தீர்த்தால்தான் என் வெறி அடங்கும்.''

''உன் வெறி அடங்க நீ என்ன வேணுமானாலும் கொட்டித் தீர்த்துக் கொள். ஆனால், பம்பாய் போய்ச் சேரும்வரை, உன் அம்மாவைப் பத்தி என்னிடம் ஒரு வார்த்தையும் விமர்சனம் செய்யக் கூடாது.''

''ரொம்பச் சரி, உன் அக்காவின் மேல் உனக்கு அவ்வளவு அன்பு, அபிமானம் !''

''அதோட நிறுத்து.''

மனோஜ் அதற்கு மேல் வாய் திறக்கவில்லை.

## 10

**சா**ருவுக்கு, அவல் மட்டும் அல்ல, எதுவுமே ருசிக்கவில்லை. அப்பாவின் அகால மரணம், அம்மாவின் அலட்சியப் போக்கு, பிறந்து வளர்ந்த பம்பாய் நகரத்தை விட்டுப் பிரிகிறோமே என்ற எண்ணம் எல்லாமாகச் சேர்ந்து அவளை உலுக்கின.

''அம்மம்மா !''

''என்ன, சாரு ?''

''அம்மா ஏன் இப்படி இருக்கிறாள் ?''

''எனக்கு என்ன தெரியும், சாரு ?''

''மெட்ராஸுன்னாலே அம்மாவுக்குப் புடிக்காது. இப்ப என்னடான்னா அங்கேயே போய் வாழறதுன்னு முடிவு எடுத்திருக்காளே !''

''ஆமாம்.''

''ஏன் ?''

''தெரியாது. ஒருவேளை, இத்தனை வருஷம் உன் அப்பாவுடன் வாழ்ந்த இடத்தில் இனியும் தொடர்ந்து இருந்தால் மனசுக்கு நிம்மதி இராதுன்னு காரணமாக இருக்கலாம்.''

''அப்படி இல்லே, அம்மம்மா.''

''பின்னே எப்படி ?''

''எனக்கு வயசு தெரிஞ்ச நாளிலேருந்து அம்மாவும் அப்பாவும் ஒரே இடத்தில் குடி இருந்தார்கள், அவ்வளவு தான் என் அப்பாவை என் அம்மா என்னிக்கோ மனசாலே ஒதுக்கி வச்சாச்சு.''

''உன் வயசுக்கு மீறி நீ பேசறே, சாரு.''

''எனக்கு இருபத்திரண்டு.''

''இருக்கலாம். ஆனா எனக்கு எழுபது. என் கிட்டே நீ இப்படிப் பேசப்படாது''

''மன்னிச்சுக்கோ, அம்மம்மா.''

திடீரென்று கோமதியின் கண்கள் கலங்கின. சாரு நல்ல பெண் ; சூதுவாது தெரியாத பெண். அவள் மனசு நொந்து கிடக்கிறது.



''சாரு !''

''அம்மம்மா !''

''உனக்கு மெட்ராஸ் வர இஷ்டந்தானே ?''

''இல்லை.''

''ஏன் ?''

''எதுக்கு வரணும் ?''

''ஏன் வரப்படாது ?''

'அம்மா, நான், மனோஜ் எல்லாரும் இப்ப வந்து அங்கே தங்கினால், அது எங்கள் சுயநலம் காரணமாகத் தான் இருக்க முடியும். அப்பா உசிரோட இருக்கிறப்போ ஒரு பத்து நாள் தங்கினா அதிலே உற்சாகமும் மகிழ்ச்சியும் இருக்கும். இப்ப அங்கேயே குடி மாற்றுவது விவேகமாகப் படலே.''

''அதென்ன அப்படிச் சொல்லிட்டே ?''

''இங்கே வீடு இருக்கு. பணத்துக்கும் குறைச்சல் இல்லை. மனோஜ் படிச்ச படிப்புக்கு இங்கே நல்ல வேலை வாய்ப்பு இருக்கு. அப்பாவின் கம்பெனியில் வேலைக்கு எடுக்க இருக்கிறார்கள். மெட்ராஸ் வர்றதில் எனக்குச் சந்தோஷம் இல்லை. அம்மா எதை மனசில் வச்சுண்டு இப்படி ஒரு மாற்றம் செய்கிறான்னு புரியலே''

''மணி என்னாச்சு ?''

''ஏன் அம்மம்மா, பேச்சை மாத்தறே ? ஏழரை.''

''அவர்களெல்லாம் வர்ற நேரமாகலே ?''

''பிளேன் ஏழு மணிக்கு வரும்னு அம்மா சொல்லிட்டுப் போயிருக்கா. இப்ப வந்து விடுவான்.''

திடீரென்று மெத்தைப் படிகளில் சத்தம் கேட்டது. சில கணங்களில் மின்சார மணியும் ராகத்துடன் ஒலித்தது. சாரு கதவைத் திறந்தாள். சீதா முன்னே வர, தொடர்ந்து மனோஜும் மூர்த்தியும் வந்தார்கள்.

ஓரிரு நிமிடங்களுக்கு வீடு அமைதியில் உறைந்தது.

''உங்க ரெண்டு பேருக்கும் குடிக்க ஏதானும் தரட்டுமா ?'' என்று பேச்சைக் கோமதி ஆரம்பித்தாள்.

''மூர்த்திக்கு மட்டும் ஏதானும் சாப்பிடக் குடு, அம்மம்மா. அவன் இன்னும் ஒரு மணி நேரத்தில் மெட்ராஸுக்குப் புறப்படறான் !'' என்றான் மனோஜ்.

''என்னடா, மூர்த்தி ?'' என்றாள் கோமதி.

''ஆமாம் அம்மா. மெயில்லே கௌம்பறேன்.''

''இது என்னடீ, சீதா ?''

''எனக்கே இப்பத்தான் தெரியும். ஆனா ஒண்ணும் புரியலே.''

''என்ன ?'' என்றாள் கோமதி.

''இங்கே காலடி எடுத்து வச்சதும் வைக்காததுமாய், மெட்ராஸ் பொறப்படறேன் என்கிறான் உன் பிள்ளை. இதுக்கு இங்கே வந்திருக்கவே வேண்டாம். அப்படியே மெட்ராஸ் திரும்பியிருக்கலாம்,'' என்றாள் சீதா.

''ஏண்டா மூர்த்தி, உன் முடிவை மாத்திக்கப் படாதா ? எப்படியும் நாளன்னிக்கு எல்லாரும் தாதர்லே புறப்படறோமே !'' என்றாள் கோமதி.

''யார் சொன்னா ?'' மனோஜ் கேட்டு விட்டுச் சாருவைப் பார்த்தான்.

''ஏன் அண்ணா, அம்மா சொல்லலியா, ஏர்போர்ட்டிலேந்து வந்தப்போ ?''



''அம்மா சொன்னா, ஆனா அதுக்காக இங்கே ஊணியிருக்கிற ஆணிவேர்களையெல்லாம் பிடுங்கி எறிஞ்சுட்டு நானும் வரணும் என்றில்லை.''

சாரு உள்ளூர மகிழ்ந்தாள். அம்மாவை எதிர்த்து அவளால் போராட முடியாது. அண்ணா கிளம்பி விட்டான்.

''என்னடா சொல்றே, மனோஜ் ?''

''புரியலையா அம்மா ? நான் பம்பாயை விட்டு ஏன் வரணும் ? ஒரு நல்ல காரணம், ஒரே ஒரு நல்ல காரணம் சொல்லு, பார்க்கலாம் !''

சீதா சற்றே தயங்கினாள். பிறகு, ''இனிமே இங்கே என்ன இருக்கு, மனோஜ் ?'' என்றாள்.

''இத்தனை நாளா என்ன இருந்துதுன்னு நாம் இங்கே இருந்தோம் ? அப்பான்னு உடனே சொல்லிடாதே. அப்பா இங்கே இருந்ததும் ஒண்ணுதான், இல்லாததும் ஒண்ணுதான். அதுவும் முக்கியமா உன்னைப் பொறுத்த வரையில்.''

''நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்தாகி விட்டது. உன் அப்பாவை கம்பெனியில் உனக்கு ஒரு நல்ல வேலை, மெட்ராஸில் ஒரு ஆபீஸ் முன்னிட்டுக் கொடுக்கிறார்கள். வேலையை அங்கே தரும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன்.'' இருக்கிறது.

''அம்மா, எனக்கு வயசு இருபத்தாறு எங்கே எப்படிப் போனால் நல்லதுன்னு எனக்குத் தெரியும். தயவு பண்ணி, நீ ஒரு முடிவு எடுத்து, அதற்கு என்னையும் ஆளாக்காதே.''

''ஆமாம், அம்மா,'' என்றாள் சாரு.

''மணி எட்டு. இன்னும் அரை மணி நேரத்தில் நான் புறப்படப் போகிறேன். ரிஸர்வேஷன் வேறு இல்லை. சீக்கிரம் போகணும்,'' என்றான் மூர்த்தி.

கோமதி இதுவரையில் பொறுமையாக இருந்தாள். அவளால் மேலும் மௌனமாக இருக்க முடியவில்லை. ''மூர்த்தி, நீ இன்னிக்குப் போகவில்லை. வேணும்னா நாளைக்குப் பிளேன்லே பறந்துபோ. அப்புறம் மனோஜ், நீ இந்த நெலைமையில் அம்மா சொல்படி கேட்பதுதான் முறை. நாம் எல்லாரும் நாளன்னிக்கு மெட்ராஸ் பொறப்படறோம். உன்னைக் கம்பெனியில் வரச் சொல்லியிருக்கிறார்கள். நாளைக்குப் போய்ப் பார்."

''அம்மம்மா, இது எங்க வீட்டு விஷயம். தயவு செஞ்சு நீ குறுக்கிடாதே! என் அம்மா பிறந்த வீட்டுக்குப் போறதானால் தனியாகப் போகட்டும். நான் அங்கே அவளுடன் வரமாட்டேன். சாரு, நீ உன் இஷ்டம் போலச் செய்."

''இந்த ஃப்ளாட்டை விற்கப் போகிறேன்!" என்றாள் அம்மா

''இது உன் பெயரில் இல்லை. அப்பாவின் பெயரில் இருக்கிறது."

''அதனால் விற்க முடியாது என்கிறாயா?" என்றாள் சீதா.

''ஏண்டி சீதா, ஏதோ அவன்தான் அப்படிப் பேசறான்னா உனக்குமா விவேகம் இல்லாமல் போச்சு? உன் ஆம்படையான் செத்து இன்னும் முழுசாப் பத்து நாள் ஆகல்லே. அதுக்குள்ளே...."

''நீ பேசாம இரும்மா. ஏண்டா, வீடு உன் அப்பா பேரில் இருப்பதால்தான் அதை நான் விற்க முடியாதுன்னு சொல்றியா?"

''நீயாக விற்க முடியாது. நாம் மூணு பேரும் சேர்ந்து தான் விற்க முடியும். என் கையெழுத்தில்லாமல் எவனும் வாங்க மாட்டான். இது தெரியுமா உனக்கு?"



சீதா தளர்ந்து போய்விடுவாள் என்றுதான் கோமதி எதிர்பார்த்தாள்.

''உன் பங்கைப் பணமாகக் குடுத்து..."

''அதுதான் நடக்காது. பம்பாயில் இந்த மாதிரி இடத்தில் இன்னொரு வீட்டை இந்த ஜன்மத்தில் உன்னால் வாங்க முடியாது. எனக்கு வீடுதான் முக்கியம். பம்பாய்தான் என்னுடைய ஊர். மூர்த்தி, நீ பொறப் படறதானால் பொறப்படு. உன்னை வி. டி.யில் இறக்கி விடுகிறேன்."

''நான் டாக்ஸியில் போய்க் கொள்ளுகிறேன், மனோஜ்," என்றான் மூர்த்தி.

''சீதா, நீ உள்ளே போ," என்றான் மூர்த்தி.

''சீதா, உள்ளே போ," என்றாள் கோமதி. ஆனால் சீதா போகவில்லை.

''சாரு, நீ என்னடி மனசிலே வச்சுண்டிருக்கே?"

''சொல்லி என்ன புண்ணியம், அம்மா!"

''சொல்லேன்."

''அண்ணா சொல்ற மாதிரி பம்பாயை விட்டு வெளி யேறது உசிதமில்லைன்னுதான் எனக்கும் படறது. ஆனா நான் எப்படி நீ இல்லாம இருக்க முடியும்?"

''அப்ப, சரி. உன் அண்ணா இஷ்டம் போலப் பம்பாயில் திரியட்டும். நாம போகலாம்."

சீதா உள்ளே சென்றாள். தொடர்ந்து சாருவும் போனாள்.

''அம்மா, இதெல்லாம் நன்னாவா இருக்கு? ஏன் உன் பொண் இப்படி ஆட்டம் ஆடறா?" என்று கேட்டான் மூர்த்தி.

''அதைப்பத்தி அப்புறம் சொல்றேன்டா. முதல்லே, ஏன் இன்னிக்கே மெட்ராஸ் போகணும்னு பறக்கிறே?"

''பிடிக்கலே."

''ஏன்?"

''ஏர்போர்ட்டிலேந்து வர்றப்போ சீதா பேசின பேச்சு, தோரணை எதுவுமே பிடிக்கலே."

''அப்படி என்ன பேசினாள்?"

மூர்த்தி ரத்தினச் சுருக்கமாகச் சொன்னான்.

மூர்த்தியும் மனோஜூம் கல்கத்தா விமானத்திலிருந்து இறங்கி வெளியே வந்தார்கள். சீதா அவர்களைக் கண்டதும் தனக்கே உரிய நிதானத்துடன் சந்தித்தாள். சீதாவின் முகத்தில் துக்கத்தின் ரேகைகூட இல்லாதது மூர்த்திக்கு வியப்பை அளிக்கவில்லை; திகைப்பைத்தான் பிறப்பித்தது.

''என்ன அக்கா, நீ வரணுமா? நாங்களே வந்துகொண்டிருப்போமே!" என்றான், ஏதானும் பேச வேண்டுமே என்ற ரீதியில்.

''முதல்லே கார்லே ஏறுங்கள்," என்றாள் சீதா.

கார் புறப்பட்டது.

''ரெண்டு ஆம்பிள்ளைங்க போயிருக்கிங்க. அவரோட சரீரத்தை அடையாளம் கண்டுபிடிக்க முடியலேன்னு வந்து நிற்கிறீங்களே! வெட்கமாயில்லே?"

''இல்லை!" என்றான் மனோஜ்.

''எல்லா உடல்களும் கருகிக் கெடக்கு, அக்கா. ஒரு நாள் பூராப் பார்த்தோம். முகமே தெரியலே. தலை மயிரெல்லாம் பொசுங்கி..."



''இந்த வருணனையை யார் கேட்டா? அந்த ஒரு வைர மோதிரம் போதுமே! நாலு வருஷம் முன்னால் லண்டன்லே வாங்கினார். பதினெட்டாயிரம் ரூபாய்!"

''வைரமே போயிடுத்து, மோதிரம் போனால் என்ன?" என்றான் மனோஜ்.

''என்ன சொன்னே, மனோஜ்? வைரமே போயிடுத்தா?"

''ஆமாம். அப்பாவே போயிட்டார். அவருடன் தொலைஞ்சு போன மோதிரத்தை நெனைச்சு ஏன் கண்ணீர் விடணும்?"

''அவர் திரும்பக் கெடைக்க மாட்டார்னு எனக்கும் தெரியும். அதுக்காக விலை உயர்ந்த பொருள்களையும் இழக்கணுமா?"

''ஏம்மா, நீ மனுஷ ஜன்மமா, இல்லே....?"

'வேறே ஜன்மமா இருந்தா நீ எப்படியடா ஒரு மனுஷனா என் வயத்திலே உதிச்சிருக்க முடியும்?"

''நான் அன்னிக்கும் கவனிச்சேன். இன்னிக்கும் பார்க்கிறேன். உன் தொண்டையிலே துக்கத்தின் கரகரப்பு ஏன் லவலேசமும் இல்லை?"

''ஏன்னா, துக்கம் இல்லை."

''மனோஜ், பேசாம இரு!" என்ற மூர்த்தி, ''அக்கா' நெலைமை எனக்குப் புரியறது. ஒவ்வொரு விதமாத் தங்கள் துக்கத்தை ஒவ்வொருத்தர் வெளிப் படுத்துவா. நீ பேசாமல் இரு!"

''நான் பேசலேன்னா பேச யார் இருக்கா? மனோஜூக்கு விவரம் போதாது. சாருவுக்கு ஒண்ணும் தெரியாது. இனிமே அவளையும் அழைச்சுண்டு மெட்ராஸ்லே குடி ஏறணும். அவளுக்கு ஒரு வழி அமைச்சுக்

கொடுத்துட்டா அப்புறம் நான் அம்மா அப்பாவுடன் என் காலத்தை ஓட்டற வரைக்கும் ஓட்டுவேன்."

''மெட்ராஸ்லே நல்ல வீடு கெடைக்கணுமே."

''என்னடா மூர்த்தி உளர்றே ?"

''ஏன், அக்கா ?"

''திருவான்மியூர் பங்களா இருக்கே !"

''இருக்கு, அதிலே நானும் இருக்கேன்."

''அதனால் என்ன ?"

''சரிப்பட்டு வராது, அக்கா. ஏதோ பத்து நாள், இல்லை, ஒரு மாசம் வந்து இருப்பதில் தப்பு இல்லை. ஆனா நிரந்தரமா நீ உன் குடும்பத்தோடு வந்து வசிப்பது பிரச்னைகளைத்தான் கிளப்பி விடும். என் ரெண்டு அண்ணாக்களே அப்பாவுடன் தங்காமல் தனித் தனியே இருக்கும்போது நீ வந்தால்...?"

''நான் அப்பாவிடம் பேசியாகி விட்டது."

''அப்ப, சரி."

''அது தெரியாமல்தான் நீ பேசினாயா ?"

''ஆமாம். ஆனா ஒண்ணு. நீ வந்தால், குடும்பம் இன்னும் ஒரு தடவை உடையும் !"

''எப்படியாம் ?"

''நானும் தனியா ஒரு ரூம் பார்த்துக் கொண்டு போய் விடுவேன்."

''அது உன் இஷ்டம். அம்மா அப்பா வராதேன்னு சொன்னா நான் யோசிக்கணும். எப்ப அம்மா அப்பா வாயைத் தெறக்கலையோ அப்ப நான் ஏன் மற்றப் பிரச்னைகளைப் பத்திக் கவலைப் படணும் ?"



திடீரென்று மனோஜ் சிரித்தான்.

''என்ன சிரிப்பு ?" என்றாள் சீதா.

''மூர்த்தி சுய காரியப் புலின்னு நாம் அடிக்கடி வெளை யாட்டாச் சொல்லிடறோம். அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பத்தான் புரியறது. புலி ஓர் அரிய மிருகம்."

சீதாவும் மூர்த்தியும் வாய் திறக்கவில்லை.

''உன் வேகம் எனக்குப் புரியறது. ஆனா நான் என்ன செய்ய முடியும் ? அவ மெட்ராஸ்லே வந்து தங்க முடிவு எடுத்துட்டா. பெத்த பொண்ணிடம், வர வேண்டாம்னு எப்படிச் சொல்ல முடியும், மூர்த்தி ?"

''ஆனா, பெத்த புள்ளைகிட்டே, 'நீ போக வேண் டாம்'னு நாளைக்குச் சொல்லிடாதே !"

''சமயம் வர்றப்போ பார்க்கலாம். தயவு செஞ்சு நீ இன்னிக்குப் புறப்படாதே. எல்லாருமா தாதர்லே போவோம். அதற்குள் என்னென்ன மாற்றங்கள் நேருமோ யார் கண்டார்கள்.

''சரிம்மா. உனக்காக இருக்கிறேன்."

'முதல்லே குளிச்சுட்டு வா. ஜீரக ரசம் வச்சிருக்கேன். அப்பளம் காய்ச்சி வடாமும் வறுத்திருக்கேன், வா."

மூர்த்தி நகர்ந்தான்.

''தாங்க்ஸ் !" என்ற குரல் லேசாக எழுந்தது. பார்த் தான். சாரு புன்முறுவலுடன் அருகே வந்தாள்.

''சாரு !"

''என்ன ?"

''எப்படியாவது மனோஜ் செஞ்ச மாதிரி நீயும் பிடிவாதம் பண்ணி இந்தப் பிரயாணத்தை நிறுத்தேன்!" என்றான் மூர்த்தி.

''நான் பார்க்கிறேன்.''

''அழு, அடம் பிடி, கத்து.''

''கைகேயி மாதிரி நடிக்கணுமா ?''

''அப்படியேதான்.''

''ஆனா மனசு இளக, என் அம்மா தசரதர் இல்லை.''

திடீரென்று சீதா பிரவேசித்தாள். ''இங்கே என்னிடம் வம்பு ஏண்டா, மூர்த்தி ? நீ பாம்பே மெயிலை எப்பப் பிடிக்கப் போறே ? மணி எட்டே முக்கால்.''

''நாளன்னிக்குப் பிடிக்கப் போகிறேன் !'' என்றான் மூர்த்தி.

## 11

அனந்தராமனுடைய மூத்த மகன் ரங்கா என்கிற ரங்கநாதனுக்கு ஒரு பெரிய தனியார் நிறுவனத்தில் பெரிய வேலை. அப்பா அவனை வக்கிலுக்குப் படிக்க வைத்தார். ஒரு நாள் தமக்கு அவன் வழக்குத் துறையில் உதவியாக வர வேண்டும் ; தமக்குப் பின் தம்முடைய புகழை நிலை நாட்டவேண்டும் என்றெல்லாம் அனந்தராமன் கனவுகள் கண்டார்.

ரங்கா கெட்டிக்காரன். சட்டப் படிப்பில் முதன்மை யாகத் தேறி, உயர் நீதி மன்றத்தில் வாதாடத் தகுதியும் பெற்றான். இருபத்திரண்டு வயதிலேயே, ஒளி மயமான எதிர் காலத்தின் அருணன் அனந்தராமனுடைய கண்ணுக்குத் தெரிந்தது. அவர் பூரித்துப் போனார். அந்தப் பூரிப்பில் ஒரு தவறையும் செய்தார். அது அவர் அவனுக்கு நடத்தி வைத்த கல்யாணம்.

ரங்காவின் மனைவி சொர்ணம் அழகி. சொர்ண விக்கிரகம் போலவே இருந்தாள்.



வீட்டுக்கு ஒரே பெண்ணாக இருந்ததாலோ என்னவோ, செல்லம் அளவுக்கு மீறி வளர்ந்திருந்தது. அவளுடைய பணக்கார அப்பா எந்தக் குறையையும் அவளுக்கு வைக்கவில்லை. ஓர் இரும்பு வியாபாரி இரும்பைத் தங்கமாக மாற்றிக் கொண்டு காரில் பறக்கும் போது பெண்ணுக்கு என்ன குறை இருக்க முடியும் ?

புகுந்த வீடு வந்து சேர்ந்த சில வாரங்களிலேயே சொர்ணம் நிலைமையைப் புரிந்து கொண்டாள் ஒரு சத்திரத்தில் தங்கியிருக்கும் எண்ணந்தான் ஏற்பட்டது. மாமனார், மாமியார், மைத்துனர்கள் எல்லாரும் நல்லவர்களாகப் பட்ட போதிலும் ஒரு பெரிய கூட்டத்தில் சாதாரண அங்கத்தினராக இருப்பது முதலில் வேதனை யையும், பிறகு ஆத்திரத்தையும் உண்டாக்கியது.

பிறந்த வீட்டில் காலை ஏழரை மணிக்கு முன்னால் விழித்துக் கொண்டு விட்டால், இரும்பு வியாபாரி பெண்ணின் நெற்றியைத் தொட்டுப் பார்த்து விடுவார். தனக்கு ஜுரம் இல்லை என்று சொர்ணம் சத்தியம் பண்ணியாக வேண்டும். ஏழரை அல்லது எட்டு மணிக்கு முன் கட்டிலை விட்டு இறங்கி அறியாத அவளுக்கு அனந்தராமனுடைய கண்டிப்புகள் பத்தாம் பசலித் தனமாகத் தோன்றின. அவள் தன் வீட்டில், கண் விழித்து எழுந்ததும், கண்ணாடி முன் குறைந்தது கால் மணி நேரமாவது நிற்பாள். இரு கை விரல்களாலும் கன்னங்களின் வழுவழுப்புக்கு ஏதாவது குறை வந்திருக் கிறதா என்று உன்னிப்பாகப் பார்ப்பாள். வயதின் கோளாறு காரணமாகப் பதினைந்து பதினாறு வயதில் முகப்பரு வந்திருந்தது, அதை ஒரு பெரும் வியாதியாகப் பாவித்துப் பல மாதங்கள் மன அலஸ்தையில் தவித்தவள் அவள். கால் மணி நேரக் கண்ணாடி தரிசனத்துக்குப் பின், வாயில் 'டூத் பிரஷ்' பத்து நிமிடங்களுக்கு விளையாடும். பற்பசையின் ருசி வாயில் மணக்க வேண்டும் என்று அவள் அளவுக்கு மீறி உபயோகிப்பாள். ஒரு மாதிரியாகப்

பற்பசைச் சிநேகிதம் முடிந்த பிறகு டைனிங் டேபிளில் பேப்பரை விரித்துக் கொண்டு, ஒரு கையில் காபியும் இன்னொரு கையில் பிஸ்கட்டுமாக உட்கார்ந்தால், எழுந்திருக்கும் போது மணி ஒன்பதாகிவிடும்.

“நீ புக்ககம் போனால் எப்படி இருப்பியோ?” என்பாள் அவளுடைய தாய், அலுப்புடன்.

“எப்படி இருப்பேன்? இப்ப இருக்கிற மாதிரியே இருப்பேன். இந்த மாதிரியான இடத்தில்தான் வாழ்வேன்!” என்பாள் சொர்ணம்.

பதில் பேசாமல் அவளுடைய அம்மா உள்ளே செல்வாள். பெண்ணைச் செல்லமாக வளர்த்ததன் விளைவுகள் பயங்கரமாகத் தோன்றலாயின அவளுக்கு.

புகுந்த வீடு பிறந்த வீட்டைப் போல இல்லாதது சொர்ணத்துக்கு முதலில் ஏமாற்றத்தை அளித்தது. பிறகு வைராக்கியத்தைப் பிறப்பித்தது. ரங்காவைச் சில வாரங்களிலேயே எடை போட்டுவிட்டாள்.

அவளுடைய பொன்னிற மேனி, மழமழப்பான உடல், கையும் காலும் மார்பும் காட்டும் கவர்ச்சிகள், ரங்கா அவளுடைய உள்ளத்தை எட்டிப் பார்க்கவும் முயற்சி செய்யவில்லை. உடலைத்தான் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

சொர்ணம் யோசித்தாள்.

தன்னை ரங்கா உபயோகித்துக் கொள்ளுவதைத் தடுத்து நிறுத்தினால்? தசரதனையே ஒரு கைகேயி மாற்றினாள் என்றால், ஒரு ரங்காவையா மாற்ற முடியாது?

அவளுடைய எண்ணம் கைகூடி விட்டால், அனந்தராமனுடைய அதிகாரக் குடையின் கீழ் அவள் ஒடுங்க வேண்டாம். ஐந்து மணிக்கு எழுந்து மாமியாருக்கு உதவி செய்ய ஓட வேண்டாம். கீழே உட்கார்ந்து, ஆண்கள்



சாப்பிட்ட பிறகுதான் சாப்பிட வேண்டும் என்கிற கட்டாயம் இருக்காது. கணவர், அல்லது மைத்துனர்கள் முன்னிலையிலே உட்காரக் கூடாது என்ற சொல்லாமற் சொன்ன நிபந்தனை இருக்காது.

ஓர் இரவு பத்து மணி அளவில் அப்பாவுடன் சில வழக்குகளைப் பற்றிப் பேசிய பிறகு ரங்கா படுக்கை அறைக்கு வந்தான்.

சொர்ணம் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். எழுப்ப மனம் வராவிட்டாலும், அவனுடைய மிருகத்தனம் மூட்டி விட்ட வெறியில் எழுப்பினான். தூங்காதவளை யாரால் எழுப்ப முடியும்? முனகி முனகிச் சொர்ணம் முதல் நாள் வெற்றி கொண்டாடினாள்.

அதன் பிறகு பல நாட்கள் சொர்ணம் அவனுக்குக் கிடைக்கவில்லை.

ஒரு நாள்—

“சொர்ணம்!”

“என்ன?”

“நீ வர வர...”

“வர வர...”

“இல்லை. ஒன்றுமில்லை.”

“நான் என்ன, உங்க அப்பாவா? பயப்படாமல் சும்மா சொல்லுங்கள்.”

“என்னைக் கண்டாலே உனக்கு இப்பவெல்லாம் வெறுப்பாக இருக்கிறது.”

“யார் சொன்னா?”

“யார் சொல்லணும்?”

21203
377960
கொளத்தூர், சென்னை 99.

''நானும் நீயும் தனியாய்ப் பேசி எத்தனை நாளாயிற்று, தெரியுமா ?''

''என்ன பேசணும் ?''

''இது என்ன கேள்வி, சொர்ணம் ?''

''ஏன், நீங்க ஒரு கறுப்புக் கோட்டுதானே ? பதில் சொல்லுங்களேன் !''

''சொர்ணம்...''

''உம் !''

''உனக்கு என்ன கோபம் அல்லது குறை அல்லது...''

''நீங்க அட்வகேட்டா இருப்பது எனக்குப் பிடிக்கலே.''

''ஐயையோ !''

''என் அப்பா நெனைச்சா ஒரு கம்பெனியிலே மாசம் ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்கும்.''

''இங்கே பணத்துக்கு என்ன குறைச்சல் ?''

''சரி, இப்பப் போய் நூறு ரூபாய் கொண்டு வாருங்கள்.''

"இது என்ன பிரமாதம்? ஆயிரமே கொண்டு வர்றேன்."

''அந்தப் பணம் உங்க பணமாக இருக்க வேணும்.''

''புரியலே ''

''நீங்க சொந்தமா சம்பாதிச்சதா இருக்க வேணும்.''

''இது என்ன உளறல், சொர்ணம் ? ஆயிரம் வேணும்னாலும் உடனே கெடைக்கும். ஆனால் என் பணம் உன் பணம் என்கிற வித்தியாசம் இந்த வீட்டில் இல்லை ''

''அப்ப வீட்டை மாற்றுங்கள். எந்தப் பொண்ணுக்கும் தன் கணவன் சம்பாதித்த காசில்தான் பெருமை



இருக்கும். என்னுடைய உள் பாவாடைக்கும் உங்க அப்பா பணமா ? சீசீ !''

''சொர்ணம் !''

''நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம்.''

''நான் என் அப்பாகிட்டே ஒரு ஜூனியர். இந்தக் குடும்பம் ஐக்கியக் குடும்பம். ஹிண்டு அன்டிவைடட் ஃபாமலி. எல்லாப் பிள்ளைகளுக்கும் சம உரிமை உண்டு. அப்பா கர்த்தா.''

''இதெல்லாம் எனக்கும் தெரியும்.''

''நீ புரியாமப் பேசறே ?''

''எல்லாம் புரிஞ்சுதான் பேசறேன். சண்டை சச்சரவு இல்லாம, எல்லாருடைய அங்கிகாரத்தின் பேரிலும் நாம தனியாப் போயிடலாம்.''

''தனியாய்ப் போறதா ?''

''ஏன் இப்படி அலர்றேன் ? நான் என்ன பசு மாட்டைக் கொன்றுடலாம்னா சொன்னேன் ?''

''என் அம்மா அப்பா நல்லவர்கள், சொர்ணம் !''

''யார் இல்லேன்னா ? நல்லவள்தான். கேட்டுக் கேட்டுப் பரிமாறினாள். மாமனார் பெத்த பொண்கிட்டே பேசறது போலப் பேசினார். இதெல்லாம் நான் இல்லேன்னு சொல்லலையே ?''

''பின்னே ?''

''எலிப் பாழானாலும் அது தனிப் பாழாக இருக்க வேண்டும்.''

''குடும்பத்தில் விரிசல் ஏற்படும், சொர்ணம்.''

''குடும்பம்னா என்ன ? ஒரு கணவன், ஒரு மனைவி, அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகள், வயதான பிறகு

குழந்தைகள் தங்கள் குடும்பங்களைச் சிருஷ்டி செய்து கொள்ளுகிறார்கள். அப்படிச் சிருஷ்டி செய்ய வழி அமைக்க வேண்டியது பெரியவர்களுடைய கடமை. அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் இங்கே எல்லாம் என்ன செய்கிறார்கள்? மாட்டுப் பெண் செருப்புத் தைக்க மாமனாரிடமா சில்லறை கேட்கிறாள்?"

''நான் தனியாத் தொழில் நடத்த முடியாது."

''இந்தத் தொழிலை நடத்த வேண்டாம். நாளைக்கு நான் என் அப்பாவைப் பார்க்கிறேன்."

சொர்ணம் தன் பிடிவாதத்தையும் தளரவிடவில்லை. தன் உடலையும் அவன் தீண்ட அனுமதிக்கவில்லை.

உடலைத் தாண்டி, அவன் அவளுடைய உள்ளத்தைத் தொட முயலட்டுமே!

**ஆ**று மாதங்கள் ஓடின. கல் சீக்கிரமே கரைய ஆரம்பித்து விட்டது. கரைப்பது சொர்ணம் அல்லவா?

ஒரு ஞாயிற்றுக்கிழமை. மாலை அப்பாவும் அம்மாவும் புல் தரையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்பா முழங் கையை ஊன்றிக் கொண்டு சாய்ந்திருக்க, அம்மா மல்லிகைப்பூத் தொடுத்துக் கொண்டிருந்தாள். ரங்காவைக் கண்டதும் கோமதி, ''வாடா ரங்கா, இதைச் சொர்ணத்துக் கிட்டே குடு. நல்ல சமயத்துக்கு வந்தே!" என்று, அருகே ஏற்கனவே தொடுத்து வைத்திருந்த பூவை நீட்டினாள்.

அவன் வாங்கிக் கொண்டு புல் தரையில் உட்கார்ந்து கொண்டான். அம்மாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் பேசாமல் மேற்கொண்டு பூத் தொடுப்பதில் முனைந்தாள்.

ரங்காவின் மௌனம் அனந்தராமனைக் குழப்பியது. ரங்கா எப்போதும் கலகலப்பாகப் பேசுகிறவன்



அவனுடன் பேசிக் கொண்டிருந்தாலே பொழுது ஓடி விடும். அவன் மீது தம்மையும் மீறிய பாசம் அனந்தராம னுக்கு உண்டு.

''என்னடா ரங்கா, ஒரு மாதிரியா இருக்கே? உடம்பு கிடம்பு சரியில்லையா?" என்றார் அவர்.

கோமதி பூத் தொடுப்பதை நிறுத்திவிட்டு ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் பேசவில்லை. ஏதோ ஒன்று பிள்ளையை உலுப்பிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் புரிந்தது

''அப்பா!"

''என்னடா?"

''தப்பா நெனைச்சுக்க மாட்டேளே?"

''என்ன விஷயம்?"

''வந்து வந்து..."

''என்கிட்டே ஏண்டா தயங்கறே? என்ன சமாசாரம்?"

''இந்த வக்கீல் தொழில்..."

''அதுக்கு என்ன?"

''எனக்கு இது வேண்டாம்ப்பா."

''உனக்கு வக்கீல் தொழில் வேண்டாமா? அப்ப ஏன் லா காலேஜுக்குப் போனே?"

''போயிட்டேன். அதனால் சட்ட அறிவு வந்திருக்கு. ஆனா வழக்காடப் பிடிக்கலே."

''யாருடன்? என்னுடனா?"

''எதிர்காலம் பத்தி நெனைக்கப் பயமா இருக்கு. அப்பா!"

"ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும்டா, ரங்கா. நான்கூட இப்படித்தான் பயந்தேன். இப்போ என் பிராக்டீஸ் எப்படி இருக்குன்னு உனக்கே தெரியும்."

"நான் நீங்களாக முடியுமா, அப்பா?"

"இருபத்திரண்டு இருபத்து மூணு வயசிலே நீ நானாக முடியாது. ஆனா இந்த வயசிலே நான் நீயாகத்தான் இருந்தேன்."

"உங்களுக்கு இருந்த நம்பிக்கை எனக்கு இல்லே, அப்பா."

"உனக்குத்தான்டா நம்பிக்கை அதிகம் இருக்கணும். உனக்கு நான் இருக்கேன். அன்னிக்கு எனக்கு இந்தப் பலம் இல்லை."

"நான் நாளையிலேருந்து கோர்ட்டுக்கு வரலே."

அனந்தராமன் வாயடைத்துப் போனார் பிள்ளையின் குரலிலிருந்து, அவன் ஒரு முடிவை எடுத்து விட்டு, அதை வெளியிடத்தான் வந்திருக்கிறான், யோசனை கேட்க வரவில்லை என்று அவர் புரிந்து கொண்டார். இன்னொரு விஷயமும் அவருக்குப் புரிந்தது. இந்த முடிவை அவனாக எடுக்கவில்லை. யாரோ எடுக்க வைத்திருக்கிறார்கள்.

யார்? சொர்ணத்தைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

"சரி, உன் இஷ்டம்!" என்றார் அவர்.

இத்தனை நேரமும் வாய் மூடி, கை உஷ்ணம் மல்லிகையை வாட வைக்கிறது என்பதையும் உணராமல் இருந்த கோமதி, "என்ன, அவன் ஒன்று உளர்றான்; நீங்க இன்னொன்று உளர்றேள்!" என்றாள்.

"என்னை என்னடி செய்யச் சொல்றே? அவனுடைய கறுப்புக் கோட்டைப் பாத்திரக்காரனுக்குப் போடு!" என்றார் அனந்தராமன்.



ரொம்ப எளிதாச் சொல்லிட்டேள். ஏண்டா ரங்கா, நீ கோர்ட்டுக்குப் போகலேன்னா வேற எங்கே போறதா உத்தேசம்?" என்றாள் கோமதி.

"ஒரு கம்பெனியில் லீகல் அஸிஸ்டண்டாப் போகலாம்னு இருக்கேன்."

"எந்தக் கம்பெனி?" என்றாள் கோமதி.

"தேவ்லால் இம்போர்ட்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட்ஸ்."

"என்ன சம்பளம்?"

"இப்போதைக்கு ஐந்நூறு. ஆனா, அது பெரிய கம்பெனி."

"யார் சிபாரிசு? உன் மாமனாரா?"

ரங்கா தலை ஆட்டினான்.

"நெனைச்சேன்!" என்றாள் கோமதி. பிறகு எதையோ நினைத்துக் கொண்டவளைப் போலக் கணவர் பக்கம் திரும்பினாள்.

அவர் கண்களை மூடியவராய், தியானத்தில் ஆழ்ந்திருக்கிறவரைப் போல, உட்கார்ந்திருந்தார்.

அவருடைய ஒரு பகுதி அவரிடமிருந்து விரிந்து, விலகி நிற்பதாக அவருக்குப் பட்டது.

முதல் மாதச் சம்பளத்தை ரங்கா எடுத்துக் கொண்டு அம்மாவிடம் சென்றபோது, அவள் அப்பாவிடம் கொடுக்கச் சொன்னாள். அனந்தராமன், சொர்ணம் இருக்கும் அறையைச் சுட்டிக் காட்டினார்.

மாதங்கள் நகர்ந்தன. சம்பளம் வந்தது. ஆனால் சொர்ணத்துக்கு இன்னும் சுதந்தரம் வரவில்லை.

அதுவும் எளிதாகக் கிடைக்க மார்க்கம் தோன்றியது. சொர்ணம் பிள்ளைப் பேற்றுக்குத் தாய் வீடு சென்றாள்.

அங்கிருந்து புது வீடு சென்றாள். நாள் கிழமை, விசேஷங்களுக்கு மட்டுமே திருவான்மியூர் ஏற்ற இடமாக அமைந்தது.

சீதாவை அழைத்துக் கொண்டு அன்றைய மாலை தாதர் எக்ஸ்பிரஸில் மூர்த்தி வரப் போகிறான் என்று தெரிந்ததும், "தினம் தினம் போகிற மாதிரி இன்னிக்குப் போகாம, மத்தியானமே திருவான்மியூர் போவோம். அப்புறம் சென்ட்ரலுக்குப் போவோம்," என்றாள் சொர்ணம்.

"சரி," என்றான் ரங்கா.

"குழந்தைகளையும் அழைச்சுண்டு போவோம்."

"சரி."

"ஆபீஸுக்கு அரை நாள் லீவ் போட்டுடணும்."

"சரி."

"அப்புறம் இன்னொரு சமாசாரம்..."

"என்ன ?"

"இதெல்லாம் முடிஞ்சப்புறம் நீங்க என் அப்பா விஷயத்தைக் கவனிக்கணும்."

"அதுதான் லாயர்கிட்டே ஒப்படைச்சாச்சே ?"

"அப்பா பழைய அப்பாவா இல்லை. ரொம்ப ஒடிஞ்சு போயிருக்கார்."

"அதுக்கு நான் என்ன செய்யறது, சொர்ணம் ? இரும்பு வியாபாரத்தோடு நிறுத்தி யிருக்கலாம். காண்ட்ராக்ட் வேலையில் யார் இறங்கச் சொன்னார்கள் ?"

"நீங்க சொல்லலை. ஒத்துக்கறேன். காண்ட்ராக்ட்லே ஏமாந்துட்டார். அதுக்காக அவரை அம்போன்னு நாம



விட முடியாதே ! இப்ப இருக்கிற நிலையிலே, வீடுகூடத் தேறாதுன்னு அம்மா சொல்றா."

"சரி, பார்க்கலாம். என் லாயர் நண்பர் என்ன சொல்றார்னு பார்ப்போம்."

"ஆபீஸுக்கு நேரமாயிடுத்து. போற வழியில் மாலுவை மயிலாப்பூரில் இறக்கி விடுங்கள்."

"சரி."

ரங்கா நகர்ந்தான்.

## 12

இருபத்திரண்டு வயதான சாரு நூறு அழகிகளுக்குள் ஒரு பெரிய அழகி. சாந்தம் சொட்டும் முகம். கண்களில் எப்போதும் ஓர் அமைதி நிலவுவதாகத் தோன்றும். நெற்றி சற்று அகலந்தான். ஆனாலும் கூந்தலின் அடர்த்தியிலும், அவள் அதை வாரி விட்டிருந்த விதத்திலும் தெரியவில்லை. புருவங்களைப் பென்சில் கீற்றுகளாக மாற்றியிருந்தாள். கன்னங்கள் உப்பி உதடுகளை நாசம் செய்யவில்லை. அதே சமயம் ஒட்டி உலர்ந்து குழிகளையும் ஏற்படுத்தவில்லை. வழுவழுப்பான கதுப்புக்கள். அச்சு எழுத்துக்களைப் போன்ற பல் வரிசை. மணி மணிகளாகத் தோன்றும் பற்களை, பூ இதழ்களைப் போன்ற உதடுகள் ஓர் எச்சரிக்கையுடன் மூடிக் காத்தன. சிறிய வாயாக இருந்ததால் உதடுகளின் அழகு கண்களைக் கவர்ந்தது.

உயரமும் இல்லை, குள்ளமும் இல்லை.

ஏழு வயதிலிருந்து பதினெட்டு வயதுவரை, நடனப் பயிற்சி ஒழுங்காக நடந்ததால், இடையில் சதை பெருகாமல் இருந்தது. மேனாட்டுப் பாணியில் விரித் தால் இடைக்கு மேலும் சரி, கீழும் சரி பாந்தமான

அமைப்புகள். எவ்வளவோ பெண்கள் பான்ட்- சர்ட்டுடன் தோன்றுகிறார்கள். கண்களை மூடிக் கொள்ளத் தோன்று கிறது. சாருவும் அடிக்கடி பம்பாய் நாகரிகத்தில், பான்ட் அதுவும் 'டெனி'மில் காணப்படுவாள். மிருக உணர்ச்சி களைத் தூண்டாத கவர்ச்சி வெளிப்படும்.

தன் கணவரின் செல்வம், செல்வாக்கு, தன் திறமை, தன் பெண்ணின் சௌந்தரியம், படிப்பு, நாகரிகம், கலை ஞானம் இவற்றை யெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டுதான், 'என் பெண்ணைக் கொத்திக் கொண்டு போக லட்சாதிபதிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் !' என்று சீதா சவால் விட்டாள்.

சாருவுக்கு ஒரு பலவீனம். தனியாக இருக்கையில் ஆத்திரப்படும் உள்ளம், பேச்சு என்று வரும்போது அடங்கி விடும். அம்மாவுடன் துவந்த யுத்தம் செய்து, அவளுடன் பேச்சுக்குப் பேச்சு எதிர்ப் பேச்சுப் பேசி, அவளை மடக்க வேண்டும், ஜயிக்க வேண்டும் என்றெல்லாம் உள்ளூரக் கொதிப்பாள். ஆனால் சீதாவின் ஒரு நேரடிப் பார்வை, பார்வையில் பிரதிபலிக்கும் கோபம், கோபத்துக்குக் காரணமான தாபம் இவை யெல்லாம் சாருவின் நாவைக் கட்டிப் போட்டுவிடும்.

பி.ஏ. முடிந்த பிறகு, மேலே படிக்க அவளுக்கும் சரி, அப்பா எஸ். எஸ். நாத்துக்கும் சரி, விருப்பமில்லை. ஆனால் அம்மா பிடிவாதமாக இருந்தாள், எம். ஏ படிக்க வேண்டும் என்று.

எம். ஏ.க்குப் பிறகு ?

நல்ல வேளையாக அம்மா மேற்கொண்டு கல்லூரிக்கு அவளை விரட்டவில்லை.

சாருவுக்குப் பம்பாயில் ஆயிரம் பெண்களைத் தெரிந் திருந்தாலும் ஓரிரண்டு பேர்களைத் தவிர யாரும் நெருக்க மில்லை. சின்ன வயதிலிருந்து ஷீலா என்கிற பஞ்சாபிப்



பெண்ணும், சரஸ்வதி என்கிற தமிழ்ப் பெண்ணுமே உள்ளத்தைத் தொட்ட தோழிகள். ஒருத்தி ஒரு கோடீசு வரனுடைய ஒரே பெண். சரஸ்வதி மகாராஷ்டிரத் தலைமை அரசில் பணி புரியும் குமாஸ்தாவின் மூன்று குழந்தைகளில் ஒருத்தி.

அவர்கள் இருவரையும் தவிர, வேறு யாரிடமும் தன் ரகசியங்களைப் பகிர்ந்து கொண்டதில்லை சாரு.

எஸ். எஸ். நாத் காலமான மறு நாளே ஷீலாவும் சரஸ்வதியும் சாருவைப் பார்க்க வந்தார்கள். சரஸ்வதி தினமும் இரு தடவை வந்தாள். காலையில் காரியாலயத் துக்குப் போகும் முன்னும் மாலை திரும்பும் போதும் சாருவைப் பார்த்துத் தேற்றிவிட்டுச் சென்றாள்.

அன்று மாலை சரஸ்வதி வந்தபோது சீதா வீட்டில் இல்லை. மூர்த்தியும் மனோஜும் மத்தியானமே போன வர்கள் திரும்பி யிருக்கவில்லை. அம்மம்மா கோமதி உள்ளே ஏதோ காரியமாக இருந்தாள்.

''வா, சரஸ் !'' என்று சிநேகிதியைச் சாரு வர வேற்றாள். பிறகு, ''டீ கொண்டு வர்றேன்,'' என்றாள்.

''டீ இப்ப வேண்டாம். வெஜிடபிள் பிரியாணி சாப்பிட்டேன். வயிறு இப்ப அட்டகாசம் செய்கிறது. இப்பத்தான் ஒரு ஜெலுசில் போட்டுக் கொண்டேன்.''

''சரி, உட்கார்''

''அம்மா இல்லையா ?''

''இல்லை. எட்டு மணி ஆகும்.''

''என்ன முடிவு எடுத்தே ?''

''ஒரே குழப்பமா இருக்கு.''

''அம்மாகிட்டே நேரடியாப் பேசலையா ?''

''இன்னும் இல்லே.''

''நாளைக்குத் தாதருக்குப் போவதாக ஏற்பாடு. ஆனா நீ இன்னும் குழம்பிக் கிடக்கிறே. இதன் அர்த்தம் என்ன தெரியுமா ?''

''சொல்லு.''

''உனக்குத் தைரியம் போதாது.''

''ஒத்துக்கறேன்.''

''மனோஜ் எடுத்திருக்கிற முடிவுதான் சரியான முடிவு.''

''அவன் ஆண்.''

''பொண்ணுன்னா தலையைக் குனிஞ்சுண்டே போகணுமா ?''

''என்ன செய்யச் சொல்றே ?''

''பம்பாயை விட்டுப் போகாதே ! அப்படிப் போனா, நீ மகாலட்சுமியை மதிக்காமல் போறதா ஆயிடும்.''

''இங்கே எப்படி இருக்கிறது, சரஸ் ?''

''மனோஜ் இருக்கான். துணைக்கு அண்ணனை விட வேறு யார் வேணும் ? உன் அம்மா பிடிவாதமா இப்பப் புறப்படறா. மெட்ராஸ் கொஞ்ச நாளிலே அலுத்துவிடும். தானாகத் தளர்ந்து போய்த் திரும்பிடுவா.''

''அப்ப நானும் கூடத் திரும்புவேன்.''

''உன் பாட்டியும் தாத்தாவும் ஆசைப்படறது நிறைவேறணும்னா நீ சென்னைக்குப் போகக் கூடாது, சாரு.''

''மூர்த்தியை ஜானா காதலிக்கிறான்னு உனக்குத் தெரியும்.''

''ஏன், நீயுந்தான். காதலை அவள் வெளிப்படுத்தியிருக்கா. நீ உள்ளே புதைச்சு வச்சிருக்கே !''



''என் காதல் எப்போதும் ஒரு முக்கோணமா இருக்கு, சரஸ் ?''

''அப்பத்தான் போட்டியில் விறுவிறுப்பு, தவிப்பு, வெற்றி தோல்வி, திரும்ப ஏமாற்றம் எல்லாம் இருக்கும். காதலுக்குத் தடையோ குறுக்கீடோ, எதிர்ப்போ குழப்பமோ இல்லா விட்டால் அது சப்புனு ஆயிடும். அது சரி. மூர்த்தி உன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் ?''

''தெரியாது !''

''தெரிந்து கொள்ள நீ முயற்சியே எடுக்கலையா ?''

''எப்படி முடியும் ? வீடு ஒரே களேபரமா இருக்கு அப்பாவின் ஆத்மாவையும் மறந்து அம்மா மனோஜுடன் வாதாடுகிறாள். மூர்த்தி மௌனமா இருக்கான். மனோஜுக்கு ஒரு பக்கம் துக்கம், இன்னொரு பக்கம் கோபம். இதற்கிடையில் நான் எப்படி சரஸ், மனச் சமாதானத்துடன் மூர்த்தியின் மனத்தை அறிய முடியும் ?''

''அதுவும் உண்மைதான்.''

''என்ன செய்யறதுன்னு புரியலே.''

''நீ மெட்ராஸ் போனால் இரண்டு விபரீதங்களில் ஒன்று நடக்கும்.''

''என்ன ?''

''ஒண்ணு, உனக்குக் கல்யாணம் நிச்சயமானா ஜானா ஒதுங்கிக் கொள்ளுவாள். இன்னொன்று, மூர்த்தி அவளைத் தொடருகிறான் என்று தெரிந்தால் நீ ஒதுங்கிக்குவே.''

''மூணாவதும் இருக்கு.''

''என்ன அது ?''

''மூர்த்தி ரெண்டையும் ஒதுக்கி விடலாம் ''

''ஏன் அப்படிச் சொல்றே ?''

''பாட்டிக்கும் தாத்தாவுக்கும் ஜானா மருமகளா வர்றது பிடிக்கலே. நான் அந்த வீட்டு மருமகளாப் போறது அம்மாவுக்கு மகா கசப்பா இருக்கு. என்னைக் கிணத்தில் தள்ள மாட்டாளாம். இந்த வார்த்தையை அவள் பாட்டியிடமே சொல்லி யிருக்கிறாள்.''

''எது எப்படிப் போனாலும் சரி, சாரு, நீ பம்பாயை விட்டுப் போவது உசிதமில்லை. நீ எம்.ஏ. பர்ஸ்ட். தடுக்கி விழுந்தா லேடீஸ் காலேஜுகள். கேர்ள்ஸ் ஸ்கூல்ஸ் நிறைய இருக்கு. வாயை அடைத்தால் வேலை கிடைக்கும். ஓடற வரைக்கும் ஓடட்டும்னு நீ இருக்கலாம்.''

சாருவுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரிய வில்லை. யோசித்தாள்.

தடைப் பட்டது.

மூர்த்தி பிரவேசித்தான்.

சரஸ்வதி எழுந்தாள்.

''உட்கார்ந்து கொள்,'' என்ற மூர்த்தி சோபாவில் உட்கார்ந்தான்.

''விடை குடுக்க வந்திருக்கியா ?'' என்று கேட்டான்.

''இல்லை. பம்பாயை விட்டுப் போகாதேன்னு அட்வைஸ் பண்ண வந்திருக்கேன்.''

''நல்லது. என் யோசனையைக் கேட்காதவள் உன் புத்திமதிப்படி நடந்தால் சரி.''

சரஸ்வதி உள்ளூர மகிழ்ந்தாள்.

''தனக்கு எது நல்லது, எது நல்லது இல்லேன்னு இன்னும் சாருவுக்குப் புரியவில்லை !'' என்றாள் சரஸ்வதி.

''அதுக்குக் காரணம் சாரு இல்லே. அவள் சாது.''



''தெரியும்.''

''அம்மா தெய்வந்தான். ஆனா, கோவில் பூட்டி யிருக்கிற வேளையில் நாம் கோவில் கதவின் மேல் முட்டிக்கிறது விவேகம் இல்லை. இந்தக் குடும்பம் இங்கேயே தொடர்ந்து இருப்பதுதான் நல்லது.''

''சாரு, உன் மாமா சொல்றது காதில் விழுந்ததா ?''

''விழறது. கொஞ்சம் யோசிக்க விடு.''

''அதுக்குள் தாதர் புனாவைத் தாண்டி ஓடிவிடும் !'' என்றான் மூர்த்தி. பிறகு, ''அக்கா இல்லையா ?'' என்று கேட்டான்.

''இன்னும் வரலே. மனோஜ் எங்கே ?''

''அந்தேரிக்குப் போயிருக்கிறான். கொஞ்ச நாளைக்கு அங்கிருந்து அவனுக்குச் சாப்பாடு வரப் போகிறது. நீ உதட்டை அசைத்தால் ரெண்டு சாப்பாடா வரும். அசைப்பியா ?''

''அசைடி, சாரு !'' என்றபடி சரஸ்வதி எழுந்தாள்.

''கிளம்பிட்டாயா ?'' என்றான் மூர்த்தி.

''ஆமாம். நேரமாறது. காட்கோபா போகணும்.''

''சரி, நாளைக்கு வா.''

''நிச்சயமா.''

சரஸ்வதி வெளியேறிய பிறகும், சாரு மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

''சாரு !''

''உம்.''

''என்ன செய்யப் போறே ?''

''ஒரு முடிவு எடுக்கப் போறேன்.''

''நல்ல முடிவா, உனக்கு ஏத்த முடிவா எடு.''

''மூர்த்தி மாமா...''

''என்ன ?''

''நான் ஒரு கேள்வி கேட்டா, தப்பா எடுத்துக்காம பதில் சொல்லுவியா ?''

''தப்பா எடுத்துக்க மாட்டேன் ஆனா, பதில் சொல்லுவேனா, மாட்டேனா என்பது உன் கேள்வியைப் பொறுத்திருக்கு.''

''எதுக்கும் கேட்டுடறேன்.''

''கேள்.''

''ஜானாவைத்தான் கல்யாணம் செய்துப்பேன்னு நீ உன் மனசுக்குள்ளே ஒரு முடிவு எடுத்தாச்சா ?''

''மனசு கான்க்ரீட் அல்ல. அது கடல் அலை மாதிரி.''

''சரி, இன்னொரு கேள்வி.''

''ஸாரி சாரு. நீ என்ன கேட்பேன்னு தெரியும். இப்ப நாம் யார் கல்யாணத்தைப் பத்தியும் பேசாமல் இருப்பது தான் விவேகம்.''

''சரி, மூர்த்தி மாமா. ஆனா நான் என்ன கேள்வி கேட்பேன்னு தெரியும்னு சொன்னியே, என்ன கேள்வி ?''

''சொல்லட்டுமா ?''

''சொல்லு.''

''நாளைக்கு எல்லாருமாச் சேர்ந்து நீ சாரு கழுத்தில் தான் தாலி கட்டணும்னு சொன்னா, அவர்கள் சொற்படி கேட்பாயா? இந்தக் கேள்விதானே நீ கேட்க நெனைச்சே?''

''இதே மாதிரி இல்லை. ஆனா, தாத்பரியம் இது தான் !'' என்றாள் சாரு.



மூர்த்தி சிரித்தான்.

''எல்லாருமாச் சேர்ந்து இதை என்னிடம் கேட்கலாம், சாரு. ஆனா அந்த எல்லோரிலும் ஒருத்தி, முக்கியமான ஒருத்தி, இந்தக் கேள்விக்கு ஒத்துக் கொள்ள மாட்டாள்.''

''உஸ் ! அவளே வர்றா !'' என்றாள் சாரு.

மூர்த்தி பார்த்துக் கொண்டிருக்கையிலேயே சீதா பிரவேசித்தாள்.

''சாரு, இங்கே என்ன பேச்சு? நீ இன்னும் உன் பேக்கிங்கையே ஆரம்பிக்கலே. ஏண்டா மூர்த்தி, நீ மனோஜ் மனசை மாத்தின மாதிரி, இவ மனசையும் கரைச்சுண்டிருக்கியா ?'' என்றாள்.

''அக்கா, உன்னிடம் எல்லாத் தகுதிகளும் இருக்குன்னே வச்சுண்டாலும், உன் மண்டைக்குள்ளே இருக்க வேண்டியது இல்லாமல் போயிடுத்து. அதனாலே நான் உன் கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டேன்.''

''டேய் !''

''பொரியாம உள்ளே போ, அக்கா. நீ இப்படியே போனா, நிச்சயமா நான் உன்னை மெட்ராஸ் போய்ச் சேர்ந்ததும் கீழ்ப்பாக்கத்துக்கு அழைச்சுண்டு போயிடுவேன். முட்டாள் !''

''என் வீட்லே உக்காந்துண்டு என்னையே வசை பாடறியே !''

''சீ! நீ எனக்கு அக்காவா வாய்ச்சாயே. என் வீடு-உன் வீடு. மெட்ராஸ்லே இதை நான் திருப்பிப் பாட எத்தனை நாளாகும்னு நெனைச்சே ?''

சீதா கைப் பையுடன் உள்ளே சென்றாள்.

சாரு பிரமை பிடித்தவளைப் போல உட்கார்ந்திருந்தாள்.

''மன்னிக்கனும், சாரு. என்னையும் மீறி நான் கடிந்து பேசிட்டேன். என்னதான் அவள் என் அக்காவா இருந்தாலும், உனக்கு அவள் அம்மா. உன் முன்னிலையில் நான் அப்படிப் பேசி யிருக்கப்படாது."

''மூர்த்தி மாமா, ஏன் என்னாலே இந்த மாதிரி சீறி விழ முடிய மாட்டேன் என்கிறது. நான் இன்னும் அதிகமா அம்மாகிட்டே சீறணும்னு ஆசைப்படறேன். அவளுக்கு மனிதத் தன்மை இல்லாதது அவ்வளவு ஆத்திரத்தைக் கிளப்பறது."

''சரி, நான் இப்படிக் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்.'' மூர்த்தி எழுந்தான்.

''நானும் கூட வர்றேன்."

''உன் அம்மா ?"

'அவ கெடக்கிறா. இப்ப என் வயசு இருபத்திரண்டு!"

இருவரும் வெளியேறினார்கள்.

## 13

**சீ**தா அயர்ந்து போய்ச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தாள். அவள் செய்திருக்கும் ஏற்பாடு மனோஜுக்குப் பிடிக்கவில்லை. பெண் சாருவுக்கும் பிடிக்கவில்லை. அவள் சென்னைக்கு வருவது அநாவசியம் என்று மூர்த்தி பல முறை உணர்த்தி விட்டான். அவள் தன் தகப்பனாரிடம் தொலைபேசி மூலம் தன் திட்டத்தை வெளியிட்ட போது, உடனடியாக அவர் 'சரி' என்று ஆமோதிக்கவில்லை. இதற்கு என்ன அர்த்தம் ? விருப்பமில்லா மனத்தோடு, வேறு வழி இல்லை என்ற எண்ணத்தில் அப்பா தலை ஆட்டுகிறாரா ?



சீதா மெல்ல மெல்லக் கண் அயர்ந்தாள். உடல் அசதியில் உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே தவித்தாலும், மனம் தூங்க மறுத்தது. கணவனுடைய மறைவினால் ஏற்பட்ட லாப நஷ்டக் கணக்கில் அவள் மூழ்கினாள். மாங்கல்யம் ஒன்றுதான் போயிருக்கிறது. ஆனால் அது அவர் இருக்கிற வரையில் ஒப்புக்காக, நாலு பேருடைய திருப்திக்காக, அவள் அணிந்திருந்த ஓர் ஆபரணம். அவளுடைய தாலி மார்புக் குழியில் இடித்த போதெல்லாம் வலித்தது. வலி உடலில் இல்லை, மனத்தில். இனிமேல் வலி உடலிலும் இருக்காது. மனத்திலும் இருக்காது. எஸ். எஸ். நாத், ஒரு கணவன் செய்ய வேண்டிய எல்லாக் கடமைகளையும் செவ்வனே செய்து விட்டுப் போய் விட்டார். சீதா அவருடன் படுக்கையைச் சில ஆண்டுகள் பகிர்ந்து கொண்டதால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டு குழந்தைகள். அன்று அந்தக் கோவாப் பெண்ணையும் அவரையும் ஒன்று சேர அரை நிர்வாணமாகப் பார்த்திருக்கா விட்டால் சீதா தொடர்ந்து கணவனுடன் வாழ்ந்திருப்பாள். இன்னும் விளைவுகள் தோன்றி யிருக்கும். கணவன் தன்னைத் தவிர வேறு ஒருத்தியையும் தீண்டாதவர் என்ற எண்ணத்தில் அவள் அவனைக் கொண்டாடி யிருப்பாள். ஒரு பொய்ம்மையான வாழ்வில் தன்னைப் பலி கொடுத்திருப்பாள்.

அவளுடைய அதிருஷ்டம் அவள் ஏமாறவில்லை. கணவன் எப்படிப்பட்டவன் என்பது சீக்கிரமே புலப்பட்டு விட்டது.

அதன் பின் அவளுக்கு ஒரே குறையைத் தவிர, வேறு எந்தக் குறையும் இருந்ததில்லை. கணவன் இன்னொருத்தியைக் கட்டிலுக்கு இழுத்தது போல அவள் இன்னொருவனைத் தன் இஷ்டத்துக்கு இழுக்கவில்லை. உடல் தவிக்கத்தான் தவித்தது. நரம்புகளும் தசைகளும் ஆவேச வெறியில் அவளை உலுக்கி எடுத்தன. இயற்கையுடன் அவள் போராட வேண்டிய நிலை பிறந்தது. அவள்

போராடினாள். அவளுடைய அழகுக்கும் வளப்பத்துக்கும் நாகரிகக் கவர்ச்சிக்கும் பம்பாயில் எத்தனையோ பணக்காரச் சிநேகிதர்கள் மயங்கி இருக்கிறார்கள். கணவனுடைய நண்பர்கள் அவள் தோளை இடித்திருக்கிறார்கள் ; உடம்பில் உராய்ந்திருக்கிறார்கள் ; ஒரு கண் வீச்சினால், ஒரு கை அசைவினால் அவள் தன் உடம்பின் உஷ்ணத்தைக் குளிர்ச்சியாக மாற்றிக் கொண்டிருக்க முடியும்.

ஆனால் அவள் அதை வெறுத்தாள். அவளுடைய வெறுப்புக்குத் திரௌபதியும் தமயந்தியும் நளாயினியும் அனசூயையும் காரணம் அல்ல. கற்பு என்பது சமூகச் சீரமைப்புக்காக ஏற்பட்ட ஒரு நியாயம். அதைத் தர்மமாக நிலைநாட்டி விட்டார்கள். சீதா எந்தத் தர்மத்தையும் கடைப்பிடித்தது கிடையாது. கற்புப் போய் விடுமே என்ற பயத்தினால் அவள் மனம் உடலைக் கட்டிப் போடவில்லை.

அவளுக்குக் காம இன்பம் பிடித்ததுதான். ஆனால் அதை மனம் விரும்பிய முறையில் அநுபவிக்க அவள் விரும்பவில்லை. தன் கணவனிடம் கோரிய விவாக ரத்துக் கிடைத்திருந்தால்கூட, அவள் வெறும் காம சுகத்துக்காக இன்னொருவனை மணம் செய்து கொண்டிருக்க மாட்டாள்.

கண்ட கண்ட இடத்தில் சாப்பிடுவதை விடப் பட்டினி கிடப்பது மேல் என்று நினைப்பவள் அவள். அவளுக்குப் பசித்தது. ஆனால் பசியை அவள் அடக்கிக் கொண்டாள்.

லாப நஷ்டக் கணக்கு ; நஷ்டம் மாங்கல்யம். மஞ்சளும் குங்குமமும் பெரிய நஷ்டமாகப் படவில்லை. என்றுமே அவள் மஞ்சள் தேய்த்துக் குளித்தது கிடையாது. குங்குமம் ? நெற்றியில் இருக்காது. அது என்ன பெரிய நஷ்டமா ?



லாபங்கள் அலையாக வந்தன. வீடு, பணம். பல விதங்களில் பணம். ஆயுள் இன்ஷூரன்ஸிலிருந்து நஷ்ட ஈடுகள்வரை லட்சக் கணக்காகப் பணம்.

திடீரென்று அவளையும் மீறி ஒரு கேள்வி எழுந்தது. இவ்வளவு பணத்தையும் அவள் என்ன செய்வாள் ? பதில் சொல்லிக் கொள்ள அவள் முற்படவில்லை. பணம் இல்லாத போதுதான் அதன் அருமை தெரிகிறது. இருக்கும் போது அது பெரிதாகப் படாது. அவள் யார் கையையும் எதிர் பார்த்து நிற்காமல் இருக்கப் பணம் வேண்டும். நினைத்த போது நினைத்த இடத்துக்குப் போக வேண்டுமானால் பணம் வேண்டும். நல்ல உடை அணிந்து, நாலு பேர் மெச்சும்படியாகவும் வசதிகளுடன் இருக்கவும் பணம் வேண்டும்.

பணம் தெய்வம் மாதிரி. கடவுள் கொடுக்கும் வரங்களைப் போலப் பணம் எதையும் கொடுக்கும்.

திடீரென்று சீதா விழித்துக் கொண்டாள். அவளைச் சுற்றி யாரோ நடப்பது காதில் ஒலித்தது. பக்கவாட்டில் திரும்பினால் அம்மா.

''என்ன அம்மா ?"

''முக்கால் மணி நேரமா அசையாமல் படுத்திருக்கியே! உடம்பு சரியில்லையா ?"

''சரியாத்தான் இருக்கு. அது சரி. இப்ப என்ன மணி ?"

''எட்டே முக்கால்."

''சாரு எங்கே ?"

''வெளியே போயிருக்கிறான்."

''மனோஜ் ?"

''வரப் பத்து மணி ஆகும்னு சொல்லிட்டுப் போனான்.''

''எங்கே ?''

''தெரியாது.''

''சாரு எங்கே போனா ?''

''மூர்த்தியும் அவனுமாப் போறதைப் பார்த்தேன்.''

''எப்ப ?''

''நீயும் அவனும் மல்லுக்கு நின்னேளே, அது முடிஞ்சு, நீ உள்ளே வந்ததும், அவன் கிளம்பினான். நானும் வர்றேன்னு சாரு கூடப் போனா.''

''அப்படியா ?''

''என்னாலே அவளைத் தடுத்து நிறுத்த முடியலே !'' என்றாள் கோமதி.

''ஏன் தடுத்து நிறுத்தணும் ?''

''சீதா, என்ன சொன்னே ?''

''ஏன் தடுத்து நிறுத்தணும்னு சொன்னேன்.''

''மூர்த்தி என் பிள்ளை ; சாரு உன் பொண்.''

''சாருவோட அப்பா இருக்கிற வரைக்கும் நான் வேறு எண்ணத்தில் இருந்தேன், அம்மா. ஆனா, திடீர்னு லாப நஷ்டங்களை ஆராஞ்சு பார்த்தப்போ, மூர்த்தி நஷ்டமாத் தெரியலே எனக்கு.''

''அப்படீன்னா ?''

''வயசுப் பொருத்தம் இருக்கு. மனசும் பொருத்தம் இருக்கு. சாருவாகவே அவன் கூடப் போனாள் என்றால், அவன் மறுக்க மாட்டான் இல்லையா ? அப்பா வின் மனசு தெரிந்த பிள்ளை மூர்த்தி.''



''ஏன் திடீர்னு மாறினே ?''

''பம்பாயிலிருந்து ஒரு மாத்தம். அதனால் ஏற்பட்ட மாத்தம்னு வைச்சுக்கோ.''

''நீ சொல்றது எனக்கு ஒரு விதத்தில் சந்தோஷமா இருந்தாலும், இன்னொரு விதத்தில் சங்கடமா இருக்கு.''

''என்ன அது ?''

''நீ மூர்த்தியை இன்னும் புரிஞ்சுக்கலே.''

''எப்படிச் சொல்றே, அம்மா ?''

''ஜானா...''

''மெட்ராஸ்லே ஒரே வீட்டில் சாருவும் மூர்த்தியும் வளைய வர்றப்போ அவர்கள் ஒருவரை ஒருவர் இன்னும் நன்னாப் புரிஞ்சுப்பா.''

''அப்படி நடந்தால் நான் ரொம்ப மகிழ்ச்சியா இருப் பேன், சீதா. ஆனா, ஆனா எனக்கு நம்பிக்கை இல்லை.''

''என் கிட்டே விடு.''

''அது சரி, மனோஜ் என்ன செய்யப் போறான் ?''

''அவன் வரலே ; நானும் கட்டாயப் படுத்தலே.''

''காரியம் செய்ய வேண்டாமா ? பத்து, பன்னெண்டு நாள் காரியங்கள்...''

''இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. மனோஜ் நம்பறதாகவும் தெரியலே. அப்படி நம்பினா, அவன் இங்கேயே எல்லாம் செஞ்சுக்கட்டும்.''

''இது என்னடீ பேச்சு ?''

''பின் என்ன செய்யச் சொல்றே, அம்மா ? அவனு டைய அப்பாவின் ஆத்மா சாந்தி அடையணும்னு

லயன்ஸ் கிளப், ஆபீஸ் அசோசியேஷன், இன்னும் பல நண்பர்கள் எல்லாரும் மனசார வேண்டிண்டாச்சு. சாஸ்திரிகள் மந்திரம் சொன்னால்தான் ஆத்மா சாந்தி அடையுமா ? அதுவும் கூலிக்கு உளர்ற சாஸ்திரிகள் ? என்னைப் பொறுத்த வரையில், உடல் போயிடுத்துன்னா, உயிரும் போயிடறது. அது எங்கேயோ பசி தாகத்துடன் அலையறதுங்கறதை நான் நம்பல்லே "

கோமதி வாயடைத்துப் போனாள். என்ன பெண் இவள் ? என்ன மனைவி இவள் ? என்ன தாய் இவள் ?

**த**ன் மீது அக்காவின் போக்கு சற்றே மாறியிருக்கிறது. இளகி யிருக்கிறது என்பதை மறுநாள் மூர்த்தி உணர்ந்த போது அவன் ஆச்சரியப் படவில்லை. இதற்கு ஏதோ காரணம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். முந்தின நாள் இரவு முதலில் கடிந்தவள், அவனும் சாருவும் ஒன்பதரை மணிக்குத் திரும்பி வந்த போது, 'எங்கேடா போயிருந்தே ? எதுக்கு இவன் கூட ராத்திரி வேளையில் வெளியே போனே ?' என்று கேள்விகளைத் தொடுக்கவில்லை. அவனிடமும் விரைப்பாகப் பேசவில்லை. ஏன் ? போவது சென்னை, அங்கே இருக்கப் போவது அவனுடைய வீட்டில் என்பதை அவன் சுட்டிக் காட்டியிருந்தானே, அது அவளைப் பாதித்து மனத்தை மாற்றி யிருக்குமா ?

பேப்பரில் கண்தான் நிலைத்திருந்ததே தவிர, மனம் லயிக்கவில்லை.

''மூர்த்தி !''

எதிர் பாராமல் மனோஜ் வந்து நின்றான்.

''என்ன மனோஜ் ?''

''உனக்கு விடை கொடுத்தனுப்ப ஆசைதான். ஆனா நான் தாதர் ஸ்டேஷனுக்கு வர மாட்டேன்.''



''புரிகிறது.''

''டிரைவர் இல்லை, அதனால்...''

''டாக்ஸி இருக்குமே ! கஷ்டம் இல்லை.''

''எனக்கு இந்தத் திட்டமே பிடிக்கலே.''

''அதான் பல முறை சொல்லி விட்டாயே !''

''சாருதான் என் காலை வாரி விட்டு விட்டாள். ஆனால் பாவம், அவளால் என்ன செய்ய முடியும் ? கல்யாணமாகாத பொண்களுக்கு இந்த நாட்டில் அம்மாவைத் தவிர வேறு கதியே இல்லை. ஓர் அண்ணனை நம்பி வாழ அவள் பயப்படுகிறாள்.''

''உன்னால் உன்னையே நம்ப முடியாதபோது, அவளால் எப்படி ?''

''முன்பு அப்பா இருக்கும்போது சென்னையில் எனக்கு ஒரு பெரிய கம்பெனியில் வேலை கெடைச்சது. அப்பா வேண்டாம்னு சொன்னார் ஆனா இப்ப, அப்பா கம்பெனியிலேயே அதை விடப் பெரிய வேலை கெடைக்கிறது. சாருவும் படிச்சிருக்கா. பொழுது போகலேன்னா ஒரு வேலைக்குப் போகலாம். வீட்டைப் பாத்துக்கற சங்கடமும் இல்லை "

''எல்லாம் இருந்தாலும் அம்மான்னு ஒருத்தி வேணுமே ! அவள்தானே வீட்டின் சக்தி ?''

''சரி மூர்த்தி, அம்மா வீட்டின் சக்தி. நீ உன் அம்மாவுடன் சென்னையில் இருந்து கொள்.''

மூர்த்தி சிரித்தான்.

''என்ன சிரிக்கிறே ?''

''யாரோ சொன்ன, இல்லை, உதிர்த்த பொன்மொழி நினைவுக்கு வந்தது.''

''என்ன அது ?''

''கடவுள் எல்லா இடத்திலும் எப்போதும் இருக்க முடியாது என்கிற காரணத்தால் தாயைச் சிருஷ்டி செய்தாராம்.''

''ராட்சசிகளையுந்தான் கடவுள் சிருஷ்டி செய்திருக்கிறார்.''

''ஆனா ராட்சசியும் தன் குழந்தைக்குத் தாய்தானே?''

''சரி, நான் பதினோரு மணிக்கு வெளியே போறேன். தாதரில் ரெண்டரை மணிக்குப் புறப்படறேன்.''

''ரெயில்வே டைம் டேபிள் இருக்கு. நன்றி மனோஜ்.''

''மூர்த்தி !''

''நீ கூட என்னைத் தப்பா எடுத்துண்டிருக்கே.''

''இல்லை.''

''உன்னைப் புரிஞ்சிண்டிருக்கேன். உன் அப்பா மேலே இருக்கிற தீராத வெறுப்பிலே உன் அம்மா ஒரே ஆட்டமா ஆடறா. அதனால் நீ உன் அம்மாவைப் பழி வாங்கறே. நன்னா அமைதியாச் சிந்திச்சுப் பார். அப்புறம் உனக்கே நீ செய்யறது சரியான்னு படும்.''

''நான் அவ கூட இப்ப மெட்ராஸ் வந்து விட்டால் நான் நல்லவன், இல்லையா ?''

''இல்லை. பிரச்னை அதில்லை. நீ சென்னை வர மறுக்கும் முறைதான் சரி இல்லை. சென்னை வா. நாலு நான் இரு. அப்பறம் திரும்பிவிடு.''

''இல்லை, மூர்த்தி. ஒரு கட்டத்திலும் என் அம்மா என்னை ஜயிக்க நான் விட மாட்டேன். மன்னிக்கணும். உன் மனசு என்னாலே புண் படறது.''

''சரிதான்...''



மனோஜ் நகர்ந்து விட்டான்.

மூர்த்தி மீண்டும் பேப்பரில் லயிக்க முயன்றான்.

# 14

வழக்கமாகக் காலை ஐந்து மணிக்குப் படுக்கையிலிருந்து எழும் அனந்தராமனுக்கு அன்று காலை மூன்று மணிக்கே விழிப்பு ஏற்பட்டது. கடந்த ஒரு வருஷ காலமாக, இறந்து போன அவருடைய பெண் அகிலா இரவுகளில் வந்து போவாள். ஒரு நாள் பழம் நறுக்கிக் கொடுப்பாள் ; இன்னொரு நாள், தான் தன் தந்தைக்காக வாங்கிய ஜரிகைக் கரை வேஷ்டியைப் பிரித்துக் காண்பிப்பாள். இன்னொரு நாள் அவருக்குப் பிடித்த மோகன ராகத்தைப் பாடிவிட்டுப் போவாள். ஒரு தடவை கூட அவள் அழவில்லை. முகம் வாடவில்லை. எப்போதும் முல்லைச் சிரிப்பு. கணீர் கணீர் என்ற குரல்.

ஒரு நீண்ட கனவின் கால அளவு இரண்டரை விநாடி என்று யாரோ சொல்லிக் கேட்டிருந்தார் அனந்தராமன். ஆனால் அகிலா அவருடன் கழித்த நேரம் பல மணிகளாகப் பிரமையை எழுப்பியது. பயங்கரக் கனவுகளோ துர்சொப்பனங்களோ நடுக்கத்தை ஏற்படுத்தும். உடல் பயத்தினால் வேர்க்கும். ஆனால் அகிலா வந்து போன பின் அறையில் தென்றலுடன் மல்லிகை சந்தனம் பன்னீர் மணங்கள் இழைந்து வருவதாகத் தோன்றியது.

அன்று அவரை எழுப்பியது அகிலா அல்ல. பல மாதங்களுக்குப் பின், முதன் முதலாக அவள் வரத் தவறினாள்.

அவளுக்குப் பதிலாக அவளுடைய அக்கா, சீதா வந்தாள். அவளுடைய குரல் சீற்றக் கர்ஜனையாக ஒலித்து, அவரை எழுப்பி விட்டது.

கண் விழித்தவருக்கு மீண்டும்|உறக்கம் பிடிக்கவில்லை. எழுந்தார், பல் தேய்த்தார். குளிர்ப் பெட்டியில் ஒரு பாலிதீன் பை பால் வெண்ணெயுடன் சில்லிட்டிருந்தது. அவருக்குத் திடீர்க் காபி பிடிக்காது. முந்தின நாள் இரவு சமையலறையை அலம்பி விட்ட பிறகு ராஜம்மா வறுத்த காபிக் கொட்டையைத் தூளாக்கி, ஃபில்டரில் போட்டு வைப்பாள்.

அனந்தராமன் ஃபில்டரைப் பார்த்தார். கிட்டத்தட்ட முக்கால் பாத்திரம் பொடி இருந்தது. காஸ் அடுப்பைப் பற்ற வைத்துத் தண்ணீரை வைத்தார். மூன்று நிமிஷங்கள்... தண்ணீர் கொதித்தது.

காபித் தூளைக் கெட்டிப் படுத்தி இருந்ததால், டிகாக்ஷன் எளிதில் இறங்க ஆரம்பிக்கவில்லை. தூளின் சக்தியை யெல்லாம் விழுங்கிக் கொண்டு மெதுவாகச் சொட்டுச் சொட்டாக இறங்க ஆரம்பித்தது. பொறுமையை இழந்தவராய், மேல் பாத்திரத்தைக் கிடுக்கியால் பிடித்து இறக்கிப் பார்த்தார். நாலு தேக்கரண்டி டிகாக்ஷன்தான் இருக்கும் என்று தோன்றியது. மீண்டும் பாத்திரத்தைப்பழைய நிலையில் வைத்துவிட்டுக் காத்திருந்தார். ஒரு டீப்பாய் ஓர் ஓரமாகக் கிடந்தது. அதில் உட்கார்ந்தார். ஜன்னல் வழியாக நிலக் காற்று லேசாக வீசியது.

ரங்கா.

ராமு.

மூர்த்தி.

ரங்காவும் ராமுவும் பிரிந்து போய்விட்டார்கள்.

மூர்த்தி எஞ்சியிருக்கிறான்.

சீதாவின் வருகை மூர்த்தியையும் பிரித்துவிடுபே



சீதா அவருடைய பெண். இப்போது வீணாய்ப் போன நிலையில் இருக்கிறாள். அவளுக்கு என்றுமே தன் பெண்ணை அவருடைய பிள்ளைக்குக் கொடுக்க லவலேசமும் எண்ணமில்லை. ஓர் ஆசை வெறியில் அவரும் கோமதியும் ஆர்வத்தைக் காட்டுகிறார்கள். ஆனால் மூர்த்தியும் இந்த விஷயத்தில் சீதாவுடன் ஒத்துப் போகிறான். காரணம் ஜானா நல்ல பெண். ஆனால் அவளும் சரி, கோமதியும் சரி, அவளை மருமகளாக ஏற்க விரும்பவில்லை. ஏன் ? சாரு இருக்கிறாள் என்கிற ஒரே காரணந்தான். சாரு என்கிற பெண்ணுக்கு வயது பதினாலு பதினைந்தாகவோ அல்லது இருபத்தேழு இருபத்தெட்டாகவோ இருந்திருந்தால் இந்தப் பிரச்னையும் குழப்பமும் ஏற்பட்டிருக்காது. ஜானா நல்ல மருமகளாகப் பட்டிருப்பாள்.

திடீரென்று அனந்தராமன் தமக்குள் சிரித்துக்கொண்டார். ரங்காவின் மனைவி சொர்ணமும், ராமுவின் மனைவி ருக்மிணியும் ஆரம்பத்தில் நல்ல பெண்களாகவே தோன்றினார்கள். ஆனால் என்ன நடந்தது ? இருவரும் கால் மண்ணை உதறி எறிந்து விட்டு, தம் தம் கணவர்களையும் இழுத்து வளைத்துப் போட்டுக் கொண்டு போனார்கள். அவருக்கு எப்படிப்பட்ட மருமகள் வந்தால்தான் என்ன ? வந்த பிறகு பிள்ளை எப்படித் திசை மாறுகிறான் என்பதுதானே கேள்வி ? பெண்ணிடம் ஆண் மயங்குவதில் தப்பு இல்லை. அது இயற்கையின் நியதி. பெண்ணின் மனத்துக்கு இசைவதிலும் தவறு இல்லை. அது அவளுக்கு இன்பத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகிறது. அவள் மகிழ்ச்சியுடன் இருந்தால்தான் குடும்பம் கலகலப்பாக இருக்கும்.

ஆனால் மயக்கத்தில் ஆண் தன் மதியைப் பறிகொடுத்து விட்டால் ? அப்புறம் ஆண் ஒரு கோட்டைக் கிழிக்க

முடியாது. பெண் கிழிப்பாள்; அதை ஆண் தாண்ட மாட்டான்.

அவர் எழுந்தார்.

டிகாக்ஷன் நன்றாகவே இறங்கி யிருந்தது. பால் பாத்திரத்தில் பாலை ஊற்றிக் காய வைத்தார்

நான்கு நிமிடங்கள். பால் பொங்கி வரும்போது காஸ் அடுப்பை அணைத்தார்.

காபியை உறிஞ்சி, ருசித்து ருசித்துக் குடிக்கையில் மீண்டும் சீதாவின் நினைவு.

மாடியில் மூன்று அறைகள், சமையல் அறை, டைனிங் ஹால், எல்லாம் இருக்கின்றன. தற்போது மூர்த்தி மாடியில் ஓர் அறையில் இருக்கிறான். இனிமேல் அவன் கீழே வந்துவிட வேண்டும். சீதா, மனோஜ், சாரு மூவரும் மாடியில் இருக்கலாம். அவர், கோமதி, மூர்த்தி கீழே. அவர் எண்ணமும் நம்பிக்கையும் பலிதமானால் மூர்த்தி மாடிக்கே திரும்பிப் போகலாம். அப்போது சீதாவும் மனோஜும் கீழே வந்து விடுவார்கள்.

மணியைப் பார்த்தார். மூன்றே முக்கால்.

மாலை நாலரைக்குத் தாதர் எக்ஸ்பிரஸ் வருகிறது. பன்னிரண்டே முக்கால் மணி நேரம் இருக்கிறது. அதற்குள் மாடியை அலம்பிச் சுத்தம் செய்ய வேண்டும். கீழே முன் பக்கத்து அறையைக் காலி செய்து, மூர்த்தியின் மேஜை, அலமாரி முதலானவற்றை மாற்ற வேண்டும். அதேபோல், மாடி அறைகளில் கட்டில் அலமாரிகளைப் போட வேண்டும்.

ஏழு மணிக்குத் தோட்டக்காரனும் டிரைவரும் வருவார்கள். வந்த பின் பார்த்துக் கொள்ளலாம்.



ஐந்து மணிக்கு அவர் திண்ணையிலே நடந்து கொண்டிருக்கையில் ராஜம்மா வந்தாள்.

அவள் பேச்சை ஆரம்பிக்கு முன், "டிகாக்ஷன் போட்டாகி விட்டது," என்றார் அவர்.

"இன்னொரு தம்ளர்?"

"அரை."

ராஜம்மா உள்ளே சென்றாள்.

திடீரென்று ராஜம்மா மீது அவருக்கு அனுதாபம் பிறந்தது. யாரும் அவளை எதற்கும் கடிந்து பேச மாட்டார்கள். ஆனால் இனிமேல் நிலைமை மாறலாம். சீதாவுக்குச் சிப்பந்திகளை விரட்டுவதென்றால் ஒரு தனி ஆனந்தம். சிறு பையன்கள் கட்டெறும்பு, வண்ணாத்திப் பூச்சி, தும்பிகளைச் சித்திரவதை செய்து களிப்பார்கள். சீதா வேலைக்காரர்களைப் பூச்சிகளாக மதித்துப் பழகுவாள்.

இனிமேலும் சீதாவுக்கு இந்த மகிழ்ச்சி தேவைதானா?

காபி வந்தது. ராஜம்மா திரும்ப யத்தனித்தாள்.

"ஒரு நிமிஷம்."

"என்ன? ஏதானும் வடாம் கறிவடாம் வேணுமா?"

"ஊஹூம்." (அவர் சில காலை வேளைகளில் காபியுடன் நொறுக்குத் தீனி சாப்பிடுவார். அதை நினைவில் வைத்துக் கொண்டு ராஜம்மா கேட்டாள்.)

"அப்ப என்ன?"

"சீதா வர்றா!"

"ஆமாம்."

"உனக்கு அவள் குணம் தெரியும்."

''இன்னிக்கு நான் பார்க்கப் போகிற சீதா பழைய சீதா இல்லை.''

''அவள் ஏதேனும் குத்திக் குத்திப் பேசினால் எனக்காகக் கொஞ்ச காலம் பொறுத்துக்கொள்.''

''அப்படிப் பேசுவான்னு நான் எதிர்பார்க்கலே. கட்டின புருஷனைப் பறிகொடுத்தவள் கொஞ்ச நாளுக்குத் தன் புலம்பலில் மூழ்குவாள்.''

''சீதா ஒரு தனிப் பிறவி. உனக்கு இருக்கிற நம்பிக்கை லோக ரீதியானது. சீதா லோகத்துடன் ஒட்டி வாழ்ந்தவள் இல்லை.''

''சரி.''

''வேணும்னா ஒரு மாதம் ஊருக்குப் போயிட்டு வா.''

''முதலில் அவள் வரட்டும்.''

ராஜம்மா உள்ளே சென்றாள்.

திடீரென்று சீதா ஏன் வருகிறாள் என்ற கேள்வி அனந்தராமன் மனத்தில் உதித்தது. அப்போது, அவள் தம் பெண் என்பதையும் மறந்து போனார்.

பிற்பகல் இரண்டே முக்காலுக்கு ஜானா காரில் வந்து இறங்கினாள்.

''மாமா, நான் செண்ட்ரலுக்குப் போகிறேன்.''

''சந்தோஷம். காரை எடுத்துச் செல்.''

''எங்க கார்தான் இருக்கே.''

''எப்படியும் என் வண்டி போகிறது. நீங்க அஞ்சு பேரும் அதில் போகலாம்.''

''நாலு பேர்தானே, மாமா?''



''என்ன சொல்றே, ஜானா?''

''மனோஜ் வரலே.''

''யார் சொன்னா?''

''மூர்த்தி நேத்துக் கார்த்தாலயே போன்லே சொன்னார்.''

''அவன் உனக்குப் போன் பண்ணினானா?''

''இல்லை. நான் பண்ணினேன்.''

''ஏன் வரலையாம்?''

''அவனுடைய அப்பா கம்பெனியில் வேலை கிடைக்கிறதாம்.''

''பத்து நாள் காரியங்களையெல்லாம் அவன் தனியாச் செய்யப் போறானா?''

''தெரியாது, மாமா.''

''மூர்த்தி வேறு என்ன சொன்னான்?''

''உங்க சௌக்கியத்தை விசாரித்தார். ரங்கா, ராமு எல்லாரும் வந்து போகிறார்களான்னு கேட்டார்.''

''அதோ பார், ரங்கா வர்றான்!''

''நான் செண்ட்ரலுக்குப் போன் பண்ணி, தாதர் கரெக்ட் டயத்துக்கு வர்றதான்னு கேட்டுடறேன். அநாவசியமாப் பிளாட்பாரத்திலெ காத்திருப்பானேன்?''

''ஜமாய்.''

ரங்காவும் சொர்ணாவும் படி ஏறி வந்தார்கள்.

''என்னடா திடீர்னு?''

''சீதா வர்றாளே. செண்ட்ரல் போகலாம்னு சொர்ணம் சொன்னா.''

''ஓ, அப்படியா ?''

''ஆமாம் அப்பா. இவருக்குத் தோணவே யில்லை. அரை நாள் லீவு போட்டுட்டு வந்துடுங்கோ, சென்ட்ரலுக்குப் போய்ச் சிதாவைச் சந்தித்து அழைச்சுண்டு வருவோம்னு நான்தான் சொன்னேன்,'' என்றாள் சொர்ணம்.

திடீரென்று அனந்தராமனுக்கு நெற்றிப் பொட்டு வலிப்பதாகத் தோன்றியது. சொர்ணம் சொல்லுவதையெல்லாம் கேட்டுச் செயலாக்குவதில் இன்னும் ரங்கா தன் சாமர்த்தியத்தைக் காட்டுகிறான். அன்று அவள் ரங்காவின் கறுப்புக் கோட்டைக் கழற்றி எறிந்து மூட்டை கட்டச் சொன்னாள். அவனும் அவ்வாறே செய்தான். அநாவசியமாக ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு ஒரு வீடு கட்டக் காரணமாக இருந்தவளும் சொர்ணந்தான்.

இன்று சென்ட்ரலுக்குப் போக வேண்டும் என்று அவள் சொல்லுகிறாள். இவன் தலை ஆட்டி, காரை ஓட்டி வருகிறான்.

அவர் வாய் திறக்க முற்படுகையில் ஜானா வந்தாள்.

''தாதர் கரெக்ட் டயத்துக்கு வர்றதாம்.''

''ரங்கா !''

''என்னப்பா ?''

''ஜானா சென்ட்ரலுக்குப் போனா நீயும் சொர்ணமும் இங்கேயே இருங்கள். ராமுவும் ருக்மிணியும் நாலு மணிக்கு வர்றோம்னு கார்த்தால போன் பண்ணினா. எல்லாருமாச் சேர்ந்து இருப்போம்.''

ரங்கா ஒரு திருப்தியுடன் சொர்ணத்தைப் பார்த்தான். அவன் முகத்தில் ஏமாற்றம். ஆனால் அவளால் ஒன்றும் செய்ய இயலவில்லை.



ஜானா திரும்பவும் வந்தபோது, அனந்தராமன் எதிர் பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை.

**கா**ரிலிருந்து கோமதி ஒரு கூஜாவுடன் இறங்க, சீதா பின் தொடர்ந்தாள்.

மூர்த்தி முன் சீட்டில் இருந்தவன் கைப், பெட்டியுடன் இறங்கினான்.

மனோஜ் வரப்போவதில்லை என்பதை அனந்தராமன் ஏற்கனவே அறிந்திருந்தார்.

ஆனால் சாரு எங்கே ?

சாரு ஏன் வரவில்லை ?

சாருவுக்கு என்னவாயிற்று ?

அனந்தராமன் அவர்கள் படி ஏறி வருவதற்காகக் காத்திருந்தார்.

## 15

**வீ**ட்டை விட்டு மூர்த்தி வெளியேற, சாரு மெது வாகப் பின் தொடர்ந்தாள். சில நிமிடங்களுக்கு முன் அவளுடைய அம்மாவுக்கும் மூர்த்திக்கும் ஏற்பட்ட வார்த்தை யுத்தம் அவளைப் பாதிக்கவில்லை என்றாலும் ஓர் உண்மை அவளுள் பளிச்சிட்டது. சீதா பிறந்த வீட்டுக்குச் செல்லுவதைத் தம்பி மூர்த்தி விரும்பவில்லை. மனோஜின் முடிவை வாயாரப் புகழ்கிறான். இதற்கு என்ன அர்த்தம்? அம்மாவுக்குப் பின்னால் செல்ல வேண்டிய அவள் சென்னை செல்வதும் மூர்த்தியின் மனத்துக்கு ஒவ்வாத விஷயம்.

தெருவை அடைந்ததும், "பீச்சில் கொஞ்ச நேரம் உட்காரலாமா ?" என்று அவள் கேட்டாள்.

மூர்த்தி ஒரு தடவை அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

"இந்த வேளையிலா ?"

"ஏன் ? அப்படி ஒன்றும் நேரமாகி விடவில்லையே ! ஜுஹு பீச்சில் பத்து மணிக்குக்கூட வந்து போவார்கள்."

"சரி. ஆனா அரை மணி நேரந்தான், சாரு !"

"போதும் "

சாருவின் வீட்டிலிருந்து கடற்கரை பத்து நிமிஷ நடை. இருவரும் மௌனமாக நடந்தார்கள்.

கடற்கரையில் கூட்டம் என்று சொல்ல முடியா விட்டாலும் அங்கும் இங்குமாக ஆண்களும் பெண்களும் சிதறிக் கிடந்தார்கள்.

"இது மெட்ராஸ் பீச் மாதிரி இல்லை. மணல் பரப்பே இல்லை!" என்றாள் சாரு. எதைப் பேச வேண்டும், எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று தெரியாமல் மனம் குழம்பிப் போயிருந்தது. காரணத்தை அவள் ஆராயவும் முற்படவில்லை. மூர்த்தியின் மனத்துக்குப் பிடித்த ஜானா அவனுள் சுற்றிச் சுற்றி வந்தாள்.

"மணல் பரப்பிலே வித்தியாசம் இருந்தாலும் கடல்நீர் ஒரே மாதிரிதான் இருக்கிறது!" என்றான் மூர்த்தி. அவன் உட்கார்ந்தான். சாருவும் அமர்ந்தாள்.

ஓரிரு நிமிடங்களுக்கு மௌனம் நிலவியது. திடீரென்று மூர்த்தி ஆரம்பித்தான்.

"விடுமுறைக்கு ஓர் ஊருக்குப் போவதற்கும், ஒரே அடியாய் ஓர் ஊரை விட்டு இன்னோர் ஊரில் வாழப் போவதற்கும் நெறைய வித்தியாசம் இருக்கு. இல்லையா, சாரு ?"



"ஆமாம்."

"உன் அம்மா, அதாவது என் அக்கா, இப்போ மெட்ராஸ் போகணும்னு துடிக்கிறாள்னா அதுக்குப் பலமான காரணங்கள் இருக்கணும்."

"ஆமாம்."

"முக்கால்வாசிப் பிரச்னைகள் பணத்தால் ஏற்படுகின்றன. உன் அம்மாவுக்குப் பிரச்னை ஏதும் இருப்பதாகப் படவில்லை "

"எனக்கும் தெரியவில்லை."

"இங்கே சாதிக்க முடியாத எதை உன் அம்மா மெட்ராஸில் சாதிக்கப் போகிறாள் ?"

சாரு சிரிக்க முயன்றாள். முடியவில்லை.

"பதில் சொல்ல முடியலை, இல்லே ?" என்றான் மூர்த்தி

"நீ அம்மா கிட்டே கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் கேட்கிறே, மூர்த்தி மாமா."

"நீ சொல்றது சரி. ஆனா ஒண்ணு. நான் அப்பா கூடவே, அவர் கடைசிக் காலம் வரையிலும் இருக்க ஆசைப்படறேன். என் ரெண்டு அண்ணாக்களும் துண்டை உதறிப் போட்டுவிட்டுப் போறது போலப் போய் விட்டார்கள். இது அவரை வெகுவாய்ப் பாதிச்சிருக்கு. ஆனா அப்பா எந்த உணர்ச்சியையும் வெளியே காட்டிக் கொள்ள மாட்டார். வெளியே ரொம்பச் சிரித்தால் உள்ளூர அழறார்னு அர்த்தம் வெளியே ரொம்பக் கோபமாத் தெரிந்தால் உள்ளூர ரொம்ப அன்பும் பாசமும் இருக்குன்னு அர்த்தம்."

''தாத்தாவை நான் மேலெழுந்தவாரியாகத்தான் புரிஞ்சுண்டிருக்கேன். நீ ரொம்ப ஆழமா...''

''இல்லை, சாரு. நான் கூட இன்னும் என் அப்பாவை முழுசாப் புரிஞ்சு கொள்ளலை. ஏன், என் அம்மா கூடப் புரிஞ்சுண்டிருக்க மாட்டாள்.''

''அது சரி; நீ முதல்லே என்ன சொல்ல வந்தே?''

''ஆமாம். நான் அப்பா கூடவே கடைசி வரை இருக்க ஆசைப்படறேன். அதோடே வெளியேறி விட்ட அண்ணன்மார்களைத் திருவான்மியூர்ப் பங்களாவுக்குத் திருப்பிக் கொண்டு வரப் போறேன்.''

''நல்ல திட்டம்!''

''ஆனா உன் அம்மா வந்து சேர்ந்தால், பிரம்மாவால் கூட என் திட்டத்தை நெறைவேத்த முடியாது.''

''ஓ. இதுதான் காரணமா, என் அம்மா அங்கே வர வேண்டாம்னு நீ நெனைக்கறதுக்கு?''

''பல காரணங்களிலே இது ஒண்ணு. முக்கியமானதுன்னு வேணும்னா நீ வச்சுக்கோ. சீதா வந்தால் அவ கூட நீ வருவே. ரெண்டு பேரே ஆனாலும் அது ஒரு தனிக் குடும்பமா ஆயிடறது. தலைவன் இல்லாத குடும்பம். பொறந்த வீட்டில் வாழறதுன்னா ஆயிரம் பிரச்னைகள் மத்தவங்களுக்கு ஏற்படும். ஏன், எனக்கே உண்டாகும். வெறுப்புன்னு வந்துட்டால் நான் அந்த இடத்திலே ஒரு நொடிகூட இருக்க மாட்டேன்.''

''நீயும் என் மாமாக்களைப் போல வெளியேறி விடும்படியான சூழ்நிலை உருவாகும்னுதானே சொல்ல வந்தே?''

''ஆமாம்.''

''அப்ப உன் லட்சியம்? மற்ற ரெண்டு அண்ணன்களையும் திருவான்மியூரில் ஒரு குடைக்குக் கீழே கொண்டு வர வேணும்னு நீ நெனைக்கறதாச் சொல்ற லட்சியம்? அது காத்திலே பறக்குமா?''



''நான் என் தோல்வியை ஒப்புக்கொண்டு வெளியேறுவேன்.''

''பேத்தல்! சுத்தப் பேத்தல்!''

''எப்படிச் சொல்றே?''

''என் அம்மா இப்ப, தாத்தா வீட்டுக்கு வர்றா. ஆனா என் அம்மா அங்கேயேதான் கடைசி வரைக்கும் இருப்பாள்னு எப்படி நீயே முடிவு செய்யறே?''

''அங்கே இல்லாமே வேறே எங்கே போவா?''

''மெட்ராஸிலே வேறு வீடே இல்லையா? ஒரு வீட்டை வாங்கிண்டு தனியா வசிக்க முடியாதா?''

''முடியும். ஆனா, சீதா வசிக்க மாட்டாள்.''

''ஏன்?''

''அப்படி அவள் தனியா வசிக்க உன் தாத்தாவும் பாட்டியும் விட மாட்டாங்க. நீ கல்யாணம் ஆகிப் புக்ககம் போயிட்டால் அவளுடன் வேறு யார் இருப்பாங்க? நிச்சயமா மனோஜ் இல்லை. இதே நிலையில் என் அம்மாவும் அப்பாவும் எப்படி உன் அம்மாவை...''

''புரிகிறது.''

''புறப்படலாமா?''

''ஒரு சின்னக் கேள்வி, மூர்த்தி மாமா.''

''என்ன சாரு?''

''நான் புக்ககம் போயிட்டா என்ன நடக்கும் என்கிறது பத்திச் சொன்னே''

''அதுக்கு என்ன?''

''தாத்தா பாட்டி திட்டம் என்ன தெரியுமா ?''

''தெரியும். அதைப் பத்தி நீயும் நானும் இப்பப் பிரச்னையைக் கௌப்ப வேண்டாம், சாரு.''

''ஏன், ஜானா குறுக்கே வர்றாளா ?''

''இப்ப ஜானா எங்கே வந்தாள் ?''

''உனக்கும் எனக்கும் நடுவே ஜானாதான் நிக்கறாள்.''

''உன் பார்வைக்கு அப்படித் தெரிஞ்சா அதுக்கு என் கண்ணைக் குத்தம் சொல்லாதே.''

''அப்ப அவள் குறுக்கே நிக்கலையா ?''

''சாரு, நாம் இது பத்திப் பேச வேண்டாம்.''

''நான் ஏன் பேசறேன், தெரியுமா, மூர்த்தி ?''

''தெரியும்.''

''என்ன தெரியும் ?''

''நீ என்னைப் பத்தி என்ன நெனைக்கறாயோ அதே மாதிரி நான் உன்னைப் பத்தி நெனைக்கறேனா இல்லையான்னு தெரிஞ்சுக்க.''

''ஆமாம், ரொம்ப சரி.''

''அதை உன்னால் தெரிஞ்சுக்க முடியாது, சாரு ''

''ஏன் ? உன் மனசு அவ்வளவு ஆழமா ? பொண்கள் மனசுதான் ஆழம்னு சொல்லுவா.''

''அப்படியானால் என்னையும் ஒரு பொண்ணா மதிச்சுடு.''

''நன்றி மூர்த்தி, போகலாம்.''

''எப்ப நீ என்னை மூர்த்தி மாமான்னு கூப்பிடலையோ, அப்ப 'மிஸ்டர்' போடணும். அதுதான் மரியாதை.''

சாரு சிரித்தாள்.



''நான் உன்னை மாமாவாப் பார்க்கற கண்ணோட்டம் வேறே, மூர்த்தியாப் பார்க்கற நெலை வேறே. உன் மனசு பளிபிக்கா இருக்கலாம். ஆனா அங்கேயும் நான் மூழ்கி அடி மணலைத் தொடுவேன். ஒரு பொண் மனசு வச்சா எதுவும் நடக்கும்.''

''நடந்த!பின் நீ உன் வெற்றியைக் கொண்டாடு.''

''அப்படியே, மூர்த்தி !''

''இப்பப் புறப்படலாமா ?''

''ஆனா ஒண்ணு. நான் அப்படி முழு மனசுடன் பசிபிக்கில் மூழ்காமப் போனா அது என்னுடைய இயலாமையால் இருக்காது. மூர்த்தி, உன் பொருட்டாகத்தான் இருக்கும். வழியை அடைச்சு நிற்கத் தெரிஞ்சவளுக்கு, ஒதுங்கி வழி விடவும் தெரியும்.''

மூர்த்தி எழுந்தான். உள்ளூர அவன் மனம் சாருவைப் பாராட்டியது. ஜானாவுக்கும் இவளுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள். அவள் தன் அன்பை ஒரு விதமாகக் காட்டினால் இவள் இன்னொரு விதமாக வெளியிடுகிறாள். இருவரும் ஒரே நோக்கத்துடன்தான் இருக்கிறார்கள். ஜானாவின் மனோபலம் சாருவுக்கு இல்லை. ஆனால் இல்லாத பலத்தை இழுத்துக் கொண்டு வரும் முயற்சியும் துடிப்பும் இருக்கின்றன. இவர்கள் இருவரும் ஏன் அவனுடைய வாழ்க்கைப் பாதையில் அவனுடன் மோதுகிறார்கள் ?

வீடு திரும்பும்வரை இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை.

மறு நாள்.

மனோஜும் சீதாவும் பேசிக் கொள்ளவில்லை. அவனும் சாருவும் பேசிக் கொள்ளவில்லை.

கோமதிக்கு எல்லாம் வெறுப்பாய் இருந்தது. தன்னுடைய மாப்பிள்ளையை நினைத்து அவள் வருந்துவது கூட அசம்பாவிதமாகப் பட்டது. அந்த உறவு பெண் மூலம் ஏற்பட்ட உறவு. அந்தப் பெண்ணே தன் உறவை, அது இறந்து போன நிலையை மறந்து நிற்கிறாள்.

திடீரென்று பேச்சுக் குரல் கேட்டது.

''அண்ணா, அப்பாவின் போட்டோவை எடுத்துக் குடு. எனக்கு எட்டலை!'' என்றாள் சாரு.

''ஸ்டூலைப் போட்டு ஏறினால் எட்டும். நம்ப அம்மா அப்பா ரெண்டு பேரும் சேர்ந்து எடுத்துண்ட போட்டோ இருக்குமே, அதை உன் அம்மா பொட்டியில் வை''

''அவ உனக்கும் அம்மாதான்.''

''பெத்து விட்டால் தாய். ஆனா அம்மா இல்லை.''

இப்போது சீதா வந்தாள்.

''எந்தப் போட்டோவையும் எடுக்க வேண்டாம். இந்த வீட்டை வித்துத் தொலைக்கற போது கவனிச்சுக்கலாம்!'' என்றாள் சீதா.

''சாரு, இந்த வீட்டை வித்துத் தொலைக்கிறதா? அப்படீன்னா என்ன அர்த்தம்?''

''ஏன் எங்கிட்டே கேட்கிறே? அம்மா பக்கத்திலேயே இருக்கா. நீயே கேளு.''

''உன் அம்மாவுக்கு மெட்ராஸ் ஓடறதுக்குக் கால் பாயறது. ஆனா வச்கிலைப் பார்க்கணும்னு இன்னும் தோணலை.''

''யார் சொன்னா? எல்லாம் பார்த்தாச்சு; போனிலும் பேசியாச்சு.''

''அப்ப, இந்த வீட்டைப்பத்தி ஒண்ணும் தெரிஞ்சுக்கலைன்னு தெளிவாறது''



''என்ன, சாரு, சொல்றான் அவன்?''

''என்ன, அண்ணா?''

''நீ என்ன குறுக்கே? அப்பா இந்த வீட்டை எனக்கு எழுதி வச்சிருக்கார். ஆனா உன் அம்மாவுக்குச் சாகிற வரையில் உபயோகிச்சுக் கொள்ள மட்டும் உரிமை உண்டு. உபயோகிக்கிறதுன்னா வாடகைக்கு விட்டு, வாடகைப் பணத்தை ஏப்பம் விடறதுன்னு அர்த்தமில்லை.''

''நான் இப்பவே வக்கிலுக்குப் போன் பண்றேன்.''

''அவசியம் இல்லைன்னு உன் அம்மா கிட்டே சொல்லு. உயிலின் நகல் என் அலமாரியில் இருக்கு. எடுத்துப் பார்த்துக் கொள்ளட்டும்.''

சீதா பாய முற்பட்டாள்.

''ஒரு நிமிஷம்!'' என்றான் மனோஜ்.

''வீடு எனக்குன்னு இருக்கற மாதிரி கம்பெனியில் முடக்கியிருக்கிற லட்சம் ரூபாய் ஷேர் உனக்கு வந்தது, சாரு. உன் கலியாணத்தை முன்னிட்டு வந்த பணமெல்லாம், அதாவது பிராவிடண்ட் ஃபண்ட், கிராடியுடி, நஷ்ட ஈடு மூணு பங்காகி ஆளுக்கு ஒரு பங்குன்னு ஆகிறது சாரு, நீ இப்பப் பெரிய பணக்காரி.''

சீதா வெளியேறினாள். ஆயுள் இன்ஷூரன்ஸ் பணம் நிறைய வரும். ஆனால் அதிலும் கடன் இருக்கிறது எல்லாம் மூன்றாகப் பிரிகிறது. அவள் மூன்றில் ஒன்று,

மற்ற இரண்டும் அவள் வயிற்றில் உதித்த உயிர்கள் என்பதைச் சீதா மறந்தாள்.

## 16

**தா**தர் ரெயில் நிலையம் கலகலத்தது. ஒரு பிரயாணியை வழி அனுப்ப நான்கு பேர் என்று வந்திருக்க வேண்டும்.

மூர்த்தி கைக் கடிகாரத்தைப் பார்த்தான். இரண்டு இருபத்திரண்டு. இன்னும் எட்டு நிமிடங்கள் இருக்கின்றன. முதல் வகுப்புப் பெட்டியில் ஜன்னல் ஓரமாய் அம்மாவும் சாருவும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருக்கிறார்கள். அம்மாவுக்குச் சற்றுத் தள்ளி இடதுபுறமாகச் சீதா உட்கார்ந்திருக்கிறாள். ஏழெட்டு நாட்களுக்கு முன், எஸ். எஸ். நாத் இறந்த அன்றே அவளுடைய நெற்றிக் குங்குமம் அழிந்து விட்டது. ஆனால் அவள் அழித்துக் கொள்ளவில்லை.

பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த அவன் சீதாவைப் பார்த்தான். முகத்தில் கோபம், எரிச்சல், வெறுப்பு இவை யெல்லாம் பிரதிபலிப்பதாகப் பட்டன. வருத்தம், வேதனை, துக்கம், துயரம் இவை யெல்லாம் இருக்க வேண்டிய முகம் இப்படி ஏன் விகாரமாக இருக்க வேண்டும்? முதல் முதலாக மூர்த்திக்கு அக்கா மீது இரக்கம் பிறந்தது. எஸ். எஸ். நாத் இறந்ததிலிருந்து அவள் ஒரு பொட்டுக் கண்ணீர் கூடச் சிந்தவில்லை என்றால், நிச்சயம் ஓர் அழுத்தமான, நியாயமான காரணம் இருக்க வேண்டும். ஒரு பெண் எதையும் சகித்துக் கொள்ளுவாள். ஆனால் தாலி கட்டிய கை கருகி விட்டால் அவளையும் மீறித் துக்கம் உடைத்துக் கொண்டு பீறிடும். சீதா துக்க வெள்ளத்தில் மூழ்கவில்லை என்றால் அது அவளுடைய மனத்தின் இயல்பினால் அல்ல. ஓர் அநுபவத்தால், வெளியே சொல்ல முடியாத ஒரு கடுமையான அநுபவத்தால், ஏற்பட்டிருக்கும் மன மாற்றத்தினால்தான். என்ன மன மாற்றம்? ஏன் மாறியது? யாரைக் கேட்பது? எப்படிக் கேட்பது?

எஸ். எஸ். நாத் உயிருடன் இருக்கும் போது, அவன் அவருடைய வீட்டில் அவ்வப்போது தங்கியிருந்த சில சந்தர்ப்பங்களில் அக்காவையும் அவரையும் பார்த்திருக்கிறான். இருவருக்கும் இடையே சரளமான பேச்சு. அவ்வப்போது சிரிப்புகள். சாப்பாட்டு மேஜையில் கலகலப்பு.



எஸ். எஸ். நாத் சீதாவிடம் சரஸமாடாததுதான் பாக்கி. சீதா அவரிடம் கொஞ்சாததுதான் மிச்சம். இப்படிப் பட்ட தம்பதியில் ஒன்று போய் விட்டது. இன்னொன்று பிரிவு தாள முடியாமல் நிலை பெயர வேண்டுமே! பெயரவில்லையே! ஏன்? யாரிடம் கேட்பது?

சீதாவிடம் கேட்க முடியாது. அப்படியே முடிந்தாலும் பதில் வராது. வந்தாலும் அது உண்மையான பதிலாக இருக்காது.

முதல் மணி அடித்தது. வழி அனுப்ப வந்திருந்தவர்களில் பலர் வண்டியிலிருந்து இறங்கிப் பிளாட்பாரத்தில் நின்றார்கள். பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த பல பிரயாணிகள் பெட்டிக்குள் ஏறிக் கொண்டார்கள். அம்மா அவனை அழைத்தாள்.

''என்ன, அம்மா?"

''ஏன் இன்னும் நின்னுண்டிருக்கே? மணி அடிச்சாச்சு."

''முதல் மணிதான், அம்மா."

''ரெண்டாவது மணியும் அடிச்சு, வண்டியும் நகரணுமா? ஏறு."

மூர்த்தி சிரித்தான்.

''சிரிக்காதே, ஏறு"

''சரி, அம்மா."

அவன் ஏறிப் பெட்டியை அடைந்தான். இருக்கைக்கு அடியேயும், பக்கவாட்டுப் பலகைகளின் மீதும் பெட்டிகள் கிடந்தன. சாருவின் தோல்பெட்டி மேலாக இருந்தது.

'மிஸ் சாருமதி நாத்' என்று பொறிக்கப் பட்டிருந்த எழுத்துக்கள் மங்கி, வெளிறிப் போயிருந்தன.

இரண்டாவது மணி. பிளாட்பாரத்தின் ஆரவாரம். வண்டி நகர்ந்தது.

''கதவைச் சாத்தி விடு.''

''சரி, அம்மா''

வழுக்கி நகரும் கதவை வழுக்க விட்டு மூடினான்.

''உட்காரேன்.''

ஒரு நிமிஷம் சீதாவைப் பார்த்தான் அவன். அவள் எண்ணத்தில் லயித்திருந்தாள். ஜன்னலோரமாய் உட்கார்ந்திருக்கும் சாருவைப் பார்த்தான். அவள் தந்திக் கம்பங்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

அவனுக்குச் சிரிப்பும் வேதனையும் ஒருங்கே வந்தன. காலையிலிருந்து அவன் ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசவில்லை. முந்தின இரவு கடற்கரையில் நடத்திய பேச்சு அவளை வெகுவாகப் பாதித்திருக்கிறது முதிராத பெண்ணா, அல்லது அழுத்தமா? அவன் உட்கார்ந்து கொண்டான்.

கோமதி நச்சரித்தாள்.

''டிபன் ஸெட்டிலே தோசை, மிளகாப் பொடி இருக்குடா, மூர்த்தி.''

''வேண்டாம்.''

''கார்த்தாலேயே நீ சரியாச் சாப்பிடலை.''

''இப்ப வேண்டாம், அம்மா.''

''ஏண்டி, சாரு, நீ?''

''கல்யாண் தாண்டட்டும், அம்மா.''

''எப்பத் தாண்டும்?''

''இன்னும் அரை மணி நேரத்தில்.''



அம்மா சீதாவை விசாரிக்கவில்லை. மூர்த்தி சீண்டினான்.

''அம்மா!''

''என்னடா?''

''நீ ஏதானும் சாப்பிடேன்.''

''நீ சாப்பிடறதானால் நானும் சாப்பிடறேன்.''

''நிச்சயமா?''

''தீர்மானமா!''

''அப்ப டிபன் ஸெட்டை எடு.''

அம்மா தன் காலடியில் இருந்த எவர்சில்வர் டிபன் ஸெட்டை எடுத்து, டீப்பாயின் மேல் வைத்தாள்.

திடீரென்று சீதா விழித்துக் கொண்டிருக்க வேண்டும்.

''டிபனா, அம்மா?''

''ஆமாம்.''

''எனக்கும் தா.''

''சாரு!''

''என்னம்மா!''

''ஐஸ் பாக்ஸ் எங்கே?''

''எடுத்துத் தர்றேன்.''

''எனக்கு ஜூஸ் கலந்து தா. காபி வேண்டியிருக்கலை.''

ஒரு பாலிதீன் பையிலிருந்து நான்கு பிளாஸ்டிக் தட்டுக்களை எடுத்தாள் கோமதி. மற்றவர்களிடம் நீட்டினாள்.

"கல்யாண் தாண்டட்டும்!" என்றாள் சாரு.

"எல்லாரும் சாப்பிடறப்போ நீயும் சாப்பிட்டாச் சிரமம் குறையும். உனக்குன்னு மறுபடியும் மூடி வச்சதையெல்லாம் தெறக்கணுமா?"

"கல்யாண் வரட்டும்!" என்றாள் சாரு.

"என்னடி, கிளிப் புள்ளை மாதிரி ஒரே பல்லவியைப் பாடறே?"

"கிளி பல்லவி பாடி நான் கேட்டதில்லை, அம்மா."

மூர்த்தி மௌனமாய் ரசித்துக் கொண்டே சாப்பிட்டான். அவன் சாப்பிட வேண்டும் என்பதற்காக, கோமதி தன்னுடைய தட்டில் ஒரு தோசையைப் போட்டுக் கொண்டாள். பெண் சீதாவுக்கு அவள் பரிமாறவில்லை. எப்படித் தன் பெண், நாக்குக் கூசாமல், நான்கு தோசைகளைச் சாப்பிட முடிகிறது என்று மட்டும் வியந்தாள். ஒருவேளை, நெஞ்சினுள் ஒளிந்து கொண்டிருக்கும் துக்கம் வயிற்றில் அக்கினியை மூட்டி விடுகிறதோ?

விக்ரோலி, முலண்ட், தாணே என்று ரெயில், நிலையங்களை விழுங்கிக் கொண்டு ஓடியது. பிளாஸ்கிலிருந்து காபியை எடுத்துக் குடித்த மூர்த்தி அம்மாவைப் பார்த்தான்.

"எனக்கு இப்ப வேண்டாம்டா. தீர்த்தம் போறும்."

ரெயில் கல்யாண் ஸ்டேஷனை அடைந்தது.

மூர்த்தி எழுந்தான்.

"எங்கேடா?"

"ஏம்மா, தொணதொணன்னு? கொஞ்சம் காலாற நடக்கறேன். இங்கே அஞ்சு நிமிஷம்னு பேரு. பத்து நிமிஷம் குறையாம நிக்கும்."



அவன் இறங்கிச் சில அடிகள் நடந்தான். ஒரு வண்டி நிறையப் பத்திரிகைகள் வந்தன. அந்த வார இல்லஸ்ட்ரேடட் வீக்லி கண்ணில் பட்டது. வாங்கினான். அதைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, ஊதல் சத்தம் கேட்டது. பார்த்தான். கார்டு பச்சைக் கொடியை வீசிக் கொண்டிருந்தார். தன் பெட்டியை நோக்கி விரைவாக நடக்க ஆரம்பித்தான்.

"மிஸ்டர் மூர்த்தி!" அவன் ஏறிட்டுப் பார்ப்பதற்குள் அவன் கையில் ஒரு சிறு காகிதம் திணிக்கப்பட்டது.

கண நேரத்தில் எல்லாம் நடந்து விட்டது.

வண்டி நகர, அவள் விரைய, அவனுடைய கையில் காகிதத்தைத் திணித்த சாரு ஓடி எதிர் பிளாட்பார ரெயில் நகர, அதனுள் அவள் ஏற, அவன் தன் பெட்டியை அடைய, எல்லாம் இமைப் பொழுதில் நடந்து விட்டன.

மூர்த்திக்குத் தலை சுற்றியது. தான் இருக்கும் ரெயில் பிளாட்பாரத்தைத் தாண்டுவதற்குள், எதிர் வண்டி சாருவைத் தாங்கிக் கொண்டு தாதரை நோக்கி வேகமெடுத்து விட்டது.

கதவருகிலேயே நின்றவன் மறந்து போய்ப் பத்திரிகையை நழுவ விட்டான். அது ஓரிரு கணம் வாயிலின் விளிம்பில் சிறகடித்துவிட்டு வெளியே விழுந்தது.

திணிக்கப்பட்ட காகிதத்தைப் பிரித்தான்.

நறுக்குத் தறித்தாற்போலச் சாரு எழுதியிருந்தாள்.

"அம்மா, நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க மாட்டேன். பம்பாய், அப்பாவின் நினைவுகளை இன்பமயமாக்கும். மெட்ராஸ் என்னை வதைக்கும். இப்போதைக்கு எனக்குத் துணை மனோஜ். திரும்பி வந்து அழைத்துப் போக முயலாதே. என் வயது இருபத்திரண்டு— சாரு."

எழுத்தின் வன்மையை மூர்த்தியால் ரசித்துப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆனால் ஒரு குற்ற உணர்வு அவனைத் தாக்கியது. சாருவின் இந்த முடிவு, முந்தின இரவு கடற்கரையில் நடந்த பேச்சின் விளைவோ ?

அவள், 'வழியை அடைத்துக் கொண்டு நிற்கத் தெரிந்தவளுக்கு ஒதுங்கி வழி விடவும் தெரியும் !' என்று சொன்னாள். இப்போது அதை நிரூபித்து விட்டாளா ? அப்படியானால் சாரு ஒரு முட்டாள். அவள் என்றைக்கும் வழியை அடைத்துக் கொண்டு நின்றதில்லை. அவளால் நிற்கவும் முடியாது.

அவன் மீண்டும் பெட்டிக்குள் பிரவேசித்த போது, கோமதி, "சாரு எங்கேடா? இன்னும் காணோம் ? டிபன் சாப்பிடறதுக்கு முன்னாலே கை அலம்பப் போகிறாள்னு நெனைச்சேன்," என்றாள்.

"சாரு கை கழுவி விட்டாள்."

சொல்லிக் கொண்டே, மூர்த்தி கடிதத்தைச் சீதாவிடம் நீட்டினான்.

சீதா வெறுப்புடன் பார்த்தாள். "எனக்குப் படிக்க வேண்டாம், மூர்த்தி. அவள் எதிர் ரெயிலில் ஏறுவதை நான் அப்பவே பார்த்து விட்டேன். அவளுடைய பொட்டியைத் தெறந்து பார். அதில் பழைய புஸ்தகங்கள் இருக்கும் !" என்றாள் அவள்.

"சீதா !"

"பேசாம இரு, அம்மா. முன்னாடி புள்ளை. இப்பப் பொண். எல்லாரும் ஒரு நாள் என்கிட்டேதான் வரணும்."

மூர்த்தி வாயடைத்துப் போனான்.

கோமதியின் கண்களிலிருந்து நீர் பெருக ஆரம்பித்தது.



சென்னை ... நூலகம்
21203
3777960
99

# 17

ஒரு மாதம் ஓடிப் போனதை ரங்காவைத் தவிர வேறு யாரும் கவனிக்கவில்லை. கடந்த பல வாரங்களாக எப்படி அப்பாவை அணுகி, பெண் மாலுவின் கலியாணத்துக்குப் பண உதவி கேட்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான். எஸ்.எஸ். நாத்தின் திடீர் மரணம் பல எதிரொலிகளைக் கிளப்பி விடவே, சந்தர்ப்பங்களும் சூழ்நிலையும் சரியாக அமையவில்லை. என்னதான் சீதா மற்றவர்களைப் போல மூலையில் முடங்கித் துக்கம் கொண்டாடா விட்டாலும், அவள் வந்த பின் திருவான்மியூர் வீட்டில் களை இல்லாமல் போய்விட்டது. அம்மாவையும் மூர்த்தியையும் தவிர வேறு யாருடனும் அனந்தராமன் நான்கு வார்த்தைகள் தொடர்ந்து பேசவில்லை. சென்ற வருடம் அகிலா இறந்த போதும், அண்மையில் எஸ். எஸ். நாத் இறந்த போதும், அனந்தராமன் எவ்விதமான சலனமும் இல்லாமல் மற்றவர்களுடன் கலகலத்தார். தம் துக்கத்தைத் தம்முள்ளேயே அடக்கிப் புதைத்துக் கொண்டு, ஒன்றுமே நடவாதது போல வீட்டினுள் வளைய வந்தார். சலனமற்ற நீர்த் தேக்கத்தின் அடி வயிற்றில் துக்கச் சுழல்கள் ஓயாமல் ஒழியாமல் சுழன்று சுழன்று அப்பாவை வாட்டுகின்றன என்பதை ரங்காவால் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பா ஒரு யதார்த்தவாதி. பிறப்பும் இறப்பும் அவரைப் பாதிக்காத நிகழ்ச்சிகள் என்று அவன் நினைத்தான். இந்த நினைப்பு அவரை அணுக ஒரு தைரியத்தை அளித்தாலும், பொலிவு இழந்த வீடு அவனைத் தடுத்தது. பிறர் மனங்களை ஊடுருவிப் பார்க்கும் திறமை கொண்ட அவன் மனைவி சொர்ணம், அவனுடைய தடுமாற்றத்தைப் புரிந்து கொண்டு அவனை முன்னுக்கு உந்தினாள்

"நீங்க எதுக்காகத் தயங்க வேணும்? உங்க அப்பா ஒரு புள்ளையிடம் சரளமாப் பேசினா, இன்னொரு

புள்ளைகிட்டே மூஞ்சியைத் தூக்கிப்பாரா? என்னிக்கு நிச்சயதார்த்தம் வச்சுக்கலாம்னு ரெண்டு லெட்டர் போட்டுட்டார் அந்தப் பிராம்மணர்."

"தெரியும், சொர்ணம். பங்களா இருக்கு, கார் இருக்கு, உன் கழுத்து நெறைய நகை இருக்கு. ஆனா, கல்யாணச் செலவுக்கு ரொக்கம் இல்லையே!"

"இல்லாத இடத்தை வட்டமிட்டுப் பார்த்து என்ன புண்ணியம்? உங்களுக்கு இருக்கிற இடம் திருவான்மியூர் தான். உங்க அப்பாவுக்கு நம்ம மாலுன்னா தனி வாஞ்சை போய்க் கேளுங்கோ"

"இந்தச் சமயம் பார்த்து உன் அப்பா நொடிச்சுப் போய்த் தொலைச்சாரே!"

"என் அப்பா இன்னும் தொலையலை. நொடிச்சுத் தான் போயிருக்கார். அது சரி, என் அப்பா இப்ப நொடிச்சுப் போயிருக்கலேன்னா, அவர் வீட்டுக் கதவைத் தட்டலாமுன்னு உத்தேசமோ?"

"ஏன், தப்பா!"

"ஒரு மனுஷன் தன் பொண்ணையும் அவ கூடச் சீர் வரிசைகளையுந்தான் கொடுப்பான். மாப்பிள்ளையின் பரம்பரையையே சுத்தி வளைச்சுக் காப்பாத்த முன் வருவானா? ஏன் உங்க புத்தி இப்படிப் போறது?"

"சரி சரி, சொர்ணம், இப்ப என்ன செய்யச் சொல்றே?"

"நம்ம மாலுவுக்கு அமைஞ்சிருக்கிறது சாதாரணப் பதினாலு காரட் வரன் இல்லே. பசும்பொன் வரன். ஐ.ஏ.எஸ். இதை நீங்க நழுவிக் கீழே போட்டுட்டா அப்புறம் கலங்கறது நீங்களும் நானும் மட்டும் இல்லை. மாலுவுந்தான். இப்ப எனக்கு அவதான் முக்கியம்."

"உன் கிட்டே எழுபது பவுன் நகை இருக்கு."



"ஏன், வைரத்தோடு, வைர நெக்லஸ், கல் வளையல் இதை யெல்லாம் சொல்லலே?"

"நீ மனசு வச்சா..."

"இப்ப நீங்க என்ன சொல்ல நெனைக்கிறீங்க? எனக்குத் தெரியலே."

சொர்ணம் சற்று விலகி நின்று கொண்டிருந்தவள் அருகே வந்தாள். அவளுடைய மூச்சுக் காற்று அவன் முகத்தில் படர்ந்தது.

"ஏற்கனவே மாலு பத்துப் பன்னெண்டு பவுனுக்குப் போட்டுண்டிருக்கா. நீ கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணினா இன்னொரு இருபது இருபத்தஞ்சு பவுனுக்கு..."

"மூச்சு விடப்படாது! என் அப்பா என் அம்மாவின் நகைகளை அழிக்க எனக்குப் போட்டு உங்ககிட்டே அனுப்பல்லே. இன்னொண்ணு சொல்லட்டுமா?"

"என்ன?"

"கட்டின பொண்டாட்டியின் கையை எதிர்பார்த்துக் காரியங்களை நடத்தலாம்னு இம்மியளவு நெனைச்சாக் கூட, அப்படி நெனைக்கிற புருஷன் எதுக்கும் லாயக்கில்லாதவன்."

"சொர்ணம்!" அவன் கத்தினான்.

"உங்க கத்தல்லேகூட வீர்யம் இல்லே. பிசிர் அடிக்கறது. போங்கோ, நேரே உங்க அப்பா கிட்டே போங்கோ. கால்லே விழுங்கோ, தலையிலே அடிச்சுக்குங்கோ. பங்களாவைச் சுத்தி அங்கப் பிரதட்சிணம் வேணும்னாலும் நடத்துங்கோ. வரும் போது நான் எதிர் பார்க்கிற பதிலுடன் வாங்கோ!"

"எவ்வளவு கேட்கணும்?"

'ஏன் என்னைக் கேட்கிறீங்க? ஒரு ஐ.ஏ.எஸ். புள்ளையின் கலியாணம்னா ஒரு சின்னக் கோவில்

பிராகாரத்திலே நடக்காது. இது மெட்ராஸ். ராஜேசுவரி, ஆபட்ஸ்பரி இப்படித்தான் பார்க்கணும். மேலும் நகை, புடைவை, எதிர் ஜாமீன், மாப்பிள்ளைக்கு டிரஸ்னு செலவு ஒண்ணு பின்னாலே ஒண்ணா புத்துலேந்து வர்ற எறும்பு மாதிரி வந்துண்டே இருக்கும்."

' எதிர் ஜாமீனா ?"

"ஆமாம். எதிர் ஜாமீன் !"

"அது தப்பாச்சே !"

"அதனாலேதான் சட்டம் போட்டிருக்கா. ஆனா அந்தச் சட்டம் இங்கே வந்து நம்ம மாலுவை ஒரு ஐ.ஏ.எஸ். கழுத்திலே கட்டி வைக்குமா ? புள்ளையைப் பெத்தவள் அன்னிக்கு என்ன சொல்லிட்டுப் போனாள் ? நெனைவிருக்கா ?"

"என் மண்டை ரணகளமாயிருக்கு."

"எங்களுக்கு மனுஷா ரொம்பப் பேரு. பலான இடத்திலேருந்து வரணும். எங்க ஊர் சம்பிரதாயம் எல்லாருக்கும் போக வர ரெயில் சார்ஜ் குடுக்கணும். கிட்டின உறவுகளுக்குப் புடைவை வேஷ்டி எல்லாம் எடுக்கணும் என்றெல்லாம் சொன்னாளே ! எதுக்கு இப்படி லிஸ்ட் போட்டுப் படிச்சா ?"

"புள்ளைக்கு டிரஸ்ஸுக்கு ரெண்டாயிரம் கொடுக்கறேன். எதிர் ஜாமீன் ?"

"நீங்க வாங்கலே ?"

"எங்க அப்பா கேட்கலே. ஆனா உங்க அப்பா குடுத்தார்."

"கொழக்கட்டையை வடக்கே கடிச்சா என்ன, தெக்கே கடிச்சா என்ன ? பூர்ணம் வாய்க்குள்ளே போகத்தான் போறது. சரி, என் அப்பாவுக்குப் புத்தி மழுங்



கிடுத்து. பத்தாயிரம் ரூபாயை ரெண்டு கையாலேயும் அள்ளி நீட்டினார். உங்க அப்பா ஏன் கையைப் பின்னுக்கு இழுக்கலே ?"

"ஏன் பழசைக் கிளர்றே, சொர்ணம் ?"

"நான் கௌறலே, நீங்க கௌற வைக்கிறீங்க. நாளைக்குத் தசமி. வெள்ளிக் கிழமை. மூர்த்தி ஆபீஸுக்குப் போயிடுவார். மத்தியானம் மூணு மணிக்குப் போனா உங்க அப்பா விச்ராந்தியா இருப்பார். வேணும்னா இன்னிக்குச் சாயங்காலம் மாலுவைத் திருவான்மியூருக்கு அனுப்பறேன். உங்க அப்பா மனசு நன்னா இசையறத்துக்குத் தோதா இருக்கும்."

"நெனைச்சுப் பார்க்கிறதற்கே என்னவோ மாதிரி இருக்கு. மாலுவை அனுப்பறதாம், அப்பா மனசைத் தயார் பண்றதாம் ! அப்புறம் திருவோட்டை எடுத்துண்டு அவர் முன்னாடி நிக்கறதாம் !"

"இதுக்கு அவமானமா இருந்தா வேறு ஒரு வழி இருக்கு"

"என்ன ?"

ரங்கா தலை நிமிர்ந்து பார்த்தான். முகத்தில் ஆர்வம் பிரிட்டது.

"முன்னே பின்னே தெரியாத ஊருக்குப் போய், மஞ்சத் துணி கட்டிண்டு சொம்புப் பாத்திரத்தில் பூவைச் சுத்தி ஏந்திண்டு வீடு வீடா ஏறி எறங்குங்கள்."

அவனுக்கு அவள் கன்னத்தில் 'பளார்' என்று அறையக் கொள்ளை ஆசை. ஆனால் அவனுள் ஊற்றெடுத்த சீற்றம் அவனுக்குள்ளேயே ஜீவனற்று முடங்குவதை அவனால் தடுக்க முடியவில்லை. ஆரம்ப காலத்திலிருந்து அவளுடைய உடல் சதைக்கு அடிமையாகிப் பழகி விட்ட அவனுக்குப் புதிதாகத் தெம்பு பிறக்க வழி யில்லாமற் போயிற்று.

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். வயது நாற்பதைத் தாண்டி விட்ட போதிலும், சொர்ணம் இன்னும் ஒரு விக்கிரகம் போல இருந்தாள். இடை மட்டும் சற்றுப் பருத்து மடிப்பு விழுந்திருந்தது. ஆனால் அவனுடைய பசிக்கும் கண்களுக்கு மடிப்புகளே பற்பல கதைகளைக் கூறின.

''இங்கே என்ன பார்வை? நான் சொன்னதையெல்லாம் நெனைவில் வச்சுக் கொள்ளுங்க.''

''எனக்கு இப்பப் புதுசா ஒரு யோசனை தோண்றது.''

''என்ன ?''

''சீதா ரொக்கமா வெச்சுண்டிருக்கா.''

''நீங்க வருவீங்க, உங்களுக்குத் தரவேணும்னு வச்சுண்டிருக்காளா ?''

''கடனாக் கேட்கறேன்.''

''பணயமாகக் கேட்டால் ?''

''வீடு ?''

''அது மேலே முப்பது ரூபாய்க்குக் கடன் இருக்கே.''

''அது உங்க அப்பாவாலே வந்தது. என் அப்பா சொத்தைப் பிரிச்சுக் கொடுத்த பணத்தில் கட்டி முடிக்க நான் பார்த்தேன். ஆனா நீ? பால்கனி வேணும், மாடியிலே ரெண்டு ரூம் வேணும்னு இழுத்துண்டே போனே.''

''நாளைக்கே வேணும்னா நாலு பேரைக் கூப்பிட்டு நீங்க அதிகம்னு நெனைக்கிற ரூம்களை இடிச்சுத் தள்ளச் சொல்றேன்.''

''ஏன் இப்படி ஏடாகூடமாப் பேசறே, சொர்ணம் ?''

''நான் உள்ளே போறேன்.''



அவள் மெதுவாக நடந்து சென்றாள். மற்றவர்கள் முன்னிலையில் சாந்தமும் புன்னகையும் குலுங்கும் சொர்ணம் எங்கே? தனிமையில் அவனுடன் வாதாடும் சொர்ணம் எங்கே?

அன்று சாயங்காலம் டெலிபோனில் பேசினான். மூர்த்தியின் பதில் வந்தது.

''என்ன அண்ணா ?''

''அப்பா எப்படி இருக்கார் ?''

''இருக்கார்.''

''என்ன, சொரத்து இல்லாமல் பேசறே, மூர்த்தி ?''

''சொரத்து இல்லாம இருக்கார். அதனாலே அப்படிப் பேசினேன். அது சரி, ஏன் உன்னைப் பத்து நாளாக் காணோம், அண்ணா ?''

''நாளைக்கு வரப் போறேன்.'' சொன்னவுடன் நாக்கைக் கடித்துக் கொண்டான். 'இவனிடம் ஏன் சொல்ல வேண்டும் ?'

''நல்லது. மன்னி, மாலு எல்லோரையும் அழைச்சுண்டு வா. என்னிக்கு அவ நிச்சயதார்த்தம் ?''

இனிமேல் எதையும் ஒளிப்பதில் அர்த்தமில்லை என்று பட்டது ரங்காவுக்கு.

''அது விஷயமாத்தான் அப்பாவைப் பார்க்க வரப் போறேன். இன்னிக்குச் சாயங்காலம் மாலுகூட வர்றா.''

''அவளும் இது விஷயமாத்தான் வர்றாளா ?''

''ஆமா !''

''அப்ப ஏன் அவள் வருகையை உன் வருகையோடு எணைச்சுப் பேசறே ?''

''சரி, தப்பு.''

''மாலு வரட்டும். அப்பா ரொம்பச் சந்தோஷப் படுவார்.''

''நான் வந்தா?''

''ஒரு சொந்தக்காரன் வந்திருக்கான்னு நெனைச்சுக்கு வார்.''

ஒரு நிமிஷம் டெலிபோன் ரங்காவின் கையில் உயிரற்று ஆடியது.

''இருக்கியா, அண்ணா?''

''இருக்கேன்... மூ...மூர்த்தி?''

''என்ன அண்ணா, குரல் ஒரு மாதிரியா இருக்கு?''

''இப்ப என் நிலை அப்படி.''

''ஏன், என்னாச்சு? கம்பெனிக்குப் போயிண் டிருக்கியோ இல்லையோ?''

''கையிலே ரொக்கமாப் பணம் இல்லே. வீட்டுப் பேரிலே கடன் இருக்கு. இப்ப நான் மாலு கலியாணத் துக்கு அப்பாவைத்தான் மலையா நம்பிண்டிருக்கேன்.''

''இது அப்பா முடிவு செய்ய வேண்டிய விஷயம், அண்ணா.''

''நீ உதவி செய்யப்படாதா?''

''எப்படி?''

''ரெண்டு வார்த்தை.''

''ரெண்டு என்ன, ரெண்டாயிரம் சொல்றேன். ஆனா அப்பாவை வார்த்தையிலே வெல்ல முடியாது; மயக்க முடியாது.''



''முயற்சி பண்ணிப் பாரேன்.''

''நீயே முதல்லே நேரடியாப் பேசு, அண்ணா.''

''பயமாயிருக்குடா.''

''இந்தப் பயம் உனக்கு அன்னிக்கு இருந்திருந்தா இந்த நிலை இப்ப வந்திருக்காது. அன்னிக்கு நீ மன்னிகிட்டே பயந்தே. இன்னிக்கு?''

''ரெண்டு பேரிட்டேயும் பயப்படறேன்.''

''சரி, சரி; அழாதே. நாளைக்கு வந்து சேரு.''

டெலிபோனை வைத்துவிட்டு ரங்கா உட்கார்ந்தான். உடல் வியர்த்தது.

அலுவலகத்தில் லீகல் ஆபீஸர் பதவி. மூவாயிரம் சம்பளம். கார் கடன், சேமிப்பு நிதிக் கழிவு, வருமான வரி, வீட்டுக் கடன் தவணை எல்லாம் போக ஆயிரத்து நூற்றைம்பது தேறுகிறது.

வீட்டில் ஃப்ரிட்ஜ், டி.வி., இட்லி மெஷின், சட்னி மெஷின். ஒன்று மாற்றி, ஒன்று ரிப்பேர் செலவு, வாரத்துக்கு ஒரு விருந்து. சேமிப்பு நிதியிலிருந்து கடன். ஒரு கடன் தீர்ந்தால் இன்னொரு கடன்.

மனைவியிடம் எழுபது பவுன் நகை, ஏழு கிலோ வெள்ளி, வைர நெக்லஸ், கல் வளையல்.

ஒரு பக்கம் ஐசுவரியத்தின் ஒளி ஜொலிக்கிறது. இன்னொரு பக்கம் வறுமையின் உஷ்ணம் பொறி தெறிக்க வைக்கிறது. இது என்ன பொய்ம்மையான வாழ்வு? ஓடலாமா? ஓடலாம். ஆனால் எங்கே? திரும்பி வராமல் உறுதியாய் ஓடிக்கொண்டேயிருக்க மன வலிமை இருக்கிறதா? இல்லை.

'அப்படியானால் இப்படியே தொடர்ந்து நட. பொண்டாட்டியின் நாக்கு அடங்கற வரையில் அடிச்

கட்டும். மனசு வலிக்காமல் இருக்க, அதற்கு ஏதானும் மருந்து தேடு. மனம் மரத்துப் போகட்டும். மாலுவை ஐ ஏ.எஸ்.ஸுக்குக் கூடு. லட்சம் ரூபாய் ஆனால் என்ன? பெண் போகிற இடம் லைட் ஹவுஸ். அங்கே போகப் படிக்கட்டுகள் தேவை. படிக்கட்டுகளின் விலைதான் லட்சம் ரூபாய். அப்பாவிடம் இருக்கிறது. அழுது கெஞ்சினால், அம்மா இளகி அப்பாவிடம் சிபாரிசு செய்வாள்'

சின்னஞ்சிறு குழந்தையாக இருந்தபோது, விளையாடும் கோலத்தில் அப்பா காலைப் பிடித்திருக்கிறான். அதற்கு அர்த்தம் இல்லை. விளக்குக் கம்பம் தென்பட்டிருந்தால், அதைப் பிடித்திருப்பான். ஆனால் இப்போது, விளக்குக் கம்பத்தைப் பிடித்துப் புண்ணியம் இல்லை. அப்பா காலைத்தான் பிடிக்க வேண்டும். வேறு வழியில்லை. மாலு லைட் ஹவுஸில் நிற்க வேண்டுமானால் அப்பாவின் கால்தான் மார்க்கம்.

அப்புறம் யார் யார் கால்களோ?

ரங்காவுக்கு ஒரே ஒரு வருத்தந்தான் எஞ்சி நின்றது; அவன் ஏன் பிறந்தான்?

## 18

ஒரு மாதத் தனி வாழ்க்கை தனக்கு ஓர் ஆண்டு முதிர்ச்சியை அளித்து விட்டதாகச் சாரு நினைத்தாள். தாயாருடன் அவளுடைய நிழலாகச் சென்னைக்குச் செல்லப் போவதில்லை என்ற முடிவை எடுத்ததிலிருந்தே தனி உற்சாகம், தெம்பு, தைரியமெல்லாம் பிறந்தன. தோழி சரஸ்வதியும் அண்ணன் மனோஜும் வேறு தைரிய மூட்டினார்கள். அவள் மெல்ல மெல்ல மூர்த்தியை மறக்க முயன்றாள்.



சீதா சென்னைக்குச் சென்ற ஏழெட்டு நாட்களுக்குள் மனோஜின் நண்பனுடைய உதவியால் ஒரு பெரிய விளம்பரக் கம்பெனியில் வேலை கிடைத்தது. ஸ்தாபனம் சம்பளத்தை எடுத்த எடுப்பில் அள்ளிக் கொடுக்கவில்லை. ஆனால் சிறந்த பயிற்சியைத் தந்தது. எந்த எந்த நுகர் பொருள்களை எப்படி எப்படி விளம்பரப் படுத்தினால் மக்களிடையே அவற்றைப் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்தலாம் என்று நிபுணர்கள் அநுபவ ரீதியாக அவளுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். ஒரு சில நாட்களிலேயே சாரு எல்லாவற்றையும் மறந்து மனம் லயிக்கத் தன் வேலையில் ஈடுபட்டாள்.

வீட்டை ஒரு நடுத்தர வயதுக்காரி பார்த்துக் கொண்டாள். மராட்டிக்காரி. தமிழ் வரவில்லை. ஆனால் மனோஜும் சாருவும் சரஸ்வதியின் துணையுடன் அவளுக்குச் சமையல் பாடம் நடத்தினார்கள். தமிழ் நாட்டுச் சமையல் வகைகளும் சிற்றுண்டிகளும் புது ருசியில் தோன்றலாயின.

மனோஜ் காலை எட்டு மணிக்கு (எஸ். எஸ். நாத் பணி புரிந்த ஸ்தாபனத்திலேயே அவனுக்கு நல்ல பதவியுடன் வேலை கிடைத்தது.) புறப்படுவான். சரியாக ஒன்பது மணிக்கு ஜுஹூவில் சாரு பஸ் ஏறுவாள். அவள் பணி புரியும் விளம்பர ஸ்தாபனம் ரீகல் தியேட்டருக்குச் சற்று அப்பால், கொலாபாவில் இருந்தது. அவள் செல்லும் பஸ் ஃப்ளோரா ஃபௌண்டனுடன் நின்று விடும். அங்கிருந்து பத்து நிமிட நடை.

விளம்பர ஸ்தாபனத்தில் பத்திரிகைகளுடன் தினசரித் தொடர்பு கொள்ளும் மது என்பவன், சாரு வந்த நாளிலிருந்து அவள் மீது தனி அக்கறை காட்டினான். ஆங்கிலத் தினசரிகளில் எதற்கெல்லாம் தனிச் சிறப்புடன் விளம்பரங்கள் கொடுக்க வேண்டும், மக்கள் எம்மாதிரி

யான விளம்பரங்களை விரும்பிப் பார்ப்பார்கள் என்பன போன்ற விவரங்கள் எல்லாம் மதுவுக்கு அற்றுப்படி. அவனுடைய மென்மையான குரல், நெற்றிப் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு வார்த்தைகளை அளந்து பேசும் சுபாவம், சிரிக்கும்போது உண்டாகும் இனிய ஒலி இவையெல்லாம் சாருவின் உள்ளத்தில் ஒரு சிறிய இடத்தைப் பிடித்தன.

மற்றச் சிப்பந்திகளுக்கும் மதுவுக்கும் உள்ள பல வேற்றுமைகளை அவள் அலசிப் பார்த்தாள்.

படாடோபம் இல்லை. விகாரமான ஆடை அணியவில்லை. எளிமையாக, அதே சமயத்தில் பட்டென்று பதியும்படியாக உடுத்துக் கொண்டான். யாரிடமும் உரத்த குரலில் பேசவில்லை பெண்களிடம் தேவைக்கு அதிகமாகப் பேசவில்லை. பல் இளிக்கவில்லை. பார்ப்பதற்கு லட்சணமாக இருந்தான். சில சமயங்களில் அவன் மாடல்களுடன் தொழில் சம்பந்தமாக உறவாட வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் 'மாடல்'களும் மனிதப் பிறவிகள் என்று அவர்களுக்குத் தனி மதிப்புக் கொடுத்துப் பழகினான்.

சாருவுக்கும் அவனுக்கும் இடையே ஏற்பட்ட பரிசயம் மெல்ல மெல்ல நட்பாக வளர்ந்தது. அவன் மீது காதல் எழுந்து விடுமோ என்று சாரு பயந்து கொண்டே தனக்குத் தானே அடிக்கடி கேட்டுக் கொண்டாள். மனம் குழம்பியது. கேள்வி எழும்போதெல்லாம் அவளையும் மீறி மூர்த்தியின் உருவம் கண் முன் நின்றது.

ஒரு நாள் மதிய உணவுக்கு அவளை அழைத்தான் மது.

"என்ன விசேஷம்?"

'விசேஷம் இருந்தால்தான் வருவீர்களா?"



"பத்து நாட்களாகத் தினசரி ஒரே சமயத்தில் மதிய உணவுக்குப் புறப்படுகிறோம். இதுவரையில் அழைக்கவில்லையே?"

"இன்றுதான் ஞானோதயம் உண்டாயிற்று 'பண்டிட்டு'க்குப் போகலாம்."

போகும் வழியில் அவன் எதுவுமே பேசவில்லை. தெருவைப் பார்த்துக் கார் ஓட்டுவதிலேயே கவனமாக இருந்தான். ஓட்டல் வாசலில் நிறுத்தியதும், "உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும், தெரியாது."

அவன் அவளை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தான். அவளுடைய கண்களைச் சந்தித்தான். அவள் அவனுடைய கண்களைப் பார்த்தாள். ஓர் அழகிய பசு மாட்டின் சாந்தம் வழிந்தது.

"கார் ஓட்டுவேன். ஆனால் பம்பாய் மக்கள் நெரிசலில் அச்சம் உண்டாகிறது. அதனால் ஓட்டுவதில்லை."

அவன் வாய் மூடிச் சிரித்தான். அவள் அவனுடன் ஓட்டலுக்குள் பிரவேசித்தாள்.

அவன் அவளிடம், 'என்ன சாப்பிடுகிறாய்?' என்று கேட்கவில்லை. அவனாகவே ஓட்டல் சிப்பந்தியிடம் 'ஆர்டர்' கொடுத்தான். எல்லாம் அவனுக்குப் பிடித்தவை. இவை எல்லாம் அவளுக்கும் பிடிக்கும் என்று அவனுக்கு எப்படித் தெரியும்?

"நாம் ஆர்டர் பண்ணியது வரக் குறைந்தது கால் மணி நேரமாவது ஆகும். அதற்குள் நான் என்னைப் பற்றிச் சொல்லி விடுகிறேன்."

'நாம் ஆர்டர் பண்ணியது!' ஏன் அவன் அவளையும் இணைத்துக் கொண்டான்? சாருவுக்குப் புதிராக இருந்தது. மனம் அக்கணமே மூர்த்தியை நினைத்தது.

அவன் புன்முறுவலுடன் தலை அசைத்தாள்.

''என் பெயர் மதுசூதன். உடுப்பியிலிருந்து வடக்கே நாற்பது மைல் தூரத்தில் ஒரு கிராமத்தில் பிறந்தவன். தாத்தா ஓட்டல் நிறுவ இங்கே தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில் வந்தார். நாற்பத்திரண்டில் ஓடுகிற டிராமில் ஏறப் போய்த் தடுக்கி விழுந்து, மேலே லாரி ஏறி..."

''பாவம் !"

''என் தகப்பனார் ஓட்டலை நடத்தினார் மூன்று வருடங்கள். அவருக்கு அக்கறை இல்லாமல் போயிற்று. சிற்றப்பாவிடம் ஒப்படைத்து விட்டுத் துறைமுகத்தில் வேலை பார்க்கலானார். எட்டு வருஷம் ஒரே சீராக ஓடியது. நான் ஒரே பிள்ளை. தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றில் பிறந்தேன். பிறந்ததும் என் அம்மாவை அனுப்பினேன்."

ஒரு வறட்டுச் சிரிப்புடன் சொல்லி விட்டுத் தொடர்ந்தான். ''கொஞ்ச காலம் சிற்றப்பா வீட்டில் வளர்ந்தேன். ஐந்து வயதுக்குப் பிறகு எனக்கு வீடு என்று ஒன்று கிடையாது. ஹாஸ்டல்தான்."

''சிற்றப்பா வீடு ?"

''அண்ணா— அதுதான் என் அப்பா— பண விஷயமாகத் தம்பியுடன் மோதினார். பணமும் கிடைக்கவில்லை. நானும் பலியானேன்."

''ரொம்பப் பாவமா இருக்கே !"

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. சகோதர பாசம் ராமாயண மகாபாரதங்களில்தான் என்பதை என் அப்பாவும் சிற்றப்பாவும் முதிராத பருவத்திலேயே ஆணி அடித்தாற் போலச் சொல்லிக் கொடுத்தார்கள். அப்புறம் அப்பா என்னை ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்த்து, ஹாஸ்டலில் விட்டார்."



''அவர் இன்னொரு கலியாணம் செய்து கொள்ளவில்லையா ?"

''தெரியாது."

''அப்படீன்னா ?"

''எனக்கு ஏழு வயது நடக்கும்வரை மாதம் ஒருமுறை அப்பா வந்து என் முதுகைத் தடவி விட்டுப் போவார். அப்புறம் மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு முறை. ஒன்பது வயது நடக்கும்போது கடைசியாக வந்தார். அதன் பிறகு நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதில்லை. பத்தொன்பது வருஷம் ஆயின."

''எங்கே இருக்கிறார் என்றாவது தெரியுமா, மிஸ்டர் மது ?"

''மிஸ்டர் போட்டால் பிடிக்காது."

''மது !"

''உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்றுகூடத் தெரியாது."

''உங்கள் படிப்பை யார் ஏற்றுக் கொண்டார்கள் ?"

''முதல் நான்கைந்து வருடங்கள் சிற்றப்பா மணியார்டர் அனுப்பினார். ஒரு தடவைகூட நேரில் வரவில்லை. அதன் பின் நானே என்னைப் பார்த்துக் கொண்டேன்."

''நீங்களே உங்களைப் பார்த்துக் கொண்டீர்களா ?"

''அமெரிக்க மாணவர்கள் ஒழிந்த வேளைகளில் ஓட்டல் பாத்திரங்களைக் கழுவினால் நாம் இங்கே பாராட்டுகிறோம். அதை இங்கே நாமே செய்கிறபோது, அது கேவலமான தொழிலாக மாறி விடுகிறது. நான் இந்தியாவில் ஓர் அமெரிக்க மாணவனாக இருந்தேன்."

சொல்லி விட்டு அவன் சிரித்தான். சங்கீதம் போன்ற ஒலி பிறந்தது. சாரு ரசித்தாள்.

"எனக்கு நன்றாக ஷூ பாலிஷ் போடத் தெரியும். பம்பாயில் சந்து பொந்துகளை எல்லாம் வழி காட்டத் தெரியும் நாப்தலின் பால்ஸ், ஊதுபத்தி, ஜெட்டி, டவல் எல்லாம் விற்பேன். க்யூவில் நின்று சினிமா டிக்கெட், ட்ரெயின் டிக்கெட் எல்லாம் வாங்குவேன். எதிலும் எப்போதும் சில்லறை. என் படிப்பு, சாப்பாடு எல்லாவற்றையும் பார்த்த பின் கையில் பத்து இருபது என்று மிஞ்சும்."

"அபாரமா இருக்கே, உங்க இளமை அநுபவங்கள் !"

"இல்லை. இதுதான் என் இளமைக் கதை. சின்ன வயசிலேயே தழும்பு ஏறிவிட்டால் பெரிய வயசில் காயம் ஏற்படுகிறதில்லை. ஏற்பட்டாலும் காயமாக வலிப்பதில்லை."

"மது, உங்க வாழ்க்கையே ஒரு கதை. ஏன்? நாவல். உங்க மத்தச் சொந்தக்காரங்க ?"

"கொண்டாப்பூரில் ஒரு சித்தி. கோகர்ணத்தில் பெரியம்மா. உள்ளூரில் சிற்றப்பா. இப்போது என்னை அடிக்கடி சந்திக்கிறார். நெனைச்சு வருத்தப்படுகிறார். ஓட்டல் அமோகமா நடக்கறது. ஆனால் அவரால் சரியாக நடத்த முடியவில்லை. என்னை அழைக்கிறார்."

"ஏன் அவருக்கு...?"

"குழந்தைகள் இல்லை."

"என்ன செய்யப் போகிறீர்கள் ?"

"சிற்றப்பா சொற்படி நடந்தால் ஓர் ஓட்டல் கிடைக்கும். ஒரு ஃப்ளாட் கிடைக்கும். ஒரு பெரிய இடத்துப் பொண் கிடைப்பாள் !"

"போக வேண்டியதுதானே ?"



"நாக்கில் ஜலம் ஊறத்தான் ஊறுகிறது. ஆனால் அப்புறம் சுதந்திர தாகத்தில் நெஞ்சு வறண்டு போய் விடுமே ?"

"அப்படின்னா ?"

"இப்போது நான் எனக்கு ராஜா. சிற்றப்பாவுக்கு டயபடீஸ், பிளட் பிரஷர் எல்லாம் உண்டு. சமீபத்தில் மைல்ட் அட்டாக்கூட வந்தது. சித்தி அப்பாவின் அக்கா பெண்தான். அவளும் என்னைத் தேடிக்கொண்டு ஒரு நாள் வந்தாள். ஆனால் என்னால் ஒரு முடிவும் எடுக்க முடியவில்லை. எனக்கு எது நல்லதென்று விளங்கவே இல்லை. விளம்பரத் துறையில் பல யோசனைகள் சொல்லத் தெரிகிற எனக்கு, என் விஷயத்தில் யோசனை தேவைப் படுகிறது."

"சிநேகிதர்கள் ?"

"எனக்குச் சிநேகிதர்கள் என்று யாரும் இல்லை. எல்லாம் பார்த்த முகங்கள், தெரிந்த பெயர்கள்தாம். உலகத்திலே எளிதாக் கேட்காமல் கிடைக்கிறது புத்திமதிதான். அதனாலேயே புத்திமதிகளை நான் சாதாரணமாத் தெரிந்தவர்களிடம் எதிர்பார்ப்பதில்லை."

"இதை எல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறீர்கள் ?"

"ஓர் உள்ளுணர்வு. நீங்கள் சிநேகிதனா, இல்லை, சிநேகிதியா அமைய முடியுமென்று தோன்றியது. ஆனால் அது சரியா என்று தெரிந்து கொள்ள, உங்களைப் பற்றி எனக்கு எல்லாம் தெரிந்தாக வேண்டும்."

"அதோ ஸர்வர் எல்லாம் கொண்டு வருகிறார். இன்றைக்கு மாலையில் எங்கள் வீட்டுக்கு வாருங்களேன்."

"வீடு ?"

"ஜாஹூ."

"தொந்தரவாக இருக்குமா ?"

"அப்படி இருந்தால் அழைத்திருக்க மாட்டேன். என் அண்ணாவும் ஒரு சமையற்காரியுமே எங்கள் குடும்பம். அண்ணா வழக்கமாய் எட்டு மணிக்குத்தான் வீடு திரும்புவான்."

"அப்பா அம்மா ?"

"என் கதை சாயங்காலம் தொடரும். இப்ப டிபனைச் சாப்பிடத் தொடங்கலாமே !"

"சரி."

அதன் பிறகு அவன் சிற்றுண்டி நினைவாகவே இருந்தான். அவளுடைய கண்களைச் சந்திக்கவும் முயலவில்லை.

சாரு கவனித்தாள். மூர்த்தியை விட உயரம் குறைவு. ஆனால் நிறம் கண்ணை அள்ளியது. அடர்ந்து வந்த மீசை. ஆனால் சாத்துவிகம் சற்றும் குன்றவில்லை. கண்ணில் எப்போதும் ஒரு விதச் சோகம்; விவரிக்க முடியாத சோகம். சிரிக்கும்போது இனிமையான ஒலி எழுந்த போதிலும் சோகத்தின் சாயை மறையவில்லை.

அன்று அவன் அவளுடைய வீட்டுக்கு வரப் போகிறான். சாரு தன் வாழ்க்கைக் கதையை எப்படிக் கூறுவாள் ?

அவள் யோசிக்கலானாள்.

## 19

அம்மா சமையலறையில் ராஜம்மாவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். மாடி அறையில் சீதா உட்கார்ந்திருந்தாள். அப்பா ஹாலில் சாய்வு நாற்காலியில் கண்களை மூடிய வண்ணம் புத்தரின் மோன நிலையில் சாய்ந்திருந்தார்.



மூர்த்திக்கு அலுப்புத் தட்டியது. வீடு வீடாக இல்லை. ஒவ்வொருவரும் தத்தம் உலகில் அசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வர வர அம்மா கூடச் சரியாகப் பேசுவதில்லை. அப்பா என்னதான் வெளியே கலகலப்பைக் காட்டினாலும் உள்ளூரப் புழுங்கிக் கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. இரண்டு மூன்று நாட்களாக அவர் அவனிடங் கூட எதைப் பற்றியும் பேசவில்லை ; வாதாடவில்லை.

அவன் பங்களாவை ஒரு தடவை வலம் வந்தான். பூச்செடிகள் அசையாமல் நின்றன. அவனுடைய கண்களுக்கு ரோஜாவும் சாமந்தியும் வெளிறினாற் போலப் பட்டது. சபோடா மரத்தில் காய்கள் குலுங்கின. நாளைக்கு இந்தக் காய்களைப் பறித்த பின் ஒவ்வொரு காயும் ஒவ்வொரு விதமாகப் போய் விடும். ஏழெட்டுச் சபோடா மரங்கள். ஒரு மரத்தைத் தவிர மற்ற மரங்களைக் குத்தகைக்கு விட்டிருந்தார் அப்பா. இன்னும் ஒரு வாரத்தில் அவன் காய்களைப் பறித்துக் கொண்டு போய் விடுவான். அப்புறம் மரம் கொஞ்ச காலத்துக்கு மொட்டை.

மூர்த்தி நடந்தான். சீமைப் பசு அசை போட்டுக் கொண்டிருந்தது. கன்று கட்டவிழ்த்துக் கொண்டு அங்கு மிங்குமாய் ஓடியது. இந்த ஓட்டம் இன்னும் ஒரு சில மாதங்களுக்குத்தான். ஆண் கன்று. நல்ல வளர்ச்சி. அலமாதிக்காரன் இரண்டு மூன்று நாட்களாக விலை பேச வந்து கொண்டிருக்கிறான். அப்பா நிர்ணயித்திருக்கும் விலைக்கு அவன் ஒப்புக் கொண்டால் கன்று இன்னும் ஆறு மாத காலத்தில் வெளியேறி விடும். பணம் தாயையும் கன்றையும் பிரிக்கப் போகிறது.

எல்லாம் பணத்தில்தான் இருக்கிறது. மனித ஜீவன் வயிற்றில் உதித்த உடனேயே பணத்தின் நாற்றம் ஆரம்பித்து விடுகிறது, டாக்டர். அதன் பிறகு டாக்டர்,

டாக்டர். தலைச்சன் என்றால் சீர்கள், வரிசைகள். பிறந்தவுடன் சர்க்கரையுடன் வெள்ளி நாணயங்கள், சலவை நோட்டுகள், தங்கச் செயின் எல்லாம் பணத்தில் அடங்கி இருக்கின்றன. மானத்தையும் கௌரவத்தையும் அளப்பதும் பணம் ; அழிப்பதும் பணம்.

திடீரென்று யாரோ வந்து கொண்டிருப்பதை உணர்ந்த மூர்த்தி திரும்பிப் பார்த்தான்.

மாலு- காம்பவுண்டு கேட்டைத் தாண்டி வந்து கொண்டிருந்தாள். ரங்கா அன்று காலை சொன்னபடி அவளை அனுப்பி யிருக்கிறான். அப்பாவுக்கு அவள் மீது தனி வாத்சல்யம் உண்டு என்பதைப் புரிந்து கொண்டு அனுப்புகிறான். அஸ்திவாரம் எழுப்ப மாலு வருகிறாள்.

ரங்காவுடன் பேசியதையோ மாலு வர இருப்பதையோ அவன் அப்பாவிடம் சொல்லவில்லை. அப்பா இருக்கும் மன நிலையில்- ஒன்று, சீறி விழுவார், அல்லது கேலி செய்வார். என்ன செய்வார் என்று முன் கூட்டிச் சொல்ல முடியாது. ரங்காவுக்குப் பண உதவி செய்வதும் செய்யாததும் அனந்தராமனுடைய மனத்தைப் பொறுத்திருக்கிறது. இதில் மூர்த்தியால் கூடத் தலையிட்டு வெற்றி பெற முடியாது.

மாலு அருகே வந்தாள்.

''ஹலோ, சித்தப்பா !"

''என்ன மாலு, கொஞ்ச நாளாக் காணோம் ?"

''ஆமாம் சித்தப்பா, என்னைக் காணோம். பாவம், நீதான் நாளுக்கு ரெண்டு வாட்டி அண்ணாவைப் பார்க்க வர்றியே..."

''எனக்கும் ஆபீஸ். அண்ணாவுக்கும் ஆபீஸ். எப்படி வர்றது ? அண்ணா மன்னி எல்லாரும் சௌக்கியமா ?"



''ரொம்பச் சௌக்கியம். ஒரு வாரமா அம்மா சாட்டையை வீசறா. அப்பா துவண்டு போறார்."

''அட பாவமே ! ஏன் ?"

''சித்தப்பா, நீ நாரதரை விட மோசம். எல்லாம் தெரிஞ்சிருந்தும் கேள்வி கேட்கறே "

''உன் அம்மா சாட்டை வீசறது சத்தியமா எனக்குத் தெரியாது, மாலு."

''என்னை ஒரு ஐ. ஏ. எஸ். பார்த்துட்டுப் போயிருக்கு. ஐ. ஏ. எஸ். என்றால் என்ன தெரியுமா ?"

''இண்டியன் அட்மினிஸ்ட்ரேடிவ் சர்வீஸ் !"

''அது எல்லாருக்கும் தெரிஞ்சது."

''புதிசா ஏதானும் இருக்கா ?"

''ஐ. ஏ. எஸ்.னா ஐ ஆம் ஸேஃப்னு அர்த்தம். கடைசி வரை பயம் இல்லை."

''அது சரி, நீ ஏன் ஒரு ஐ. ஏ. எஸ். பார்த்துட்டுப் போயிருக்குன்னு வெறுப்போடு சொன்னே ?"

''பிடிக்கலே."

''ஐ. ஏ. எஸ் ஸையா ?"

''இல்லை, அந்த ஆளை !"

''ஏன் ?"

''இந்த கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது, சித்தப்பா. நீ ஒரு பெண்ணா இருந்தா என் மனசைப் புரிஞ்சுப்பே."

''ஓகே, இப்ப என்னாலே உன் மனசைப் புரிஞ்சுக்கப் பெண்ணா மாற முடியாது. அண்ணா மன்னி கிட்டே உன் மனசை வெளிப்படுத்தறதுதானே ?"

''அம்மா சுவர்ணா முட்டின முட்டலில் என் தலை சில்லு சில்லாப் போயிருக்கும். அம்மா ஒத்தைக் காலில் நிக்கறா. ஐ. ஏ. எஸ். பதவியைப் பத்திப் பாடறா, பாடறா, அப்படிப் பாடறா !"

''என்னதான் செய்யப் போறே ?"

''பெண்ணைப் பிடிச்சுட்டுதுன்னு அவர்கள் சொல்லி விட்டு, பஞ்சாங்கத்தைப் பாருன்னு அவசரப் படுத்தறா. அப்பாவை அம்மா தார்க் குச்சியாலே விரட்டறா. அப்பா பணம் இல்லாமல் புலம்பறார். இதன் மத்தியிலே என் குரல் யார் காதில் ஏறும் ? இங்கே வந்து தாத்தா பாட்டி மடியிலே விழுந்து கதறலாம்னா வீடு பேய் பிடிச்ச வீடு மாதிரி இருக்கு."

''இப்ப வந்திருக்கியே, பேய் போயிடுத்துன்னு நினைப்பா ?"

''என்ன சித்தப்பா, நீ ஒண்ணு ! இப்ப நான் வந்ததே உன்னைப் பார்த்து உன் யோசனையைக் கேட்கத்தான்!"

''என்னிடமா ? இது தெரிஞ்சா உன் அம்மாவும் அப்பாவும் உன்னைக் கிழிச்சுப் போட்டுடுவா. அது சரி, என்ன யோசனை ?"

''போன மாசம் பம்பாயிலே ஒரு பெரிய கம்பெனிக்கு அப்ளிகேஷன் போட்டிருந்தேன். ஏழெட்டு நாள் முன்னாடி டாஜ் ஓட்டல்லே இண்டர்வ்யூ நடந்தது. நேத்து ஆர்டர்ஸ் வந்திருக்கு. இன்னும் பதினைந்து நாட்களில் நான் பம்பாயிலே வேலையை ஒத்துக் கொள்ளணும்."

''என்ன வேலை ?"

''கம்பெனி எக்ஸிகியூடிவ். ஒரு வருஷம் டிரெயினிங் கம்பெனியின் ஸ்பெஷல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட்டில் இருக்கணும். அங்கேயே ரூம், சாப்பாடு எல்லாம். இப்ப



ஆயிரம். பயிற்சி முடிஞ்சப்புறம் ஆயிரத்து ஐந்நூறு. அது தவிர கிராக்கிப் படி. எல்லாம் சேர்த்து ரெண்டாயிரத்து முந்நூறு."

''ஐ. ஏ. எஸ். ஸை விட ஜாஸ்திதான்."

''இன்னும் கேளு."

''சொல்லு "

''மூணு மாசம் அமெரிக்காவுக்கு அனுப்பப் போறா. அங்கேயும் பயிற்சி."

''பலே பலே. அமெரிக்காவிலிருந்து வர்றப்போ எனக்கு ஒரு எலக்ட்ரிக் ஷேவிங் ஸெட் வாங்கிண்டு வா, மாலு."

''என்ன மாடல்னு சொல்லு. ஒரு சலூனையே கொண்டு வரேன். என்ன சித்தப்பா, உனக்கு விளையாட்டா இருக்கா ?"

''சரி, விளையாடலை. இந்த விஷய மெல்லாம் அண்ணாவுக்கும் மன்னிக்கும் தெரியாதா ?"

''தெரியாது."

''ஏன் சொல்லலே ?"

''சொன்னா அம்மா ரூம்லே போட்டு அடைச்சு, ஜன்னல் வழியாச் சாப்பாட்டுத் தட்டை நீட்டுவா !"

''அதுவரையில் மன்னிக்கு இரக்கம் இருக்கு. பட்டினி போடாமல்..."

''நீ இது பத்தி என்ன நினைக்கிறே, சித்தப்பா ?"

''ஒரு கேள்வி."

''என்ன ?"

''இந்த வேலை கிடைக்கிறதாயிருப்பதால் ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளையைப் பிடிக்கலையா ?"

''என்னிக்கு அவன் முன் வழுக்கையுடன் பனியன் இல்லாம டெரிலின் ஸலாக்குடன் வீடேறி வந்து சோபா வில் உட்கார்ந்தானோ, அன்னிக்கே எனக்கு அவனைப் பிடிக்கலே. அதுக்கு அப்புறந்தான் நான் அப்ளிகேஷன் போட்டேன்.''

''உன்னை இன்னிக்கு இங்கே அனுப்பப் போறதா அண்ணா போன்லே சொன்னார். அதனால்தான் நீ வந்திருக்கேன்னு நான் நினைச்சேன்.''

''அவர்கள் சொல்லித்தான் நான் இங்கே வர்றேன்னு அவர்கள் நினைச்சுண்டிருக்கா. ஆனா அவர்கள் எண்ணம் வேறு, என் எண்ணம் வேறு.''

''நீ இவ்வளவு கெட்டிக்காரப் பொண்ணுன்னு இன்னிக்குத்தான் எனக்குத் தெரியும், மாலு! பார்க்கப் பசுமாடு மாதிரி எவ்வளவு சாதுவா இருக்கே!''

''என்னை மாடுங்கறியா, சித்தப்பா?''

''பசுமாடுன்னு சொன்னேன். வேணும்னா மாட்டை அழிச்சுடு. பசு.''

''நீ என்ன சொல்றே?''

''ஜமாய்.''

''அப்படீன்னா.''

''பம்பாய்க்குப் போ.''

''இப்ப என்கிட்டே பணம் இல்லை. பம்பாய் போற துன்னா பணம் தேவை. ரெயில் சார்ஜ், புதுப் புடைவை கள், ஏன், புதுப் பெட்டிகூட வாங்கணும். அப்புறம் முதல் சம்பளம் வர்ற வரையில் செலவுக்குப் பணம் வேணும்.''

''ரெண்டாயிரம் போதுமா?''

''திருப்பித் தர மூணு மாசம் ஆகும்.''



''அப்ப இல்லை.''

''இன்னும் முன்னாடியே தரணுமா?''

''தரவே படாது.''

''சித்தப்பா, நீதான் உதவி பண்ணணும். வேலையிலே சேர்ந்துட்டா, அஞ்சு வருஷத்துக்கு வேலையை விட முடியாது. அது ஒரு நிபந்தனை.''

''ஜமாய், மாலு. நீ இப்ப ஒரு பெரிய பிரச்னையை உன்னை அறியாமலே தீர்த்து வைக்கிறே!''

''இந்த விஷயம் எனக்கு, அந்தக் கம்பெனிக்கு, அப்புறம் உனக்கு, இந்த மூணு பேருக்கு மட்டுந்தான் தெரியும், சித்தப்பா.''

''நான் நாலாவது பேரிடம் சொல்லலே. போதுமா, மாலு?''

''நான் எப்படி என் சித்தப்பாவுக்கு நன்றி சொல்ற துன்னு தெரியாம...''

''வா, உள்ளே போகலாம். ஒண்ணும் நடக்காதது மாதிரி நடந்து கொள். என்னிக்குப் புறப்படறேன்னு சொல்லு. டிக்கெட் வாங்கி வைக்கிறேன். பெட்டி, துணி மணிகள் எல்லாத்தையும் இங்கே இருந்து கொண்டு போகும்படியே ஏற்பாடு பண்ணிக்கோ. அவசியம்னா நானும் பம்பாய் வர்றேன்.''

''ஓகே, சித்தப்பா. ஜானா எப்படி இருக்கா?''

''நன்னா இருக்கா.''

''ஏன் இன்னும் ஒரு ஏற்பாடும் ஆரம்பமாகல்லே?''

''என்ன ஏற்பாடு?''

''விளையாடறியா? கல்யாணம்...?''

''இப்ப நினைக்கவே நேரமில்லை.''

"சீதா அத்தை என்ன செய்யறா? எங்கே இருக்கிறாள்?"

"மாடியில்."

"அன்னிக்கு அவ அறைக்குப் போனேன். முகங் கொடுத்துக் கூடப் பேசலை."

"பாவம், அவளுக்கு ஆயிரம் பிரச்னைகள், விசாரங்கள். நீ வா..."

மாலு முன் செல்ல, மூர்த்தி பின் தொடர்ந்தான். அவனுக்கு எல்லாம் விசித்திரமாக, வேடிக்கையாகப் பட்டது. ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளைக்குப் போராடும் தாயார், பணத்துக்காகக் கண் பிதுங்கத் தவிக்கும் தகப்பனார், சூதுவாது அறியாத பெண்ணின் உள் நோக்கம் எல்லாமே வேடிக்கைகள்தாம். இதில் அவனும் சம்பந்தப் பட்டிருப்பதுதான் பெரிய விசித்திரம்.

புத்தரின் மோன நிலையிலிருந்து அப்பா விழித்துக் கொண்டு விட்டார். சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்.

"தாத்தா!"

"மாலுப் பொண்ணா?"

"ஆமாம், தாத்தா."

"எப்ப வந்தே?"

"இப்பத்தான்."

"போ, உள்ளே போய் டிபன் சாப்பிடு. கல் தோசை ரொம்ப நன்னாயிருக்கு. ஏண்டா மூர்த்தி, நீ என்ன பதுங்கிப் பதுங்கி வர்றே?"

"வர வர உங்க கிட்டே வர்றத்துக்கே பயமாயிருக்கு, அப்பா!"

"பார்த்தாயா மாலு, உன் சித்தப்பன் பேசறதை?"



"உடம்பு முழுக்கப் பாசாங்கு, தாத்தா. சித்தப்பாவுக்கு நாரதர் வேஷம் போடறதா, இல்லே, நாரதருக்குச் சித்தப்பா வேஷம் போடறதான்னுதான் எனக்குக் குழப்பமாயிருக்கு."

அனந்தராமன் வாய் விட்டுச் சிரித்தார்.

"அவன் பெரிய யமன்."

"யமன் நீதிக்கும் நியாயத்துக்கும் பேர் போனவன்!" என்றான் மூர்த்தி.

திடீரென்று கோமதி பிரவேசித்தாள்.

"யார்டீ... மாலுப் பொண்ணா?"

"ஆமாம் பாட்டி. சௌக்கியமா, பாட்டி!"

"நீ இப்படி ஒரு கேள்வி கேட்கும்படி ஆயிடுத்து, பார்த்தாயா?"

"ஏன் பாட்டி?"

"பின்னே என்ன? ஆடிக்கு ஒரு தரம் அமாவாசைக்கு ஒரு தரம் வர்றே. அது சரி, இப்ப என்ன திடீர்ப் பிரவேசம்? உன் அப்பா அனுப்பினானா, இல்லை, நீயாவே இங்கே வந்தாயா?"

"என்ன பாட்டி இது, இப்படியெல்லாம் கேட்கறே?"

"நீங்களெல்லாம் காரியம் இல்லாமல் வர மாட்டீர்களே?"

மூர்த்தி அம்மாவின் பேச்சைக் கேட்டு உள்ளூர வியந்து கொண்டான்.

"போ, பாட்டி."

"நான் போறேன். இப்ப நீ உள்ளே வா, டிபன் சாப்பிடு."

''கல் தோசைன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும், பாட்டி.''

''என்ன டிபன்னு அதுக்குள்ளே விசாரிச்சுட்டியா ?''

''நான்தான் சொன்னேன். ஏண்டா, நீ சாப்பிடலையா ?''

''அவன் வீட்லே டிபன் தின்னு எட்டு நாளாறது,'' என்றாள் கோமதி.

''போடா !''

''போறேன்.''

இரண்டடி நகர்ந்தான்.

''மூர்த்தி...!''

''இதோ வரேம்பா.''

மாலுவும் நின்றாள்.

''நீ உள்ளே போ !'' என்றார் அனந்தராமன் அவளிடம்.

மாலு மூர்த்தியின் கண்களைச் சந்தித்தாள். அவன் புரிந்து கொண்டு சமாதானப் படுத்தினான். மாலுவுக்குப் பயம், எங்கே ரகசியம் வெளியாகி விடுமோ என்று.

''என்ன அப்பா ?''

''அந்த ஐ.ஏ.எஸ். எங்கே இருக்கிறானாம் ?''

''நாஸிக்கில்.''

''என்னிக்கு நிச்சயதார்த்தமாம் ?''

''உங்களுக்குத் தெரியாமலா இருக்கும் ?''

''ரங்காகிட்டே நிறையப் பணம் இருக்காமோ ? அன்னிக்கு இல்லேங்கற மாதிரி சொன்னாயே !''



''பணம் இல்லை.''

''எப்படி நடத்தப் போறான் ?''

''நீங்க இருக்கிறீர்களே ! உங்ககிட்டே பணம் இருக்கே.''

''இருக்கு. ஆனா அது அவனுக்கு இல்லையே !''

''உங்களைத்தான் அவன் மலையா நம்பி இருக்கிறான்.''

''பத்தாயிர ரூபாய் ஓதியிடுவேன். ஆனா அதையும் ரொக்கமாக் கொடுக்க மாட்டேன். ஒரு பெரிய கம்பெனியின் பங்கா வாங்கிக் கொடுப்பேன்.''

''ரங்கா நாளைக்கு வர்றான்.''

''எதுக்கு ?''

''பணம் கேட்க.''

''போன் பண்ணு ''

''என்னன்னு ?''

''சிரமப்பட வேண்டாம்னு.''

''ஏம்பா ?''

''அவன் தனி. நான் தனி.''

''அவன் உங்க பிள்ளை.''

''சரி, நீ போய் டிபன் சாப்பிடு.''

''உங்க மனசு இப்படித்தான் எப்பவும் இருக்குமா ?''

''மாறும்.''

''எப்போ ?''

''என் எல்லாப் பிள்ளைகளும் இந்த வீட்டில் என்னோடு சேர்ந்து வாழற அன்னிக்கு.''

''ஒரு காலத்தில் சேர்ந்து இருந்தார்களே, அப்பா !''

''அந்தக் காலம் மறுபடியும் வரட்டும்.''

''வந்தால்...?"

''என் பேத்தி கல்யாணத்தை நானே நடத்துவேன்."

''நீங்க போகாத ஊருக்கு வழி தேடறேள், அப்பா."

''போற ஊருக்குத் தேட வேண்டிய அவசியம் இல்லை எனக்கு ரங்காவைப் பார்க்க வேண்டாம். போன் பண்ணு."

''முதல்லே டிபன் சாப்பிடறேன். வீட்டிலே டிபன் தின்னு எட்டு நாள் ஆறதுன்னு அம்மா அங்கலாய்க்கிறா."

''கொஞ்சம் இரு."

''சரி."

''சீதா வந்து நாப்பது நாள் ஆறது."

''ஆமாம்."

''வர வர எனக்கு அவ இங்கே இருக்கிறது பிடிக்காமல் போயிண்டிருக்கு."

''உங்க பெண், உங்க அநுமதியின் பேரில்தான் வந்திருக்கிறாள்."

''ஆமாம், ஆனா பெத்த பெண்ணையும் பிள்ளையையும் மறந்துட்டு இங்கே இருப்பான்னு நான் அப்போ நினைக்கல்லே."

''அதுக்குக் காரணம் சீதா இல்லை. பெண்ணும் பிள்ளையும் பம்பாயை விட்டு வர மறுத்தால் அதற்குச் சீதா என்ன செய்வாள் ?"

''அப்ப அவளும் அங்கேயே இருக்கணும். கல்யாணமாகாத பெண். அப்பன் போனப்புறம் குழந்தைகளுக்கு ஒரு ஆதரவா, பாதுகாப்பா, பொறுப்பா இருக்க



வேண்டியவள் தாய். அவள் என்னுடைய பெண்ணேயானாலும் தன் கடமையைத்தான் செய்யணும்."

''அப்பா, உங்க போக்கே விசித்திரமா இருக்கு. பிள்ளைகளெல்லாம் இங்கே இருக்கணும்னு சொல்லுகிறீர்கள் ! பெண் திரும்பிப் போயிடணும்னு..."

''மூர்த்தி, உன்னை மடையன்னு சொல்ல ஆசையாயிருக்கு. ஆனா மனசு வரல்லே. ஒருவனுக்கு, அவன் பிள்ளை கூட இருக்கணும். பெண் போக வேண்டிய இடத்துக்குப் போகணும். இங்கே தலை கீழா இருக்கு. ரங்காவுக்குப் போன் பண்ணி என் மனசில் என்ன இருக்குன்னு ஒரு குரல் அழு. அப்புறம் சீதாவை வரச் சொல். நான் அவளிடம் பேசறேன்."

''கல் தோசை ?"

''போ, சாப்பிடு. எனக்கு ஒரு அரை டம்ளர்..."

''காபியா ?"

''ஆமாம்."

''போய் அனுப்பறேன்."

''சரிதான் போடா."

## 20

''இதுதான் என் கதை !" என்றாள் சாரு.

ஆணி அடித்தாற் போன்ற நிலையில் இருந்த மது அசையவில்லை. அவனுடைய எலுமிச்சம் பழ நிறம் திடீரென்று சிவந்து ரத்தம் பீரிடும் போலத் தோன்றியது.

''நீங்க என்ன நினைக்கிறீர்கள் ?" என்று சாரு கேட்டாள்.

''என்னவெல்லாமோ !''

''அப்படியென்றால் ?''

''ஒரு பெண் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் ஒரு தாய் தாயாகத்தான் இருக்க முடியும். உன் அம்மா ஒரு விசித்திரம். இல்லை, விசித்திரம் இல்லை. விபரீதம்.''

''சாரு மௌனம் சாதித்தாள். மது தன் அடர்ந்த இரு புருவங்களையும் சுருக்கி இணைத்துப் பேசும்போது ஒரு புது உலகத்தில், ஒரு புது மனிதனைப் பார்ப்பதான பிரமை தட்டியது. மூர்த்தி இம்மாதிரியான எண்ணத்தை ஏன் ஏற்படுத்தவில்லை ? இருவருமே அமைதிக்கும் சாந்தத்துக்கும் பெயர் போனவர்கள். ஆனால் சாரு ஒரு வேற்றுமையை உணர்ந்தாள். மூர்த்தி உள்ளே குமுறுவான். மது உள்ளேயும் சாந்தமாக இருக்கிறான்.

''என் அம்மா விபரீதமா ?''

''ஆமாம். ஆனால் மனைவி சீதாவை எனக்கும் பிடிக்கிறது. நினைக்கும்போது பெருமையாகவும் இருக்கிறது.''

''எப்படி ?''

''அவளுடைய கணவர்...''

''அவர் என் தகப்பனார் !''

''இருக்கலாம். அவளுடைய கணவர் ஒரு தவறு செய்திருக்க வேண்டும். அவரை அவர் மனைவி ஒரே அடியாக வெறுக்கும் அளவுக்கு அவர் ஒரு தவறு செய்திருக்க வேண்டும்.''

''எப்படிப் பட்ட தவறாக அது இருக்கும் என்று நினைக்கிறீர்கள் ?''

''ரொம்பச் சுலபம். ஒரு மனைவி ஒரே காரணத்துக்காகத்தான் தன் கணவனை வெறுப்பாள். சூதாடினால், குடித்தால் எரிச்சல் வரும். அலட்சியம் செய்தால் ஏமாற்றம் உண்டாகும். கொஞ்சி விளையாடா விட்டால் மனம் நோகும். ஆனால் தான் மட்டுமே இருக்க வேண்டிய படுக்கையில் இன்னொருத்தி அவர் அருகே படுத்திருந்தால் வெறுப்பைத் தவிர, வேறு எதுவும் அவள் மனத்தில் பிறக்காது.''



''அப்படி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. என் தகப்பனார் குடிப்பார். நானே என் கண்ணால் என் அம்மாவைத் தழுவி இழுத்துக் கொண்டு போயிருப்பதைச் சின்ன வயசில் பார்த்திருக்கிறேன்.''

''பார்த்த காட்சிகளை விடப் பார்க்காத காட்சிகள் தாம் பல கதைகளைச் சொல்லும். மிருகத்துக்கு இல்லாத பலவீனம் மனிதனிடம் உண்டு. அதுதான் சபலம். மிருகத்தின் இச்சை இயற்கை. மனிதன் இச்சையை நாடி ஓடுகிறான். உன் அப்பாவுக்கு அம்மாவிடம் ஏதோ ஒரு காரணத்தினால் நாட்டம் இல்லாமல் போயிருக்கும். சில தம்பதிகளிடையே நெருக்கம் புறக் கண்களுக்கு அப்பட்டமாகத் தெரியும். ஆனால் அவர்களிடையே...''

''புரிகிறது.''

''அப்பட்டமாச் சொல்றதுக்கு மன்னிக்கணும்.''

''நீங்க உங்க மனசிலே பட்டதைச் சொல்லுகிறீர்கள். அம்மாவுக்கு விஷயம் தெரிந்திருந்தால் என்னிடங் கூட வா சொல்லி யிருக்க மாட்டாள் ?''

''உன்னிடந்தான் சொல்லமாட்டாள். தன் தாயாரிடங் கூடச் சொல்லி யிருக்கலாம். ஆனால் பெற்ற குழந்தைகளிடம் ஒரு தாய் தன் கேவலத்தை எப்போதும் சொல்லவே மாட்டாள் !''

''சரி. ஏன் என் அம்மா என் அப்பாவை விட்டு வெளியேறவில்லை ?''

''சுலபமா யூகிக்கலாமே.''

''என்ன ?''

''வசதியான வாழ்க்கை, வளர வேண்டிய இரண்டு குழந்தைகள். இவை தவிர, சமூகத்தில் இருக்கிற அந்தஸ்து. கௌரவம். கணவன் தனக்கு இழைத்த துரோகத்துக்காக மனைவி வெளியேறினால் நஷ்டம் அவனுக்கு அல்ல. அவளுக்குத்தான்.''

''வேறு பேசுவோம்.''

மது இன்னும் அசையவில்லை.

''நமக்குள் ஒற்றுமை, ஒரே ஒரு ஒற்றுமை இருக்கிறது.''

''என்ன ?''

''இரண்டு பேருமே தாய்ப் பாசம் அறியாதவர்கள்.''

''நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்.''

''ஏன் ?''

''என் அம்மாவுக்கு என் மீது எரிச்சல் இருக்கலாம். பாசம் இல்லை என்று சொல்ல மாட்டேன்.''

''இருந்திருந்தால் அவள் கல்யாண் ஸ்டேஷனுக்கு அடுத்த ஸ்டேஷனிலேயே இறங்கி இங்கே வந்திருப்பாள். தாய்ப் பாசம் மற்ற எல்லாத் தீய உணர்ச்சிகளையும் வெல்லக் கூடியது.''

சாரு விழித்தாள்.

மூர்த்தியால் இவ்வளவு நேர்த்தியாக, ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பிரித்து ஆராய்ந்து பேச முடியுமா ?

திடீரென்று ஆள் அரவம் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

மனோஜ்.



அவனைக் கண்டதும் அவள் பேச வாயெடுத்தாள். ஆனால் மது முந்திக் கொண்டான்.

எழுந்த அவன், ''வாருங்கள், மிஸ்டர் மனோஜ். நான் மது. ராதா மதுசூதனன் !'' என்றான்.

''சாரு சொன்னாள். இன்னிக்கு மாலை நீங்க இங்கே வர்றீங்கன்னு தெரியும். உட்காருங்கள்.''

''அண்ணா, இவர் விளம்பர உலகில் ஓர் உதய சூரியன் !'' என்றாள் சாரு.

''சில உதய சூரியன்கள் உதயமானதும் வானத்தின் இருளில் ஒடுங்கிப் போவதுண்டு !'' என்று மது சொன்னான்.

இருவரும் சிரித்தார்கள். ஆனால் மது சிரிக்கவில்லை.

''ஆர்ட் டைரக்டர், காபி ரைட்டர், அகௌண்ட் எக்ஸிகியூடிவ்- எல்லாம் இவர் வேலை. தாமாக இழுத்துப் போட்டுக் கொண்டு...''

''உங்க தங்கை இப்ப என்னை விளம்பரப் படுத்துகிறாள். இல்லாத அம்சங்களை இருப்பதாகக் கூறுவதும் ஒரு வகை விளம்பரந்தான் !'' என்றான் மது.

''உங்களைப் பார்த்தாலே கவர்ச்சியாக இருக்கிறது !'' என்ற மனோஜ், ''இன்று இரவு உங்களுக்கு ஏதாவது வேலை இருக்கிறதா ?'' என்று கேட்டான்.

''இல்லை. நான் என் சித்தப்பாவைப் பார்க்க ஓடணும். மத்தியானம் ஜஸ்லோக் ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறது''

''எப்படித் தெரியும் ?'' என்று கேட்டாள் சாரு

''போன் பண்ணினார்கள்.''

''பின் ஏன் போய்ப் பார்க்கவில்லை ?''

''வேலை ஐந்தரை வரை. அதன் பின் இங்கே வருவதாகச் சொல்லியிருக்கிறேன். எப்படிப் போக முடியும் ?''

மனோஜ் திகைப்புடன் மதுவைப் பார்த்தான். பிறகு, ''நீங்கள் என்ன மனிதர் !'' என்றான்.

''சாதாரணந்தான்.''

''நான் ஐஸ்லோக்கில் உங்களை இறக்கி விடட்டுமா?''

''நன்றி.''

''அவரிடம் வண்டி இருக்கிறது, அண்ணா !''

''அப்படியா ?''

''சரி, நான் புறப்படட்டுமா ?''

''நாம் மறுபடியும் சந்திக்க வேண்டும்.''

''நிச்சயமாக, மிஸ்டர் மனோஜ்.''

''கடவுள் உங்க சித்தப்பாவைக் காப்பாற்றட்டும்.''

''இதயப் பாதிப்பு அவருக்குப் பழக்கப்பட்ட வியாதி. ஆனா எப்பப் போறார்னுதான் தெரியல்லே. அவர் போனப்புறந்தான் எனக்குப் பிரச்னை ஆரம்பிக்கும்.''

''அப்படியென்றால்...?''

''அவருக்கு இருக்கிற ஒட்டல்கள் எல்லாம் எனக்குச் சொந்தமாகி விடும். நான் அவற்றைக் கவனிப்பேனா, இல்லை, என் மனசுக்குப் பிடிச்ச விளம்பர வேலையைப் பார்ப்பேனா ? இதுதான் பிரச்னை.''

''இது பற்றி அப்புறம் பேசலாம். நீங்க புறப்படுங்கள்.''

''மிஸ் சாரு, உங்க அண்ணா என்னை எப்படி விரட்டி அடிக்கிறார், பார் !''

மது சிரித்தான்.

சிரிப்பில் சோக ரேகை மின்னியது.



ஆனால் சோகம் சித்தப்பாவுக்காக அல்ல. இயல்பான, இயற்கையான, நெஞ்சில் உறைந்திருக்கும் சோகம்.

அவன் வெளியேறிய பின் சாரு கேட்டாள்.

''அண்ணா, நீ மதுவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''நினைக்க முடியவில்லை. அவன் என்னைச் சிந்திக்க வைக்கிறான். பெரிய வேதாந்தியா, அல்லது கலப்படமில் லாத யதார்த்தவாதியா ? புரியவில்லை. ஆனால் ஒன்று. அவன் எந்தத் துறையில் பிரவேசித்தாலும் மிகப் பெரிய மனிதனாக வருவான். அவனுடைய கண்களைப் பார்த் தாயா, சாரு ?''

''கண்களைத்தான் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். நான் விரும்புகிறேன்.''

''ஆனால் காதலிக்காதே! பின்னால் வருத்தப்படுவாய். அவனால் உனக்கு இன்பம் கிடைக்காது. துன்பந்தான் மிஞ்சும்.''

மனோஜ் உள்ளே போய் விட்டான்.

சாரு நீண்ட நேரம் உட்கார்ந்துகொண்டேயிருந்தாள்.

மூர்த்தியும் மதுவும் தொந்த யுத்தம் செய்தார்கள்.

அவள் பார்த்தாள்.

ரசிக்க முடியவில்லை.

யாருக்கு வெற்றி ?

யாருக்குத் தோல்வி ?

அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

## 21

சதானந்தம் குழம்பிப் போனார். உயர் நீதி மன்றத்தில் நீதிபதி பதவியை வகித்த காலத்தில் ஒரு நாளும் வாதி-பிரதிவாதிகளின் நியாய அநியாயங்களில் அவர் மனம்

குழம்பியதில்லை. பிறருடைய பிரச்னைகளும் வாதங்களும் எதிர் வாதங்களும் அவருடைய மூளையைக் குழப்பிப் பாதிக்கவில்லை.

ஆனால் வீட்டுப் பிரச்னை மண்டையைப் புண்ணாக்கியது.

மனைவி சுசிலா திடீரென்று ஒரு வரனைப் பிடித்துக் கொண்டு வந்து எதிரே நிற்கிறாள். ஒரு மாஜி கவர்னரின் மகன். பிள்ளையை அவள் நேரிலேயே பார்த்திருக்கிறாள். பெண் ஜானாவுக்கு ஏற்ற பிள்ளை. உலகப் பிரசித்தி பெற்ற ஒரு சர்வ தேச வங்கியில் சிறந்த பதவி வகிப்பவன். அண்மையில்தான், ஸிட்னியில் மூன்றாண்டுக் காலம் இருந்து விட்டுத் தாய் நாட்டுக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். இன்னும் ஒரு மாதத்தில் கல்கத்தா கிளைக்கு மானேஜராகப் போகிறான்.

ஆறு ரூம் ஃப்ளாட். இரண்டு அறைகளில் குளிர் பெட்டி. வீட்டுக்கு இரு சிப்பந்திகள். ஒரு கார் ; அதற்கு ஒரு டிரைவர். உட்கார ஸோபாக்கள். படுக்கக் கட்டில்கள். பிள்ளையின் தாயார், அவனுக்கு, வங்கி அளிக்கும் மரியாதைகளைப் பட்டியல் போட்டுப் படித்து விட்டாள்.

பிள்ளை உயரமாக, சிகப்பாக, குறுந்தாடியுடன் அடர்த்தியான தலையில் காட்சி அளிக்கிறான். வரதட்சிணை ஒரு பைசாக் கூடக் கிடையாது. நான்கைந்து மாதங்களுக்கு முன் வங்கி விஷயமாக லண்டன் போயிருந்த போது ஸாவில்ரோ நிபுணர்களிடம் பாண்ட், கோட், ஷர்ட் எல்லாம் தைத்துக்கொண்டு விட்டானாம். இந்தியா திரும்பியதும், கல்யாணம் நிச்சயமாகும், முன் ஜாக்கிரதையாகவே ஜானவாச, ரிஸப்ஷன் சூட்டுகளைத் தைத்துக் கொண்டு விட வேண்டும் என்று நினைத்தானாம். டிரஸ் செலவு இல்லை. கல்கத்தாவில், வங்கியே, சமையலறையைத் தேவைக்கு அதிகமான பாத்திரங்களால் நிரப்பி வைத்திருக்கிறது. பாத்திரங்கள் அமோகமாக வாங்க



வேண்டாம். பெண்ணுக்குச் சீர்வரிசைகள் எதுவும் செய்ய வேண்டாம். பிள்ளையின் தாயாரும் தங்கைகளும் வைரத் தோடு, வைர நெக்லஸ், வைர வளையல்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வரப் போகிற மருமகளும் அதே போல அணிந்து கொண்டால், பார்க்கிற நான்கு பேர் தரம் பிரித்துப் பேச மாட்டார்கள். கலியாணத்தை எளிய முறையில் வைத்துக் கொள்ள வேண்டும். மாஜி கவர்னர் ஒரு காந்தீயவாதி. இன்னும் மகாத்மா காந்தியை அநாவசியமாக நினைப்பூட்டிக் கொண்டிருக்கிறார். காந்தி கதர்தான் கட்ட வேண்டும் என்று சொன்னாரே தவிர, பெண்கள் வைரத்தில் மின்னக் கூடாது என்று உபதேசிக்க வில்லை. மாப்பிள்ளைகள் லண்டனில் சூட்டுகள் தைத்துக் கொள்ளக் கூடாது என்று கூறவில்லை.

சுசிலா ஒற்றைக் காலால் பிடிவாதம் செய்தாள். சரத் என்ற அந்தப் பிள்ளையின் கால் தூசுக்கு மூர்த்தி வர மாட்டான் என்று முழங்கினாள்.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்ட பின், மாஜி ஜட்ஜ், மாஜி கவர்னரை ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தார். காறித் துப்பலாம் போல் இருந்தது. ஒரு தடவை கூடத் தேர்தலில் நின்று எம்.எல்.ஏ., எம்.பி யாக அவர் வரவில்லை. கவுன்சிலில் அங்கத்தினர்தான். பிறகு ராஜ்ய சபாவில் ஐந்தாண்டுகள். எப்போதும் பேசிக் கொண்டே யிருக்க வேண்டும். நாள் தவறாமல் பெயர் தினசரிகளில் அடிபட்டுக் கொண்டே யிருக்க வேண்டும் என்று உப்புச் சப்பில்லாத பிரச்னைகளைப் பற்றி மணிக் கணக்காகப் பேசுவார். அவர் ராஜ்ய சபா அங்கத்தினராக இருந்த போது, சில ஊழல்களில் அவரைக் கொக்கி போட்டு இழுத்திருக்கிறார்கள். ஒரு தடவைகூடத் தைரியமாக, "விசாரணைக் கமிஷன் அமையுங்கள்!" என்று அவர் மார் தட்டியதில்லை. எவ்வளவுக்கு எவ்வளவு தூய வெள்ளைக் கதரில், துல்லியமாகப் பிரகாசித்தாரோ அவ்வளவுக்கும் உள்ளே அழுக்கு.]

அந்த அழுக்கு பெற்ற பிள்ளையைப் பற்றிச் சுசீலா வர்ணிக்கிறாள். அழுக்கின் மனைவி, பெண்களின் காதுகளிலும் கழுத்துகளிலும் எப்படி வைரங்கள் மின்னலாயின என்று ஒரு தடவை கூடச் சுசீலா ஆராயவில்லை. மூர்த்தி, சரத்தின் கால் தூசு பெறாதவனாக இருக்கலாம். ஆனால் மாஜிகவர்னர், அனந்தராமனுடைய நுனிமூக்கின் அரும்பும் வியர்வைக்குச் சமானமாவாரா ?

''என்ன சொல்றேள் ?" என்று சுசீலா கேட்டாள்.

''கலியாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயமாகின்றன, சுசீலா "

''சொர்க்கமே ஜானாவுக்குப் புக்ககமா வர்றது."

''அப்படீன்னு நீ நினைக்கிறே."

''நீங்க ?"

''நினைக்கலே !"

''இஷ்டமில்லையா ?"

''ஜானா சரின்னா, நான் பேச ஏதும் இல்லை."

''ஜானாவுக்குப் புத்தி இல்லை."

''ஒத்துக்கறேன்."

''அவளை நம் வழிக்கு இழுக்கிறதுதான் நம்ம பொறுப்பு, கடமை."

''எப்படி ?"

''பேசி..."

''நீ பேசியாச்சா ?"

''ஆச்சு."

''ஜயமா ?"

''முதல் கட்டத்தில் தோல்வி."

''அடடா !"



''பிரிட்டிஷ்காரன் சண்டைகளில் தோற்பான். ஆனால் யுத்தத்தில் அவனுக்குத்தான் ஜயம். அது மாதிரிதான் இந்தச் சுசீலா."

''இப்ப நான் என்ன செய்ய வேண்டும் ?"

''முக்கியமா ரெண்டு "

''வரிசைப் படுத்திச் சொல்லு."

''ஒன்று, மூர்த்தியைப் பார்த்து விஷயத்தைச் சொல்லணும் கொஞ்ச நஞ்சம் நம்பிக்கை வைச்சிருந்தான்னா, அதை இப்பவே விட்டுடறது நல்லதுன்னு அவனுக்கு உணர்த்தணும்."

''ரெண்டு ?"

''ஜானாவைத் திசை மாற்ற நீங்க உடனடியாகச் செயல்பட வேண்டும். சரத் இன்னும் இருபத்தேழு நாட்களில் கல்கத்தா போறான். போய் வேலையில் சேர்ந்து விட்டால், ஒரு வருஷத்துக்கு லீவு கிடைக்காதாம், பொறுப்பான பதவி இல்லையா ?"

''ஆமாம்."

''என்ன, ஆமாம் ?"

''பொறுப்பான பதவி "

''விளையாட்டா யிருக்கா ?"

''இல்லை. ஸீரியசா யோசிக்கிறேன். ஒரு பிள்ளைக்கு, அப்புறம் லீவு கிடைக்காது என்கிற ஒரு காரணத்துக்காக, அவசர அவசரமாகக் கலியாண ஏற்பாடுகளைச் செய்யறது அவ்வளவு விவேகமாக எனக்குப் படல்லே."

''குடும்பம் நல்ல குடும்பம்."

''உனக்கு எப்படித் தெரியும் ? உனக்குப் பிள்ளையின் அம்மாவுடன் எத்தனை வருஷச் சிநேகம் ?"

''லேடீஸ் கிளப் விஷயமாக, மாதங்கி கோபிநாத்துடன் போன சனிக்கிழமை போயிருந்தேன். வராந்தாவில், லுங்கி கட்டிண்டு, சிகரெட்டும் கையுமாகப் புஸ்தகம் படிச்சிண்டிருந்தான் சரத். எங்களைக் கண்டதும், சிகரெட்டை ஆஷ்-ட்ரேயில் போட்டுட்டு எழுந்தான். என்ன மரியாதை !"

''பெரியவர்களிடம் மரியாதை இருக்கு. ஒரு ப்ளஸ் பாயிண்ட்."

''இன்னும் கேளுங்கோ. அவன் கன்னா பின்னா புஸ்தகம் படிக்கலையாக்கும். சக்கரவர்த்தித் திருமகன் படிச்சுண்டிருந்தான். நம்ம ராஜாஜி எழுதியது."

''ராமாயணக் கதையைப் படிக்கிற வாயில் சிகரெட்டா !"

''ஏன் ரெண்டையும் சம்பந்தப் படுத்தறேள் ? கதை மனசுக்கு இதமளிக்க."

''சிகரெட் நரம்புகளுக்கு இதமளிக்கவோ ?"

''இதுக்குப் பதில் அப்புறம் சொல்றேன். சரத் எங்கள் இருவரையும் மாடி வரைக்கும் அழைத்துப் போனான். அங்கேதான் லோகேசுவரி இருந்தாள்."

''அவள் யாரு லோகேசுவரி ? ஜகன்மாதாவா ?"

''அவள்தான் சரத்தின் அம்மா. பாவம், எழுந்திருக்க முடியாமல் படுத்துக் கொண்டிருந்தாள். இந்தச் சுளுக்கு எங்கே வேணும்னாலும் வரலாம். முதுகுத் தண்டிலே மட்டும் வரப்படாது."

''முதுகுத் தண்டிலே சுளுக்கு வராது. அது எலும்பு."

''சரி, அதைச் சுற்றி..."

''மேலே சொல்லு."



''சரத் கீழே இறங்கிப் போனான்."

''இன்னொரு சிகரெட் பற்ற வைக்க."

''சிகரெட்... சிகரெட் ! இப்ப சிகரெட்டா முக்கியம்?"

''இல்லை, ராமாயணம்."

''இந்த ஏடாகூடந்தானே வேண்டாம் என்கிறது. லோகேசுவரி ரொம்ப நேரம் பேசிண்டிருந்தாள்."

''புருஷன் மாதிரி."

''அவ வீட்டை எங்கள் வீடு மாதிரி நினைச்சுக்கச் சொன்னாள்."

''நினைச்சுண்டியா ?"

''ஃப்ரிஜ்லேந்து நாங்களே மாங்கோ ஜூஸையும் ஐஸ் வாட்டரையும் எடுத்து ஷர்பத் கலந்துண்டோம். லோகேசுவரியும் சாப்பிட்டுவிட்டு..."

''தம்ளர்களை அலம்பி வைக்கச் சொன்னாளாக்கும்?"

''என்ன இன்னிக்கு இவ்வளவு குதர்க்கம் ? நான் அலம்பி வைக்கல்லை. அதை மாதங்கி கவனித்துக் கொண்டாள்."

''அப்படியா ?"

''பேச்சோடு பேச்சா, மாதங்கி நம்ம ஜானாவைப் பத்தி லோகேசுவரி கிட்டே சொன்னாள். அவ்வளவுதான். மகிழ்ச்சியில் முதுகுச் சுளுக்கையும் மறந்து படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்து அப்புறம் மீண்டும் சாய்ந்தாள்."

சதானந்தம் மௌனமானார்.

''என்ன யோசிக்கிறேள் ?"

''ஜானா எங்கே ?"

"அவளுடைய அறையில்."

"வரச் சொல்."

"சரி."

"இப்ப நீ என்னுடன் பேசறப்போ அவள் இருக்கவில்லை."

"ஆமாம். அதுக்கு என்ன ?"

"இப்ப நான் அவள் கூடப் பேசறப்போ, நீ இருக்கப்படாது."

"நான் இருந்தாதான் உங்களுக்கு உதவியா இருக்கும். உங்க கருத்தை நான் இன்னும் அழுத்தமா அடிச்சுச் சொல்லலாம்."

"இது பட்டறை இல்லை. ஜானாவும் இரும்புக் கம்பி இல்லை. நீ போய் அவளை அனுப்பு."

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு ஜானா வந்தாள்.

"என்ன அப்பா, ரொம்ப அவசரமா வரச் சொன்னீர்களாமே ?"

"அப்படீன்னு உன் அம்மா சொன்னா, அதுக்கு நான் பொறுப்பு இல்லை, ஜானா ! அவசரம் ஏதும் இல்லை."

"சரி, என்ன விஷயம் ?"

"அம்மா ஏற்கனவே பேசியிருக்கிறாளே."

"ஓ அதுவா !"

"ஆமாம், நீ என்ன நினைக்கிறே ?"

"நினைக்கிறதா ? நான் நேத்திக்கே மறந்தாச்சே !"

"என்ன சொல்றே, ஜானா ?"

"அம்மா கொண்டு வந்த வரன்களுக் கெல்லாம் தலையை நீட்டறதுன்னா குனிஞ்சு குனிஞ்சு என் கழுத்துத் தேய்ஞ்சு தேய்ஞ்சு ஒரு முக்கால் இன்ச் குழாய் ஆயிடும்."



"சரத் சாதாரண வரன் இல்லை, ஜானா."

"அபூர்வப் பிறவிகள் எனக்குத் தேவை இல்லை, அப்பா. இதுக்காகத்தானே கூப்பிட்டீர்கள் ! நான் வர்றேன்."

"என்னம்மா இது ?"

"என் கல்யாணம் என் சொந்த விஷயம். நீங்க ரெண்டு பேருமா அதைப் பிரச்னையாப் பண்ணிவிடாதீர்கள், அப்பா."

"நான் பண்ண மாட்டேன், ஜானா."

"சரி."

"கிடக்கட்டும். நீ உன் மனசிலே என்ன நினைச்சுண்டிருக்கே ?"

"அது என்னன்னு உங்களுக்கும் தெரியும். அம்மாவுக்கும் தெரியும். இருந்தும் பேசாம இருக்கிறீர்கள் !"

"மூர்த்திதானே ?"

"ஆமாம்."

"அனந்தராமன் வீட்டில் இப்பத்தான்..."

"இப்பத்தான் இல்லை. நாற்பது நாள் ஆயிட்டது. முந்தா நாள் கூட நான் அட்வகேட்டுடன் பேசிண்டிருந்தேன். கலகலப்பா இருக்கார்."

"அனந்தராமன் எப்போ கலகலப்பா இல்லை ? நான் அவர்கிட்டே பேசலாமா ?"

"பேசி ஒரு முடிவுக்கு வந்தால், என் எதிர் காலம் என்ன என்பது நிர்ணயமாகும்."

"ஒருவேளை— கடவுள் தயவில் அந்த வேளை வர வேண்டாம்— அனந்தராமனுக்கு இஷ்டமில்லை என்றால் ?"

''மூர்த்திக்கு இஷ்டம் இருந்தால் அவர் தூக்கி எறிய மாட்டார். என்னைப் பெண் மாதிரி நடத்துகிறார்.''

''அவருடைய பெண் சீதாவுக்கு ஒரு பெண் இருக்காளே ?''

''சாரு பம்பாயிலிருந்து வர மாட்டேன்னு அங்கேயே இருக்காள். சீதாவுக்கு மூர்த்தியைப் பிடிக்காது. இப்ப ஒருத்தருக்கு ஒருத்தர் அதிகம் பேசிக் கொள்வது கூட இல்லை. சொல்லப் போனால், சீதா யார்கிட்டேயும் பேசாம, மாடியிலேயே முடங்கிக் கிடக்கிறாள்.''

''ஜானா !''

''என்ன அப்பா ?''

''உன் ஆசையை நிறைவேற்றி வைக்க என் மனசு ரொம்பவும் பாடு படறது. ஆனா பயமாய் இருக்கு, எங்கே என்னாலே முடியாமப் போயிடுமோன்னு.''

''குளத்தில் இறங்காமலே நீச்சல் கத்துக்க நீங்க முயற்சி பண்றேள், அப்பா ?''

''சரி, இன்னிக்குச் சாயங்காலமே அனந்தராமனைச் சந்திக்கிறேன். நீ இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொள்.''

''ஒரு சின்ன வேண்டுகோள்.''

''என்ன ?''

''இப்போதைக்கு அம்மாவுக்குத் தெரிய வேண்டாம். இன்னிக்குக் கார்த்தாலே ஒரு மணி நேரம் அந்த லோகேசுவரியுடன் போனில் பேசிக் கொண்டிருந்தாள். அம்மா போற வேகத்தைப் பார்த்தால் எனக்குச் சிரிக்கிறதா அழறதான்னு புரியலே.''

''சரி.''



''அப்பா, இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லிடட்டுமா ?''

''ஏன் விட்டு வைக்கிறே? சொல்லு.''

''ஒண்ணு, நான் மிஸஸ் மூர்த்தி அல்லது என்னிக்கும் மிஸ் ஜானகி, பி.ஏ.,பி.எல்., அட்வகேட்.''

ஜானாவின் குரலில் பிரதிபலித்த உறுதி சதானந்தத்தைப் பிரமிக்க வைத்தது.

## 22

ரங்காவுக்கு வேலையில் மனம் ஈடுபடவில்லை. உடலைப் போல் உள்ளமும் வியர்க்கும் என்றால், அவனுடைய உள்ளத்தின் வியர்வையில் காரியாலயமே மூழ்கிப் போயிருக்கும்.

மனம் குழம்பியது.

மனம் கேவியது.

மனம் சஞ்சலப் பட்டது.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான். கண்கள் குருடாகி விட்டன. முட்கள் தெரியவில்லை. தன்னை ஒரு தடவை கிள்ளிக் கொண்டான். உணர்ச்சி இல்லை.

யாரோ அருகே நின்று அவனை அழைப்பதான பிரமை மனத்தில் பிறந்தது. பார்த்தான். திடீரென்று காரியாலயத்தின் பிரக்ஞை உண்டாயிற்று.

''சார்... சார்...''

''ஹங்... யார் ?''

''என்ன சார், உங்களுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே ?''

வார்த்தைகள் ஒலித்தன. மெல்ல மெல்ல அர்த்தம் புரிந்தது.

''எ... என்ன கேட்டே ?"

அவனுடைய ஸ்டெனோ எதிரே நின்று கொண்டிருந்தாள்.

''உங்க உடம்புக்கு..."

''என்ன, உடம்பா ?"

''சார், நீங்க வீட்டுக்குப் போங்க. ஒரு மாதிரியா இருக்கீங்க."

திடீரென்று ரங்கா நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''சுகன்யா !"

''என்ன சார் ?"

''ஒரு பெண்ணின் கலியாணம் பெரிய பிரச்னை இல்லே ?"

''உங்க பெண் மாலாவுக்குக் கலியாணமா, சார் ?"

''நான் கேட்டதற்குப் பதில் சொல்லு."

''பிரச்னைன்னா எப்படிப்பட்ட பிரச்னை ?"

''உனக்குக் கலியாணம் ஆகவில்லை. ஏன் ?"

''வேளை வரவில்லை, சார்" சுகன்யாவுக்குச் சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை, மிஸ்டர் ரங்கா எப்போதும் போல இல்லை. விசித்திரமாகக் கேள்விகள் கேட்கிறார். அவர் மனத்தில் ஏதோ சஞ்சலம். என்ன ? தெரிந்து கொள்ள ஆசை வந்தது.

''என் வீட்டில் ஆயிரம் பிரச்னை. முக்கியமாகப் பணப் பிரச்னை"

''அதுவேதான் எனக்கும்."



''என்ன சார். உங்களுக்குப் பணப் பிரச்னையா ? சொந்த வீடு, பணக்கார அப்பா, பணக்கார மாமனார்."

''எல்லாம் பிரயோஜனமில்லை. சரி, நீ போ."

''நாலரை மணிக்கு ஏதோ டிக்டேட் பண்ணப் போறேன்னு சொன்னீர்களே ?"

''நாளைக்குத்தான்"

சுகன்யா போய் விட்டாள்.

இவளுக்கு இருபத்தெட்டு வயதாகிறது. இன்னும் கலியாணமாகவில்லை. ஆனால் மாலுவுக்கு உடனடியாகப் பண்ண வேண்டும். இவ்வளவுக்கும் ஏழு வயது சிறியவள்.

ரங்கா எழுந்தான்.

இப்போது மாலு திருவான்மியூர் வீட்டில் இருப்பாள். அவன் நாளைக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும். எதற்கு ? பணத்துக்கு.

ஏன் இன்றைக்கே அப்பாவைச் சந்திக்கக் கூடாது ? இன்றைக்கே பார்த்து விட்டால், இரண்டில் ஒன்று தெரிந்து விடும். சொர்ணம் இரவு தொணதொணக்க மாட்டாள். அப்பாவின் முடிவை— அது எதுவானாலும் சரி— தெரியப்படுத்தி விட்டால், அவள் வாய் ஓரளவு அடங்கும்.

ரங்கா உடனே புறப்பட்டான்.

* * *

தன்னை அப்பா அழைக்கிறார் என்ற தகவல் கிடைத்ததும் சீதா இருக்கையை விட்டு எழுந்தாள் அப்பா எதற்கு அழைக்கிறார் ? ஒருவேளை பணத்தை எந்தக் கம்பெனியில் முதலீடு செய்தால் அநுகூலமாக இருக்கும் என்று யோசனை சொல்லப் போகிறாரா ?

அனந்தராமன் ஹாலில் சோபாவில் உட்கார்ந்திருந் தார். டீப்பாயில், அவர் குடித்து விட்டு வைத்திருந்த தம்ளரில் காபிக் கறை உறைந்திருந்தது.

"என்ன அப்பா ?"

அனந்தராமன் ஒரு தடவை அவளை முழுதாகப் பார்த்து விட்டுக் கண்களை மூடிக் கொண்டார்.

"பம்பாயிலிருந்து கடிதம் வந்ததா ?"

"இல்லை."

"சாரு எழுதலையா ?"

"இல்லை."

"நீ எழுதினாயா, சீதா ?"

"இல்லை."

"ஏன் ?"

"அதுகள் எழுதாதபோது நான் எதுக்கு எழுதணும் ?"

"வீராப்பு அவசியந்தான், சீதா. ஆனா பெத்தது கவிடமா ?"

"நான்தான் ரெண்டையும் பெத்தேன். ஆனா அதுகள் ரெண்டும் ஒத்துக்கலையே..."

"அதுக்குக் காரணம்...?"

"நான்தான்னு சொல்ல வரேளா, அப்பா ?"

"ஆமாம்."

"இதைச் சொல்லத்தான் கூப்பிட்டீர்களா ?"

"நீ பம்பாயிலிருந்து இங்கே வந்து தங்கப் போறேன்னு சொன்னப்போ, உன்னுடன் என் பேரன் பேத்திகளும் வருவார்கள்னு எதிர் பார்த்தேன்."



"அவர்கள் தாங்களாக ஒரு முடிவு எடுத்தால் நான் என்ன செய்ய ?"

"நீ இங்கே தனி மரமா இருப்பது அவ்வளவு நன்னா யில்லை."

"என்னைத் திரும்பிப் போகச் சொல்லுகிறீர்களா ?"

"அவர்களை இங்கே வரவழைக்க முடியலேன்னா, முக்கியமா சாருவை வரவழைக்க முடியலேன்னா, நீ போய் அவளைப் பார்த்துக் கொள்றதுதான் விவேகம். அவள் ஒரு பெண்."

"ஆனா அது மாதிரி அவ நடந்து கொள்ளலியே ! மனோஜாவது முன் கூட்டியே தன் எண்ணத்தைத் தெரிவித்து என்னை மாதிரிப் பிடிவாதமாக இருந்தான். ஆனா சாரு ? கல்யாண்லே யாருக்கும் தெரியாம இறங்கி, பம்பாய் போற ரெயில்லே ஏறி ஓடினா."

"உன் மனசை மாத்த அது ஒரு வழின்னு அவ நினைச் சிருக்கலாம்..."

"ஆனா தோத்துப் போயிட்டாள்."

"எனக்கு வேறு விதமாப்?படறது. அவ ஜெயிச் சிருக்கா. பாம்பேயிலே பிறந்து வளர்ந்தவர்களுக்குப் பாம்பேதான் அடைக்கலம்னு நினைச்சிருக்கா."

"இப்ப என்ன சொல்றேள் ?"

"சில உண்மைகள் கசப்பாக இருக்கும். மருந்து கசக்கிற மாதிரி."

"பீடிகை இல்லாம..."

"நீயும் பாம்பே போயிடு."

"அப்பா !"

"ஏன் கத்தறே, சீதா ?"

சென்னை மாவட்ட மைய நூலகம்
21203
377960

"இங்கே யிருந்து போயிடுன்னு சொல்ல உங்களுக்கு உரிமை இருக்கு. போயிடறேன். ஆனா பாம்பே போயிடுன்னு சொல்ல உரிமையோ அதிகாரமோ இல்லை."

"சரி. நீ உன் பெண் இருக்கும் இடத்துக்குப் போ. உன் குடும்பம் இருக்கிற இடத்துக்குப் போ. என் பேத்தி, வயது வந்த பெண். நிராதரவாப் பாம்பேயிலே அலையப் படாது."

"சரி. அதைப்பற்றி யோசிக்கிறேன். ஒரு கேள்வி."

"என்ன ?"

"என் பெண்ணை மூர்த்திக்கு வாங்கிக்கணும்னு நீங்களும் அம்மாவும் ரொம்ப நாளா ஆசைப்பட்டிருந்தீர்களே. அந்த ஆசை என்னவாச்சு ?"

"உன்னைப் பொறுத்தவரை, மூர்த்தியும் வேப்பங்காயும் ஒண்ணாச்சே... எங்க ஆசைக்கு அப்புறம் என்ன கதி ?"

"இப்ப என்ன நினைக்கிறேள் ?"

"இன்னும் ஆசைப்படறேன், சீதா. ஆனா மூர்த்தி மனசில் சாரு இல்லை."

"அவன் மனசோடு பேசினேளா ?"

"இல்லை. அந்த ஜானா மனசோடு பேசினேன். உன் பெண் என் பிள்ளைக்குக் கொடுத்து வைக்கவில்லை."

"இப்ப எனக்கு உங்களை நன்றாகப் புரியறது, அப்பா."

"என்ன புரியறது ?"

"பேத்தி மருமகளா வரமாட்டான்னு உறுதியானதும், பேத்தியைக் கொடுத்த அம்மாவை, தாம் பெத்த பெண்ணை வெளியேறச் சொல்லுகிறீர்கள்."



"நீ மூக்கு நுனியைத் தாண்டிப் பார்க்கலேன்னா அது என் குத்தம் இல்லை, சீதா."

"மூக்கையே எல்லாருமாச் சேர்ந்து வெட்டியாச்சு. அப்புறம் நுனி ஏது ? நான் வர்றேன்."

சீதா எழுந்தாள்.

"சீதா !"

அம்மா அழைத்துக் கொண்டு வந்தாள்.

"என்னம்மா, உன் உபதேசம் ஏதானும் பாக்கி இருக்கா ?"

"டிபன் சாப்பிட வா. கல் தோசை. உனக்குப் பிடிக்கும். ரங்கா பெண்ணும் மூர்த்தியும் தின்னுண்டிருக்கா."

"அப்பா கல்லையே தலையில் போட்டிருக்கார். தோசை எதுக்கு ?"

"ஏண்டி, என்ன நடந்தது ?"

திடீரென்று சீதா அழ ஆரம்பித்தாள்.

"அம்மா ! இப்போ, நான் யாருக்கும் வேண்டாதவள். வீட்லேயும் தின்னுப்புட்டு, ஓட்டல்லேயும் பல விதமாத் திங்கிற மாதிரி, தாலி கட்டினவன் ஊர்லே இருக்கிற கட்டிலில் எல்லாம் படுத்துண்டான். அந்த உடம்பு கருகிப் போனப்புறம், நான் பெத்தேனே ரெண்டு, அதுகள் என்னை ஒதுக்கிடுத்து. இப்ப அப்பா 'இங்கே யிருந்து போயிடு!' என்கிறார். ஒரு தெரு நாய்க்குக்கூட இந்தக் கதி ஏற்படாது."

"பேசாம இரு. அழாதே. சீதா என்னமோ சொல்றாளே !"

"அவ என்ன சொன்னாலும் என் மனசைப் புண் படுத்தாது, கோமதி. சாருவும் மனோஜும் பாம்பேயிலே

இருக்கிறப்போ, நீயும் அங்கே போய் இருப்பதுதான் நல்லதுன்னு சொன்னேன். இதை அவள் வேறு விதமா எடுத்துண்டிருக்காள்."

"வேறு விதம்னா ?" கேட்டாள் கோமதி.

"இங்கே இருக்கப் படாதுன்னு நான் சொல்றதா. இவ கூட இவ பெண்ணும் பிள்ளையும் வருவான்னுதானே, முன் கூட்டியே மாடியை முழுதும் ஒழிச்சுக் கொடுத்தேன். மூர்த்தி கிட்டேயும் சொல்லாம, அவன் ரூமை மாத்தினேன். அதைப் பத்தி அவன் ஒரு வார்த்தை பேசி யிருப்பானா ?"

"வாடீ, சீதா ! வீடுன்னா எல்லாம் இருக்கும். நீயும் நானுமா டிபன் சாப்பிடுவோம்."

"நான் இன்னிக்கே பம்பாய் போறேன். அப்பா சொல்லிட்டார்னு நான் பம்பாய் போகலை. பம்பாயைத் தவிர எனக்கு வேறு ஊர் தெரியாது என்கிறதாலே..."

"உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை அள்ளிக் கொட்டாதே, சீதா !"

"நீ பேசாம இரும்மா."

"கோமதி !" என்றார் அனந்தராமன்.

நிசப்தம் நிலவியது.

அதைக் கிழித்தார்.

"சீதா குணம் நமக்குத் தெரியும். அவ பம்பாய்க்குப் போகட்டும். அது நல்லதுக்குத்தான். இங்கேருந்து இப்ப கோபத்துடன் போனாலும், நாளைக்கு அவளே எல்லாத்தையும் உணர்வாள்."

"நான் போறேன். நீங்களெல்லாம் நான் இல்லாமே நன்னா இருங்கோ. அப்பா நிம்மதியா இருக்கட்டும்."

அந்தச் சமயம் பார்த்து மூர்த்தி ஹாலினுள் பிரவேசித்தான்.



"அதோ உங்க பிள்ளை. அந்தச் சிறுக்கியைக் கலியாணம் பண்ணிண்டு மாடியிலே கூத்தடிக்கட்டும்."

"என்ன அப்பா ? அம்மா, என்ன சொல்றா உன் பெண் ?"

"நீ இப்போதைக்குப் பேசாம போ !"

சீதா விருட்டென்று மாடிக்கு ஓடினாள்.

மூர்த்தி பேச வாயெடுத்தான். வாய் நின்றது.

போர்ட்டிகோவில் கார்.

காரிலிருந்து ரங்கா இறங்கினான்.

"ஏண்டா இன்னிக்கே வந்திருக்கிறான் ?"

"தெரியாது."

இன்னொரு யுத்தத்துக்கு அப்பா தம்மைத் தயார் செய்து கொள்ளுகிறார் என்று மூர்த்தி நினைத்தான்.

## 23

அனந்தராமனுக்குத் தம் பெண் சீதாவைப் பற்றி அவளுடைய குழந்தைப் பருவத்திலிருந்து மாலையும் கழுத்துமாய் முகம் பூரிக்க நின்ற நாள்வரை நினைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

முடியவில்லை.

சீதா மாடி ஏறிச் சென்ற சூட்டில் பிள்ளை ரங்கா வந்து சேர்ந்தான். ஒரு கோழைப் பிள்ளையைப் பெற்றதற்காக அவர் வருந்தா விட்டாலும், ஒரு பெண்டாட்டியின் உத்தலில் நடமாடுகிறானே என்ற தாபம் அவருள் ஏற்பட்டது. முன்னொரு காலத்தில் அவன் அம்மாவின் பின்னாலேயே ஒளிந்து கொள்ளுவான். கல்லூரியில்

படிக்கும் காலங்களில் ஒரு தடவை கூட நேரடியாக வந்து எதுவும் பேச மாட்டான். சிறு செலவுக்குக் கூட அம்மா தான் தூது.

அவனை இப்போது அவனுடைய மனைவி தூது அனுப்பியிருக்கிறாள்.

ரங்கா ஹாலினுள் வந்தான்.

"சௌக்கியமா, அப்பா ?"

"அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லாம இருக்கேன். வா, ஆபீஸ்லேந்து நேரே வர்றே போலிருக்கு !"

"ஆமாம்ப்பா !"

"அப்ப உள்ளே போய் டிபன் காபி சாப்பிடு, கல் தோசை."

"வயிற்றுக்கு ஒண்ணும் வேண்டியிருக்கலே. அடைச்சுக் கெடக்கிற மாதிரிப் படறது."

"புளியைக் கரைச்ச மாதிரி இல்லையே ? ஏண்டா மூர்த்தி, நீ ஏன் திண்ணைப் பக்கமா ஒதுங்கி நிக்கறே ? ரங்கா என்ன ராமனா, இல்லே, நீ என்ன லட்சுமணனா ? நீயும் வந்து உட்காரு. அந்தப் பயலும் இருந்தா, இப்ப ஓர் உயிலே எழுதினாலும் எழுதிடுவேன் !" என்றார் அனந்தராமன்.

"ராமுவுக்குப் போன் பண்ணி வரச் சொல்லட்டுமா?" என்று கேட்டான் மூர்த்தி.

"அதைச் செய், போ."

ரங்கா இன்னும் உட்காரவில்லை

"ரங்கா !"

"அப்பா !"

"மாலு கலியாணத்துக்குப் பாக்கு வெத்தலை மாத்திண்டாச்சா ?"



"என்னப்பா இப்படி ஒரு கேள்வி கேட்கறேள் ? நீங்க தானே அப்பா முன் வந்து குடும்பத்துக்குப் பெரியவரா..."

"யாருடா உன் குடும்பத்துக்குப் பெரியவன் ? ஒண்ணு நீ, இல்லே, உன் பொண்டாட்டி. உனக்குக் கலியாணம் பண்ணி உன்னை அவ கையிலே ஒப்படைச்சப்புறம் நான் எப்படிக் குடும்பத்தின் பெரிய மனுஷனாவேன் ?"

ரங்கா திண்டாடினான்

என்ன சொல்லிச் சமாளிப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் மூர்த்தி அப்பா அருகே வந்தான்.

"ராமு வந்துண்டிருக்கான். புறப்பட்டு அரை மணி நேரம் ஆயிடுத்து," என்றான் அவன்.

"அவனாகவே புறப்பட்டு வர்றான் போல் இருக்கு."

"ஆமாம் "

"அவனுக்குக் கலியாண வயசிலே பெண் இல்லையே ! பின் எதுக்கு வர்றான் ?" என்றார் அனந்தராமன்.

ரங்காவுக்குக் கனமான தோல். குத்தலில் அவன் துவளவில்லை.

"என்னடா ரங்கா, அப்ப நிச்சயதார்த்தம் ஆகலை, இல்லையா ?"

மூர்த்தி ரங்காவைப் பார்த்தான். தன் அண்ணன் கோழை என்று அவனுக்குச் சிறு வயது முதற் கொண்டே தெரியும். இப்போது அவனுக்குப் பக்க பலமாகப் பேச மூர்த்திக்குப் பிடிக்கவில்லை. அப்பா நன்றாக வாங்குகிறார் ; வாங்கட்டும்.

ரங்காவுக்குக் கண்கள் கனத்தன. முகம் சிவந்தது.

"ஏண்டா ரங்கா, நீ இப்போ எதுக்கு வந்திருக்கேன்னு எனக்குத் தெரியும். பணத்துக்கு. உன்

பொண்ணின் கல்யாணத்தை வெகு விமரிசையா நடத்தறதுக்கு ஒரு சோணகிரியைத் தேடி வந்திருக்கே."

"அப்பா !"

"இருடா. நான் பேசி முடிச்சுடறேன். உன் பொண் மேலே, ஏன், உன் மேலே கூட எனக்கு அன்பு, பாசம், வாஞ்சை எல்லாம் உண்டு. அப்படி இருக்குன்னு உனக்கும் தெரியும். ஆனா இதையெல்லாம் நீ மூலதனமா வச்சுண்டு, என்கிட்டே பண வியாபாரம் பண்ண வர்றே, பாரு, அது தான் என் மனசுக்குப் பிடிக்கலே. எப்ப நீ உன் பொண்டாட்டி, குடும்பம்னு தனியாப் போயிட்டியோ, அப்பவே நீ ஒரு சம்பிரதாயத்துக்குத்தான் எனக்குப் புள்ளையா இருக்கே. அதோ, உன் தம்பியும் வந்துட்டான். ராமு, இந்த வார்த்தைகள் உனக்கும் பொருந்தும்."

"என்னப்பா சொல்லிண்டிருந்தேள் ?"

"ஒரு மரம் வளர்ந்து கிளைகள் வளர்ந்தன. நாளாவட்டத்தில் கிளைகளே சின்னச் சின்ன மரங்கள் மாதிரி ஆயிடறது. உடனே ஒவ்வொரு கிளையும் தானே தனியா நின்னுண்டு சமாளிச்சுக்கலாம்னு பிரிஞ்சு போயிடறது."

ராமு புத்திசாலி, புரிந்து கொண்டான்.

"இப்ப என்ன செய்யணும்னு சொல்றேள், அப்பா ?" என்றான் அவன்.

"முதல்லே உள்ளே போய் டிபன் காபி சாப்பிடு. கல் தோசை உன் அண்ணாவுக்கு வேண்டியிருக்கலையாம்."

"எனக்கு உண்மையிலேயே நல்ல பசி. தின்ன உண்மையாலேதான் போறேன். ஆனா, கொஞ்சம் பொறுத்து."

"நீ என்ன விஷயமா உன்னைப் பெத்தவாளைப் பார்க்க வந்திருக்கே ? இந்த வீட்லே பெருந் துக்கங்கள்



வர்றபோதுதானே எல்லோரும் வருவீர்கள் !" என்றார் அனந்தராமன். அகிலா, நாத் இருவருடைய மரணங்களுக்குப் பிறகு இரண்டு பிள்ளைகளும் பத்துப் பதினைந்து நாட்களுக்குத் தினந்தோறும் தலையைக் காட்டி விட்டுப் போயிருக்கிறார்களே !

"நான் வந்த காரியத்தைச் சுருக்கமாச் சொல்லிடறேன்."

"சொல்லு"

"என்னைக் கைது செய்யப் போறா. ஆன்டிசிபேடரி பெய்லுக்கு இன்னிக்கு அப்ளை பண்ணியிருக்கேன்..."

ஒரு நிமிடம் அனந்தராமன் ஆடிப் போனார். அவருடைய ஒரு பிள்ளை கைதாகப் போகிறானா? ஏன்? என்ன நடந்தது ? சிறு வயதில் ராமு சின்னச் சின்னப் பொய் புரட்டுகளில் ஈடுபடுவான். அம்மாவின் சில்லறைப் பெட்டியிலிருந்து சில்லறை எடுப்பான். ஒரு தடவை கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுக்கு அவர் பணம் மறுத்தபோது, தலை குனிந்து கொண்டே போனவன் நான்கு நாட்களுக்குத் தென்படவில்லை. குமாஸ்தாவின் மேஜையில், கட்சிக்காரன் ஒருவன் கொடுத்து விட்டுப்போன பணத்தில் நூறு ரூபாய் குறைந்திருந்தது. குமாஸ்தாவைக் கண்டபடி திட்டியது அநியாயம் என்பதை அவர் நான்கு நாட்களுக்குப் பிறகுதான் உணர்ந்தார். மனச் சாந்திக்காக நூறு ரூபாய் அன்பளிப்பாக அளித்தார். மொத்தம் இருநூறு ரூபாய் விரயம்.

ராமு நான்கு நாட்களுக்கு அப்புறம் திரும்பி வந்த போது, கல்லுளி மங்கனைப் போல நின்றானே தவிர, தன் நான்கு நாள் மறைவைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை அவரும் கேட்கவில்லை. அவன் செய்த காரியம் தமக்குத் தெரியும் என்று அவனுக்குத் தெரிந்

தாலே போதும், அவன் தன் தவறை உணர்ந்து விடுவான்.

பல வாரங்களுக்கு அவர் ராமுவுடன் பேசவில்லை. ராமுவும் கவலைப் படவில்லை. படிப்பில் தான் சூரன் என்ற பெருமை எல்லாப் பயங்களையும் தூக்கி வெளியே போட்டிருந்தது.

இந்த ராமு— அவருடைய பிள்ளை— கைதாகப் போகிறானா ?

''ஏன் ? ஏன் ? என்ன நடந்தது ?''

''எனக்கே தெரியலே ''

''தெரிஞ்ச வரைக்கும் சொல்லு ''

''ஏதோ ஊழல் நடந்திருக்கு. ஏழெட்டுக் கோடி வரை ஊழல். அசெம்பிளியில் துளைத்து எடுத்திருக்கிறார்கள். வாரத்துக்கு ஒரு தடவை வண்ணான் வர்ற மாதிரிதான் இப்பக் கமிஷன்கள் வர்றதே ! ஒரு வயித்து வலிக்கார ஜட்ஜை நியமிச்சு ஆராயச் சொல்லியிருக்கிறார்கள். பாவம், அந்த ஜட்ஜுக்கு ரெண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை ஏதானும் கொஞ்சம் கொறிச்சாகணும். அவர் அதிலேயே கவனமா இருந்தார்.''

''ஏண்டா ராமு, தெரியாமல்தான் கேக்கறேன். இப்ப யாரு பிரச்னையில் மாட்டிண்டிருக்கா ? நீயா, இல்லே அந்த ஜட்ஜா ?''

''விஷயத்துக்கு வர்றேன், அப்பா !''

''சரி, வா.''

''அந்த ஜட்ஜ் ஆபீஸ் பைல்களைத் தலை கீழாப் புரட்டித்து. நான் ஒண்ணரை வருஷம் அந்தப் பகுதியில் பதவி வகிச்சிருக்கேன். நானும் என் கை அரிப்புக்கு அள்ளி எடுத்திருக்கேன்னு அது நெனைச்சிருக்கு. நான் அட்வகேட்



அனந்தராமனுடைய புள்ளை, அந்த வழிக்கெல்லாம் போக மாட்டேன்னு அதுக்குத் தெரியலே.''

''சின்ன வயசிலே தப்பிச்சுண்டே. இப்ப மாட்டிண்டிருக்கே.''

''சின்ன வயசிலே குத்தம் செஞ்சேன். அது உங்களுக்குத் தெரியும். தேவை என் புத்தியை வக்கரிக்கச் செய்தது. டெஸ்ட் மாட்சுக்கு நான் நூறு ரூபாய் எடுத்தது உங்களுக்குத் தெரிஞ்சுது. நீங்க முகம் கொடுத்து என் கிட்டே பல நாள் பேசலே. அதுவே எனக்கு ஒரு பெரிய தண்டனையாப் பட்டது. அப்புறம் நான் என்னை மாத்திண்டேன்.''

''தெரியும்,'' என்றார் அனந்தராமன். அவருக்கு ராமுவைப் பற்றி என்றும் ஒரு தனிப் பெருமை உண்டு. மூர்த்தி தப்பே செய்யாதவன். ரங்கா கோழை. தப்புச் செய்ய ஆசை உண்டு. ஆனால் தைரியம் கிடையாது. ராமு தப்புச் செய்தாலும் உணர்ந்து திருந்தினவன். ஒளிவு மறைவு என்பதே அவனுடைய பேச்சில் கிடையாது. 'பணம் திருடினாயா ?' என்று கேட்டால், உடனடியாக, 'ஆமாம்' அல்லது 'இல்லை' என்ற பதில் கிடைத்து விடும்.

''இப்ப நீ ஒரு தப்பும் செய்யலையே ?''

''நான் மனசறிஞ்சு எதுவும் செய்யலே நீங்க எனக்குக் குடுத்த பணத்தில் எட்டுக் கிரௌண்டு நிலம் வாங்கினேன். வீட்டுக்குப் பிரிட்ஜ், அலமாரி, டைனிங் டேபிள்னு செலவு செஞ்சேன். இன்னிக்கு என் சம்பளத்தைத் தவிர வேறு எந்த விதமான வரும்படியும் இல்லை.''

''அப்ப ஏன் பயப்படறே ?''

''கலவரக் கூட்டத்தைக் கலைக்கக் குண்டாந்தடியை வீசறா. கண்ணீர்ப் புகைக் குண்டையும் சுடறா. அடி படறவாளெல்லாம் கலவரம் செய்தவரா ஆகி விட முடியுமா ?''

"நன்னாப் பேசறே."

"ஜட்ஜ் தன்னோட வயத்து வலியின் மேலுள்ள எரிச்சலில் பதினாலு ஆபீஸர்கள், பத்துத் தலைமைக் குமாஸ்தாக்கள், மூணு என்ஜினீயர்கள், நாலு எம்.எல்.ஏ.க்கள், ரெண்டு முன்னாள் மந்திரிகள் எல்லாரையும் வளைத்துப் போட்டிருக்கிறார். பதினாலு பேரில் நானும் ஒருவன்."

"இதைச் சொல்லத்தான் இங்கே வந்தயா ?"

"ஊஹூம். இது மட்டும் இல்லை. இன்னும் ஏழெட்டு நாளில் என்னை ஸஸ்பெண்ட் செய்வார்கள். பாதிச் சம்பளம் கோர்ட் செலவு, வக்கீல் ஃபீஸ்னு நெறைய ஆகும்."

"நானும் ஒரு வக்கீல்தான்."

"இந்த மாதிரிக் கேஸ்களுக்கு டி. கே. கணேசன்தா[illegible]க ஏத்தவர் என்று ஒரு ஏழெட்டு ஆபீஸர்கள் முடிவு எடுத்திருக்கோம். நீங்க சிவில் ஸைட் லாயர். சிவில் ஒரிஜனல் அப்பெல்லேட்னா உங்களைத்தான்..."

"சரி. கணேசன்... இப்ப நான் என்ன செய்யணும் ?"

"உதவி."

"பணமா ?"

"வேறு என்ன உதவிக்கு ஒரு புள்ளை தன் அப்பாவிடம் போவான் ? அப்பா இருக்காரா இல்லையான்னு திரும்பிப் பார்க்காத புள்ளைகூட, ஒரு பிரச்னை, அதுவும் பணப் பிரச்னைன்னு வர்றப்போ அப்பன் காலைப் புடிக்கத்தானே ஓடறான்."

அனந்தராமன் நெகிழ்ந்து போனார். ராமு தன்னைப் பற்றியே மனசைத் திறந்து பேசிக் காட்டுகிறான்.

"எவ்வளவு ?"



"திட்ட வட்டமாகச் சொல்ல முடியாது, அப்பா. இப்போதைக்கு ஐயாயிரம், அப்புறம் அது ஏறிக் கொண்டே போகும். கேஸ்னு வந்தா ஒத்தி வைப்புத்தான் இழுத்துக் கொண்டே போகுமே. முடியற வரையில் அரைச் சம்பளம், முக்கால் சம்பளம்..."

அனந்தராமன் கண்களை மூடிக் கொண்டார். அவருடைய பிள்ளையின் பெயர் அடிக்கடி பேப்பர்களில் வரும். அனந்தராமனுடைய பிள்ளைன்னு ஊரில் பேசிக் கொள்ளுவார்கள்.

குடும்பக் கிளைகளில் ஒன்று தனியாகப் போனதோடு நிறுத்திக் கொள்ளவில்லை ; அழுகத் தொடங்கி விட்டது.

அவர் பண உதவி செய்யத் தயங்குகிறார் என்று ராமு நினைத்திருக்க வேண்டும்.

"நீங்க குடும்பச் சொத்தைப் பிரிச்சுக் குடுத்த போது, நான் எட்டுக் கிரௌண்ட் நிலம் வாங்கினேனே ; அது இன்றும் அப்படியே இருக்கு. யாரும் குடிசை போட முடியாதபடி, கம்பி வேலி போட்டு, கதவு பொருத்திப் பூட்டி வச்சிருக்கேன். குடும்பச் சொத்து, விக்க மனசு வர மாட்டேன் என்கிறது. இன்னிக்கு அந்த இடத்தில் கிரௌண்டு முக்கால் லட்சம், ஆறு லட்சத்துக்கு ஒரு பைசாக் குறைவு இல்லை. உங்க பேருக்குப் பணயமா எழுதித் தர்றேன். குடும்பச் சொத்து குடும்பத்திலேயே இருக்கும்."

அனந்தராமனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. அவர் ராமுவைப் பற்றி என்னவோ நினைத்துக் கொண்டிருந்தார். இவ்வளவு பெரிய மனிதனா இவன் !

"இப்ப என்ன வாடகை கொடுக்கிறே ?"

"மூணு மாசம் முன்புவரை நானூறு. இப்ப ஐந்நூறு."

''மாசச் செலவு என்ன ஆறது ?"

''கிட்டத்தட்ட ஆயிரத்து முந்நூறு."

அனந்தராமன் மூர்த்தியைப் பார்த்தார்.

''மூர்த்தி !"

''என்னப்பா ?"

''சீதா இன்னும் சில நாளிலே பம்பாய் போயிடுவா."

''இன்னி ராத்திரி மெயில்லேயே போயிடுவா போலிருக்கு."

''அதெல்லாம் வீண் பேச்சு. அவ போனதும் ராமுவும் ருக்மிணியும் குழந்தைகளும் இங்கே வர்றா."

மூர்த்தி தலையை ஆட்டினான்.

''என்னப்பா சொல்றேன் ?" என்றான் ராமு.

''குடும்பம் ஒரளவுக்கு மறுபடியும் இணையறது !" என்றார் அனந்தராமன்.

''அது நடக்காத காரியம், அப்பா. எப்ப பிரிஞ்சு போயாச்சோ, அப்ப பிரிஞ்சே இருக்கிறதுதான் அழகு."

''அழகு முக்கியம் இல்லை, அவசியத்தைப் பாரு."

''ஏம்ப்பா, நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா ?"

''ஜமாய்."

''உங்க உதவி கெடைக்கணும்னா நான் என் மனைவி குழந்தைகளோடே இங்கே உங்களுடன் வந்து இருக்கணுமா ? இது ஒரு நிபந்தனையா ?"

''ஆமாம், இல்லை."

''அப்படின்னா ?"

''நான் கண்டிஷன் போடலே. எனக்கு இப்ப என் தீராத ஆசையைத் தீர்த்துக் கொள்ள, என் பல நாள்



தாகத்தைத் தணிச்சுக்க, நீங்க ரெண்டு பேரும் வாய்ப்புக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் ஏன் தவற விட வேண்டும் ?"

''ரங்கா, நீ என்னடா அப்படி ஒரு சான்ஸ் கொடுத்திருக்கே, அப்பாவுக்கு ?"

''அவன் சொல்ல மாட்டான். நான் சொல்றேன். மாலுவை ஓர் ஐ. ஏ. எஸ்.ஸுக்குக் குடுக்கப் போறான். ஆனா பணமுடை..."

''மாடியில் ஒரு போர்ஷனில் நான். இன்னொன்றில் இவனா ?"

''ஏன், கூடாதா ?"

''பாலக்காட்டில் ஒரு பழமொழி உண்டு. ஆனா நான் அதைப் பகிரங்கமாச் சொல்றது சரியில்லை. கிராமங்களில் சகஜமாச் சொல்லுவா."

''தெரியும்டா. ரெண்டு தலைகள் சேர்ந்து கொள்ளும். நாலு சேராது. அதுதானே ?"

''ஆமாம்ப்பா. நீங்க போகாத ஊருக்கு வழி தேடறீர்கள்."

''என்னுடைய மூணு பிள்ளைகளும் என்னுடன் என் கடைசிக் காலம்வரை இருக்கணும்னு எனக்கு ஆசை, தாபம். ஏன், வெறி கூட."

ராமு கூறினான்.

''நீங்க உளுத்துப் போன ஹிண்டு அன்டிவைடட் ஃபாமிலியை மனசில் வச்சுண்டு பேசறேள்."

''தப்பு."

''காலத்துக்கும் சரி, எங்களுடைய நிலைமைகளுக்கும் சரி, பொருந்தாது."

''ஏனாம் ?''

''அந்தக் காலத்தில் குடும்ப நிலபுலன், குடும்ப வியாபாரம்னு ஒண்ணு இருக்கும். எல்லாரும் அதில் ஈடுபட்டார்கள். அப்பா— அதான் கர்த்தா- தலைவரா இருந்து வழி காமிச்சார். ஒரு கல்யாணம் கார்த்தின்னா எல்லாரும் கலந்து கொண்டா. இப்ப, புள்ளைகள் என்ஜினீயர், டாக்டர், சார்ட்டட் அகௌண்டண்ட்டுன்னு தாறுமாறா வெவ்வேறு திசைகளில் போயிடறா. தம் தம் சாமர்த்தியத்திலே சம்பாதிக்கிற பணம் தமக்குத்தான் என்கிற எண்ணம் வந்துடறது. அப்பன் ஏழையானா, திருப்பதி உண்டியலில் போடற மாதிரி, ஏதானும் அப்பனுக்கு வீசறா. பணக்கார அப்பனா இருந்தா, அவன் போன பிறகு ஏதானும் வரணுங்கற ஆசையில் அப்பப்ப ஆசாரிய சுவாமிகளைப் பார்க்கப் போற மாதிரி பார்க்க வர்றா. நானும் இந்த ரங்காவும் இதைத்தானே செஞ்சுண்டிருக்கோம் !'' என்றான் ராமு.

அனந்தராமன் ஒரு நிமிடம் வாயடைத்துப் போனார். ஆனால் மறு நிமிடமே பேசலானார்.

''என்ஜினீயர், டாக்டர், ஆபீஸர், யார் எப்படி இருந்தாலும், அவனுடைய சம்பாத்தியம் குடும்பம் என்கிற ஓர் ஊற்றிலிருந்து பிறந்து பீரிடற வெள்ளந்தானே ! எல்லா வெள்ளங்களையும் ஒண்ணு சேர்க்கிறது கஷ்டமா ?''

''கஷ்டமில்லை, அப்பா ! ஆனா விளைவுகள் ? ஒவ்வொருவனும் தன்னுடைய தனித் தன்மையைப் பத்தியே நெனைச்சுண்டிருக்கறப்போ, அவன் உள் மனசில் தன் சம்பாத்தியம் தனக்குப் பூரணமாப் பயன் அளிப்பதில்லையே என்கிற தாபமும் எரிச்சலும் வரும். தேர்த் திருவிழாக்களில் பொண்டாட்டி குழந்தைகளுக்குக் கண்ணாடி வளையல் வாங்கக் கூட, கர்த்தா கிட்டே கை நீட்டி நிக்கற நிலைமை வந்துடுத்தேன்னு அங்கலாய்ப்பான்.''



''இதெல்லாம் விவாதத்துக்குப் பேசற பேச்சு.''

''ஏண்டா ரங்கா, நான் இவ்வளவு நேரம் அப்பா கிட்டே தொந்த யுத்தம் செய்யறேன். நீ மௌன சாமியார் மாதிரி உட்கார்ந்திருக்கே ! உன் கருத்து என்ன ?''

''அப்பா உதவி பண்ணலேன்னா என் பொண் மாலுவின் கலியாணம் நடக்காது !'' என்றான் ரங்கா.

மூர்த்தி முதல் தடவையாகப் பேச்சில் கலந்து கொண்டான்.

''அப்பா உனக்கு உதவி பண்ண மாட்டார். ராமுவாவது நெலத்தை மார்ட்கேஜ் பண்ணத் தயார்ங்கறான். நீ டம்பாசாரி மாதிரி இருந்துட்டு, இப்ப மன்னியின் உந்தலில் இங்கே வந்து விழறே. அப்பாவை நீங்க ரெண்டு பேரும்...''

''பேசாம இருடா, மூர்த்தி,'' என்றார் அனந்தராமன்.

''எனக்குப் பசிக்கிறது. நான் டிபன் சாப்பிடப் போறேன்,'' என்று சொல்லி விட்டு ராமு நகர்ந்தான்.

ரங்காவும் எழுந்தான்.

''அப்பா !''

''அதான் சொன்னானே அவன் !''

''அப்படீன்னா...''

''மாலுவுக்கு என்னிக்கு எந்தக் கல்யாண மண்டபத்தில் எத்தனை மணிக்கு முகூர்த்தம்னு சொல்லி அனுப்பு. நீ கூட வர வேண்டாம். நானும் உன் அம்மாவும் வந்து ஆசீர்வாதம் பண்றோம். ஆசீர்வாதம்னா என்னன்னு உனக்குத்தான் தெரியுமே !''

ரங்கா கண் முன் சொர்ணம் தோன்றினாள். ஒரு காளிதேவியின் படம் கண் முன் தெரிந்தது. இங்கே இவர்

மூத்த பிள்ளையுடன் குத்திக் குதறுகிறார். அங்கே அவன் நார் நாராகக் கிழிப்பான். இரு முனைகளிலும் தோல்வி. அது அவனுடைய மிருகத்தின் தற்காப்புச் சீற்றத்தைத் தூண்டி விட்டது.

"நீங்க குடும்பச் சொத்தைச் சரியாப் பிரிச்சுக் குடுக்கலை. என் கணக்குப்படி இன்னும் வர வேண்டியிருக்கு."

அனந்தராமனால் தம் காதுகளையே நம்ப முடியவில்லை. ரங்கா என்னும் ஒரு கோழையா பேசுகிறான்? இப்படிப் பேச யார் தைரியம் என்னும் பாலை ஊட்டினார்கள்?

நிதானமாக, "இன்னும் எவ்வளவு வரணும்னு உன் கணக்குச் சொல்றது?" என்று கேட்டார்.

"கிட்டத்தட்ட எண்பதாயிரம்."

"அதுதான் மாலு கலியாணத்துக்குத் தேவையாக்கும்?"

"அதைக் குடுத்துத் தீர்த்துடுங்கோ."

"தீர்க்கறேன். தீர்க்க வேண்டி வந்தால்! ஆனா அது இந்த வீட்டில் இல்லை. கோர்ட்டில்! அவன் ஒரு கிரிமினல் கேசுக்காகக் கோர்ட் ஏறப் போறான். நீ சிவில் கோர்ட் ஏறு. போ. உம், போயிடு. அந்தக் கேஸ் முடிஞ்சு, நீ ஜெயிச்சா, இல்லே தோத்தா, இந்த வீட்டு வாசப்படியில் காலை வை மூர்த்தி! நான் ஒருநாள் நிச்சயமாச் செத்துப் போவேன். மூத்த புள்ளைதான் கொள்ளி போடணும்னு ஒரு சம்பிரதாயம் இருக்கு. அது சம்பிரதாயந்தான். இவன் போடப்படாது. என் சாவை இவன் பேப்பரில் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அவன் ஏன் இன்னும் இங்கே நிக்கறான்? போகச் சொல்லு. அப்புறம் அட்வகேட் கிருஷ்ணனுக்குப் போன் பண்ணு. சரியா எட்டு மணிக்கு வரச் சொல்லு. ரொம்ப முக்கியம்னு சொல்லு."



"அப்பா!"

"என்னுடைய இன்கம் டாக்ஸ், வெல்த் டாக்ஸ், கிஃப்ட் டாக்ஸ் பைல்களை எல்லாம் எடுத்து வை. இன்னிக்கு இந்த வீட்டில் ஒரு பெரிய ஃபங்ஷன் நடக்கப் போறது. அப்புறம் ராஜம்மா கிட்டே சொல்லி ஏதேனும் ஒரு பாயசம் வைக்கச் சொல்லு. எதுவானாலும் சரி, தித்திப்பு இருக்கணும். கிருஷ்ணனும் கூடச் சாப்பிடுவான். உன் அண்ணாவுக்குச் சூடு சுரணை இல்லை. இன்னும் நிக்கறான்."

"என்னை மன்னிச்சுடுங்க, அப்பா!" ரங்கா கண்ணில் நீர் மல்க, சாஷ்டாங்கமாக விழுந்தான்.

அனந்தராமன் எழுந்தார். திரும்பிப் பார்க்காமல் பின் கட்டுக்குப் போனார்.

"எழுந்திரு அண்ணா, அப்பா போயிட்டார்," என்றான் மூர்த்தி.

"என்னை அறியாம ஏதோ பேசிட்டேன், மூர்த்தி."

"நீ எதுதான் உன்னை அறிஞ்சு பேசியிருக்கே! புறப்படு."

"சரி."

"மாலு உனக்கு ஒரு பிரச்னையா இருக்கப் படாது. அவ்வளவுதானே விஷயம்?"

"ஆமாம்."

"இருக்க மாட்டாள், நான் பார்த்துக் கொள்றேன்."

"மூர்த்தி!"

"உணர்ச்சி வசப்படாமப் போ!"

"சரி."

"நீ போனதும் மன்னி என்ன நடந்ததுன்னு கேட்பாள்."

''ஆமாம், கேட்பாள்.''

''என்ன சொல்லுவே ?''

''என்ன சொல்றது ?''

''என்னையே கேளு ! மாலுவின் பிரச்னை தீர்ந்த துன்னு சொல்லு. ஆனா அப்பா பெயரை இழுக்காதே.''

''உன் பெயரையே இழுக்கறேன்.''

''அது உன் இஷ்டம்.''

''வர்றேன்.''

''அப்பா 'வா'ன்னு சொல்ற வரைக்கும் நீயோ மன்னியோ இங்கே வரப்படாது, சரிதானே ?''

''மாலு ?''

''அவ பேத்தி. என்னிக்கும் வந்து போக உரிமை உண்டு.'' சொன்னவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை உதித்தது.

''அண்ணா...!''

''என்ன ?''

''மாலு இங்கே ஒரு வாரமோ பத்து நாட்களோ தங்கட்டும். அப்பாவின் கொதிக்கிற மனசு அடங்க அவ ஒரு வழியா இருப்பாள்.''

''அப்படியா சொல்றே ?''

''ஆமாம்.''

''அவ இப்ப இங்கேதானே இருக்கா.''

''இப்ப உள்ளே போய் அனுப்பறேன். நீ காரில் உட்கார்.''

ரங்கா வெளியேறினான்.

மூர்த்தி உள்ளே சென்றான்.



அம்மாவும் மாலுவும் தாழ்வாரத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மாலு ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளையின் குணம், பதவி, அழகு எல்லாவற்றையும் உற்சாகத்துடன் வர்ணித்துக் கொண்டிருந்தாள்.

''மாலு, அண்ணா காரில் காத்திண்டிருக்கான். நீ அதில் போயிடு.''

''நான் வர்றேன், பாட்டியம்மா.''

''குங்குமம் இட்டுண்டு போ.''

கோமதி எழுந்து உள்ளே போனாள்.

''மாலு !''

''என்ன சித்தப்பா ?''

''நாளைக்குக் கார்த்தாலே பொட்டியுடன் வந்துடு. உன் அப்பாவே கேட்வரை கொண்டு விடுவார்.''

''என்ன சித்தப்பா இது ? ஏதானும் பூடகமாச் சொல் லிட்டியா ?''

''அசடு. சொன்னா இங்கே தங்க அனுப்புவானா ? ஒரு பழம் நழுவித்து. பால் பாத்திரத்தை அதுக்கு நேரே நீட்டி யிருக்கேன். உனக்கு அதிர்ஷ்டந்தான்.''

''என்னடா அதிர்ஷ்டம்னு சொல்றே, மூர்த்தி ?'' என்று கேட்டுக் கொண்டே வந்த கோமதி, ''ஐ.ஏ.எஸ். ஆம்படையான் வர்றதுன்னா அதிர்ஷ்டந்தானே!'' என்றாள்.

''ஆமாம் அம்மா.''

''ஆமாம் பாட்டியம்மா.''

மாலு குங்குமம் வாங்கிக் கொண்டு போனாள்.

கார் புறப்பட்டது.

ராமு புறப்பட்டுப் போனான்.

ராஜம்மா என்ன பாயசம் வைக்கலாம் என்று யோசனை செய்யலானாள்.

கோமதிக்கு ஒரு விஷயமும் புரியவில்லை. மூர்த்தியும் பேசவில்லை.

அனந்தராமன் தம் அறைக்குள் ஒண்டிக் கொண்டார். அட்வகேட் கிருஷ்ணன் வந்தால் உயிலை எப்படித் தயார் செய்வது என்ற யோசனையில் மூழ்கினார்.

மாடியில் சீதா இருட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

வாசலில் ஒரு சிறு கார் வந்து நின்றது.

ஜானா இறங்கி மலர்ந்த முகத்துடன் துள்ளிக் கொண்டே உள்ளே வந்தாள்.

அவளைப் போர்ட்டிகோவிலேயே சந்திக்க மூர்த்தி விரைந்தான்.

சீக்கிரம் பேசி அவளை அனுப்பி விட அவன் துடித்தான்.

# 24

**த**ன் தந்தை சதானந்தம் கல்யாண விஷயமாக அனந்தராமனைச் சந்திப்பதற்குள் தானே ஓடிப் போய் மூர்த்தியைத் தயார்ப்படுத்த வேண்டும் என்று நினைத்த ஜானா மலர்ந்த முகத்துடன் காரிலிருந்து இறங்கி விரைந்தாள்.



போர்ட்டிகோவில் அவளும் மூர்த்தியும் சந்தித்துக் கொண்டார்கள். மூர்த்தியின் முகம் என்றும் போல அன்றும் அலர்ந்த அல்லியாகத் தெரிந்தது.

''வணக்கம்!'' என்றாள்.

''வா ஜானா!''

''எனக்கு வணக்கம் இல்லையா?''

''எனக்கு நல்ல மன நிலை இல்லை. அதனால் உனக்கும் இல்லை.''

''ஏன், என்ன நடந்தது?''

''என்னவெல்லாமோ. நாம உள்ளே போகாம, கமுக மரத்தடிக்குப் போய்ப் புல் தரையில் உட்கார்ந்து பேசலாம்.''

''ஏதாவது விபரீதமா?''

''எங்க வீட்டில் இப்பவெல்லாம் எதுவும் விபரீதமாக நடப்பதில்லை.''

''உங்க முகம் எந்த விதமான வருத்தத்தையும் பிரதிபலிக்கவில்லையே!''

''அது என் முகத்தின் கோளாறு காரணமாக இருக்கலாம்.''

பேசிக் கொண்டே நடந்த அவர்கள் புல் தரையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''அப்பா இன்னிக்குப் புறப்பட்டு வருவதாக இருந்தார். நாளைக்குப் போங்கள் என்று சொல்லிட்டு நான் வந்தேன்,'' என்றாள் ஜானா.

''எதுக்கு?''

''என்ன இப்படிக் கேட்கிறீர்கள்?''

"இன்னும் கொஞ்ச நாளைக்கு நம்ம கலியாண விஷயத்தைப் பத்தி என் அப்பாவோடே பேசாமலிருப்பது நல்லது, ஜானா."

"அம்மா எகிறி எகிறிக் குதிக்கிறாள்."

"ஏன் ?"

ஜானா மாஜி கவர்னர், அவர் மனைவி லோகேசுவரி பிள்ளை சரத் எல்லாரையும் பற்றிக் கூறினாள்.

"நீ என்ன சொன்னே ?"

"யார்கிட்டே ?"

"அம்மா அப்பா கிட்டேதான்."

"அம்மாவின் பேச்சை நான் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. அப்பாவிடம் மட்டும் சவால் விட்டேன்."

"என்னன்னு ?"

"ஒண்ணு, நான் மிஸஸ் மூர்த்தி, இல்லாமப் போனா, மிஸ் ஜானகி. பி.ஏ ,பி.எல்., அட்வகேட்னு."

"நல்லது, ஜானா. ஆனா இப்ப நீ கொஞ்ச காலம் பொறுமையா இருக்கணும். அப்பா உக்கிரமூர்த்தியா இருக்கார்."

"ஏன் ? என்ன நடந்தது ?"

"ஒரு அக்காவும் ரெண்டு அண்ணாக்களும் மோதுகிறார்கள். அவருடைய இஷ்டத்துக்கும் ஆசைக்கும் செவி சாய்க்காமல் தங்கள் சுயநலன்களையே நெனச்சுப் பார்க்கிறார்கள். இப்ப நீ வந்ததுக்குச் சில நிமிஷங்களுக்கு முன்தான், உயில் எழுதுவதுன்னு அப்பா முடிவெடுத்தார். வக்கீல் கிருஷ்ணன் ராத்திரி வரப் போறார்."

"உங்க மனசையும் புண்படுத்துகிறார் போல இருக்கு."



"அவர் ரெண்டு யுகங்களையும் சரியாகப் புரிஞ்சுக் காமத் தவிக்கிறார், ஜானா. அவர் மனசில் ஆசையும் பாசமும் கரை உடைஞ்சு ஓடறது. அதை யாரும் உணர மாட்டோம் என்கிறார்கள். ஆனா, அவரை உபயோகித்துக் கொள்ளத் துடிக்கிறார்கள்."

மூர்த்தி நடந்ததை எல்லாம் சொன்னான்.

"நான் ஒண்ணு சொன்னாத் தப்பா நெனைச்சுக் கொள்ள மாட்டீர்களே, மூர்த்தி."

"இதுவரை அப்படி ஏதாவது நடந்திருக்கா, ஜானா?"

"அப்பச் சொல்றேன்."

"உம் !"

"உங்க சின்ன அண்ணா ராமு தன் அப்பாகிட்டே சொன்னதெல்லாம் பொய். அப்பட்டமான பொய் !"

மூர்த்தி ஒரு கணம் உள்ளூரத் துவண்டு போனான். ஏற்கனவே அவன் முழுதும் சின்ன அண்ணாவை நம்பவில்லை. ஒரு தூசு அளவாவது கை கறை படிந்திருக்க வேண்டும் என்று ஊகித்திருந்தான். ஆனால் இப்போது ஜானா என்ன சொல்ல வருகிறாள் ?

"ஜானா !"

"சொல்லட்டுமா ?" என்று கேட்டாள் அவள்.

"உம் !"

"அரும்பாக்கத்திலே ஓர் ஏக்கர் நிலம், அண்ணா நகரில் ஒரு பங்களா, ஒரு பெரிய கம்பெனியில் லட்சம் ரூபாய் டெபாஸிட் இதெல்லாம் மனைவி குழந்தைகள் பேரில் இருக்கு."

"அப்படியா ? உனக்கு எப்படித் தெரியும் ?"

''ஒரு மாஜி மந்திரிக்கு அப்பா லீகல் அட்வைசர். மந்திரி உண்மையிலேயே பொழைக்கத் தெரியாத மனுஷர். உங்க அண்ணாவும் அவரைப் போலப் பலரும் அந்த மாஜி மந்திரியைப் பகடைக் காயா வச்சு ஆடியிருக்கிறார்கள். உங்க அண்ணா இப்ப வாடகை வீட்டில் இருக்கார். அண்ணா நகர் பங்களாவிலிருந்து மாசம் ஆயிரத்து ஐந்நூறு வாடகை வர்றது அரும்பாக்கம் நெலத்தில் ஒரு சிறுதொழில் நடத்தப் போறார். யார் பேரில் தெரியுமா? தன் மைத்துனன் பேரில். அவன் ஓர் என்ஜினீயர்!"

''ஆமாம். ருக்மிணியின் தம்பி ஓர் என்ஜினீயர்தான்."

''அப்பா அவனுக்குன்னு குடுத்த பணத்தில் எட்டுக் கிரெளண்டு நெலம் வாங்கியிருக்கார். இல்லையா?"

''ஆமாம்."

''அதை மட்டும் தன் பேருக்கு வச்சுண்டு மத்ததையெல்லாம் மறைச்சிருக்கார். இதெல்லாம் மந்திரி கொண்டு வந்த டாக்குமெண்டுகளில் இருக்கு. ஆனா, டாக்குமெண்டில் யார் கையெழுத்தும் இல்லை, சப்ரிஜிஸ்த்ரார் ஆபீசுக்குப் போனால் எல்லாம் வெட்ட வெளிச்சமாயிடும்."

''மந்திரியும் மாட்டிண்டிருக்காரா?"

''மாட்டி வைக்கிறார்கள். நான்தான் சொன்னேனே, பொழைக்கத் தெரியாத மந்திரின்னு. அம்பத்தெட்டு வயசில் வஜ்ரப் பிரம்மசாரி. உண்மையாகவே பிறத்தியாரின் கஷ்டங்களுக்காகக் கண்ணீர் விடுபவர். வெகு எளிதாக, மத்தவங்களுடைய ஊழல்களை நிரூபிக்க எண்ணியிருக்கலாம். ஆனா, அவர் கொள்கை வேறாய் இருக்கு"

''என்ன?"

''அவர் சொன்னார், 'நான் என் நெலைமையைச் சொல்லிடறேன். நான் மந்திரியாக இருந்தபோது நடந்த



ஊழல். பிறர் மீது குத்தத்தைச் சாட்டுவது பண்பு இல்லாத செயல். நானே ஒத்துக்கறேன் எல்லாத் தண்டனைகளையும்!' என்று சொல்றார்."

''அவர் அப்படிச் சொல்லிட்டா, மத்தவங்களுடைய ஊழல்கள் அம்பலமாகாதுன்னு அர்த்தமா?"

''தம் வாயாலே வர வேண்டாம்னு பார்க்கிறார். அவ்வளவுதான்."

''பயமா இருக்கு, ஜானா."

''பயமா? உங்களுக்கா?"

''ராமு உண்மையாகவே நன்னா மாட்டிண்டிருக்கான்."

''நீங்க ஒண்ணு! அவங்களைப் போன்றவங்க எதிலிருந்தும் எளிதா வெளியே வந்துடுவாங்க. அவங்க பயமெல்லாம் ஸொஸைட்டியில பேர் அடிபடக் கூடாதுன்னு தான்."

''அவன் அப்பா கிட்டே பேசறப்போ, ஏதோ ஒரு கொள்கையின் அடிப்படையில் பேசறவன் மாதிரி பட்டது. நானே என் அண்ணாவைச் சரியாக் கணக்குப் போட்டுப் புரிஞ்சு கொள்ளலை. பெரியவன் கோழை, மன்னிக்கலாம். இவன் தில்லுமுல்லு. அப்பா மன்னிக்கவே மாட்டார்."

திடீரென்று ஜானா பேச்சின் திசையை மாற்றினாள்.

''நம்ம விஷயம்?"

''அதான் சொன்னேனே, கொஞ்சம் பொறுமை அவசியம்னு."

''மூர்த்தி!"

''உம்!"

''நான் என் உயிர் போற வரையில் காத்திருக்கத் தயார். ஆனா, நானும் ஒரு பொண்தானே? என் அம்மா பெத்த கொழந்தைதானே?''

''ஜானா, சில நாளிலே எங்க வீட்டிலே சில மாறுதல்கள் நடக்கப் போறது. அவை யார் யாரை எப்படி எப்படியெல்லாம் பாதிக்கப் போறதுன்னு என்னாலே இப்போ ஊகிச்சுப் பார்க்க முடியலே. அப்பா பன மரங்களையெல்லாம் ஆல மரமா ஆக்கணும்னு பார்க்கறார். அவரோட ஆசை தப்போ ரைட்டோ நான் வாதிக்கத் தயாரில்லை. ஆனா, ஒண்ணு. நான் கடைசி வரை அவருடனேயே இருப்பேன்னு நம்பறார். தயவு பண்ணி ஒரு மாசம் பொறு.''

''பொறுத்துக் கொள்றேன், மூர்த்தி. ஆனா இதுவரை நான் கேட்டிராத ஒரு கேள்வியை உங்க கிட்டே கேட்கிறேன். உண்மையாவே நீங்க என்னை உங்க எதிர்கால மனைவியா எண்ணிப் பார்க்கிறீங்களா?''

மூர்த்தி சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''இதே கேள்வியை நானும் கேட்கலாம், இல்லையா?''

''நீங்கள் கேட்காமலேயே நான் எவ்வளவு தடவை பதில் சொல்லியிருக்கேன்; நீங்க அதைப் புரிஞ்சு கொள்ளவில்லையா?''

''ரொம்ப சரி, ஜானா. தைரியமாப் போ. என் கை தாலி கட்டினா, அது உன் கழுத்தில்தான் இருக்கும். இதைத் திட்டவட்டமா உன் அம்மாகிட்டே சொல்லு.''

ஜானாவின் கண்கள் கனத்தன. இதழ்களிலிருந்து ஆனந்தம் பெருகியது.

''ஜானா!''

''உம்!''



''நான் சொன்ன வார்த்தைகளைச் சரியாக் கேட்டாய், இல்லையா?''

''கேட்டேன்.''

''எங்கே, திரும்பச் சொல்லு, பார்ப்போம்.''

''ஜானா. தைரியமாப் போ. என் கை தாலி கட்டினா...''

''போதும்,'' என்றான் மூர்த்தி. பிறகு தொடர்ந்து, ''கை தாலி கட்டினா...'' என்றான்.

''அது போதும், மூர்த்தி.''

''ஒருவேளை என் கை தாலியே கட்டலேன்னா?''

''என் கழுத்தும் யாருக்கும் குனியாம நிமிர்ந்தே இருக்கும். மூர்த்தி, உங்க மனசில நான் இருக்கிறேன் என்கறது எனக்கு இப்ப ஊர்ஜிதம் ஆனப்புறம், எனக்கு என்ன கவலை? உங்க கை மஞ்சள் கயித்தைக் கட்டலேன்னா, அதுக்குக் காரணம், உங்களையும் மீறின, உங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி உங்களை ஆட்கொண்டிருக்கிறதுன்னு நான் என்னைச் சமாதானப் படுத்திக் கொள்வேன்.''

ஜானா காரில் ஏறிச் சென்ற பிறகு மூர்த்தி விரைவாக ஹாலை நோக்கி நடந்தான். இரண்டொரு நிமிஷங்கள் பேசி அவளை அனுப்பி விட நினைத்தவன் முக்கால் மணி நேரம் பேசியிருப்பதை உணர்ந்தான். ஆனால் பேச்சின் முடிவில் என்றும் அநுபவித்து அறியாத ஒரு நிறைவு ஏற்பட்டிருப்பதாகத் தோன்றியது.

அப்பா இன்னும் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

''அப்பா !''

''உம் !''

''என் பக்கமாப் பாருங்க.''

''என்ன விஷயம் ?''

''என்னைப் பார்த்துப் பேசுங்க, அப்பா ! அவசர விஷயம் ''

''எனக்கு இப்ப எதுவும் அவசரமாப் படலை.''

''சரி ! நான் வர்றேன். அட்வகேட் கிருஷ்ணனை இன்னொரு நாள் வரச் சொல்றேன்.''

''நீ யார் அதைச் செய்ய ?''

''உங்க புள்ளை.''

''என் புள்ளைகள்... என் புள்ளைகள்... போ. நீயும் யார் கழுத்திலாவது ஒரு தாலியைக் கட்டி விட்டு, அவ புடைவைத் தலைப்பைப் புடிச்சுண்டு போ.''

''அப்பா, ராமு உங்க கிட்டே சொன்னதெல்லாம் பொய், சுத்தப் பொய், கலப்படமில்லாத பொய் !''

அனந்தராமனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு பெரிய கனம் குறைந்தது போல இருந்தது. எதற்கு ஒரு பெரிய பொய்யைச் சரளமாகச் சொல்லி அவரை வேதனைப் படுத்தினான் ?

மூர்த்தியை நிமிர்ந்து பார்த்தார். ''ஏன் அவன் இப்படிப் பொய் சொன்னான் ? உண்மையாகவே காரணத்தைச் சொல்லிப் பணம் கேட்டிருக்கலாமே ?''

''அவன் மாட்டிக் கொண்டிருப்பது உண்மைதான் அப்பா. ஆனா, என் கை கறை படியாத கை என்று சொன்னானே, அதுதான் பொய். பொண்டாட்டி பேரில் அரும்பாக்கத்தில் ஓர் ஏக்கர் நெலம் இருக்கு ; அண்ணா நகரில் ஒரு பங்களா இருக்கு ; மாசம் ஆயிரத்து ஐந்நூறு வாடகை வர்றது. இது தவிர ஒரு பெரிய கம்பெனியிலே லட்சம் ரூபாய் டெபாஸிட் குழந்தைகள் பெயர்களிலே இருக்கு.''



''உனக்கு எப்படித் தெரியும் ? ஜானா வந்தாளா ?''

''ஆமாம்.''

''ஏன் உள்ளே வரச் சொல்லவில்லை ?''

''வீடு இருக்கிற கொந்தளிப்பிலே அவள்...''

''மடையா ! ஜானா நல்ல முத்துடா. என் மனசு கஷ்டப் படறதுன்னா பொறுக்க மாட்டாடா. அது சரி, அவளுக்கு எப்படி இதெல்லாம் தெரியும் ?''

மூர்த்தி எல்லா விவரங்களையும் சொன்னான்.

அனந்தராமன் கண்களை மூடிக் கொண்டார். சிறு வயதில் ஆரம்பித்த திருட்டு, ராமுவை இன்னும் விட வில்லை. பெரியவனாகியதும், தேவைகளுக்கேற்ப, வசதி பெருகப் பெருக, தீய குணங்கள் மறைந்து விட்டன என்று அவர் நினைத்தாரே, அது தப்புக் கணக்கு. என்ன செய்ய ?

''நல்ல சமயத்தில் சொன்னே.''

''அதுக்குத்தான் கோவிச்சுக் கொண்டீங்களே !''

''ராமுவின் ரெண்டு குழந்தைகளும் சிறுசுகள்டா.''

''ஆமாம்.''

''இவனாலே அதுகள் கஷ்டப்படக் கூடாதுடா.''

''அதனால்தான் இன்னிக்குக் கிருஷ்ணன் வர வேண் டாம்னேன்.''

''மூர்த்தி !''

''உம் ''

''உன் அம்மாவின் வயிறு உன்னைப் பெத்திருக்கலாம். ஆனா, நான் என்ன நெனைக்கிறேன், தெரியுமா? நீ என் மனசு பெத்த பிள்ளை.''

''அப்போ எனக்கு ரெண்டு அம்மா!''

''போய் முதல்லே, பாயசம் வேண்டாம்னு ராஜம்மா கிட்டே சொல்லு.''

''ஏற்கனவே தயாராகி இருந்தா?''

''உப்பைப் போடச் சொல்லு.''

''இல்லை, நாம எல்லாரும் தம்ளரில் குடிப்போம்.''

''அப்போ ஜானாவையும் வரச்சொல்.''

''அவள் போயாச்சு.''

''போன்லே கூப்பிட்டு நான் சொன்னேன்னு சொல்லு. ஐட்ஜையும் வரச் சொல்லு.''

''சரிப்பா.''

''கிருஷ்ணன் வரட்டும். ஆனா உயில் எழுத வேண்டாம். அவனும் பாயசம் சாப்பிடட்டும்.''

''உங்க இஷ்டம்.''

''இப்ப என் மனசிலே ஒரு புது விதமான நிம்மதி பொறந்திருக்குடா, மூர்த்தி.''

''எப்படி?''

''ராமுவின் சுய ரூபம் தெரிஞ்சுடுத்து. அவனும் இனிமே இந்த வீட்டுப் படி ஏற மாட்டான். மூர்த்தி, ஒரு அதிசயம் பார்த்தாயா? சாவுன்னா துக்கம் வரும். அதுவும் புள்ளைகளின் சாவுன்னா பெருந்துக்கம் வரும். இன்னிக்கு நான் என் ரெண்டு புள்ளைகளைச் சாகக் கொடுத்திருக்கிறேன். என் நெஞ்சிலே நிம்மதியும்



திருப்தியும் பெருகி ஓடறது. ஏன் தெரியுமா? என் ரத்தத்தின் ரத்தம் சாகலே. என் பாட்டனார், இல்லை, முப்பாட்டனார்களில் யாராவது ஒருவர் களவாடல் செய்திருப்பார். அவருடைய ரத்தத்தின் குணம் ராமுவின் நாளங்களில் ஓடறது. ராமுவும் இனிமே எனக்குப் புள்ளை இல்லே.''

''பயமாயிருக்கு, அப்பா.''

''எதுக்குடா?''

''ஏதானும் ஒரு சந்தர்ப்பத்தில என்னையும்...''

''போடா, மடையா! உன்னை நான் சொன்னேன்னா, அன்னிக்கே என் உயிர் போயிடும். போ, நெஞ்சு வறண்டு கெடக்கு. ஒரு அரை தம்ளர் நல்ல காபியாக் கொண்டு வா.''

''எனக்குக்கூடத் தேவை.''

''நான் குடிக்கிறேன்னு, நீயும் அதிகம் குடிக்கறே. அது கெடுதல்.''

''உங்க மனசு பெத்த பிள்ளையாச்சே நான்! உங்க மனசு விரும்பறதையெல்லாம் என் மனசும் விரும்பறது.''

''கோர்ட்டில் ஆர்க்யு பண்ணாம வேலையிலே சேர்ந்திருக்கியே. முட்டாள்!''

''உங்க பாராட்டுக்கு நன்றி, அப்பா.''

மூர்த்தி உள்ளே ஓடினான்.

## 25

**சா**ருவுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகச் சென்றது. மனோஜ் அலுவலக விஷயமாகப் புதுடில்லி சென்றிருந்தான். விளம்பரக் கம்பெனி மதுவைப்

பரோடாவுக்கு அனுப்பியிருந்தது. அவன் என்று திரும்பு வான் என்று கூடத் தெரியவில்லை

அன்று மாலை அவள் வீடு திரும்பவும் சமையற்கார அம்மாள் வேலையை முடித்துவிட்டு வெளியேறவும் சரியாக இருந்தது.

''உள்ளே உங்க சிநேகிதி உட்கார்ந்திருக்காள்.''

மௌனமாகச் சாரு உள்ளே சென்றாள். என்றைக்கு மனோஜ் புதுடில்லி சென்றானோ அன்று முதல் இந்தச் சரஸ்வதியைக் காணோம். இதற்கு முன்பும் சில தடவை சரஸ்வதியின் போக்கைச் சாரு கவனித்திருக்கிறாள். வெளியே தனக்குச் சிநேகிதியாக இருந்து கொண்டு உள்ளூர மனோஜுடன் மனத்தால் உறவாடுகிறாள் என்ற எண்ணம் ஏற்பட்டது.

சரஸ்வதி நல்ல பெண். அழகு இல்லை. இது அவள் குற்றமல்ல. அவள் தகப்பனார் ஒரு சாதாரண நிறுவனத்தில் ஒரு சாதாரணக் குமாஸ்தா. ஏழை. இதுவும் அவர் குற்றம் அல்ல. அவளுக்குத் தம்பிகளும் தங்கைகளும் இருக்கிறார்கள். சொல்லப் போனால் இரண்டு தம்பிகளும் மூன்று தங்கைகளும். இந்த விஷயத்தில் அவளுடைய பெற்றோர் குற்றம் புரிந்திருக்கிறார்கள். பெருக்கத்தைச் சற்றேனும் குறைத்திருந்தால், வறுமையையும் சற்றேனும் குறைத்திருக்கலாம்.

சரஸ்வதி ஹாலில் சோபாவின் கீழே உட்கார்ந்து, முழங்கையை டீப்பாயின் மீது ஊன்றியவளாய் ஒரு பத்திரிகையில் மூழ்கி இருந்தாள்.

சாருவைக் கண்டதும், ''ஏண்டி இவ்வளவு நேரம்?'' என்று கேட்டாள்.

''இதுக்குப் பதில் அப்பறம் சொல்றேன். உன்னை ஏன் அஞ்சு நாளாக் காணோம்?''



''வர முடியலே.''

''மனோஜ் ஊரிலே இருந்திருந்தா வந்திருப்பே இல்லே?''

''என்ன உளர்றே?''

''எனக்கு எல்லாம் தெரியும்,'' என்றாள் சாரு.

''என்ன தெரியும் உனக்கு?''

''முதல்லே டீ சாப்பிடுவோம்.''

''என்னவோ தெரியும்னு சொன்னியே, என்ன தெரியும்? அது முதல்லே தெரிஞ்சாகணும் எனக்கு. அப்புறந்தான் டீயும் காபியும்.''

''மனோஜ் வரட்டும். அப்புறம் சொல்றேன். அவன் என்ன நெனைச்சிருக்கான்னு தெரிஞ்சுட்டா, எல்லாம் எளிதாப் போயிடும்.''

''சாரு!''

''என்னடீ?''

''நீ ஒரு முட்டாள்.''

''அப்படியா? நன்றி.''

''நான் உன் அண்ணாவுடன் பேசறதையும் பழகறதையும் வைத்துக் கொண்டு தப்புக் கணக்குப் போடறே!''

''என் கணக்குத் தப்பானால் நான் ரொம்ப வருத்தப் படுவேன், சரஸ்வதி.''

''அப்ப வருத்தப்படு.''

''அப்ப மனோஜ் மேலே...''

''சீசீ! வாயைக் கழுவு.''

''ஏண்டி, லவ் பண்றது தப்பா?''

''யார் சொன்னா?''

''ஆனா யார் யாரை லவ் பண்றதுன்னு ஒரு நியதி இல்லே ?"

''காதலுக்கும் நியதிக்கும் சம்பந்தம் இல்லே."

''மனோஜ் உனக்கு என்ன சொந்தம் ?"

''தெரிஞ்சதைக் கேட்காதே."

''அப்படின்னா ?"

''தெரியாததைச் சொல்றேன், கேளு."

''என்ன ?"

''மனோஜ் எனக்குக் கூடப் பிறக்காத அண்ணன்."

ஒரு கணம் சாரு அயர்ந்து போனாள்.

''நான் மத்தவங்க கலியாணங்களுக்குத் தான் இருக்கிற ஒரு பட்டுப் புடைவையைக் கட்டிண்டு போவேன். எனக்குக் கலியாணமும் இல்லை, பட்டுப் புடைவையும் கிடையாது."

''என்னடீ பேத்தறே ? பொண்ணாப் பொறந்தால்..."

''கலியாணம் ஆகித்தான் தீரணும்னு கட்டாயம் இல்லே."

''நீ ஏற்கனவே ஒரு முடிவு எடுத்துட்டியா ?"

''ஆமாம். மூணு சகோதரிகள், ரெண்டு சகோதரன். ஒரு ரூம் ஃப்ளாட். கொஞ்ச நாளில் அப்பா ரிடையராகி விடுவார். அதுக்குள்ளே தங்கை தம்பிகளெல்லாம் படிச்சு முடிச்சு வேலைக்குப் போயிட மாட்டா. கடைசித் தங்கை படிச்சு முடிக்கிறதுக்குள்ளே எனக்கு முப்பத்தஞ்சு வயசு ஆயிடும். எதுக்குக் கலியாணம் ?"

சாரு பதில் பேசவில்லை. சமையலறைக்குச் சென்றாள்.

திடீரென்று சரஸ்வதியின் குரல் கேட்டது.

''டீயை மூணு கப்பாப் போடு."



ஓயாலைப் பற்ற வைத்துப் பாலையும், டீத் தண்ணீரையும் கலந்து சுட வைத்தாள். மூன்றாவது கோப்பைக்கு யார் காத்திருக்கிறார்கள் என்று அறிய ஹாலுக்கு வந்தாள்.

மது !

நான்கு நாட்கள். நான்கு யுகங்கள் !

ஆசை தீரப் பார்த்தாள்.

எலுமிச்சம் பழ நிற முகம்.

அடர்ந்த புருவம்.

மண்டின மீசை.

கண்களில் அமைதி, சாந்தம்.

ஒரு கணம் சிலையான அவள், மது இன்னும் தன்னைக் கவனிக்காததை உணர்ந்தாள்.

''சரஸ், உள்ளே பால் வைத்திருக்கிறேன். நீ டீயைக் கவனி. ஹலோ, மிஸ்டர் மது ! எப்ப வந்தீங்க ?"

''நேத்து ராத்திரி."

''ஆபீஸுக்கு...?"

''சித்தப்பா போயிட்டார்."

''என்னிக்கு ?"

''இன்னிக்குக் கார்த்தாலே நான்கு மணிக்கு."

''ஏன் சொல்லலே ? வந்திருப்பேனே !"

''உங்களுக்கு எதுக்குச் சிரமம் குடுக்கணும். மனோஜ் டில்லியிலிருந்து இன்னும் திரும்பலையா ?"

''இல்லை. சித்தி ரொம்ப அழறாளா ?"

''அழாமல் ?"

''பாவம் "

"ஆரைச் சொல்றே? சித்தியையா, இல்லே சித்தப்பாவையா?"

"புரியலே உங்க கேள்வி."

"யாரும் செத்தவனுக்காக அழறதில்லை. தன் இழப்புக் காகத்தான் அழறா. அதனாலேதான் துக்கம் நெலைச்சு நிக்கறதில்லே. புருஷன் போனதிலே, சித்திக்கு ஓர் ஆதரவு போயிட்டது. அது ஓர் இழப்பு. அவளுடைய அழுகை அந்த இழப்பை முன்னிட்டுத்தான் இருக்க முடியும்."

சாருவுக்கு மறுத்துப் பேச வேண்டுமென்று பட்டது. ஆனால் அந்தக் கணமே, தந்தையின் மரணம் ஞாபகத் துக்கு வந்தது. அம்மா அழவே இல்லை. ஏன்! ஒரு பொட்டுக்கூட அவளுடைய கண்கள் உகுக்கவில்லை. ஏன்? ஏன்? நாத்தின் மரணம் அம்மாவுக்கு ஓர் இழப்பாகப் பட வில்லை. இருந்தவரையில் ஆயிரமாயிரமாகக் கொண்டு வந்தார். போனதும் லட்சம் லட்சமாக வந்தது.

யார் யாருடைய ஆத்மாவின் கதியை முன்னிட்டுக் கண் கலங்குகிறார்கள்? சாவு யாரையும் கலக்குவதில்லை. அதன் எதிரொலிகளில்தான் கலங்கிப் போகிறார்கள். சாரு தன்னையே மறந்தாள்.

சரஸ்வதி மூன்று கோப்பைகளில் டீ கொண்டு வந்தாள்.

"எப்படி இருக்கே?" என்று கேட்டான் மது.

"நீங்க இல்லாத ஆபீஸ் வெறிச்சோடறது."

"அப்ப நீ வேலையை ராஜீநாமாப் பண்ணவேண்டியது தான்!" ஒரு வாய் குடித்து விட்டுச் சொல்லிச் சிரித்தான் மது.

"ஏன்?"

"நான் இனிமே வேலைக்கு வரப் போறதில்லே. சித்தப்பா சாகறதற்கு முன்னால் வரம் கேட்கற மாதிரி



ஒண்ணு கேட்டார். நானும் சரின்னேன். பரம்பரை வியாபாரத்தை நிறுத்தக் கூடாதாம். சித்திக்கு ஆதரவா இருக்கணுமாம்."

"இந்த வேலையில் இருந்துண்டே அதைச் செய்ய லாமே?"

"சித்தப்பாவுக்குச் சொந்தமா மூணு ஓட்டல். மாதுங்கா, அந்தேரி, காட்கோபர்னெல்லாம் இருக்கு. அவர் பம்பரம் மாதிரி காரிலே மூணு இடங்களுக்கும் சுத்திண்டே இருப்பார். என்னதான் மானேஜர்னு வச்சா லும் முதலாளியின் நேர் பார்வையிலே நடத்த வேண்டிய தொழில் ஓட்டல் தொழில்."

"நான் ஒரு யோசனை சொல்லலாமா?"

"தாராளமா."

"ஓட்டலை நடத்துங்க. அதே சமயத்தில் இந்த அட்வர் டைஸிங் தொழிலையும் விடாதீங்க."

"எப்படி?"

"நாமே சின்னதா ஒண்ணு ஆரம்பிப்போம்."

"மூலதனம்? சித்தப்பா பணத்தை..."

"அதைப் பத்தி நான் பார்த்துக் கொள்றேன். நீங்க தினசரி ரெண்டு மணி— ரெண்டே மணி நேரம் வந்து அட்வைஸ் பண்ணினால் போதும்."

மது எழுந்தான்.

"என்ன, பதில் கிடையாதா?"

"நீ ஒரு மாயா உலகத்தைச் சிருஷ்டி பண்ணப் பார்க் கிறாய், சாரு."

"எப்படி?"

''நாம ஒரு பெரிய கம்பெனியில் கை நிறையச் சம்பளம் வாங்கறப்போ, நெனைச்சுப் பார்க்கச் சுகமாத்தான் இருக்கு. ஆனா, நாயைத் திங்கற இந்த விளம்பர உலகம் இருக்கே, அதை ஆரம்பிக்கிறது என்பது முட்டாள்தனம்."

''நான் முட்டாளாக இருக்கத் தயார்."

''காரணம் ?"

''நீங்கதான்."

''தொடர முடியாத ஒரு கதைக்கு நீ முதல் அத்தியாயம் எழுதப் பார்க்கிறாய்."

''இல்லை மது. என் கதைக்கு ஒரு முடிவு தேட ஒரு கவிதை எழுதப் பார்க்கிறேன்."

மது சிரித்தான். பிறகு மௌனமாக வெளியேறினான்.

நீண்ட நேரம் இருக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் சாரு தவித்தாள். சரஸ்வதி அவளை எழுப்பினாள்.

''சாரு, நீ சமயம் தெரியாமல் பேசிட்டே..."

''மூர்த்திக்கும் இவனுக்கும் எவ்வளவு வித்தியாசம் !" என்றாள் சாரு.

''எங்கிருந்து எங்கே திடீர்னு தாவறே ?"

''மனசின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு."

''மனசுக்கு வடிவமே கெடையாது சாரு. அடித்தளம், மேல் தளம், மூலை, முடுக்கு எல்லாம் கோட்டைக்குத்தான் உண்டு."

''அதை மனசின் மேல் கட்டப் பார்க்கிறேன் என்று நீ நினைக்கிறே. இல்லே, சரஸ்வதி."

''நெனைக்கவில்லை, நம்பறேன்."

சாரு பதில் சொல்லாமல் காலிக் கோப்பைகளை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.



# 26

ரங்கா சோர்ந்து போனான். அப்பா பண உதவியை மறுத்ததும் அவன் அங்கிருந்து சமாதானமாக வெளியேறி யிருக்க வேண்டும். அதைச் செய்யாமல், பரம்பரைச் சொத்துக்களை அவர் சரியாகப் பங்கீடு செய்யவில்லை என்று குற்றம் சாட்டினான். இது அப்பாவின் நேர்மையைச் சவுக்கால் அடித்து விட்டது. பலன் ? இனித் தம் வீட்டு வாயிற்படியையும் மிதிக்கக் கூடாது என்று வெளியேற்றி விட்டார். அவனுடைய சாஷ்டாங்க நமஸ்காரம் அவனைத் தூக்கிவிடவில்லை

அப்பாவிடம் ஏற்கனவே அவனுக்கு நல்ல பெயர் இல்லை. சின்ன வயதில் எத்தனைக்கு எத்தனை பாசமும் அன்புமாகப் பொழிந்தாரோ அத்தனைக்கும் இப்போது வெறுப்புடன் இருக்கிறார். இதற்கு அடிப்படைக் காரணம் அவனுடைய பலவீனம். மரத்திலிருந்து கிளையை ஒடித்துக் கொண்டு பிரிந்துவிட்ட தவறு. இனி மேல் என்ன செய்ய முடியும் ? 'ஸ்ரீராம ஜயம்' எழுதுவது போல, ஆயிரத்தெட்டுத் தடவை அப்பாவின் பெயரை நாள் தோறும் எழுதினாலும் அவர் மனம் இளகப் போவதில்லை ; பழைய மகனாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

மொத்தத்தில், அப்பா இருந்தும், அவனுக்கு இல்லாதவராகப் போய் விட்டார். இனி அவருடைய உதவி என்றென்றும் கிடைக்காது. அவர் பெயரில் தற்போது இருக்கும் சொத்துக்களில் ஒரு பைசாக்கூட அவருடைய உயிலில் அவனுக்கு இருக்காது.

இனி அவன் என்ன செய்வான் ? எப்படி ஓர் ஐ.ஏ.எஸ்.ஸுக்குத் தன் மகள் மாலுவைக் கலியாணம் செய்து கொடுப்பான் ?

அவனுக்கு மனம் குமுறத் தெரியவில்லை. அழத்தான் தெரிந்தது. அழுகையை அதிகமாக்கச் சொர்ணம் உள்ளேயிருந்து வந்தாள். தன் கணவன், மறுநாள் அப்பாவைச் சந்திக்க வேண்டியவன், அன்றே காரியத்தை முடித்து விட்டான் என்பதை அவள் அறியாள்.

''எப்ப வந்தீர்கள் ?''

ரங்கா ஏறிட்டுப் பார்க்காமல், ''அரை மணி நேரமாச்சி,'' என்றான்.

''ஆபீஸுக்குப் போன் பண்ணினேன். அஞ்சு மணி இருக்கும். இல்லை என்றார்கள்.''

''ஆமாம். இல்லை.''

''சம்பந்தி வீட்டிலிருந்து போன் வந்தது. பொண்ணுக்குக் கார்னெட்டில் நெக்லஸ் போடப் போகிறார்களாம் வெள்ளிக் கிழமை நல்ல நாள். மாலு உடன் வந்து பிடிச்சதைப் பார்த்து வாங்கிக் கொள்ளலாம் என்கிறார்கள் ''

''யார் சம்பந்தி ?'' தன் நினைவை இழந்து ரங்கா கேட்டான்.

''என்ன ? என்ன கேட்டீர்கள் ? யார் சம்பந்தியா ?''

சொர்ணத்தின் குரல் அவனைத் தட்டி எழுப்பியது. சற்றே நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''ஐ.ஏ.எஸ்.ஸின் அப்பா அம்மா நமக்குச் சம்பந்தி இல்லை.''

''ஓ ! கலியாணமாகிறவரை அவர்களைச் சம்பந்தி என்று அழைக்கக்கூடாது, இல்லையா ?''

''மாலுவுக்கு இப்பக் கலியாணம் கெடையாது.''



சொர்ணம் ஆடிப் போகவில்லை. இரு கைகளாலும் சோபாவின் முதுகைப் பிடித்துக் கொண்டு, கணவனைக் கொக்காக நினைத்துச் சுட்டெரிக்க முயன்றாள். கணவன் அக்கினிப் பிழம்பில் குளிக்காததைக் கண்டு ஆவேசம் அடைந்தாள்.

''உங்க கரிநாக்கு இப்ப என்ன சொல்லித்து ? மாலுவுக்கு இப்பக் கலியாணம் கெடையாதுன்னா ?''

''ஆமாம்.''

''இதுபத்தி அப்புறம் வர்றேன், இப்ப மாலு எங்கே ?''

''உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே ! திருவான்மியூரில் இருக்கா.''

''சரி, வரட்டும். அவளுக்கு இப்பக் கலியாணம் கெடையாதுன்னு எதை வச்சிண்டு சொன்னீர்கள் ?''

''என் அப்பாவை...''

''போயிருந்தீர்களா ?''

''ஆமாம் ''

''என்ன சொன்னார் ?''

''இனிமே நான் அவர் பிள்ளை இல்லையாம். செத்தால் கொள்ளி போடவும் கூடாதாம்.''

''கொள்ளியை யார் போட்டா என்ன ? பொணம் என்ன கண்ணைத் தெறந்து பார்க்கவா போறது ?'' உம்,... அப்புறம் என்ன சொன்னார் ?''

''மாலு கலியாணத்துக்கு அவளுக்குக் கலியாணப் பரிசாச் சாமான்களாப் பத்தாயிரத்துக்குத் தருவாராம். அதுவும் பாட்டனார் என்றமுறையில். மத்தப்படி சல்லிக் காசு பெயராதாம்.''

''இதைக் கேட்டுண்டு அப்படியே ஊமைக் கோட்டான் மாதிரி நின்னேளா ?''

''நின்னேன். ஆனா அது ஊமைக் கோட்டான் மாதிரியான்னு தெரியலை.''

''என்ன, ஜோக் அடிக்கிறீர்களா ? உங்களாலே வேறு எப்படி நிக்க முடியும் ?''

''சொர்ணம், உள்ளே போ !''

முதன் முதலாக ரங்கா கோபமடைந்தான். இதுவரையில் அவன் யாரிடமும் கோபித்துக் கொண்டதாகச் சரித்திரம் கிடையாது. அதுவும் சொர்ணத்திடம் கோபம் என்னும் காற்று லேசாகக்கூட வீசியதில்லை.

அவனுடைய தொனி, கோபத்தை அடைத்துக் கொண்டு புறப்பட்ட குரல், சொர்ணத்தை ஆட்டி வைத்தது. அவளுக்கு முதலில் ஏற்பட்ட உணர்ச்சி வியப்பும் ஆச்சரியமுமே. அப்பா வீட்டில் என்னவோ பெரிதாக நடந்திருக்கிறது. அதன் விளைவுதான் அவனுடைய இந்த என்றுமில்லாத கோபம்.

''என்ன சொன்னீர்கள் ? உள்ளே போன்னா ?''

''ஆமாம் ; உடனே போ.''

''போகாட்டா...?''

''சொர்ணம் !''

''உஸ். கத்தாதீங்கோ. உங்களுக்கு மேலே என்னாலே கத்த முடியும். உங்கப்பா பண உதவி செய்யலேன்னா, நம்முடைய ஐ.ஏ.எஸ். மாப்பிள்ளை கை நழுவிப் போய் விடுவானோ ?''

''என் வரையில் அப்படித்தான் படறது.''

''இதுக்கெல்லாம் யார் காரணம், தெரியுமா ? உங்கப்பா மகாராஜ ராஜஸ்ரீ அனந்தராமையர் இல்-



அவருடைய செல்லப் பிள்ளை மூர்த்தி. கொஞ்சம் கொஞ்சமா, கொஞ்சம் கொஞ்சமா, நாள் கணக்கிலே, மாசக் கணக்கிலே, வருஷக் கணக்கிலே அவர் மனசில் விஷத்தை ஏத்தியிருக்கான், யார் கண்டார்கள் ? மந்திரிச்சு மருந்துகூட வச்சிருப்பான். அவனும் அவனுடைய இளிப்பும் ! அவனை, அவனை...''

சொர்ணத்துக்கு மூச்சு வாங்கியது.

முதல் தடவையாக ரங்கா சிரித்தான்.

''சிரிப்பா ?''

'பின் என்ன ? மூர்த்திக்கும் விஷத்துக்கும் ரொம்ப தூரம். அவன் இல்லாவிட்டால் என்னென்ன நடந்திருக்குமோ ? அப்பாவுக்கு ஆவேசம் வரும்படியா நான் நடந்து கொண்டேன். ஆனா மூர்த்திதான் தக்க சமயத்திலே வந்து காப்பாத்தினான்.''

''எல்லாம் வேஷம் ! பாசாங்கு ! உடம்பெல்லாம் விஷம் ! அது சரி ; தக்க சமயத்திலே அவன் வந்து காப்பாத்தும்படியா என்ன நடந்தது ?''

''அப்பாதான் குடும்பச் சொத்தைப் பாகப் பிரிவினை செஞ்சு கொடுத்துட்டார், இல்லையா ?''

''ஆமாம்.''

''அந்தப் பிரிவினை சரியா இல்லை. இன்னும் வர வேண்டியது இருக்குன்னு சொன்னேன்.''

''யாரு ? நீங்களா ?''

''ஆமாம், நான்தான்.''

''பரவாயில்லையே ! குழந்தை வளர்ந்துடுத்து. அவ்வளவு தைரியம் வந்திருக்கே !''

''அதன் பலன் என்ன ? அப்பாவுக்கு நான் ஒரு வேத்து மனுஷன் ஆயிட்டேன். வீட்டுப் படியை மிதிக்கக் கூடாதுன்னு சொல்லிட்டார்.''

''இதுவும் மூர்த்தியின் முன்னேற்பாடா இருக்கும். இப்ப இருக்கிற எல்லாச் சொத்தையும் தான் ஒருவனே தட்டிக் கொண்டு போகணும்னு அவன் பார்க்கிறான். இப்போதைய நிலவரத்தில் கொறைஞ்சது பதினஞ்சு லட்சமாவது தேறும். இன்னும் ஒண்ணு பார்த்தேளா ? மூர்த்தி தனக்குக் கெடைச்ச சொத்தைத் தனியா வச்சுக்கலை. அப்பா சொத்தோடு இணைச்சு வைச்சிருக்கான்.''

''நான் ஒரு மடையன் ''

''நான் சொன்னப்புறந்தான் உங்களுக்கு ஞானோதயம் வந்ததா ? எனக்கு ஏற்கனவே தெரியும்.''

''என்ன ? நான் மடையன்னுதானே ?''

''அதை விடுங்கோ. மூர்த்தியின் பேராசைக்கு வாருங்கோ ''

''நான் அப்பா கிட்டே போகாம, மூர்த்தியிடம் தேரடியா, ரகசியமாப் பண உதவி கேட்டிருக்கணும். அவன் எனக்கும் உனக்குமாக இல்லாமல் போனாலும், மாலுவை உத்தேசித்து நிச்சயமாச் செஞ்சிருப்பான்.''

''அதை இப்பப் பிரயோகம் பண்ணிப் பாருங்களேன்.''

''வேண்டாம். மாலுவை அங்கே அஞ்சாறு நாள் அனுப்பி வைக்கச் சொல்லியிருக்கான்.''

''அவள் எங்கே ?''

''வழியிலே சிநேகிதி வீட்டில் இறங்கினாள். வர்ற நேரந்தான் ''

''எதுக்கு இவள் அங்கே அஞ்சாறு நாள் இருக்கணுமாம் ? உங்க பாலக்காட்டு எரிசேரியையும் காளன்



ஓலனையும் திங்கவா ? எங்கப்பா போயும் போயும் பாலக்காட்டுக்காரர் வீட்டிலே கொண்டு போய்த் தள்ளினாரே !''

''அன்னிக்கு, பாலக்காட்டுப் பணமும் பங்களாவும் மன்னார்குடிக்குப் பிடிச்சிருந்தது. இன்னமும் ஒண்ணும் குடி முழுகி விடல்லை. டைவோர்ஸ் பண்ணிக்குவோம். உங்க ஊர்ப் பக்கமா விழுந்து பார் ''

''மாலு எதுக்கு அங்கே அஞ்சாறு நாள் இருக்கணுமாம் ? அதுக்குப் பதில் சொல்லுங்கோ.''

''நீயேதான் என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்துண்டியே !''

''சரி, சரி, எதுக்காம் ?''

''அவ அஞ்சாறு நாள் அங்கே இருந்தா அப்பா மனசு குளிரத் தோதா இருக்கலாமாம்.''

''நம்ம மாலு என்ன, உங்க அப்பா நெஞ்சுக்கு ஏர்கண்டிஷனரா ? உங்க அப்பாவுக்கு என்ன வியாதி வேணும்னாலும் வரும். ஆனா 'ஹார்ட் அட்டாக்' வரவே வராது. ஏன்னா அது இல்லை. அவருடைய மனசாவது குளிரப் போவதாவது ! இந்த மூர்த்தி நன்னாத்தான் எல்லாருக்கும் சொக்குப் பொடி போடறான்.''

ரங்கா பதில் பேசவில்லை.

வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது.

''அதோ ! ஏர்கண்டிஷனரே வந்தாச்சு. வாடி, மாலு. உன் தாத்தா வீட்டிலே டிபன் ரொம்பப் பலம் போல இருக்கு. அதுதான் ஆடி அசைஞ்சுண்டு வர்றே.''

''ஏம்ப்பா, நீ கல்தோசை சாப்பிடலையா ? அம்மா, ராஜம்மா கத்திரிக்காய்க் கொத்ஸு பண்ணியிருந்தா. எப்படி இருந்தது தெரியுமா ?''

''சரிதான் போறும்டீ. ஆமாம், நீ எதுக்கு அஞ்சாறு நாள் அங்கே போய் இருக்கப் போறே?''

''அஞ்சாறு நாள் இல்லையே!''

''பின்னே?''

''ஒரு வாரம்.''

''எதுக்கு?''

''ஏன், அப்பா சொல்லலியா? ஏம்ப்பா, சொல்லலியா?''

''அவர் கெடக்கட்டும். உன்னைக் கேட்கிறேன், சொல்லு.''

''கலியாணமாகிப் போயிட்டா, பொறந்த வீட்டுக்கு வர்றதே கஷ்டம். பாட்டன் பாட்டி வீட்டுக்குப் போறது துர்லபம். அதுதான் இப்பப் போய்... ஏம்ப்பா, சரி தானே?''

''நீ எங்கேயும் போக வேண்டாம். வர்ற வெள்ளிக் கிழமை, உன்னை நகைக் கடைக்குக் கூட்டிண்டு போறார்களாம். கார்னெட் நெக்லஸ் வாங்கிப் போடப் போறார்களாம். நீ போய் உன் இஷ்டத்துக்கு ஸெலக்ட் பண்ணணும்.''

''வெள்ளிக் கிழமைதானே?''

''ஆமாம்.''

''மூர்த்திச் சித்தப்பா கிட்டே சொன்னா, கார்லே கொண்டு போய் விடுவான்.''

''அவனுடைய சங்காத்தமே நமக்கு வேண்டாம். நீ இனிமே அங்கே போக வேண்டாம்.''

''ஏன்?''

''எனக்குப் பிடிக்கலை.''



''எனக்குப் பிடிக்கறதே!''

''நீ பெண். நான் அம்மா. நான் சொன்னதைத் தான் நீ செய்யணும், கேட்கணும்.''

''இதோ இந்த அப்பாதானே நம்ம குடும்பத் தலைவர்? உன் புருஷர். நீ அவர் சொல்றபடியெல்லாம் கேட்கிறாயா?''

''இது அதிகப் பிரசங்கித்தனம்!''

''ஓ! ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு நியாயமோ? நாளைக்கு எனக்குக் கல்யாணமாகி, புருஷன் கிட்டே, நீ இப்படி அப்பா கிட்டே பேசற மாதிரிப் பேசினா, என்ன நடக்கும் தெரியுமா? கார்னெட் நெக்லஸைக் கழற்றி எடுத்துண்டு, வெறும் மஞ்சள் சரட்டோடே திருப்பி அனுப்புவா!''

''அப்ப உனக்குச் சாமர்த்தியம் போறாதுன்னு அர்த்தம்.''

''உன் சாமர்த்தியம் அதிகமாப் போயிடுத்து அம்மா... அப்பா, நாளைக்கு ஆபீஸ் போற வழியிலே என்னை இறக்கி விடுங்கள்''

''உன் அப்பா ஆபீஸ் போற வழியிலே திருவான்மியூர் இல்லை.''

''சரி, எப்படியோ போய்க் கொள்றேன்''

''என்னை மீறிண்டா?''

''உன்னை என்ன? உன் தாத்தாவையே மீறிண்டு போவேன். உன் அதிகாரத்தை அப்பாவோடு நிறுத்திக் கொள்! இந்த வீட்டிலே உன்னாலே வேலைக்காரி கிட்டே அதிகாரம் செலுத்த முடியலே. ஏன்னா, அவ பாதி தேச்ச பாத்திரத்தை அப்படியே போட்டுட்டுப்

போயிடுவா. அப்பப்பா! எனக்குத் தெரிஞ்சு முப்பது வேலைக்காரிகள் மாறியாச்சு."

மாலு நகர்ந்தாள்.

"எங்கேடி போறே?"

"கார்த்தாலே முதல் பஸ்ஸைப் பிடிச்சுத் திருவான்மியூர் போகணும் துணிமணிகளைப் பொட்டியில் வைக்கப் போறேன்."

"ஒரு வாய் கொட்டிண்டு போ!"

"வயிறெல்லாம் கல் தோசை. நான் அப்பறமா ஒரு தம்ளர் மோர் குடிச்சுக்கறேன்."

மாலு மாடி ஏறினாள். ரங்கா அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

இனிச் சண்டை போட யாரும் இல்லை என்று சொர்ணம் நகர்ந்தாள்.

## 27

ஜட்ஜ் வீட்டில் டெலிபோன் அடித்தது. மூர்த்தி காத்துக் கொண்டிருந்தான். அவன் ஏற்கனவே ஒரு வாய்ப் பாயசம் ருசி பார்த்தாகி விட்டது. பச்சைக் கல்பூரத்தை அளவுக்கு மேல் கொஞ்சம் போட்டாலும் கசப்பு ஏறிவிடும். ராஜம்மாவின் கைக்கு ஏதோ மந்திர சக்தி இருக்கிறது. குங்குமப் பூவை முதலில் பாலில் கரைத்துவிட்டுப் பிறகு பாயசத்துடன் கலந்திருக்கிறாள். திராட்சையையும் முந்திரியையும் பொன்னிறமாக வறுத்துக் கொட்டியிருக்கிறாள். மொத்தத்தில் பாயசம் 'ஏ க்ளாஸ்.'



"ஹலோ!" சுசிலாவின் குரல்.

"மூர்த்தி பேசறேன். ஜானாவைப் பேசச் சொல்லுங்க."

"இப்பத்தானே ஜானா அங்கிருந்து வந்தாள்?"

"ஆமாம். அப்புறம் இன்னொரு விஷயம்."

"என்ன?"

"நீங்க, ஜட்ஜ், ஜானா எல்லாரும் இப்போ எங்க வீட்டுக்கு வர்றீங்க."

21203
37779.60

"என்ன விசேஷம்?"

"அப்பா வரச் சொல்லிச் சொன்னார்."

"என்ன சமாசாரம்? கல்யாண விஷயமாக ஏதானும்?"

சுசிலா முடிப்பதற்குள் இடைமறிப்பதை உணர்ந்தான் மூர்த்தி.

"ஹலோ மூர்த்தி, ஜானா இங்கே இருக்கிறேன்."

"ஹாய், ஜானா! அப்பா திடீர்னு மாறிட்டார். உன் பெயர் இனிமே ஜானா இல்லை. முத்து. என் முத்து, அதாவது நன் முத்து."

"என்ன உளர்றேள்?"

"அப்பா வச்ச பேரு. நீ ஒரு நன் முத்தாம். நீங்க எல்லாரும் இப்ப உடனே பெட்ரோல் விலையைப் பாராமே, அரைக் கிலோ மீட்டர் தூரம் கார்லே வர்றீங்க."

"எதுக்கு?"

"பாயசம்."

மூர்த்தி 'டக்'கென்று டெலிபோனை வைத்தான்; நகர்ந்தான்.

வாசலில் அட்வகேட் கிருஷ்ணன் படி ஏறி வருவது தெரிந்தது. எதிர் கொண்டு அழைக்கப் போனான் மூர்த்தி.

"என்ன மூர்த்தி? என்ன, திடீர்னு அப்பா வரச் சொன்னார்?"

"பாயசம் சாப்பிட!" மூர்த்தி சிரித்தான்.

கிருஷ்ணனுக்குப் புரியவில்லை. ஆனால் அவனும் சிரித்தான்.

"யார்டா? அட்வகேட் கிருஷ்ணனா?"

அனந்தராமனுடைய குரல் கேட்டது.

"ஆமாம்ப்பா!"

"என்னடா, திண்ணையிலிருந்தே பதில்? இங்கே வாங்கடா, ரெண்டு பேரும்."

மூர்த்தி முன் செல்ல, கிருஷ்ணன் பின் தொடர, இருவரும் ஹாலுக்கு வந்தார்கள்.

"ஜட்ஜ் வீட்டுக்குப் போன் பண்ணியாச்சு, அப்பா."

"சரி, டேய் கிருஷ்ணா, ஓர் உயில் எழுதலாம்னு உன்னை வரச் சொன்னேன். கடைசி நிமிஷத்திலே இந்தப் பயல் குறுக்கே வந்து கெடுத்தான்."

"என்னிக்கிருந்தாலும் ஒரு நாள் எழுத வேண்டியது தானே?" என்றான் கிருஷ்ணன்.

"ஆனா, சாயங்காலம் இருந்த மன நிலையில் நான் உயில் எழுதியிருந்தா, என் பேரக்குழந்தைகளுக்குச் சல்லிக் காசு கூடக் கெடைச்சிருக்காது. என் ரெண்டு பிள்ளைகளின் லட்சணத்தில் எல்லாம் திசை தெரியாமே தலை



விரிச்சுண்டு ஓடும். இதப் புரிஞ்சுண்டுதான் இவன் என்னைத் தடுத்திருக்கான். எங்கே எல்லாத்தையும் தன் பெயருக்கே எழுதி விடுவேனோன்னு உதறல்."

"அப்படித்தான் எழுதலாம்னு இருந்தீர்களா, ஸார்?"

"பின்னே? எனக்கு அப்புறம் எல்லாத்தையும் இவன் தான் அள்ளிண்டு போகணும். என் மனசுக்கு அதுதான் நியாயமாப் படறது. தினமும் என் போட்டோவைப் பார்த்து, ஒரு தடவையாவது நெனைச்சுக்கற பிள்ளை இவன் ஒருத்தன் தானே?"

"அப்பா, எனக்குப் பிடிக்கலை!" என்றான் மூர்த்தி.

"என்னடா?"

"என்னை வச்சுண்டே என்னைப் புகழறது. என்னை மத்தவர் புகழ்ந்தாலே எனக்குப் பிடிக்காது, அது உண்மையா இருந்தாக்கூட."

"பார்த்தாயா, கிருஷ்ணா! பயல் எப்படிப் பேசறான்னு? மனசிலே பெரிய சீஸர்னு நெனைப்பு. காஷியஸ் என்ன சொன்னான் தெரியுமா?"

"கிருஷ்ணனுக்கு லா தான் தெரியும்ப்பா. ஹிஸ்டரி, ஜியாகரபி, ஷேக்ஸ்பியர் இதெல்லாம் தெரியாது. அவரே ஒரு தடவை சொல்லி யிருக்கார்."

கிருஷ்ணனுக்கு, உண்மையிலே, காஷியஸ் என்ன சொன்னானென்று தெரியாது. மூர்த்தியிடம் தனியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தான். நினைப்பினூடே, "அப்ப நான் வந்தது வியர்த்தம்!" என்றான்.

"உனக்கு அப்படித் தோணினா, ஒரு ட்ராப்ட் உயில் எழுதி விடு. வீடு, தோட்டம், நெலம், ரொக்கம் எல்லாம் இவனுக்கு. பெத்த அம்மாவைக் கடைசி வரையில்

பார்த்துக் கொள்ளணும். இது தேவை இல்லாத நிபந்தனை. இருந்தாலும் எழுத்தில் ஊர்ஜிதப் படுத்துவோம். அப்புறம் கலியாணமாகாத மூணு பேத்திகளுக்கு முப்பது முப்பது ரூபாய். அது டெபாஸிட்லே இருக்கும். வட்டியோட சேர்ந்து கலியாண சமயத்திலே கொடுக்கணும். நாலு பேரன்களுக்குப் பத்துப் பத்து ரூபாய். மனோஜ் ஒருத்தன்தான் மேஜர். நான் போனதும் கிடைக்கும். மத்ததுகளெல்லாம் மேஜர் ஆகிற வரைக்கும் மூர்த்தி பொறுப்பு வகிப்பான். அப்புறம்..."

"ரங்கா, ராமு ?" என்று இழுத்தான், கிருஷ்ணன்.

"யார்டா மூர்த்தி, இவங்க ரெண்டு பேரும் ?"

கிருஷ்ணன் புரிந்து கொண்டான். மேற்கொண்டு பேசவில்லை.

"அப்பறம், ராஜம்மா பேரில் ஒரு பத்து என்னிக்கு உடம்பாலே உழைக்க முடியலைன்னு படறதோ அன்னிக்கு அவ வெளியேறலாம். வருஷத்துக்கு ஆயிரம் வட்டி வரும். அவளுக்கு அது போறும் "

"அப்பா !"

"என்னடா ?"

"இன்னிக்கு ராஜம்மா வச்சிருக்கிற பாயசத்தை நீங்க ருசி பார்த்திருந்தீங்கன்னா, பத்துக் கொடுக்க மாட்டீர்கள் !"

"ஏன், அவ்வளவு ருசி கேடா ?"

"இருபது கொடுப்பீர்கள் !"

"சரி, சரி. ருசிக்கு ஏத்தபடி அவளுக்கு எழுதி வைக்கிறதுன்னு வந்தா, உனக்குக் காலிப் பாத்திரங்கதான் மிஞ்சும் என்னடா கிருஷ்ணா, எல்லாத்தையும் நோட் பண்ணிண்டு. ஒரு வில் தயார்ப் பண்ணு. ஒரு வாரம் பத்து நாள்னு



இழுத்தடிக்காதே. என் சொத்து விவரந்தான் உங்கிட்டேயே இருக்கே."

"மூணு நாள் !" என்றான் கிருஷ்ணன்.

"டேய், ஜட்ஜ் வந்தாச்சு. அம்மாவைக் கூப்பிடு," என்றார் அனந்தராமன்.

"சீதா ?"

"அவ அங்கேயே இருக்கட்டும். நம்ம வீட்டு மனுஷாள் மட்டும் போறும். என்ன பார்க்கிறே ? இவர்களெல்லாம் நம்ம விருந்தாளிகள். வா, சதானந்தம்! வா, சுசீலா! என்ன ஜானா, சாயங்காலம் வந்திருந்தாயாமே ? என் மூஞ்சியைப் பார்க்கப் பிடிக்காமல் போயிட்டியோ !"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை, மாமா."

"என் மனநிலை சரியா இல்லைன்னு, உன்னை இவன் வாசல்லேயே நிறுத்திப் பேசி அனுப்பியிருக்கான். ஒண்ணு சொல்றேன், கேளு நான் எந்த மன நிலையில் இருந்தாலும், தாராளமா என் பக்கத்திலே வரலாம். ஏன்னா என் மனசைச் சரியாப் புரிஞ்சுண்டிருக்கிற ரெண்டு பேர்லே நீ ஒருத்தி."

"இன்னொருத்தன் யார்னு நான் சொல்லித்தான் நீ தெரிஞ்சுக்கணும்ங்கற அவசியம் இல்லை !" என்றான் மூர்த்தி.

கோமதி வந்தாள். சுசீலா அவளுக்கு நமஸ்காரம் செய்தாள்.

"உனக்கு இது ஒரு பழக்கமாப் போயிடுத்து. எப்ப வந்தாலும் விழுந்து நமஸ்காரம் பண்ணி, என்னைச் சங்கடப் படுத்தறே !" என்றாள் கோமதி.

சுசீலா உள்ளூரச் சிரித்துக் கொண்டாள். பிறர் விழுந்து சேவித்தால் கோமதிக்கு நிரம்பப் பிடிக்கும்.

கோமதியிடம் எந்தத் தயவையும் அவள் எதிர்பார்க்கவில்லை. தன் பெண்ணுக்கு மாஜி கவர்னரின் பிள்ளையைப் பார்க்கிறாள். இருந்தாலும் ஒரு நமஸ்காரத்தால் என்ன குறைந்துவிடப் போகிறது?

ஓரிரு நிமிஷம் திடீர் என்று காரண காரியமில்லாமல் அமைதி நிலவியது. இந்த அமைதி அனந்தராமனுக்கு இம்சையாக இருந்திருக்க வேண்டும். பேசினார்.

''சதானந்தம், இத்தனை நாளா நான் பிடி கொடுத்துப் பேசாத பேச்சை நான் இப்பப் பேசப் போறேன். எனக்கு மூணு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் ஒருத்தன் தான் என்னைப் பொறுத்தவரையில் உசிரோடு இருக்கான். அவன் யாருன்னு உனக்குத் தெரியும். அவனுக்கு உன் பெண்ணை வாங்கிக்கலாம்னு ஆசைப்படறேன். என்ன சொல்றே?"

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஜானா தன்னை மறந்தாள். மூர்த்தி வியந்தான். கோமதி சாருவை நினைத்து மனம் குழம்பினாள். சதானந்தம் திருப்தியில் நிறைவு பெற்றார். சுசீலா மட்டும் எந்த விதமான உணர்ச்சிக்கும் தன்னைப் பறி கொடுக்கவில்லை.

''என்ன இப்படி ஒரு திடீர் முடிவு?" என்று அவள் கேட்டாள்.

''மனசுக்குள்ளே ரொம்ப நாளா ஊறப் போட்டிருந்தேன். நேத்து வரைக்கும் ஜானாவை என் மனசு ஒரு மருமகளா ஏத்துக்கலை. என்னவோ திடீர்னு தோணித்து; என் வீட்டுக்கு அவதான் உண்மையான குடும்ப ஓட்டத்தோடு இழைஞ்சோடற மருமகளா இருக்க முடியும்னு தோணித்து. இப்ப என் முடிவு ஒரு திடீர் முடிவு என்கிறதாலே, உங்களுக்குத் திருப்தி இல்லை என்ற எண்ணமில்லையே?"

''எங்க பெண் ஜானா கொடுத்து வைச்சிருக்கிறாள்!" என்றார் ஜட்ஜ் சதானந்தம்.



''நாம எல்லாத்தையும் நன்னா யோசிச்சுப் பார்க்கணும், இல்லையா?" என்று கேட்ட சுசீலா, ''நீங்க எங்க ஜானாவை உங்க மனசிலே ஊறப் போட்டுப் பார்த்த மாதிரி நாங்களும் எங்க மனசிலே..." என்று இழுத்தாள்.

''நியாயந்தான். நீங்க உங்க மனசிலே என் பிள்ளை மூர்த்தியை ஊறப் போட்டு நன்னா அரைச்சுப் பாருங்கோ. திருப்தின்னு தோணினாச் சொல்லி அனுப்புங்கோ," என்றார் அனந்தராமன்.

கோமதி வாயைத் திறக்கவில்லை. சுசீலா எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறாள் என்பதை உணர்ந்தான் மூர்த்தி.

தன் வாழ்க்கைக்குத் தன் தாயே முட்டுக்கட்டை போடத் தயாராகி விட்டாள் என்று நினைத்தாள் ஜானா. அவளுக்குப் பொறுக்கவில்லை. வீட்டுக்குப் போன பிறகு, அம்மாவுடன் ஒரு மல்யுத்தம் தொடங்கித் தன் மனத்தைத் திறந்து காட்டுவதை விட, இப்போதே பேசித் தீர்த்து விடுவது சிறந்தது என்று அவளுக்குத் தோன்றியது. அவள் தன் தகப்பனாரை நோக்கிப் பேசினாள்.

''அப்பா, என் மனசு என்னன்னு உங்களுக்குத் தெரியும். ஒண்ணு, நான் மிஸஸ் மூர்த்தி; இல்லே என்னென்னிக்கும் மிஸ் ஜானகி, அட்வகேட். இதை நம்ம அம்மா புரிஞ்சுக்கலைங்கறது பரிதாபத்துக்குரிய விஷயம். நாம காத்துண்டிருந்த தெல்லாம், இவரோட முடிவான அபிப்பிராயத்துக்குத்தான். நடுவிலே இந்த வீட்டிலே சில நடக்கக் கூடாததெல்லாம் நடந்து விட்டது. அதனாலே நாம காத்துக் கொண்டிருக்க வேண்டியதாச்சு. நம்ம அம்மா எதை மனசிலே வச்சுண்டு பேசறாளனு எனக்குத் தெரியும். உங்களுக்கும் தெரியும். ஆனா இவர்களுக்கெல்லாம் தெரியாது. அம்மா ஒரு மாஜி கவர்னர் வீட்டுப் பிள்ளையை என் கழுத்தில் கட்டப் பார்க்கிறாள். அவ போகாத ஊருக்குப் புறப்படுகிறாள்."

சுசிலா அயர்ந்து போகவில்லை; நிதானத்துடன் பதிலளித்தாள்.

"நான் வேறு இடத்தில் வரன் பார்ப்பதில் தப்பு இருப்பதாப் படல்லை. இத்தனை நாளா மூர்த்திக்குப் பேத்தி சாருவை வாங்கிக்கணும்னு மூர்த்தியோட அம்மா அப்பா ஆசைப்படலையா?"

"உண்மைதான்!" என்றாள் கோமதி.

அனந்தராமன் தொடர்ந்தார்.

"இல்லேன்னு சொல்லலை. ஆனா நாங்க சாருவை மூர்த்தி மீது திணிச்சுப் பார்த்தோம். மூர்த்தியின் மனசு எங்க வழிக்கு வரும்னு எதிர்பார்த்தோம். சாரு, மூர்த்திக்காக ஒரு வாய்ப்பு இருந்தும், அவ இங்கே வரவில்லை! பாம்பேயிலேயே தங்கி விட்டாள். அவள் உள்ளூர என்ன ஆசைப்பட்டிருந்தாலும் அந்த ஆசை நிறைவேறாதுன்னு மூர்த்தி தெரிஞ்சோ தெரியாமலோ அவளுக்கு உணர்த்தியிருக்க வேணும். எங்களுக்கு என்னிக்குமே ஜானான்னா ஒரு தனி வாஞ்சை உண்டு. ஆனா மாட்டுப் பொண்ணா எண்ணிப் பார்க்கலை. இப்ப எண்ணி முடிவு பண்ணிட்டோம் என்பதால் இத்தனை நாள் உதாசீனமா இருந்தோம் என்ற அர்த்தம் இல்லை."

"எங்களுக்கு ஜானா ஒரே பெண்."— சுசிலா.

"எங்களுக்கு இப்போ மூர்த்தி ஒரே பிள்ளை."

"மாப்பிள்ளையை வீட்டோட வச்சுக்கணும்ங்கற ஆசை ரொம்ப நாளா எனக்கு உண்டு."

"மாப்பிள்ளை மாமனார் வீட்டிலேயே வாழ ஆரம்பிச்சான்னா, அவன் மாடு மேய்க்கத்தான் லாயக்கு. இது என் கருத்து!" என்றார் அனந்தராமன். பிறகு தொடர்ந்து, "என் மூச்சு இருக்கிறவரை என் பிள்ளை என்னுடன்தான் இருப்பான். என்னடா மூர்த்தி?" என்றார்.



"ஆமாம்," என்று தலை அசைத்த மூர்த்தி, "ஜானா கூடத் தன் அம்மாவின் அபிலாஷைக்கு இடம் கொடுக்கறதாத் தெரியவில்லை!" என்றான்.

"மாட்டேன்!" என்றாள் ஜானா.

"சுசிலா, உன் வீடும் எங்க வீடும் என்ன, தொலை தூரத்தில் இருக்கா? இல்லே, வெவ்வேறு ஊர்களிலே இருக்கா? எப்ப வேணும்னாலும் யார் வேணும்னாலும் வந்து போய்க் கொள்ளலாமே!" என்றாள் கோமதி.

"ஒரு நல்ல நாளாப் பார்த்துப் பாக்கு வெத்தலை மாத்திக் கொள்ளுவோம்!" என்றார் சதானந்தம். பிறகு சிரித்துக் கொண்டே, "என் மாப்பிள்ளை- ஒரே மாப்பிள்ளை- மாடு மேய்க்கிற மாப்பிள்ளையாக இருக்க மாட்டான்!" என்றார்.

அனந்தராமன் ராஜம்மாவை அழைத்தார்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த அட்வகேட் கிருஷ்ணன் எழுந்து, "நான் போய்ப் பாயசம் கொண்டு வர்றேன்," என்றார்.

"நானும் உதவி செய்கிறேன்!" என்று ஜானாவும் எழுந்தாள்.

"நீயும் போயேன்டா!" என்றார் அனந்தராமன், மூர்த்தியைப் பார்த்து.

"சுசிலா ஏதோ சொல்ல முடியாம, மெல்ல முடியாம அவஸ்தைப் படறா!" என்றாள் கோமதி.

"அதைப் பொருட்படுத்த வேண்டாம். ஜானாவுக்கு எதிரா அவள் முடிவு எடுக்க மாட்டாள். அப்படி எடுத்தா, அப்புறம் மாடு மேய்க்கிறவன் கூட மாப்பிள்ளையா வர மாட்டான்!" என்றார் ஜட்ஜ்.

சுசிலா உள்ளூரப் பற்களைக் கடித்துக் கொண்டாள்; ஏன் வந்தோம் என்று தன்னையே நொந்து கொண்டாள்.

பாயசம் வந்தது.

மரியாதைக்காக ஒரு வாய் குடித்து விட்டுத் தம்ளரை வைக்கலாம் என்று நினைத்த சுசீலா, கடைசியில் தம்ளரை டீப்பாய் மீது வைத்த போது அது காலியாக இருந்தது.

# 28

அனந்தராமன் புதுத் தெம்புடன் மிளிர்ந்தார். திடீரென அவருடைய குடும்பம் சின்னஞ் சிறிதாகப் போய் விட்டதான உணர்வு அவருக்குத் திருப்தியை அளித்தது. இனிமேல் அவர், மனைவி கோமதி, பிள்ளை மூர்த்தி மட்டுந்தான். கொள்ளி போட்டு விட்டு எள்ளையும் அரிசியையும் கலந்து கொட்ட வேண்டிய ரங்காவை அவர் இனிமேல் முகாலோபனம் செய்ய மாட்டார். பாசத்தை மீறிய பண வெறிக்கு அவன் வந்து விட்டான். பணக்கார அப்பன் என்றால் பிள்ளைகள் எப்போதும் கை கால் பிடிக்கக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பது உலக ரீதியான பேச்சாக இருப்பினும், சில வீடுகளில் பிள்ளைகள் பாசத்தைப் பொய்ம்மையாகக் கூடக் காட்டாமல் ரங்காவைப் போல நடந்து கொள்ளுகிறார்கள். அந்த மாதிரிப் பிள்ளைகள் அவருக்குத் தேவை இல்லை.

அடுத்தவன் ராமு!

அவனைப் பற்றி நினைக்கவே மனம் கூசியது இத்தனை ஆண்டுகளாக அவன் ஒரு போலி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஒரு தனி மனிதனை ஏமாற்றினால் பிராயச்சித்தம் உண்டு; மன்னிப்புக் கேட்டு விடலாம். ஆனால் ஒரு நிறுவனத்தை, சமூகத்தை, சர்க்காரை ஏமாற்றினவன் என்ன பிராயச்சித்தம் செய்வான்? செய்ய முடியும்? அவன் தண்டனை பெற்றுத் தான் திருந்த வேண்டும். சர்க்கார் என்பது அவரைப் பொறுத்தவரை மக்களின் சொத்து. அந்தச் சொத்தைக் கொள்ளை அடிக்கிறவன் சாதாரணக் கயவன் அல்ல; திருடன் அல்ல; இரத்தத்தைக் குடிக்கிற அசுரன். அசுரர்கள் சமூக வீதியில் நடமாடக் கூடாது.



மூர்த்தியைப் பற்றி அவர் மனம் சிந்திக்கவில்லை. நாளைக்கு அவனும் மாறி விடுவான்; மாறி விடக் கூடும் என்பது போன்ற எண்ணங்களே அவர் மனத்தில் எழவில்லை.

அவர் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, இரு கைகளையும் கோத்துப் பின்னி, பின் தலையில் கட்டிக் கொண்டே வெட்ட வெளியை ஊடுருவிப் பார்ப்பது போலக் காட்சி அளித்தார்.

திடீரெனக் கால் அரவம் கேட்டது. அவர் திரும்பிப் பார்க்கவில்லை.

''காபி!'' என்றாள் கோமதி.

''உம், என்ன சொன்னே?''

''காபி.''

''ஓ... காபியா?''

''நல்ல சூட்டிலே இருக்கு.''

''எது, எது சூட்டிலே இருக்கு, கோமதி?''

''என்னாச்சு உங்களுக்கு? ஏன் உங்க முகம் எண்ணிக்குமில்லாம ஒரு மாதிரியா இருக்கு?''

''விகாரமா இருக்கா?''

''சொல்லத் தெரியலே.''

''நம்ம ரெண்டு பிள்ளைகளின் விகாரங்கள் என் மனசிலே போட்டோ பதிஞ்ச மாதிரி அழுந்தியிருக்கு. அது இப்ப என் மூஞ்சிக்கே வந்துட்டது.''

''மொதல்லே காபியைக் குடியுங்க. வர வர நீங்க உங்க வயசுக்குத் தக்கபடி நடந்து கொள்றதில்லை.''

அனந்தராமன் லேசாகச் சிரித்தார். காபியை எடுத்தார். ஒரு வாய் குடித்தார்.

''எப்படிச் சொல்றே, கோமதி? எனக்கு எழுபது வயசு ஆறது.''

''எப்ப ஒருத்தன் நம்மை விட்டுட்டு, இந்த வாசற்படியைத் தாண்டிப் போயாச்சோ, அப்புறம் அவன் ரெண்டாம் மனுஷன் இல்லை, மூணாம் மனுஷன்.''

கோமதி அதிகம் பேச மாட்டாள். ஆனால் பேசும்போது பொறி தெறிக்கும். அன்புடன் பேசுகையில் தேன் வழியும். கோபத்துடன் பேசினால் ஜ்வாலை வீசும்.

இப்போது கோமதி நிச்சயமாகக் கோபத்தில் பேசவில்லை. ஒரு விரக்தியுடன் பேசுகிறாள்.

''நீ யாரைச் சொல்றே?''

''நீங்க யாரை நெனைச்சுப் புலம்பிண்டிருக்கேள்? அவர்களைச் சொல்றேன்.''

''ரங்கா, ராமுவா?''

''பின்னே யாரு? நீங்க அம்பது அறுபது வருஷம் முன்னாடி நம்ம ஹிந்துக் குடும்பங்கள் இருந்த மாதிரி, இந்தக் குடும்பம் கப்பும் கிளையுமா இருக்கணும்னு ஆசைப்படுகிறீர்கள்.''

''ஆசைப்பட்டேன்னு சொல்லு.''

''சரி, ஆசைப்பட்டேன். இப்ப அம்மா அப்பா குருவெல்லாம் தெய்வங்கள் இல்லை. பணம், பணம். பணந்தான். இந்தத் தெய்வத்தின் பேர்லே, தான், தன்னுடையது, தனக்குத்தான், தனக்கு மட்டுமேன்னு மனுஷன் அர்ச்சனை செய்யறான். அவனுக்குப் பக்க



பலமா அவனை ஆட்டி வைக்கிற பெண்டாட்டி. உங்க லட்சியக் குடும்பத்தை நீங்க சொப்பனத்தில்தான் பார்த்து ரசிச்சுச் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். நேத்து ரங்கா, அப்பா என்கிற மரியாதையைக் கொஞ்சமாவது காட்டினானா? அப்பாவை விட, அப்பாகிட்டே யிருக்கிற சொத்துத்தான் அவன் கண்ணிலே பட்டது. ஏன்னா, சொத்துன்னா பணம். பணம்னாத் தெய்வம்.''

''பாசம் போயிடுத்து.''

''அதுக்கு யாரையும் சொல்லிக் குத்தம் இல்லை. நாகரிகம் என்கிற பெயரில் நாம் கொஞ்சம் கொஞ்சமா எல்லா நல்லதுகளையும் இழந்துண்டு வர்றோம். நீங்க வேணும்னாப் பாருங்க, இன்னும் இருபது முப்பது வருஷங்களிலே கிழங்களுக்குன்னு தனி விடுதி இருக்கும். இப்பவே சர்க்கார் பென்ஷன் குடுக்க ஆரம்பிச்சாச்சு; ஏன்? ஏழை அப்பனைக் கண்டால், சம்பாதிக்கிற பிள்ளைக்கு அநுதாபத்தை விட எரிச்சல்தான் அதிகம் வரும். அம்மாவும் அப்பாவும் மார்லேயும் தோளிலேயும் போட்டு வளர்த்து, படிக்க வச்சு, ஆளாக்கினதெல்லாம் மறந்து போயிடும். இதுக்கு என்ன காரணம்?''

''நீயே சொல்லு.''

''இங்கிலீஷ்லே நீங்க எகனாமிக்ஸ் என்பேள். நான் பொருளாதாரம்னு சொல்ல மாட்டேன். சுயநலம்னு சொல்லுவேன்...''

''சரி, வேறு பேச்சு எடு. இல்லாமப் போனா, உள்ளே போ.''

''மாலுப் பொண்ணு பொட்டியும் கையுமா வந்திருக்கா!''

அனந்தராமன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''என்ன சொன்னே?''

"மாலுப் பொண்ணு பொட்டியும் கையுமா வந்திருக்கான்னு சொன்னேன்."

"எதுக்கு ?"

"என்னமோ, நம்மகூட இங்கே ஒரு வாரம் தங்கவாம் !"

"எப்ப வந்தாள் ?"

"நீங்க வாக்கிங் போயிருந்தப்போ."

"ரங்கா கொண்டு வந்து விட்டானா ?"

"ஆட்டோவில் வந்தாள்."

"ஆறு மணிக்கா ?"

"ஆறே கால்."

"கோமதி !"

"உம் !"

"இதிலே ஏதோ இருக்கு."

"அந்த 'ஏதோ' என்னன்னு எனக்கும் புரியலை."

"மூர்த்தியைக் கேட்டாயா ?"

"இல்லை."

"சரி, நீ ஒண்ணும் கேட்காதே. மாலுவை வரச் சொல்லு."

"இப்பத்தான் குளிச்சுட்டு டிரஸ் மாத்திக்கப் போயிருக்கா."

"அங்கேயும் ஏதோ பூசல்."

"ஏன் ஊகிக்கிறேள் ? அவளை வரச் சொல்றேன்."

காலித் தம்ளரை எடுத்துக் கொண்டு கோமதி உள்ளே சென்றாள்.



ஐந்தாவது நிமிடம், "என்ன தாத்தா, கூப்பிட்டீர்களா ?" என்று கேட்டுக் கொண்டே, மாலு அவர் முன் வந்து நின்றாள்.

"உட்கார்."

மாலு உட்கார்ந்தாள்.

"நீ வந்ததே தெரியாது. உன் பாட்டி இப்பச் சொன்னாள்."

"ஆமாம், தாத்தா."

"ஒரு வாரம் தங்கப் போறயாமே ?"

"ஆமாம், தாத்தா."

"நீ இது வரையில் ஒரு ராத்திரிகூட இந்த வீட்டில் தங்கியதில்லை, மாலு. உன் அம்மா உன் கையைக் கரகரன்னு இழுத்துண்டு போயிடுவாள் அப்படி இருக்கிறப்போ..."

மாலு மௌனம் சாதித்தாள்.

அனந்தராமன் காத்துக் கொண்டிருந்தார்.

மாலுவின் மௌனம் நீடித்தது.

அனந்தராமன்: "உண்மையைச் சொன்னால் நீ தப்பிக்கலாம், மாலு பொய்னு தோணினா, இப்பவே உன் வீட்டுக்கு உன்னை அனுப்பிடுவேன்."

"மூர்த்திகிட்டே மட்டுந்தான் சொல்லியிருக்கேன், தாத்தா. என் அம்மா அப்பாக்குக்கூடத் தெரியாது."

"அப்ப, வீட்டை விட்டு ஓடி வந்திருக்கியா ?"

"ஐயையோ, அப்படி இல்லை, தாத்தா."

"பின்னே எப்படி ?"

''இங்கே ஒரு வாரம் தங்கப் போறேன்னு சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்.''

''ஒரு வாரம் இங்கே என்ன பண்ணப் போறே, மாலு ?''

''வந்து... வந்து...''

''சரி, நான் கேள்வியை மாத்திக் கேட்கறேன். ஒரு வாரத்துக்குப் பிறகு இங்கேர்ந்து போய்விடுவாயா ?''

''நிச்சயமா !''

''உன் வீட்டுக்குத்தானே ?''

மீண்டும் மாலு மௌனம் சாதித்தாள்.

''வக்கீல் மாதிரி கேள்வி கேட்கிறேள், தாத்தா !''

''எனக்குப் பதில் வேண்டும்.''

''பாம்பே போறேன்.''

''எதுக்கு ?''

''ஒரு பெரிய கம்பெனியில் வேலை கெடைச்சிருக்கு. கொஞ்ச நாள் பயிற்சி அமெரிக்காவில்.''

''ஐ.ஏ.எஸ்.?''

''நான் சரின்னு சொல்லவே இல்லையே, தாத்தா.''

''உன் அப்பன் அப்படிக் குதிச்சானே ?''

''அம்மா பதம் பாடினா, தாத்தா !''

அனந்தராமன் சிரித்து விட்டார்.

''சரி, பாம்பேக்குத் தனியாவா போறே ?''

''மூர்த்திச் சித்தப்பா...''

''பணம் ?''

''மூர்த்திச் சித்தப்பா...''



''மூர்த்திதான் வேலையில் சேர்ந்துடுன்னு தூண்டினானா ?''

''ஐயையோ, பாவம். மூர்த்திச் சித்தப்பாகிட்டே நான்தான் சொன்னேன். அம்மாவுக்கு விஷயம் தெரிஞ்சா, என்னை ரூம்லே போட்டுப் பூட்டிவிடுவா.''

''உனக்கு ஐ ஏ.எஸ்.ஸைப் பிடிக்கலையா, இல்லை, கலியாணம் பிடிக்கலையா ?''

''ரெண்டும்.''

''கல்யாணம் ?''

''இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும். அம்மாவையும் அப்பாவையும் பார்க்கறப்போ கலியாணமே அவசியமான்னு கூடச் சில சமயங்களில் தோண்றது.''

''ஏன் ?''

''எப்பப் பார்த்தாலும் சண்டை, வாதப்பிரதிவாதம் தான் பிடிச்ச முசலுக்கு மூணு கால்னு அம்மா நிக்கறா. மொத்தத்திலே, தாத்தா ! வீட்டுச் சூழ்நிலையே அவலமா இருக்கு. அப்பாகிட்டே பணம் இல்லை. கடன் வாங்க வழியில்லை. அம்மா தன் வைரங்களையும் நகைகளையும் தரவும் முடியாதுங்கறா. அப்பாவுக்கு முழி பிதுங்கறது. இந்தச் சாக்கில் ஐ.ஏ.எஸ். வரன். எல்லாத்துக்கும் இப்ப ஒரு முடிவு வந்து விட்டது. எனக்கு நல்ல வேலை கெடைச்சுட்டுது.

''உன் கலியாணத்துக்குன்னு நான் பத்தாயிரம் ஒதுக்கி வச்சிருக்கேன், மாலு.''

''எனக்குக் கலியாணம் நடக்கறப்போ அதை ஆசீர்வாதங்களுடன் குடுங்கோ.''

''நீ போற வழியைப் பார்த்தா, இப்போதைக்கு கலியாணம் இராது போலிருக்கு. உனக்குக் கலியாணம் நடக்கறப்போ, நான் இருக்க மாட்டேன் போலிருக்கு''

''ஏன் தாத்தா, அப்படிச் சொல்றீர்கள்? உங்க சதாபிஷேகத்துக்கு நான் எங்கே இருந்தாலும் வருவேன்.''

''பாம்பேயிலே எங்கே தங்கப் போறே?''

''பெரிய கம்பெனி. பெண்களுக்குத் தனியா ஹாஸ்டல் இருக்கு. மூர்த்தி என்னை அழைச்சுண்டு போய் ஒப்படைச்சுட்டுத் திரும்பிடுவான்.''

''உன் பாட்டிக்கு நீ வாரம் ஒரு லெட்டர் போடணும், போடுவயா?''

''நிச்சயமா.... அதோ சித்தப்பா!''

மூர்த்தி நழுவப் பார்த்தான்.

''மூர்த்தி!''

''என்னப்பா?''

''டிக்கெட் வாங்கியாச்சா?''

''சென்ட்ரல்லேர்ந்துதான் வர்றேன்.''

''என்னிக்கு?''

''அடுத்த திங்கள்.''

''தாதரா?''

''ஆமாம்.''

''ஃபர்ஸ்ட் கிளாஸ்தானே?''

''ஸ்லீப்பர்.''

''ஏண்டா?''

''அறுபத்தெட்டும் அறுபத்தெட்டும் நூற்று முப்பத்தாறோடு காரியம் முடியறது. ஐந்நூறுக்கு மேலே ஆறது ஃபர்ஸ்ட் க்ளாஸ்.''

''மூச்சு விடாதே, சொர்ணத்துக்குத் தெரிஞ்சா...''



''நீங்க மூச்சு விடாம இருந்தால் சரி!''

''இவ கையிலே ரெண்டாயிரம் குடு. இஷ்டப்படி புடவை எடுத்துக் கொள்ளட்டும்.''

''சரி.''

''மாலு!''

''என்ன தாத்தா?''

''பெண்கள் வேலைக்குப் போறதில் தப்பு இல்லை. ஆனா குடும்பப் பேரைக் காப்பாத்தணும்.''

''இந்தக் குடும்பத்தின் பேரைக் காப்பாத்தறேன், தாத்தா.''

''அப்படீன்னா.''

''அந்தக் குடும்பத்துக்கு என்ன பெயர் இருக்கு, தாத்தா?''

''உனக்கு ரொம்பக் குசும்பு! போ, உள்ளே போய் வயிறு நெறையச் சாப்பிடு.''

அவள் உள்ளே சென்றாள்.

மூர்த்தி நகர்ந்தான்.

''டேய்!''

''என்னப்பா...''

''மாலு நல்ல பெண், நீ என்ன சொல்றே?''

''நான் என்னிக்கு அப்பா உங்க கருத்துக்கு எதிராப் பேசியிருக்கேன்?''

''ஆனா என்கிட்டே இந்த ரகசியத்தை ஒளிச்சு வச்சுட்டியே?''

''இல்லை, அப்பா. எரிமலை அடங்கினப்புறம் மெதுவாச் சொல்லலாம்னு இருந்தேன்.''

''டேய், என் மனசு எரிமலை இல்லையடா. அது பாற் கடல். சில சமயங்களில் பால் கொதிக்கும், அவ்வளவு தான்."

''புரியறது, அப்பா !" என்றான் மூர்த்தி.

## 29

ருக்மிணி ராமுவைச் சாப்பிட அழைக்க வந்தபோது, அவன் ஒரு சிறு தோல் பெட்டியில் பத்து ரூபாய், ஐந்து ரூபாய்க் கட்டுகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

ருக்மிணி வாய் அடைந்து நிற்கவில்லை. தன் கணவனுடைய நடவடிக்கைகளை அவள் ஆரம்பத்திலிருந்தே அறிவாள். ஓரிரு தடவைகள், அவன் செய்வது சரியல்ல என்று சொல்லிப் பார்த்துச் சோர்ந்து போனவள் அவள். நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுக்கு வந்து எத்தனையோ மாதங்களாகி விட்டன.

''என்ன பார்க்கிறே, ருக்கு ?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ராமு. கடப்பாரையை முழுங்கி விட்டு, ஜீரணத்துக்குச் சுக்குக் கஷாயம் இருக்கிறதா என்று கேட்டான்.

''ஒண்ணுமில்லே."

''விசாரணைக் கமிஷன் இன்னும் ஒரு வாரத்தில் வரப் போறது."

''அதான் நேத்தே சொன்னீர்களே !"

''ரெண்டு நாளாச் சிமன்லால் வந்துட்டுப் போனானே, எதுக்கு, தெரியுமா ?"

''எனக்கு எப்படித் தெரியும் ?"



''நாலு அடுக்கு மாடி வீடுகளா மூணு கட்டப் போறானாம்."

''நீங்க ஒண்ணு வாங்கப் போகிறீர்களா ? அதுக்குத் தான் பெட்டி நெறையப் பணமா ?"

''ருக்கு, உனக்குப் புத்தி சாதுரியமே போறாது. நான் இப்ப உன்னைப் பத்தித்தான் கவலைப்பட வேண்டியிருக்கு."

''முதல்லே உங்களைப் பத்திக் கவலைப்பட ஆரம்பியுங்க. ஏது இவ்வளவு பணம் ?"

''சிமன்லால் சேட். அதோ அந்தப் பெட்டியில் வேறே இருக்கு. ஃபிக்ஸட் டெபாஸிட்டை எடுத்து ரொக்கமா வச்சிருக்கேன், அதெல்லாம் உனக்கு. இதெல்லாம் எனக்கு."

''அப்படீன்னா ?"

''நாளன்னிக்கு ரெயில் ஏர்றேன்."

''ஸஸ்பென்ஷன் பீரியட்லே நீங்க மெட்ராஸை விட்டுப் போகக் கூடாதுன்னு கவர்ன்மெண்ட்லே ஆர்டர் போட்டிருக்கிறார்களே !"

''நான் எந்த ஆர்டர்களை மதிச்சிருக்கேன், இதை மீறாம இருப்பதற்கு ?"

''எங்கே போகிறீர்கள் ?"

''அதை உங்கிட்டே சொன்னாலும் எனக்கு ஆபத்து. நாளைக்கு க்ரைம் பிராஞ்ச்சிலிருந்து வந்து உன்னைக் கேட்டா, நீ பயத்திலே உளறிவிடுவே."

''என்னையும் கொழந்தைகளையும் அழைச்சிண்டு போய் விடுங்களேன். க்ரைம் பிராஞ்ச் தொல்லையே இராது."

''அதுதான் தப்பு. ஈஸியா கண்டுபிடிச்சுடுவா. இன்னும் கொஞ்ச நாளைக்கு அந்த மாஜி மந்திரியைத்

தான் வாங்கு வாங்குன்னு வாங்குவா. அதெல்லாம் முடிஞ்சு, சாட்சிகளை யெல்லாம் தயார்ப் பண்ணி, எதை எப்படித் தொடங்க வேணும்னு கமிஷன் முடிவு எடுப்பதற்குள்ளே, நான் கண் காணாத இடத்துக்குப் போய் விடுவேன்."

''எத்தனை நாளைக்கு?"

ராமு விழித்தான்.

''உங்களாலே இந்த இடத்தை விட்டு ஓடிட முடியும். ஆனா உலகத்தை விட்டு ஓடிப் போயிட முடியுமா?"

''அதனாலே?"

''நீங்க மெட்ராஸை விட்டு நகராதீங்கோ. நீங்க பெரிய தப்புச் செஞ்சிருக்கிறீர்கள். மோசடி பண்ணியிருக்கிறீர்கள். அரசுப் பதவியைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறீர்கள். இதுக்கெல்லாம் பதில் சொல்லாம ஓடிப் போறது கோழைத்தனம்."

''மார்பைக் காட்டி, நிமிர்ந்து நின்னு பதில் சொல்லி ஜெயிலுக்குப் போறதுதான் வீரம்னா, எனக்கு அந்த வீரம் வேண்டாம். நான் போறதுக்கு முன்னாலே, நீயும் கொழந்தைகளும் வயிறு வாடாம இருப்பதற்கு லட்சம் ரூபாய் தரப் போறேன். அதை ஏதாவது ஒரு பெரிய கம்பெனியில் டெபாஸிட்டா போடு. வருஷத்துக்குப் பதின்மூவாயிரமாவது கெடைக்கும். ஒரே கம்பெனியில் ஒரே பேரில் போடாதே. இன்கம் டாக்ஸ் ப்ராப்ளம் வரும்."

''நீங்க போனப்புறம் நான் எப்படிப் பொழைக்கணும்னு நீங்க இப்பச் சொல்லித் தருகிறீர்கள், அல்லவா?"

''ஏன், தப்பா?"



''சந்நியாசம் வாங்கிண்டு போறவனுக்குக் கொல்லைக் கதவு சாத்தியிருந்தால் என்ன, திறந்திருந்தால் என்ன? எனக்கு உங்க பணம் தேவை இல்லை. என் அப்பாவும் என் மாமனாரும் என்னையும் என் கொழந்தைகளையும் கவனிச்சுப்பா."

''நீ ஒரு முட்டாள், பணத்தோட அருமை தெரியாதவ."

''நான் முட்டாளாவே இருந்து கொள்றேன். பணத்தாலே சுகத்தைத் தேடறவர் நீங்க. நான் நிம்மதியைத் தேடப் பார்க்கறேன். அதைப் பணத்தாலே பெற முடியாது."

''வறட்டு வேதாந்தம்!"

''சரி, சாப்பிட வாங்க."

''நீ சாப்பிடல்லை? மணி பத்து அடிச்சாயிடுத்தே!"

''நீங்க பகல்லே ஊர் சுத்தறேள். சீட்டு ஆடறேள். குதிரைக்குப் போறேள். நன்னாச் சாப்பிடறேள். ராத்திரி ஒங்க குறட்டை கொசுவை விரட்டறது ஆனா, நான்? ஒரு கவளம் இறங்கமாட்டேன் என்கிறது. கண்ணை மூடினாப் போறும். பயங்கரமா என்னவெல்லாமோ காண்றது. பாவம்! நம்ம கொழந்தைகளுக்கு எதுவும் தெரியலே."

''சொல்லாதே!"

''நீங்க தண்டனையை ஏத்துக்கறதுதான் சரி."

''உன் யோசனையைக் கேட்க நான் தயாராயில்லை."

''உங்க அப்பாகிட்டே போய் அவர் கால்லே...."

''வாயை மூடு. என் அப்பாவைப் பத்தி உனக்குத் தெரியாது. குண்டு சட்டியிலே குதிரை ஓட்டறவர் அவர். நல்ல வேளை. அவர் தந்த சொத்து அப்படியே இருக்கு. எந்தப் பிரம்மாவும் கை வைக்க முடியாது."

''இப்படிப் பேச உங்களுக்கு நாக்குக் கூசலே யில்லையோ ?''

''மனசே கூசாதபோது நாக்கு எப்படி ருக்கு, கூசும் ?''

''சாப்பிட வர்றேளா ?''

''சிமன்லால் வீட்லே சப்பாத்தி, சப்ஜி, மசாலாப் பால் எல்லாம் சாப்பிட்டேன்.''

ருக்மிணி திரும்பினாள்.

''ருக்கு !''

''உம்.''

''சின்ன வயசிலேயே எனக்குத் திருட்டுப் புத்தி வந்தது. அப்பா கோட் பாக்கெட்லேர்ந்து சில்லறையா எடுக்க ஆரம்பிச்சேன். அப்புறம் காலேஜ்லே படிக்கறப்போ, அம்மாவின் பழைய வைர மூக்குத்தியை எடுத்து வித்தேன். நான் ஆக ஆகத் திருடறது அப்படி ஒண்ணும் பெரிய குத்தமில்லை என்கிற எண்ணம் தோண ஆரம்பிச்சுது. ஆபீஸ்லே வாய்ப்புக் கெடைக்க ஆரம்பிச்சுது. பழைய அசுரன் தலை தூக்கினான். வீடு, நிலம், டெபாஸிட்...''

''உங்க புராணம் எனக்கு ஏற்கனவே தெரியும். ஆனா அதில் இருக்கற உப கதைகள் இப்பத்தான் தெரியறது.''

''பாவம் ! என்னை ஒரு நல்லவன்னு நீ கலியாணம் பண்ணிண்டே.''

''கல்யாணமே லாட்டரிச் சீட்டு மாதிரித்தான். ஆனா நான் அதுக்காக வருத்தப்படலை. உங்க மேலேதான் இரக்கம் வர்றது.''

''இவ்வளவு செஞ்சும் இரக்கம் வர்றதா ? ஆச்சரியமா இருக்கே, ருக்கு.''

''இன்னும் திருந்தணும் என்கிற எண்ணம் உங்க மனசிலே ஊன்றி எடுக்கவில்லையே ? நீங்க திருந்தணும்னு



நானும் எத்தனையோ தெய்வங்களுக்குக் காணிக்கை செலுத்த வேண்டிக் கொண்டிருக்கேன்.''

''பாவம் !''

''உங்களைத் திடீர்னு கைது செஞ்சா உங்களாலே ஓடிட முடியாது, இல்லையா ?''

''கஷ்டந்தான். ஆனா ஜாமீன்லே வெளியே வந்து ஓட முடியும். அது சரி ; ஏன் கேட்கிறே ?''

''என் பேர்லே அம்பதாயிரம் ஃபிக்ஸட் டெபாஸிட் போட்டிருந்தீங்க, இல்லையா ?''

''ஆமாம். அதுக்கென்ன ?''

''இன்னிக்குப் பாங்க்குக்குப் போனேன். அம்ப தாயிரம் இல்லை.''

''ஆமாம். எடுத்தாச்சு. அதுதான் அந்தப் பொட்டி யில் மத்தப் பணத்தோடே இருக்கு.''

''நான் கையெழுத்துப் போடலை.''

''நான் உன் புருஷன்.''

''ஆனா, பணம் என் பேரில்.''

''உன் கையெழுத்தை நான் போட்டேன்.''

''அது தப்பு இல்லையா ?''

''போர்ஜரின்னு சொல்றியா, ருக்கு ?''

''உங்களுக்கு எப்படித் தோண்றது ?''

''நம்பிக்கை.''

''யார் மேலே ?''

''உன் மேலேதான்.''

''அது பரஸ்பரமா இருக்கணும், இல்லையா ?''

''அப்படீன்னா ?''

''நானும் உங்க மேலே நம்பிக்கை கொள்ளணும்.''

''ஆமாம்.''

''கொள்ளலை.''

''அடி பாவி. என்ன செஞ்சே ?''

''என் சித்தப்பாவின் மச்சினன் டெப்டி கமிஷனர்.''

''தெரியும். சிவகுமார்.''

''அவன்கிட்டே போய்ச் சொன்னேன்.''

''அடி பாவி !''

''சாப்பிட வாங்க.''

''நாக் கூசாமல் சாப்பிடக் கூப்பிடறே. போலீஸ்லே...''

''சீக்கிரம் சாப்பிட்டு விடுங்க. சிவகுமார் அஸிஸ்டண்ட் கமிஷனரை அனுப்பி யிருக்கிறார். ஜீப் கொஞ்சம் தள்ளி நின்னுண்டிருக்கு. போர்ஜரி கேஸ்.''

ராமு நிலை கலங்கிப் போனான். அவனால் தன் காது களையே நம்ப முடியவில்லை.

''ஏண்டீ, இப்படிப் பண்ணினே ?''

''நீங்க தலை மறைவாப் போகப் போகிறீர்கள்னு எனக்கு ஏற்கனவே தெரியும்.''

''அதுக்காக ?''

''நீங்க தலை மறைவாப் போகக் கூடாது. அதுக்கு நான் விட மாட்டேன்.''

''நீ என் பெண்டாட்டியா ?''

''அதனால்தான் இப்படி ஒரு ரண சிகிச்சை செய்ய றேன். எனக்கு வேறே வழி தெரியலை. கொஞ்சம் மோர்ச் சாதமாவது சாப்பிடுங்க. உங்களுக்கு ஜாமீனே கெடைக்காதபடி செய்யப் போறேன்.''



''உன் கழுத்தை...''

''நெரிச்சுக் கொல்லணுமா ? நான் ரெடி. அப்படியே நம்ம கொழந்தைகளின் கழுத்துகளையும்...''

''அவர்கள் வர்றதுக்குள்ளே, இந்த ரெண்டு பொட்டி களையும் எடுத்து ஒளிச்சு வை. இதையாவது செஞ்சு தொலை.''

''எல்லாம் அப்படியே இருக்கட்டும். ஊசிப் போன சாப்பாட்டைத் தொட மனுஷன் கூசறான். ஆனா, ஊசிப் போன பணத்துக்கு அவன் எப்படி ஆலாப் பறக் கிறான் ?''

ராமு ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

ஆனால் வாசற் கதவை யாரோ தட்டும் ஓசையில் வாயை மூடினான்.

''போலீஸ் பத்தரைக்கு வரச் சொல்லி யிருந்தேன்.''

ருக்மிணி நிறுத்தி நிதானமாகச் சொல்லிவிட்டு, அவனுடைய முகத்தையும் பாராமல் வாசலை நோக்கி நடந்தாள்.

## 30

அடையாறு ஆல மரத்தின் நூற்றுக் கணக்கான கிளைகளில் ஒரு கிளையைப் பிடித்த வண்ணம் எவ்வளவு நேரம் நின்றாரோ ? அனந்தராமனுக்கே தெரியாது. அதிகாலையில் எழுந்து, ராஜம்மா கொடுத்த காபியை ருசித்து ருசித்துக் குடித்து விட்டுப் புறப்பட்டவர்தாம். கார் தானாக இயங்குவது போலப் பட்டது. அடையாறு 'கேட்' சாத்தப் பட்டிருந்தது. ஐந்து மணிக்கு யார் திறந்து வைப்பார்கள் ?

ஒலி எழுப்பினார். என்ஜின் ஓடிக் கொண்டே இருந்தது. அவருக்குத் தெரிந்த, அவர் தாமாக மன முவந்து அளிக்கும் தீபாவளி, பொங்கல் இனாம்களைப் பெற்றுக் கொள்ளும் மூன்று நான்கு காவலாளிகளில் ஒருவன் வந்தான். ஒரு 'சலாம்' அடித்துவிட்டுச் சாவதான மாகக் கதவுகளைத் திறந்து விட்டான். அவருடைய மனத்தின் அவசரத்தை அவன் உணரவில்லை. அவர் தம் பொறுமையை ஏற்கனவே இழந்தாகி விட்டது. ஆனால் அந்த இழப்பில் கோபம் பிரிடவில்லை. ஆல மரம் திடீரென்று தன் வேர்களை யெல்லாம், கிளைகளை யெல் லாம் தூக்கிக் கொண்டு சமுத்திரத்தை நோக்கிப் போவ தான கற்பனை அவருள் ஊற்றெடுத்தது. மரம் இருந்த இடம் வெறிச்சோடியது. அது ஒரு பெரிய மைதானமாகத் தோற்றம் அளித்தது." அந்த மைதானத்தின் நட்ட நடுவே அவர் நின்றார் ; ஒரு கிளை கூட இல்லை. அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது ; ஒரு கிளை, ஒரே ஒரு கிளை, நிச்சயமாக இருக்க வேண்டுமே ! அது எங்கே ?

காவலாளி கார் அருகே வந்தான்.

''ஸார் !''

திடீரென்று அனந்தராமன் விழித்துக் கொண்டார் ; பார்த்தார்.

''கேட் திறந்தாச்சு, ஸார் !''

''ஸாரி.'' அவர் காரை நகர்த்தினார். ஆல மரம் கண்ணில் பட்டது. இன்னும் அது சமுத்திரத்துக்குப் புறப்படவில்லை. காலம் காலமாய், ஒரு சின்னஞ்சிறு விதையிலிருந்து தோன்றி, அரும்பு விட்டு, வாமனனாய் நின்று, மனிதனாக நின்று, விசுவ ரூபனாக உயர்ந்து, ஆயிரக்கணக்கான கைகளை வீசிக் கொண்டும், தாழ்த்திக் கொண்டும் நிற்கும் மரம், இன்றும் தெய்வத்தின் சொருப மாய், அமைதியாய், அடைக்கலமாய் நின்றது.



காரிலிருந்து இறங்கினார். கார் கதவைச் சாத்தக் கூடப் பொறுமை இல்லை. மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார். தலையில் சில கிளைகளின் சில உப கிளைகள் இடித்தன. சருகுகள் உதிர்ந்தன. அவர் உணரவில்லை.

திடீரென்று ஆல மரம் போல நிற்க வேண்டும் என்ற வேகமும் தாபமும் அவருள் எழுந்தன. கைக்குக் கிடைத்த கிளையைப் பிடித்துக் கொண்டார் ; நின்றார்.

கண் முன் எல்லோரும் வந்தார்கள். அப்பா, அம்மா. ஹால் போட்டோக்களை விட, அவர்கள் இன்னும் நன்றாக இருந்தார்கள்.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு விபத்தில் இறந்து போன அவருடைய அண்ணாவும் அவருடைய மனைவியும் வந்தார்கள். குழந்தைகள் இல்லையே என்ற கேவலுடனேயே வாழ்ந்து விட்டுப் போன இரு ஜீவன்கள் இப்போது அவரை உலுக்கின.

அக்கா வந்தாள். தங்கை வந்தாள். அவர்களுடைய பிள்ளைகள், பேரன்கள் வந்தார்கள். தம்பி வந்தான்.

கட்டைப் பிரம்மசாரியாய், எங்கோ ஊர் ஊராய் அலைந்து கொண்டிருக்கும் அவன் இப்போது என்ன கோலத்திலே இருக்கிறானோ ? சந்நியாசிக் கோலம் கண் முன் தோன்றியது. காவி, தாடி, ஜடை, மரத்தின் விழுதுகளைப் போலப் பரவி நின்று, தாம்புக் கயிறு களாகத் தொங்கின. அவன் எங்கே ?

யாருக்குத் தெரியும் ?

போனவர்களெல்லாம் போன பிறகு, இருக்கிறவர் களெல்லாம் வந்தார்கள். போனவர்கள் வந்தபோது, அவரைச் சுற்றி ஏதோ ஒரு சுகந்தம் கமழ்வது போல இருந்தது. இப்போது மணம் இல்லை.

ரங்கா : உடனேயே மறந்தார்.

சீதா : உடனேயே மறந்தார்.

அகிலா போனவள்தான். ஆனால் இன்றும் வடக்கே இருப்பது போன்ற பிரமை. அவரைப் பொறுத்த வரையில் அவள் இன்னும் கான்ஸரில் சாகவில்லை.

ராமு.

கண்களை இறுக மூடிக் கொண்டார். அவனுடைய பெயர் பல தினசரிகளில் அடிபட்டு விட்டது. 'பிரபல வழக்கறிஞர் அனந்தராமனுடைய பிள்ளை' என்று அவனை அடையாளம் காட்டும் வகையில், அவனை நாற அடித்து விட்டார்கள். நல்ல வேளை ! ருக்மிணி செய்த காரியம் வெளி வரவில்லை.

நினைவுகள் ராமு-ருக்மிணியைச் சுற்றிச் சுழன்றன.

அவன் கைதான மறுநாளே ருக்மிணி அவரைத் தேடிக் கொண்டு வந்தாள்.

''என்னம்மா ?''

ஒன்று விடாமல் எல்லாவற்றையும் முகம், வதங்காமல், வாடாமல், ஒரு பொட்டுக் கண்ணீர்கூடச் சிந்தாமல் அவள் பேசினாள். சில வார்த்தைகள் அவரைக் கவர்ந்தன.

''நமக்குப் பணம் இருக்கோ, காசு இருக்கோ, மானம் நிச்சயமாக இருக்கணும்னு நான் நெனைக்கிறேன், அப்பா. அவருக்கு இது தோணலை. உங்க காலிலே விழுந்து உண்மையை எல்லாம் சொல்லி யிருந்தா, நீங்க அவரைக் காப்பாத்தி யிருப்பீர்கள். நான் கெஞ்சினேன். அவர் தந்த குழந்தைகளைச் சுட்டிக் காட்டிப் புலம்பினேன். பணத் தாலே எல்லாம் சாதிக்கலாம், எல்லாச் சுகங்களையும் பெறலாம்னு அவர் கொக்கரித்தார். அவர் ஓடினா, நாய் துரத்தற மாதிரி போலீஸ் அவரைத் துரத்தும். பிடி பட்ட தும் அவரைச் சித்திரவதை செய்வார்கள். எனக்கு ஒரு வாய்ப்புக் கெடைச்சுது, அப்பா ! அதைப் பயன் படுத்திக் கொண்டேன். எப்பவோ ஒரு கதை படிச்சிருந்தேன்.



ஒரு பெண், ஜானான்னு நெனைவு, கழுத்திலே தாலி ஏறின ரெண்டு மணி நேரத்திலே, அதைக் கட்டியவனைப் போலீஸில் ஒப்படைச்சா. நம்ம தர்மத்துக்கு ஒவ்வாத துன்னு படலாம். ஆனா நோக்கம் புனிதமானது. இப்ப நான் என் வாழ்க்கையில், ஒரு கற்பனைப் பாத்திரம் செஞ்சதைச் செஞ்சிட்டேன். இது தப்பா !''

''இல்லை, ருக்மிணி.''

''அவர் கொஞ்ச நாள் ரிமாண்டிலேயே இருக்கட்டும். 'பெயில்' வாங்க முயற்சி செய்வார். கெடைச்சாக் கண் காணாத இடத்துக்கு ஓடிடுவார்.''

''ஆமாம்.''

''கண் காணாத இடத்திலே அவர் அலைஞ்சு தவிக் கறதை விட, இங்கே நம்ம ஊர் ஜெயிலில் தவிக்காம இருக்கறது நல்லதுன்னு படறது.''

''நீ இப்படி ஒரு முடிவு எடுத்தப்புறம் நான் என்ன செய்ய முடியும் ?''

''இது நான் புகுந்த வீடு ; அடைக்கலமா வந்த வீடு. என் அம்மா அப்பா இருக்கிறார்கள். ஆனா எனக்கு அது இடமில்லே. அம்மா வாய் நெறைய, வயிறு நெறையச் சோறு போடுவா. ஆனா அது எனக்கு அமேத்தியமாப் படறது. நானும் என் குழந்தைகள் ரெண்டு பேரும் இங்கே வந்து தங்கலாமா, அப்பா ?''

''இது என்ன கேள்வி, ருக்மிணி ?''

''இல்லை. கேட்க வேண்டிய கேள்வி. கலியாணமானப் புறம், ஒரு மோக வெறியில் நான் தனிக் குடித்தனம் போனேன். உங்களுக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செஞ்சேன். அதுக்கு அவரை விட நான்தான் பொறுப்பு. அன்னிக்கு நான் அப்படிப் போகாமல் இருந்திருந்தால். ஒருவேளை இன்னிக்கு இப்படி ஆகியிருக்காது.''

"இருக்கலாம்."

"எனக்குத் திரும்பி வர யோக்கியதை இல்லைதான். என் குழந்தைகள் அவர் மாதிரி இருக்கப் படாது. உங்க மாதிரி இருக்கணும். அதுகள் ஆளாகிறவரை அம்மாவுக்கும் உதவி செஞ்சுண்டு என் குழந்தைகளையும் பார்த்துண்டு நான் இருக்கேன்."

"இரும்மா." அனந்தராமன் நெகிழ்ந்தார்.

"ஆனா உடனே வரலை. ஒரு மாசத்திலே வர்றேன். அவுட் ஹவுஸில் இருந்துக்கறேன்."

"அது வேண்டாம்."

"அதிலே இருந்தாத்தான் என் குழந்தைகளுக்கு, இப்பவே கஷ்டம்னா என்னன்னு தெரியும். டி. வி, ஃபிரிட்ஜ், டைனிங் டேபிள், வெள்ளித் தட்டு, இதிலெல்லாந் தான் வாழ்க்கை அடங்கி யிருக்குன்னு அதுகள் மனசிலே இப்ப உறைஞ்சு இருக்கு. இந்த எண்ணம் மறைய அவுட் ஹவுஸ் வசதியா இருக்கும்."

"உன் இஷ்டம்"

ருக்மிணி கண்களை விட்டு மறைந்தாள்.

அனந்தராமனுடைய கண்கள் கனத்தன. காலைக் காற்று, கிளைகளினூடே ஊடுருவி, அவர் முகத்தைத் தடவியது.

திடீரென்று சீதா வந்தாள். மின்னல் போல நாதன் வந்து போனான்.

முந்தின நாள்—

அவர் ஹாலில் உட்கார்ந்திருந்தார். மூர்த்தியும் மாலுவும் பம்பாய்க்குப் புறப்படும் முன் வாங்க வேண்டிய சில பொருள்களுக்காக வெளியே போயிருந்தார்கள்.



கோமதி, தரையில் இரு கால்களையும் நீட்டியவளாய் உட்கார்ந்து, நூல்களை விளக்குத் திரிகளாக உருட்டிக் கொண்டிருந்தாள்.

சீதா மாடியிலிருந்து இறங்கி வந்தாள். அவர் திசைக்குத் திரும்பாமல், அவரைத் தாண்டிப் போய்த் தன் அம்மா முன் நின்றாள்.

"அம்மா !"

"என்ன, சீதா ?"

"நாளைக்குக் கார்த்தாலே தாதர்லே போறேன்."

கோமதிக்கு என்ன சொல்லுவது என்று புரியாமல் இருந்திருக்க வேண்டும்.

"உன் இஷ்டம்."

"என் இஷ்டத்துக்குப் போகலை. இந்தப் பெரிய பங்களாவில் இடம் இல்லை ; அதாவது ஒருத்தர் மனசில் இடம் இல்லை என்ற ஒரே காரணத்துக்காகத்தான் போறேன்."

"சரி."

"நான் எவ்வளவு தரணும் ?"

"எதுக்கு, சீதா ?"

"எதுக்கா ? உட்கார்ந்து கொட்டிண்டேன். மாடி முழுக்க இருந்தேன். அதுக்கு."

"இது லாட்ஜ் இல்லை, சீதா."

அனந்தராமன் தம்முள் முறுவலித்துக் கொண்டார். கோமதி கூடக் குத்தலாய்ப் பேசுகிறாள்.

"என் கணக்குப்படி ரெண்டாயிரத்து..."

''அதை ஏதானும் ஒரு கோவில் உண்டியலில் போடு. இல்லாமப் போனா, அஞ்சாறு கோவிலுக்குப் போய், அஞ்சாறு உண்டியலிலே போடு''

''நான் இங்கேதான் தங்கினேன். இங்கேதான் கொட்டிண்டேன். இங்கேதான் தூங்கினேன். அதனாலே இங்கேயே வச்சுட்டுப் போறேன். உன் அருமைப் பிள்ளையின் ருமை ஒழிச்சாங்க. அங்கே வச்சுடறேன். சொத்தோடு சொத்தா இதையும் எடுத்துக்கட்டும்.''

''இஷ்டம் போலச் செய்.''

''அப்புறம் இன்னும் ஒண்ணு.''

''சொல்லு.''

''இனிமே எந்தக் காரணத்துக்காகவும் நான் மெட்ராஸ் வரமாட்டேன்.''

''சரி.''

''இதுக்கு என்ன அர்த்தம்னு தெரியுமா, அம்மா ?''

''தெரியாது, சொல்லு.''

''மெட்ராஸ் என்கிற ஊருக்கு வந்தாலும், இந்த வீட்டுப் படி மிதிக்க மாட்டேன்னு அர்த்தம்.''

''பாவம், படி ! அது என்ன குத்தம் செஞ்சுது, சீதா ?''

''ஏம்மா, எடக்கா இருக்கா ?''

கோமதி திடீரென்று எழுந்து நிற்பதை அனந்தராமன் உணர்ந்தார். கோமதியின் குரல் உயர்வதையும் உணர்ந்தார்.

''ஏண்டி, உன்னை என் வயத்திலே பத்து மாசம் சுமந்து பெத்து, கை வளரும்மா கால் வளருமான்னு நித்த நித்தம் கண்ணும் கருத்துமா நானும், அதோ அங்கே சிலை மாதிரி ஒரு பழுத்த பழமா உட்கார்ந்திருக்கிறாரே,



அவருமாத் தவிச்சோமே, அதுக்கெல்லாம் உன்னாலே கூலி கொடுக்க முடியுமாடீ ? உன் தலைப் பிரசவத்துக்கு அந்தக் காலத்திலேயே ரெண்டாயிரம் ஆச்சு. உன் ஒரு குறைப் பிரசவத்துக்காக நான் பிளேனில் வந்து ரெண்டு மாசம் உன் வீட்டுச் சமையக்காரியா இருந்தேனே, அதுக்கு எத்தனையடீ பணம் ? இப்பக் கொஞ்ச நாளைக்கு முன்னாடி, உன் புருஷன் விரல்லே வைர மோதிரம் இருக்கான்னு என் புள்ளையைப் பார்த்துக் கேட்டயே, அந்தப் பிள்ளை உடுத்த துணியோடே கல்கத்தாவுக்கும் பம்பாய்க்குமா ஆலாப் பறந்தானே ; அதுக்கெல்லாம் என்ன மதிப்புப் போட்டிருக்கே ? நீ உன் கணக்கைச் சரியாப் போடலை. எல்லாக் கணக்கையும் சரியாப் போட்டுட்டு, அதுக்கு உண்டானதையெல்லாம் எடுத்து என் காலடியிலே போடு. அப்புறம் அதை வச்சுண்டு ஒரு அநாதை ஆசிரமம் கட்டறேன். அதுக்கு உன் பெயரையே வைக்கிறேன். போடீ, போ ! கணக்குப் போடறா, கணக்கு ! பெத்த அப்பனை லட்சியம் செய்யாம, பெத்த தாயாரிடம் சோத்துக் கணக்குப் பேசற உன்னைப் பெத்ததுக்கு, நான் என்ன என்ன பாவமெல்லாம் பண்ணினேனோ ?''

அனந்தராமனுடைய உடல் சிலிர்த்தது. இந்த ஐம்பது ஆண்டுத் தாம்பத்தியத்தில், கோமதி இப்படிப் பேசி அவர் கேட்டதில்லை. மென்மையான உடலில் ஓடும் தண்மையான ரத்தம் எப்படி இப்படிக் கொதிக்க ஆரம்பித்து விட்டது ? தன் பெண், தன் தகப்பனை மதிக்கவில்லை என்ற எரிச்சலா ? அவளைத் தனக்கு அளித்த அவரை அவளே கேவலப் படுத்துகிறாள் என்ற ஆத்திரமா ?

எது எப்படியானால் என்ன ? கோமதி ஜயித்து விட்டாள். சீதா மௌனமாய் மாடி ஏறிப் போனாள்.

அனந்தராமன் அசையவில்லை. சீதா பாவம் செய்யாதவள். பாவம் செய்யப்பட்டவள். அவளுடைய

கோபமும் ஆத்திரமும் எந்தத் தனிப்பட்ட நபர் மீதும் இல்லை. உலகத்தின் பேரிலேயே அவள் வெறுப்பு அடைந்திருக்கிறாள். இதற்குக் காரணம் நிச்சயமாக அவளுடைய கணவன் நாத் தான். அவன் பல கட்டில்களில் உறவாடி யிருக்கிறான் என்ற தகவலைப் பேச்சோடு பேச்சாகச் சீதாவே தன் அம்மாவிடம், அவர் காது கேட்கக் கூறியிருக்கிறாள். தனக்குத் தன் கணவன் இழைத்த தீங்கு சீதாவைப் பல ஆண்டுகளாகப் பாதித்திருக்கிறது. நாத் உயிரோடு இருக்கும்வரை, அவரை அவள் தன் குழந்தைகளின் நலனுக்காகப் பொறுத்துக் கொண்டிருக்கிறாள். நாத் அவளை உதறி விடுவாரோ என்ற அச்சம்.

அனந்தராமன் அவளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் உகுத்தார்.

கிளையிலிருந்து அவர் பிடி தளரவில்லை.

திடீரென்று, ''அப்பா !'' என்ற குரல் வெகு அருகிலிருந்து கேட்டது.

அனந்தராமன் திரும்பிப் பார்த்தார். மூர்த்தி !

''வாங்கப்பா, மணி எட்டு.''

''என்ன, எட்டா ?''

''மூணு மணி நேரமா நான் அதோ அந்தத் திண்டு மேலே உட்கார்ந்திருக்கேன்.''

''என்ன சொன்னே ? நீ உட்கார்ந்திருக்கியா ?''

''ஆமாம்.''

''எப்படி வந்தே ?''

''என் கார்லே.''

''எப்ப ?''



''நீங்க புறப்பட்டதும் நானும் பின்னாலேயே வந்துட்டேன். கேட்லே ரொம்ப நேரம் உங்களைக் காக்க வச்சுட்டான்.''

''சரி, நீ போ.''

''எப்படி ?''

''உன் கார்லே.''

''காரை டிரைவர் எடுத்துண்டு போவான். உங்க கார்லே நீங்களும் நானும் போவோம். சீதாவும் இருக்கா.''

''சீதாவா ?''

''ஆமாம்.''

''அவ எங்கே இங்கே வந்தா ?''

''என் கூட. அவ ரெயில் ஒன்பதே முக்கால். என்னுடைய ரெயிலும் ஒன்பதே முக்கால். மணி எட்டு அடிச்சு அஞ்சு நிமிஷம்.''

''நீ ஒரு முட்டாள் ''

''அதாம்ப்பா மூணு மணி நேரமாக் காத்துண்டிருக்கேன் ''

அவர் மெதுவாக நடந்தார். கால் இடறியது. மூர்த்தி பிடித்துக் கொண்டான். கார் அருகே சீதா நின்று கொண்டிருந்தாள். அவர் கண்களுக்கு அவள் பெண்ணாகப் படவில்லை. ஒரு தனி மரமாகத் தோன்றினாள்.

மூர்த்தி அவருக்குக் கார் கதவைத் திறந்து விட்டான். பின் புறத்தில் சீதா உட்கார்ந்து கொண்டாள். கார் புறப்பட்டது.

முன் சீட்டிலிருந்த அனந்தராமன் திரும்பிப் பார்க்கவில்லை.

''அப்பா !'' என்றாள் சீதா.

அவர் திரும்பாமல், 'உம்' கொட்டினார்.

"நான் நேத்து அப்படி நடந்து கொண்டது சரியில்லைன்னு உணர்றேன்."

"சந்தோஷம்."

"நொந்து போன மனசின் வெறுப்பில் என்னவெல்லாமோ உளறி விட்டேன்."

"சரி."

"என்னை மன்னிச்சுடுங்க, அப்பா."

"கோழி மிதிக்கக் குஞ்சு சாகிறதில்லை."

"உங்க மனசை நோக அடிச்சுட்டேன்."

"என் மனசு இதை விடப் பெரிசையெல்லாம் தாங்கி இருக்கு. அது ஓர் இடிதாங்கி."

"என் வாழ்வு வீணாய்ப் போன வாழ்வு, அப்பா. எதை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை. நான் இத்தனை வருஷமா, பாம்பேயிலே ஒரு ஜீவ சவமா நடமாடிண்டிருந்தேன். என் செத்துப் போன புருஷனோடு வாழவில்லை."

"புரியறது."

"என் மனசிலிருந்து நான் அவரை ஒதுக்கினதுக்கு என்ன காரணம்னு நான் விவரமாச் சொல்ல விரும்பலை. நேத்து ராத்திரி பூராத் தூங்காம எல்லாத்தையும் நெனைச்சுப் பார்த்தேன். மனசுக்கு இதமாக இருக்க உங்களுக்கு அடையாறு ஆல மரமாவது இருக்கு. ஆனா நான் எதை ஆல மரம்னு நெனைச்சு பாம்பே போனேனோ, அது ஒரு போலின்னு தெரிஞ்சப்புறம் என்னை அதற்கு அர்ப்பணம் செய்து கொள்ள முடியவில்லை. குழந்தைகளுக்காக வாழ்ந்து பார்த்தேன். ஆனா என் தோளுக்கு மேலே வளர்ந்தப்புறம் என்னை மீறினார்கள். இதுக்கு அவர்களைச் சொல்லிக் குத்தம்



இல்லை. ஏன்னா, நான் அவர்களைக் கட்டுப்பாட்டிலும் அதிகாரத்திலும் வளர்த்தேன். அன்பால் வளைச்சுப் போட்டுக்கலை."

அனந்தராமன் மௌனமாய்க் கேட்டுக் கொண்டு வந்தார். என்ன பதில் சொல்ல?

"நான் குத்திக் குத்திப் பேசினேன். மரியாதை இல்லாம நடந்துண்டேன். என் ரெண்டு குழந்தைகளும் நன்னாயிருக்க, உங்க ஆசீர்வாதம் வேணும், அப்பா."

"என்னென்னிக்கும் மனோஜூம் சாருவும் அமோகமா இருப்பா."

"தாங்க்ஸ், அப்பா. நான் பாம்பேயிலிருந்து இங்கே வந்து இருந்தது தப்புன்னு இப்ப நன்னாப் படறது..."

**கோ**மதியும் மாலுவும் வாயிற் படியில் நின்று கொண்டிருந்தார்கள்.

அனந்தராமன் காரிலிருந்து இறங்கிப் படி ஏறி வந்தார்.

ஹால் கடிகாரம் ஒரு தடவை அடித்தது.

எட்டரை.

"கோமதி!"

"உம்."

"என்ன டிபன்?"

"இட்லி."

"மூணு பேருக்கும் நெறையக் கொடு. அது தவிர, மிளகாய்ப் பொடி தடவி டிபன் காரியர்லே வை. சாயங்காலம் சாப்பிட்டுக்கலாம்."

"எல்லாம் ரெடி."

''சீதாவுக்கு மோர் மிளகாய் பிடிக்கும்.''

''தயிர்ச் சாதத்துக்கு அதுதான் தொட்டுக்க''

''வேறு என்ன பண்ணியிருக்கே?''

''தாதர்லே போறவர்கள் கையிலே என்னென்ன கொண்டு போவார்களோ, அதெல்லாம்; சாம்பார், கறி, கருவடாம்.''

''பழம்?''

''ரெண்டு டஜன் மலைப்பழம் இருக்கு.''

''டேய் மூர்த்தி!''

''அப்பா!''

''ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் இறங்கிச் சீதாவை விசாரி.''

''சரிப்பா.''

''ஆனா ஓடற ரெயிலில் ஏறிடாதே.''

''சரி.''

''மாலுவைச் சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்ததும் திரும்பி வா.''

''சரி.''

''பிளேனில் வா.''

''சரி.''

''மாலு!''

''என்ன தாத்தா?''

''சமர்த்தா இருக்கணும்.''

''சரி, தாத்தா.''

''வாரம் ஒரு லெட்டர் போடு. உன் பாட்டிக்குப் போட்டால் போதும்.''

''சரி.''



அனந்தராமன் தம் அறைக்கு மெதுவாக நடந்தார்.

''அப்பா!''— சீதா.

அவர் நின்றார். திரும்பிப் பார்த்தார்.

''எனக்கு ஒண்ணும் சொல்லலையே, அப்பா!''

''ஜாக்கிரதையாப் போய் வா!''

''ஒரு முறை கூடச் சீதான்னு பெயர் சொல்லி நீங்க அழைக்கலை. வேணும்னா, இல்லே...''

''மனசு பூரா அடைஞ்சுண்டிருக்கறப்போ, பேர் நாக்குக்கு வர்றதில்லை போலிருக்கு.''

''அம்மா, அப்பா, உங்க ரெண்டு பேரையும் நமஸ்காரம் பண்றேன்.''

அவர்கள் நின்றார்கள்.

''நானும்!'' என்றாள் மாலு.

கதவோரமாக நின்று மூர்த்தி பார்த்துக் கொண்டிருந்தான். சீதாவும் மாலுவும் நமஸ்கரித்த பிறகு, அனந்தராமன் சிரித்துக் கொண்டே, ''நீ பண்ண மாட்டாயே!'' என்றார்.

''மனசு பூரா அடைஞ்சுண்டிருக்கிறப்போ, அந்தக் கனத்திலே உடம்பு வளையறது இல்லையோன்னு படறது!'' என்றான் மூர்த்தி.

''ராஸ்கல்!'' என்றார் அனந்தராமன்.

''இதுதான் உங்க ஆசீர்வாதம். தாங்க்ஸ்!'' என்றான் பிள்ளை.

அனந்தராமன் தம் அறைக்குச் செல்ல, கோமதி வாயிற் படியில் நின்றாள்.

அடையாற்றிலிருந்து ஏற்கனவே வந்துவிட்ட டிரைவர் என்ஜினை 'ஸ்டார்ட்' செய்தான்.

# 31

ஜட்ஜ் சதானந்தத்துக்கு உள்ளூரத் திருப்தி. ஜானா மூர்த்தியை விரும்பத் தொடங்குவதற்கு முன்பேயே, அவளுக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயது நடக்கையிலேயே, அவளை மூர்த்திக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். அப்போது அவரும் அனந்தராமனைப் போல ஓர் அட்வகேட். பல வழக்குகளில் ஒன்றாக இணைந்து, கட்சிக்காரர்களுக்காகப் போராடியிருக்கிறார்கள். பல வழக்குகளில் எதிர் எதிரே நின்று வாதம் புரிந்திருக்கிறார்கள். என்றுமே அனந்தராமனிடம் அவருக்கு அன்பு, மரியாதை, அபிமானம் எல்லாம் உண்டு. ஏன், அனந்தராமனுடைய லட்சியங்கள் கொள்கைகள் எல்லாம் ஒருவிதப் பயத்தைக் கூட ஏற்படுத்தியிருக்கின்றன.

இப்போது அவர் தம் பெண் நல்ல பிள்ளையை அடைந்து நல்லதோர் குடும்பத்துக்குப் போகிறாள் என்ற பூரிப்பில் தம்மை மறந்திருந்தார்.

திடீரென்று சுசிலாவின் குரல் கேட்டது.

''மாஜி கவர்னருடைய பிள்ளைக்குத்தான் நம்ம ஜானாவைக் கொடுக்கணும்னு நான் நெனைச்சிண்டிருக்கிறது உங்களுக்குத் தெரிஞ்சும், நல்ல நாள் பார்த்து வெத்திலை பாக்கு மாத்திக்கலாம்னு அனந்தராமனிடம் சொன்னீர்களே, இதுக்கு என்ன அர்த்தம்?''

சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தவர் எழுந்து உட்கார்ந்தார்.

''இது நடந்து...''

''நாலஞ்சு நாளாச்சுதான். அந்த மூர்த்தி தன் அண்ணா பெண்ணைக் கூட்டிண்டு பாம்பே போயிருக்கான். அவன் இங்கே வரல்லே. ஜானாவும் வீட்லே இல்லே.''



''சம்பந்தா சம்பந்தம் இல்லாம நீ பேசற மாதிரிப் படறது, சுசீலா.''

''நான் பீடிகையில் இருக்கேன்.''

''சரி, இரு.''

''ஜானா முன்னே மாதிரி என் கிட்டே சரளமாப் பேசறதில்லே.''

''தாலி ஏறணும்னு காத்திண்டிருப்பா.''

''அவ கலியாண விஷயமாப் பேச எனக்கு உரிமை இல்லையா?''

''யார் சொன்னா? பார்க்கப் போனா, அன்னிக்கு நீ தான் என்னைவிட அதிகம் பேசினே. பாயசமும் அதிகம் குடிச்சே!''

''நான் என்னத்தைப் பேசிட்டேனாம்?''

''ஏன், மாப்பிள்ளையை வீட்டோடே வைச்சுக்கணும்னு நீ சொல்லலையா?''

''ஆமாம், சொன்னேன். அதுக்கென்ன?''

''உன் உத்தேசப்படியே கவர்னர் பிள்ளைக்கு ஜானாவைக் குடுத்தாலும், அந்தப் பிள்ளை இங்கே வந்து நம்ம கூட இருப்பானா? அவன் எங்கேயோ பெரிய வேலையில் இருக்கிறவன்.''

''கலியாணப் பேச்சுன்னா அப்படி இப்படி ஒண்ணு ரெண்டு பொய் சொல்லத்தான் வேண்டி வரும்.''

''ஆனா அந்தப் பொய்கள் நன்மையை உத்தேசிச்சு இருக்க வேணும், சுசீலா.''

''இப்ப என்ன சொல்கிறீர்கள்?''

"நான் எதுவும் சொல்லல்லை. உட்கார்ந்திருந்தேன். நீதான் வந்து..."

"எனக்கு இஷ்டமில்லை."

"ஜானாவுக்கும் இஷ்டமில்லேன்னா அனந்தராமன் கிட்டே சொல்லிடறேன்."

"சொல்லுங்கள்."

"ஜானாவின் இஷ்டம்?"

"அவதான் என்கிட்டே இது பத்திப் பேசவே மாட்டேன் என்கிறாளே! இப்பவே, 'ஜானகி மூர்த்தி', 'ஜானகி மூர்த்தி'ன்னு கையெழுத்துப் போட்டுப் போட்டுப் பழகிக்கிறா!"

"மனசிலே ஒண்ணு இல்லேன்னா அது கை விரல் வரைக்கும் இறங்கி வராது. அதோ ஜானா வர்றா. ஜானா!"

ஜானா வந்தாள்.

"என்ன அப்பா?"

"உன் அம்மா ஏதோ பேச ஆசைப்படறா"

"நான் ஒண்ணும் ஆசைப்படலே."

"நீதானே இப்ப ஜானா இது பத்திப் பேசவே மாட்டேன் என்கிறாள்னு தாபப்பட்டுண்டே?"

"எதைப் பத்திப்பா?" என்றாள் ஜானா.

"உன் அம்மா எதைப் பத்தி உன்கிட்டே பேச விரும்பு வாள்?"

"ஓ, அதுவா?"

"எது?" என்றார் சதானந்தம்.

"அதுதான், அப்பா."

"எதுதான், ஜானா?"



"ஏன், அம்மாகிட்டேயே கேளுங்களேன், பக்கத்திலே தானே உட்கார்ந்திருக்கா?"

"என்ன சுசீலா, இப்ப என்ன சொல்றே? தைரியம் இருந்தா, ஜானாகிட்டே நேருக்கு நேர் கேளு"

"என்னப்பா விஷயம்? அம்மா! அப்பா எதைப் பத்தி இப்படிச் சுத்தி வளைக்கிறார்?"

"உன் கலியாணம்!" என்றாள் சுசீலா.

"ஏன், அதுக்கென்ன? ஏம்ப்பா, இது முடிவு எடுத்த விஷயந்தானே?"

"அப்படீன்னு நீ நெனைக்கிறே. நானும் நெனைக்கிறேன். ஆனா உன் அம்மா நெனைக்கலியே."

"ஏன் அம்மா, அப்படியா? உனக்குப் பூரண சம்மதம் இல்லேன்னா..." ஜானா இழுத்தாள்.

திடீரென்று புத்துயிர் வந்தது போல ஆயிற்று சுசீலாவுக்கு. மூர்த்தியிடமிருந்து தன் பெண்ணை மீட்க ஒரு வாய்ப்பு இருப்பதாக அவளுக்குப் பட்டது.

"ஜானா, நீ என் பெண் இல்லே! ராஜாத்தி! என் மனசை நன்னாப் புரிஞ்சு வச்சுண்டிருக்கே. சே, நான் எத்தனை முட்டாள்! இதைத் தெரிஞ்சுக்காமப் போயிட்டேனே!" சுசீலா ஆற அமர மூச்சு விட்டாள்.

சதானந்தம் ஒரு கணம் ஆடிப் போனார். தம் பெண் ஜானாவா இப்படி?

ஜானா சிரித்தாள்

"உனக்குப் பூரண சம்மதம் இல்லேன்னா அது எங்க குத்தம் இல்லே, அம்மா. நீ சம்மதமே தரா விட்டாலும் நான் என் முடிவை மாத்திக் கொள்ளப் போவதில்லை. எனக்கும் மூர்த்திக்கும் குறுக்கே வரக் கூடியவர்கள்

ரெண்டே பேர்தான். ஆனா அவர்கள் குறுக்கே வர மாட்டார்கள்."

"யார்ம்மா, அந்த ரெண்டு பேர்கள்? நான் தெரிஞ்சுக்கலாமா?"

"தாராளமா. ஒண்ணு மிஸ்டர் மூர்த்தி, மற்றொண்ணு, மிஸ் ஜானகி."

"உனக்கு ரொம்பவும் இடம் கொடுத்து வளர்த்திட்டேன். இப்ப அநுபவிக்கிறேன்!" என்றாள் சுசிலா.

"நான் வரேம்ப்பா," என்றபடி ஜானா எழுந்தாள்.

அதே சமயம் வாசலில் கார் வந்து நின்றது. அனந்தராமனும் கோமதியும் இறங்கி முன்னேறி வந்தார்கள்.

ஜானா நகர நினைத்தவள், பரவசத்துடன், "அப்பா, அவரும் அவர் மனைவியும் வருகிறார்கள்!" என்றாள்.

சதானந்தம் எழுந்தார்.

"வாருங்கள்!" என்றாள் சுசிலா. அனந்தராமன் மிக அபூர்வமாக வருகிறவர். அதுவும் மனைவியுடன் வருவது என்பது துர்லபம்.

"உட்காருங்கள். என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டார் சதானந்தம்.

"உனக்குத் தெரியுமே! சூடா, ஸ்ட்ராங்கா அரை டம்ளர் காபி!" என்றார் அனந்தராமன்.

"இதோ!" ஜானா ஓட யத்தனித்தாள்.

"எனக்கு ஒண்ணும் இல்லையா, ஜானா?" என்று சொல்லிச் சிரித்தாள் கோமதி.

"ஸாரி, மாமி."

"ஜில்லுன்னு ஒரு டம்ளர் மோர்."

"இதோ!"



"உன் பெண் நன்னாவே ஓடறாள்!" என்று சிரித்த அனந்தராமன். "இன்னிக்கு வெள்ளிக் கிழமை. சாயங்காலம் ரொம்ப நல்ல வேளைன்னு சாஸ்திரிகள் சொல்றதா இவ சொன்னா. ஸிம்ப்ளா ஒரு லக்னப் பத்திரிகை அதுக்கு முன்னாடி, ஜானா கிட்டே ஒரு பொருளைக் குடுக்கணும்னு இவ ஆசைப்பட்டா. கோமதி, பையிலிருந்து எடு"

நெக்லேசும் வளையல்களும் கண்ணைப் பறித்தன. சுசிலா ஆடிப் போனாள். முழுக்க முழுக்க வைரம். குறைந்தது நூற்று ஐம்பது வைரங்களாவது இருக்கும். பதக்கம் சின்னஞ் சிறு முக்கோண வடிவத்தில் பச்சையும் வைரமுமாகக் காட்சி அளித்தது.

ஜானா காபி, மோருடன் வந்தாள்.

"சதானந்தம், இது சாதாரண நெக்லேஸ்னு நினைக்காதே. எல்லாம் ப்ளூ ஜாகர். முப்பது வருஷம் முன்னாலே ஒரு பாம்பே ஸேட், ஃபீசுக்குப் பதிலா கொடுத்தான். நெக்லேஸாப் பண்ணி இவ கழுத்திலே போட்டேன்."

கோமதி தொடர்ந்தாள்.

"அது பழைய மாடல். எல்லாத்தையும் அழிச்சுக் கொஞ்சம் பச்சையும் வாங்கிப் புது மோஸ்தரில் நெக்லேசும், வளையலும் பண்ணினோம். நேத்துச் சாயங்காலந்தான் வந்தது."

"ஜானாவின் வளையல் சைஸுக்குச் சரியா இருக்குமோ என்னவோ?" என்றாள் சுசிலா.

"ஜானா, இதுக்கு நீயே பதில் சொல்லேன்," என்றாள் கோமதி.

"நான் ஒரு வளையலைக் கழட்டிக் கொடுத்து நெக்லேஸ் மாடலையும் செலக்ட் பண்ணினேன்."

"இவ சொல்லவே இல்லை!" என்றாள் சுசிலா.

''கடைசி வரைக்கும் யாருக்கும் தெரியாது. சொல்லப் போனா, மூர்த்திக்கு எதுவுமே தெரியாது... ஜானா, இதை இவள் உன் அம்மாவிடம் கொடுப்பாள். உன் அம்மா அப்பாவுக்கு நமஸ்காரம் பண்ணி வாங்கிக் கொள் !'' என்றார் அனந்தராமன்.

சதானந்தம் புல்லரித்துப் போனார். அந்த நெக்லேஸ் தன் கழுத்தில் இருந்தால், லேடீஸ் கிளப்பில் யார் யார் எப்படி எப்படி யெல்லாம் பாராட்டிப் புகழ்வார்கள் என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தாள் சுசிலா. மறு கணமே, ஜானா அவளுடைய பெண்தானே என்ற விவேகம் தோன்றியது.

ஜானா முதலில் அனந்தராமனுக்கும் கோமதிக்கும் நமஸ்காரம் செய்தாள்.

கோமதி தாராளமான கைகளுடன் நகைப் பெட்டியை நீட்ட, சிலிர்க்கும் கரங்களுடன் அதைச் சுசிலா பெற்றுக் கொண்டு, ஜானாவிடம் அளித்தாள்.

''சாயங்காலம் கரெக்டா நாலரை !'' என்றார் அனந்த ராமன்- காபியைக் குடித்துவிட்டுக் காலியான டம்ளரைக் கையில் உருட்டிக் கொண்டே.

''நாங்க என்ன கொண்டு வரணும்? எனக்கு ஒண்ணும் தெரியாது.''

''சர்க்கரை, கல்கண்டு, வெத்திலை பாக்கு, பூ, பழம்... போறாது ?''

''சாஸ்திரத்துக்குத்தானே ? போறும்.''

''சதானந்தம் !''

''சொல்லுங்கள்.''

''லக்னப் பத்திரிகைக்கு நான் என் பழைய ஜூனியர் கிருஷ்ணனை மட்டுந்தான் அழைக்கப் போறேன். வேறு



சொந்தக்காரர்கள் கெடையாது. ஆனா நீ உன் உறவுக் காரர் யாரை வேணுமானாலும் அழைச்சுண்டு வரலாம்.''

''ரங்கா குடும்பம்? ராமு- ருக்மிணி இவர்களெல்லாம்?''

''எனக்கு இப்ப இருப்பது ஒரு பிள்ளை. அவன் பெயர் மூர்த்தி !'' என்றார் அனந்தராமன்.

''ஏன்னு தெரிஞ்சுக்கலாமா ? தம்பியின் லக்னப் பத்திரிகைக்கு ரெண்டு அண்ணன்மார்களும் வரலேன்னா, நாளைக்குப் பேச்சுக்கு இடமாயிடும் !'' என்றாள் சுசிலா.

''சொல்லிடறேன். நான் செஞ்சது நியாயமில்லேன்னு உங்க ரெண்டு பேருக்கும் பட்டா, லக்னப் பத்திரிகை வேண்டாம். ஆனா, நாங்க ஜானாவுக்குக் குடுத்த பரிசு அப்படியே அவகிட்டே எங்க ஞாபகார்த்தமா இருக் கட்டும்.'' அனந்தராமன் சற்றே மௌனமானார். திடீரென ஒரு களைப்பு அவரிடம் தோன்றி விட்டது என்று கோமதி நினைத்தாள். அவள் பேசினாள்.

''எங்க மூத்த பிள்ளை அவனுடைய அப்பா பொய்யும் புனைசுருட்டுமாக் குடும்பச் சொத்தைப் பகிர்ந்து கொடுத்தார்னு பழி சொன்னான். இவர் என்ன குத்தம் பண்றவராக இருந்தாலும் பொய் பேசத் தெரியாதவர். அதனால் அந்தப் பிள்ளையை உதறி விட்டார். ராமு இருக்கானே, எங்க ரெண்டாம் பிள்ளை— அவன் இப்ப லாக்-அப்பில் இருக்கான். ஆபீசை மோசடி செஞ்சு, பெண்டாட்டி கையெழுத்தைப் போட்டுப் பாங்கிலிருந்து பணம் எடுத்தான். கட்டின பெண்டாட்டியே அவனுடைய நன்மையை உத்தேசிச்சுக் கைதாக ஏற்பாடு செய்தாள்.''

சுசிலா வாய் அடைத்துப் போனாள்.

''எங்க குடும்பம் கொஞ்சம் அழுக்கா இருந்தது இப்பச் சுத்தப்படுத்தி விட்டேன். அப்படியும் உங்களுக்குத் திருப்தி இல்லேன்னா இந்தச் சம்பந்தம் வேண்டாம்.''

கோமதி இம்மாதிரி அழுத்தமாகப் பேசி அனந்தராமன் கூடக் கேட்டதில்லை. அவர் வியந்தார்.

"யோசிச்சு முடிவை டெலிபோன் மூலமாகச் சொல்லு. நாங்க வர்றோம்."

"எதுக்கு டெலிபோன்? இப்பவே சொல்லிடறோம்!" என்றாள் சுசீலா.

ஒரு கணம் ஜானாவும் சதானந்தமும் திடுக்கிட்டார்கள். அம்மா என்ன உளறப் போகிறாளோ என்று திகிலுடன் அவள் காத்திருந்தாள்.

சுசீலா சரசரவென்று உள்ளே சென்றாள்.

சில நிமிடங்களில் ஒரு வெள்ளித் தட்டுடன் திரும்பினாள். தட்டில் வெற்றிலை பாக்கு, மஞ்சள் குங்குமம் தேங்காய்.

கோமதியிடம் நீட்டினாள். விழுந்து நமஸ்கரித்தாள்.

"நன்னா யிரு, சுசீலா!" என்றாள் கோமதி. பிறகு, "என்னவோ இப்பவே சொல்றேன்னு சொன்னயே?" என்றாள்.

அனந்தராமன் புதுத் தெம்புடன் சிரித்தார்.

"இதுதான் உனக்கும் சுசீலாவுக்கும் உள்ள வித்தியாசம். நீ வார்த்தையாலே பதில் சொல்கிறாய். அவள் செய்கையாலே சொல்கிறாள். வா... வர்றேன், ஜானா. நீயும் நாலரை மணிக்கு வந்துடு. அதில் ஒண்ணும் தப்பு இல்லே. இனிமே நீதானே எங்க வீட்டுப் பெண்? வர்றேன், சதானந்தம். வர்றேன், சுசீலா."

கார் புறப்பட்டுச் சென்று விட்டது.

சில நிமிடங்களுக்கு ஹால் அமைதியில் உறைந்தது.

"என்னால் எதையுமே நம்ப முடியவில்லை. ஒரு கந்தர்வ லோகமே வந்து இறங்கிப் போன மாதிரி இருக்கு!"



என்றாள் சுசீலா. பிறகு, "நெக்லேஸ், வளையல்களிலே அவ்வளவும் ப்ளு ஜாக்கர். இப்ப ப்ளு ஜாக்கர் கெடைக்கிறதே யில்லை. கெடைச்சாலும் காரட் இருபது இருபத்தஞ்சுன்னு வெலை. எத்தனை காரட் இருக்கும்?" என்றாள்.

"பன்னண்டரை!" என்றாள் ஜானா.

"அப்பா! பன்னண்டரையா? எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட மூணு லட்சம் இருக்கும். ஜானா, முதல் காரியமாப் பாங்க் லாக்கர்லே கொண்டு போய் வைக்கணும். என்ன சொல்றேள்? நம்ம ஜானாவுக்கு அதிர்ஷ்டந்தான், இல்லியா?"

"நீ இந்த நெக்லேஸ் வந்ததற்கு அப்புறம் எடை போடறே. நானும் அவளும் முன்னாடியே அவ அதிர்ஷ்டத்தை எடை போட்டுட்டோம். இப்ப முதல்லே கார் கம்பெனிக்குப் போன் செய்யணும்," என்றார் சதானந்தம்.

21203
377960

"எதுக்கு?"

"புது அம்பாஸடருக்கு ஆர்டர் குடுத்திருந்தேன்."

"சொல்லவே இல்லையே? எதுக்குப் புது அம்பாஸடர்? இப்பத்தான் நம்ம பியட்டைப் புதுசா..."

அவள் முடிக்கவில்லை. ஜானா சிரித்தாள்.

சதானந்தமும் சிரித்தார். "அம்பாஸடரை இன்னிக்கு டெலிவரி குடுக்க முடியுமான்னு கேட்கணும்."

"அவசரமில்லை அப்பா. மூர்த்தி திரும்பி வர இன்னும் ஒரு வாரமாவது ஆகும்," என்றாள் ஜானா.

சுசீலாவுக்குப் புரிந்தது. மூன்று லட்சம் வரவில் முக்கால் லட்சம் குறைந்து விட்டது என்று மனம் கணக்குப் போட்டாலும், முகம் வாடவில்லை.

# 32

ரங்கா அன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டான். கடந்த சில நாட்களாக அவன் தினமும் இரவு வேளைகளில் தூக்கத்தைத் தேடித் தேடி அலுத்துப் போய் விட்டான். அப்பாவிடம் பேசினதெல்லாம் தப்பு என்று மன்றாடியும் அவர் அவனை மன்னிக்கவில்லை.

சொர்ணம், அவர்கள் பெண் கலியாணத்தைப் பற்றியே வாய் அலுக்காமல் அலசி அலசிச் சித்திரவதை செய்கிறாள்.

ஒருவனுக்கு ஓர் ஆசை ஏற்பட்டது அவனுக்கு நினைவு வந்தது. யானை மீது பவனி வர வேண்டும். கடை வீதி வழியாகச் செல்ல வேண்டும். ஆனால் யாரும் அவனையோ யானையையோ பார்க்கக் கூடாது. அது போலத்தான் சொர்ணமும். அவள் தன் நகைகளில் எதையும் தர மாட்டாள். தன் தகப்பனார் ஏற்கனவே நொடிந்து போனவர், பணமும் வராது. வீட்டையும் விற்கக் கூடாது. ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளையும் வர வேண்டும். கலியாணம் கோலாகலமாக நடக்க வேண்டும். அவளுடைய லட்ச ரூபாய் நகைகளில் பாதியை அளித்தாலே போதும், சிரமம் இல்லாமல் நடத்தி விடலாம்.

பெண் மாலுவின் ஞாபகம் வந்தது. அப்பா வீட்டில் இருக்கிறாள். இன்னும் எத்தனை நாட்களுக்கு? மூர்த்தி என்ன உபாயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு அவளை அப்பா வீட்டுக்கு வந்து தங்கச் சொல்லியிருக்கிறான்?

எழுந்து பல் தேய்த்த அவன் கடிகாரத்தைப் பார்த்தான். ஐந்து அடிக்கப் பத்து நிமிடம். சொர்ணம் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தாள். ப்ரிட்ஜிலிருந்து முந்தின நாள் மாலை வந்திருந்த பால் பாக்கெட்டை எடுத்துக் காய்ச்சினான். ப்ரு இருந்தது. காபி கலந்து



குடித்து விட்டு ஹாலுக்கு வந்த போது மணி ஐந்தே கால். பேப்பர் இருந்தது. படிக்கலானான்.

சரியாக ஆறு மணிக்குச் சொர்ணம் வந்தாள்.

''இன்னிக்குச் சாப்பாடு ஆனதும் நான் திருவான்மியூர் போறேன். நம்ம மாலு அங்கே இருந்தது போறும்!'' என்றாள் அவள்.

''சரி,''

''இதுவரையில் அங்கிருந்தோ, அவ கிட்டே யிருந்தோ ஒரு தகவலும் இல்லே''

''ஆமாம்.''

''உங்க அப்பா கிட்டே யிருந்து அவ கலியாணத்துக்கென்று ஒரு காசும் பெயரப் போறதில்லை.''

''ஆமாம்.''

''நான் என்ன சொன்னாலும் பூம் பூம் மாடு மாதிரி தலையாட்டுகிறீர்கள்!''

''நீ சொல்றதெல்லாம் சரியா இருக்கு. இன்னிக்கு நான் எட்டு மணிக்கே வீட்டை விட்டுப் புறப்படணும்.''

''ஏன்?''

''மானேஜிங் டைரக்டர் பாம்பே போறார். தாதர் ஒன்பதே முக்காலுக்குப் புறப்படறது.''

''நீங்க போவானேன்?''

''அங்கே யிருந்து லண்டன் போறார். அதனால் போற வழியில் ரெண்டு பேரைப் பிக் அப் பண்ணிக்கணும்.''

''சாப்பாடு?''

''ஒட்டல்லே பார்த்துக்கறேன்.''

"அப்ப நான் இப்ப அவசரப்பட்டு எதுவும் சமைக்க வேண்டாமே ?"

"வேண்டாம்."

"அவர்கள் போன் பண்ணினால் என்ன சொல்லுவது?"

"அவர்கள்னா ?"

"ஐ.ஏ.எஸ்.ஸைப் பெத்தவா."

"ஒரு முடிவை இன்னிக்குச் சாயங்காலம் சொல்லிடறேன்னு சொல்லு."

"முடிவுதான் செஞ்சாச்சே! இனிமே லக்னப் பத்திரிகை, கலியாண மண்டபம், சீர் செனத்தி இதெல்லாந் தானே ?"

ரங்கா எழுந்தான்.

"பதில் சொல்லாமப் போனா எப்படி ?"

"பணம் கொண்டு வா. நகை கொண்டு வா. கன்னிகா தானத்தை ஜாம்ஜாம்னு பண்றேன்."

**செ**ன்ட்ரலில் ஏழாவது பிளாட்பாரத்தில் தாதர் எக்ஸ்பிரஸ் நின்று கொண்டிருந்தது. ஏ, பி, ஸி என்ற இரண்டாம் வகுப்புப் பெட்டிகளை யெல்லாம் தாண்டி அவசரத்துடன் முன்னேறிய ரங்கா, சீதாவைக் கண்டதும் அயர்ந்து போனான். முதல் வகுப்புப் பெட்டிக்கு முன் அவள் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன சீதா ?"

"ஒண்ணுமில்லையே. பாம்பே போறேன்."

"திடீர்னு ?"

"திடீர்னு வந்தேன் ; திடீர்னு போறேன்."

"ஸ்டேஷனுக்கு யாரும் வரவில்லையா ?"



"அதோ உள்ளே மூர்த்தி என் பொட்டிகளைத் தூக்கி வைக்கப் போர்ட்டரை அனுப்பிக் கொண்டிருக்கிறான்."

"அப்பா ஏதானும் சொன்னாரா ?"

"எதைப் பத்தி ?"

"என்னைப் பத்தி."

"என் காது கேட்க எதுவும் இல்லை."

"மனோஜ், சாருகிட்டே எல்லாம் நான் விசாரித்த தாகச் சொல்லு."

"அவசியமா."

"ஜாக்கரதையாப் போ."

"சரி"

"என் எம். டி. இதே வண்டியில் போறார். பார்த்து வழி அனுப்ப வந்தேன்."

"சந்தோஷம்."

"மாலு என் வீட்டுக்கு எப்பத் திரும்பிர்றா ?"

"தெரியாது"

"சரி, நான் வர்றேன்."

நிறையப் பேர்கள் எம்.டி.யைச் சுற்றி நின்றிருந்த தால், ஏற்கனவே வாழ்த்துத் தெரிவித்து விட்ட ரங்கா மெல்ல நழுவினான். எப்படியாவது மூர்த்தியைப் பார்த்து, அப்பாவின் மன நிலையை அறிய வேண்டும் என்ற அவா அவனுள் மூண்டது. சீதா இருக்கும் பெட்டியை அடைந்தான். ரெயில் புறப்பட இன்னும் ஏழெட்டு நிமிடங்கள்தாம் இருந்தன.

அவளுடைய பெட்டியில் சீதா மட்டுமே இருந்தாள்.

"என்ன ரங்கா ?"

''மூர்த்தி எங்கே ?''

''போயாச்சே !''

''ஏன் ரெயில் புறப்படுவதற்கு முன் இப்படிப் போனான் ? இதுதான் வழியனுப்பும் முறையா !''

சீதா பதில் சொல்லவில்லை. அவள் ஏன் தன் வாயால் தன் கதையைச் சொல்ல வேண்டும் ? மேலும் கடைசி நிமிடத்தில், அப்பன் என்ற உரிமையைக் கொண்டாடிப் பெண்ணை ரெயிலிலிருந்து இறக்கி விட்டு இழுத்துக் கொண்டு போய் விட்டால் ? மாலு நல்ல பெண். பெரியதோர் நிறுவனத்துக்குப் போகிறாள். ஒத்தாசையாக மூர்த்தி போகிறான். அவள் யாருக்கும் நல்லது செய்திருக்கிறாளோ இல்லையோ, நிச்சயமாகக் கெடுதல் செய்ததில்லை.

''சரி, நான் வர்றேன்.''

''நீ ஏன் எனக்குச் சரியாக 'ஸெண்ட் ஆஃப்' கொடுக்கக் கூடாது, ரங்கா ? மூர்த்திதான் சரியாகக் கொடுக்கலே.''

''மன்னிச்சுடு, சீதா. எனக்கு அவசர வேலை இருக்கு.''

''சரி, தாங்க்ஸ்.''

ரங்கா முதல் வகுப்புப் பெட்டிகளைத் தாண்டுகையில் முதல் மணி அடித்தது. மனித நெரிசலினிடையே நடந்து சென்றான். இரண்டாம் வகுப்புப் பெட்டிகளை ஒவ்வொன்றாகத் தாண்டிச் செல்லுகையில் திடீரென அவன் சிலையாகி நின்றான்.

அவனுடைய பெண் மாலு, ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருக்கிறாள். ஒரு பிஸ்கட் பாக்கெட்டுடன் வந்த மூர்த்தி கம்பிகளினிடையே நீட்டுகிறான்.

விரைந்து சென்ற ரங்கா, ''மாலு !'' என்று கத்திக் கொண்டே அவளை அணுகினான்.



ஒரு கணம் ஸ்தம்பித்துப் போன மாலு மறு கணமே சுதாரித்துக் கொண்டாள்.

''நான் போய்ட்டு வரேம்ப்பா !''

''எங்கே... எங்கே? மூர்த்தி, இது என்ன புதுக் கதை?''

''பாம்பே போறேன் !'' என்றாள் மாலு.

''எதுக்குப் பாம்பே போறே ?''

''அண்ணா! கத்தாதே. மத்தவாளெல்லாம் உன்னையே பார்க்கிறா.''

''நீ மூடு வாயை. மாலு, எதுக்குப் பாம்பே போறே?''

இரண்டாவது மணி அடித்தது. மூர்த்தி நகர்ந்து பெட்டியினுள் ஏறிக் கொண்டு மாலு அருகே உட்கார்ந்து கொண்டான்.

''ஒரு பெரிய கம்பெனியிலே நல்ல வேலை கெடைச்சிருக்கு. உங்க கிட்டேயும் அம்மா கிட்டேயும் சொன்னா, கலியாணந்தான் முக்கியம்னு என்னை உக்காத்தி வைச்சிடுவீங்க. எனக்கு இப்பக் கலியாணம் புடிக்கலே. அப்படியே புடிச்சாலும் அந்த ஐ. ஏ. எஸ். மூஞ்சி புடிக்கலே.''

ரெயில் நகர்ந்தது.

ரங்கா கூடவே ஓடினான்.

''யார் துணை ?''

''கொஞ்ச நாளைக்கு இதோ மூர்த்திச் சித்தப்பா. அப்புறம் தெய்வம்.''

''மூர்த்தி...''

ரெயில் வேகமெடுத்தது.

''தாற்காலிகமாக உனக்கு ஒரு பிரச்னை தீர்ந்தது, அண்ணா !''

மூர்த்தி கத்தினான்.

ரெயில் வேக மெடுத்தது.

ரங்காவினால் மேலும் ஓட முடியவில்லை.

ஒரு பிரச்னை தீர்ந்தது.

சொர்ணம் திருவான்மியூர் போவாள். வெறுங் கையுடன் திரும்பி வருவாள்.

சாயங்காலம் ஐ. ஏ எஸ்.ஸைப் பெற்றவர்களுடன் அவன் டெலிபோன் மூலமாகத் தொடர்பு கொள்வான்.

முடிவைத் தீர்மானமாகச் சொல்லுவான்.

அதன் பிறகு பிரச்னை தீர்ந்து விடும்.

ஆனால் சொர்ணம் இருக்கிறாள்.

அவள் தீராத ஒரு பிரச்னை.

பிரச்னையுடன் வாழ்ந்து பழக்கப்பட்ட அவன் எப்படியோ சமாளித்துக் கொள்வான்.

காரில் ஏறும் போது ஒரு பெரிய சுமை- ஒரு பாரம் இறங்கி ஓடி விட்டது போல் மனம் லேசாயிற்று.

## 33

வீடு வெறிச்சோடியது.

சாரு அறைக்கு அறை சுற்றிச் சுற்றி வந்தாள். அரை மணி நேரத்துக்கு முன்னால் வந்த பால் பொட்டலம் இன்னும் அப்படியே டீப்பாயின் மேல் கிடந்தது. அதை எடுக்க வேண்டும், பாத்திரத்தில் ஊற்றி, அடுப்பைப் பற்ற வைத்துக் காய்ச்ச வேண்டும் என்று எதுவும் தோன்றவில்லை.

மனோஜ் அன்றிரவு அகமதாபாத்திலிருந்து வருகிறான். காலை விமானத்தில் போனவன் இரவு விமானத்தில்



திரும்புகிறான். என்ன வேகமான உலகம்! ஏன்? வேகத்தில் உலகமே சின்னதாகி விட்டது. மாட்டு வண்டிக் காலத்தில் குறைந்தது இருபது நாட்களாவது ஆகியிருக்கும். பஸ் என்றால் இருபது மணி நேரம். ரெயில் பன்னிரண்டு விமானம் என்றால், அகமதாபாத் இவ்வளவு சமீபத்திலா இருக்கிறது?

திடீரென்று ஆதிசங்கரர் நினைவு வந்தது. காடு, மலை, பள்ளம், வெயில், மழை, முட்செடிகள், பாறைக் குவியல்கள், பாலமில்லா நதிகள்... கேரளத்தின் ஒரு முனையிலிருந்து சின்னஞ் சிறு பாலகனாகப் புறப்பட்டு யார் துணையுமில்லாமல், தெய்வமே வழிகாட்டியாக— இல்லை, தாமே தம் சுடர் விளக்கின் ஒளி வழியில்— தேசமெல்லாம் கண்டு, பிறரால் இயலாத அரிய சாதனைகளையெல்லாம் புரிந்து காரிய சித்தி முடிந்ததும் மறைந்தாரே! அவரிடம் இருந்த சக்தியில் லட்சத்தில் ஒரு பங்கு இந்த விஞ்ஞான விமானத்துக்கோ அல்லது அதில் பறக்கும் பாமரனுக்கோ உண்டா?

சாரு உட்கார்ந்தாள். மதுவின் நினைவு வந்தது.

என்ன அபத்தமான நினைவுத் தொடர்? மனோஜ், சங்கரர், இப்போது மது.

மது அவளுடைய வேண்டுகோளை உதாசீனம் செய்து விட்டான். அவள் வேண்டுமானால் அவன் நடத்துகிற மூன்று ஓட்டல்களுக்கும் அடிக்கடி வந்து மேற் பார்வை செய்யலாமாம். விளம்பரக் கம்பெனி ஒன்றை அவள் துவக்கிக் கையைச் சுடித்துக் கொள்ள அவன் காரணமாக இருக்க மாட்டானாம். ஒரு பெரிய ஸ்தாபனத்தில் பணி புரிவது வேறு, ஒரு நிறுவனத்தைத் துவக்குவது வேறு. மனிதனை மனிதன் அடித்துச் சாப்பிடும் உலகம் அது. சென்ற வருடம் மூன்று கோடிக்கு வியாபாரம் செய்த கம்பெனி இந்த ஆண்டு அரைக் கோடிக்குக் கீழே இறங்கி

விடும். கழுகுகளுக்கு நடுவே ஒரு சிட்டுக் குருவியாகப் பறக்கக் கனாக் காண்பது முட்டாள்தனம்.

சாரு அவன் சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்தாள்.

மதுவுக்கு அவள் மீது அக்கறை இருக்கிறது. அதனால் தான் ஆழமான குழியில் அவள் காலை விட யத்தனிக்கையில் தடுத்து நிறுத்துகிறான்.

திடீரென மின்சார மணி ஒலித்தது.

யார்? ஒருவேளை மதுவே வந்திருக்கிறானோ?

கதவைத் திறந்தாள்.

யாதவ்— ஹரிலால் யாதவ்; அவளுடைய விளம்பரக் கம்பெனியில் ஏழு ஆண்டுகளாகப் பணி புரிகிறவன். அதிபருடைய வலது, இடது கைகள்.

"வணக்கம், மிஸ் சாருமதி, உள்ளே வரலாமா?"

"தாராளமாக."

யாதவ் ஐந்து அடி ஒன்பது அங்குலம். முக வெட்டும் சரி, முக பாவனையும் சரி, அவனைச் சினிமா உலகத்தில் தள்ளி இருக்க வேண்டும். அந்த உலகத்தின் அதிருஷ்டம் அவன் மீது விழவில்லை. ஆனால் விளம்பர உலகில் அவன் தனி ரகம். ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது இரண்டு மூன்று விளம்பரதாரக் கம்பெனிகளையோ, பத்து லட்சத்துக்காவது வியாபாரத்தையோ கொண்டு வராமல் இருக்க மாட்டான். எவ்வளவோ பேரால் முடியாததை இவனால் எப்படிச் சாதிக்க முடிகிறது என்று பலர் வியந்தது உண்டு. அவனுடைய படம் என்றாவது ஒரு நாள் ஆங்கிலம், இந்தி, மராத்தித் தினசரிகளில் வரவில்லை என்றால் அன்று தினசரிகளுக்கு விடுமுறை. பற்பசை, பிளேடு, சிகரெட், சோப் என்று எத்தனையோ பொருள்களுக்குத் தனியாகவும் ஜோடியுடனும் வருவான்.



இப்பேர்ப்பட்ட புள்ளியை அலுவலகத்தில் நெருங்கவே சாரு உட்பட எல்லாரும் பயப்படுகையில் ஏன் அவளைத் தேடிக் கொண்டு வர வேண்டும்?

ஒரு சோபாவில் அவன் உட்கார்ந்தான். அவள், "என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"குளிர்ச்சியாக ஏதாவது..."

ஃபிரிட்ஜிலிருந்து தக்காளி ரசத்தையும் ஐஸ் கட்டிகளையும் எடுத்தாள்.

"உங்களை என்ன, ரெண்டு மூணு நாளா ஆபீஸ்லே காணோம்?" என்று ஆரம்பித்தான் யாதவ்.

அவள் ஐஸ் ட்ரேயிலிருந்து ஐஸ் கட்டிகளை எடுப்பதில் முனைந்திருந்தாள்.

"லீவ் லெட்டர் அனுப்பி யிருந்தேனே! டெலிபோன்லேயும் தகவல் கொடுத்திருந்தேனே!"

"அப்படியா?"

"நீங்கள் பெரிய இடத்தில் இருக்கிறீர்கள். சின்ன விஷயங்கள் உங்கள் காதுவரை வர நியாயமில்லை!" என்று கூறிச் சாரு சிரித்தாள்.

"சாருமதி, உங்களுக்கு ஒரு விஷயம் தெரிந்திருக்கும்னு நெனைக்கிறேன்."

"என்ன அது?" ஐந்தாறு ஐஸ் கட்டிகள் கிடைத்து விட்டன. ஜூஸ் தயாராகி விட்டது. டீப்பாயின் மேல் வைத்தாள்.

"சாப்பிடுங்கள்."

"நீங்கள் சாப்பிடவில்லையா?"

"வேண்டியிருக்கலே. என்ன விஷயம் நீங்க சொல்ல வந்தது?"

''மது வேலையை விட்டாச்சு !''

''தெரியுமே !''

''இன்னொரு விஷயம் கேள்விப் பட்டேன். ஷீலா நாயர் சொன்னார்.''

''என்ன ?''

''சின்னதா ஒரு விளம்பரக் கம்பெனி ஆரம்பிக்கணும் என்கிற ஆசை உங்களுக்கு இருக்கா ?''

சாரு சிரித்தாள்.

''ஆமாம், மிஸ்டர் யாதவ். ஆனா ஆசைப்பட்டா மட்டும் போதுமா ? நடத்தத் தெரிய வேண்டும் இல்லையா ? ஒழிந்த வேளைகளில் எனக்கு உதவ மதுவைக் கேட்டுக் கொண்டேன். 'விளம்பர உலகம் புதை மணல் மாதிரி ; காலை விட்டால் உள்ளே இழுத்துக் கொண்டே போயிடும் !' என்று அவர் எச்சரிக்கிறார்.''

''அதுதான் உண்மை. மது சொன்னதுதான் நிதரிசன நிலை. சாருமதி ! மது இல்லாத நம்ம கம்பெனி, நாடி இல்லாத உடம்பு மாதிரி. சின்ன வயசில் எத்தனை அனுபவம் ! எவ்வளவு புதுப் புது யுக்திகளை அவன் கொடுத்திருக்கிறான், தெரியுமா ? அவனுடைய உண்மை வருமானம் என்னவென்று ரொம்பப் பேருக்குத் தெரியாது. இப்பச் சொல்றேன். அவன்தான் வேலையை விட்டாச்சே! நாலாயிரம் !''

சாரு அயர்ந்து போனாள். நாலாயிரம் ரூபாய் வருமானத்தையா மது தூக்கி எறிந்திருக்கிறான் ? அதுவும் எங்கெங்கோ பரவலாகக் கிடக்கும் ஒட்டல்களை நடத்த ! என்ன மனிதன் இவன் ? சிற்றப்பாவின் ஆவலை நிறை வேற்ற வேண்டியதுதான். ஆனால் அதற்காக ?

அவளுடைய சிந்தனைக்குக் குறுக்கே வந்து பேசினான் யாதவ்.



''ஆனா, மிஸ் சாருமதி, உங்க யோசனையை நான் வரவேற்கிறேன். நான் பன்னண்டு வருஷமா இந்தத் துறையில் இருக்கேன். நெளிவு சுழிவு எல்லாம் எனக்கு அத்துப்படி. கொஞ்ச நாளைக்கு விளம்பரத்துக்கு உண்டான பணத்தை முதலில் கட்டி விட வேண்டும். பத்துச் சதவீதந்தான் கமிஷன் கெடைக்கும். ஆனா ஒரு வருஷத்துக்குள்ளே கடன் வசதி பெற, அதாவது விளம்பரம் வந்த பிறகு பணம் செலுத்த, அதாவது விளம்பரதாரர்களிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்ட பிறகு பத்திரிகைகளுக்குப் பணம் செலுத்த முடியும். இதுக்கு நான் பொறுப்பு !''

சாருவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.

''அப்படின்னா, நான் ஒரு கம்பெனி ஆரம்பிச்சா, நீங்க உதவி பண்ணத் தயார்னு சொல்றீங்களா ?''

''உதவி மட்டும் இல்லே.''

''பின்னே ?''

'பாகஸ்தனாகவும் இருக்கேன்.''

சாருவுக்கு அதிர்ச்சி.

''இப்ப இருக்கிற வேலை ?''

''பன்னண்டு வருஷமா இருக்கேன், மிஸ் சாருமதி. இருக்கிற முதலாளிக்கு வலக்கைங்கற பேரு ஆபீஸ்லே. ஆனா எனக்கு பிஸினெஸெல்லாம் நான் கொண்டுவந்தது. மூவாயிரம் என்ன வரும்படி தெரியுமா ? சிரிக்காதே. முதலாளி சொன்னார்: தான். ஒரு தடவை கேட்டேன். சாமர்த்தியம் 'மதுவுக்கு மூளை இருக்கு, உனக்குச் சாமர்த்தியம்னா இருக்கு'ன்னு. இதுக்கு என்ன அர்த்தம் ? ஆனா மாடலா க்ளெவர் என்கிற அர்த்தத்தில் பேசினார். மேலே வந்து இருப்பதில் எனக்கு மாசம் ஆயிரத்துக்கு விடுகிறது.''

''கம்பெனியை விட்டு விடுவதுன்னு தீர்மானம் செஞ்சிட்டீங்களா ?" என்று கேட்டாள் சாரு.

''அது உன்னைப் பொறுத்தது ; உன் முடிவைப் பொறுத்தது."

''அதாவது ?"

''நீ கம்பெனி ஆரம்பிக்க நான் எல்லா உதவிகளையும் செஞ்சு தருகிறேன். விளம்பரக் கம்பெனிக்கு முக்கியமா வேண்டியது, நல்ல இடம், கவர்ச்சியான தோற்றம். சர்ச் கேட் பக்கத்தில, ஈராஸ் தியேட்டருக்கு நாலு கட்டிடம் தள்ளி ஒரு ஃப்ளாட் இருக்கு. என்னுடைய ஃபிளாட். என் அப்பா ஊதாரின்னு என் தாத்தா அதை என் பெயருக்கு எழுதி வைத்தார். நான் தனியாப் பேய் மாதிரி அதில இருக்கேன். இன்னிக்கு வாடகைக்கு விட்டா நாலாயிரம் வரும். ஆனா ஏன் விடலை ? அப்புறம் ஃபிளாட்டே போயிடும். ஒரு வருஷத்துக்கு அப்புறம் வாடகையும் வராது. என்ன சொல்றே, மிஸ் சாருமதி ?"

''கம்பெனியைத் துவக்க இடப் பிரச்னை இல்லே !" என்று கூறிச் சிரித்தாள் சாருமதி.

திடீரென்று யாதவுக்குக் கோபம் வந்தது.

''நான் ரொம்ப அக்கறையாப் பேசிண்டு இருக்கேன். நீ சிரிக்கிறே."

''அப்படியா ? சரி, ரெண்டு பேரும் பாகஸ்தர்கள் ; இடப் பிரச்னையும் இல்லே, சரி. விளம்பரம் கொடுக்க வாடிக்கைக்காரர்கள் ?"

''இது புத்திசாலித்தனமான கேள்வி. இப்ப நம்ம கம்பெனியின் வருடாந்தர பிஸினஸ் கிட்டத்தட்ட ஆறு கோடி. அதாவது பத்திரிகை, ரேடியோ, டி வி, சினிமா ஸ்லைடு எல்லாம் சேர்த்து. சர்வ தேச ஏர்லைன்ஸ், துணி மில்கள், ஒரு சிறந்த குழந்தைகள் உணவு, எல்லாரும் தேய்ச்சுக்கிற சோப், குடிக்கிற குளிர் பானம், இன்னும் எத்தனை எத்தனையோ ! இதில் கிட்டத்தட்ட ரெண்டு கோடி ரூபாய் வருகிறது. நான் என் சாமர்த்தியத்தால் கொண்டு வந்தேன்."



''நம்ம கம்பெனிக்கு இந்த ரெண்டு கோடி வந்து விடும்னு சொல்றீங்களா ?"

''உடனே வராது. ஆனா போகப் போக வரும். முதல் ஆறு மாசம் பல்லைக் கடிச்சுண்டு இருக்கணும். மெல்ல மெல்ல வாடிக்கைக்காரர்கள் வருவார்கள். முதல்லே ஒரு லே-அவுட் ஆர்ட்டிஸ்ட், ஒரு காபி ரைட்டர், அகௌண்ட் எக்ஸிகியூடிவ் தேவைப்படும். அவர்களுக்குச் சம்பளம், போன் செலவு இதெல்லாந்தான் பாரம். ஆனா ஒண்ணு, நான் ஆபீஸ்லே உட்கார மாட்டேன். டெலிபோன் டைரெக்டரியை ராத்திரி பூராப் படிச்சுக் குறிப்பு எடுத்துண்டு பகல் பூராச் சுத்துவேன். என்னைப் பார்த்ததுமே எல்லாரும் அடையாளம் கண்டு கொள்ளு வார்கள். என் போட்டோதான் விளம்பர மாடலாத் தினசரி பேப்பர்லே வந்துண்டிருக்கே !"

''எல்லாம் கேட்க நன்னா இருக்கு. கூட்டு வியாபாரம்னா என்னோட பங்கு ?"

''ரெண்டு லட்சம்."

''நீங்க ரெண்டு லட்சமாக்கும் ?"

''அதுக்கும் மேலே."

''புரியலே."

''என் இடம், என் உழைப்பு இவையே பல லட்சங் களுக்குச் சமம்."

''நாளைக்குக் கடையை மூடினால், எனக்கு ரெண்டு லட்சம் ரொக்கம் நஷ்டம். ஆனா உங்களுக்குக் கண்ணுக் குத் தெரியாத உழைப்பு நஷ்டந்தான். இல்லையா, மிஸ்டர் யாதவ் ?"

''மதுவுடன் ஆரம்பித்து நஷ்டம் ஏற்பட்டிருந்தால் ?"

''இங்கேதான் நீங்க என்னைப் புரிஞ்சுக்கலே, மிஸ்டர் யாதவ். நீங்க ராத்திரி பூரா டெலிபோன் டைரெக்டரியை மனப்பாடம் செஞ்சுட்டு, பகல் பூராத் தெருத் தெருவா விளம்பரத்துக்கு அலையணும். ஆனா மது இருந்தா, அவருடைய மூளைக்கு— நீங்களே ஒத்துக் கொண்ட விஷயம்— பிஸினஸ் வீடு தேடி வரும். இன்னும் ஒரு விஷயம். இதோ இந்த வீட்டிலே என் கம்பெனி ஆபீஸ் இருக்கும். கவர்ச்சிக்கும் சிப்பந்திகளுக்கும் செலவு செய்ய மாட்டேன். நல்ல நாலஞ்சு வாடிக்கை வர்த்தகங்க அவை சின்னவையா இருந்தாக் கூடப் போதும்னு இருப்பேன். என்னுடைய முதல் வாடிக்கைக்காரரே என் அப்பா வேலை பார்த்த கம்பெனிதான். அது வருஷத்துக்கு லட்சந்தான் விளம்பரத்துக்குச் செலவழிக்கிறது. எப்படி என் திட்டம் ?"

''உருப்படாத திட்டம் !"

''அதனால்தான் மது என்னைத் தடுத்து நிறுத்தியிருக் கிறார்."

''அப்ப நான் வந்ததில் பிரயோஜனம் இல்லை."

''ரொக்கமா ரெண்டு லட்சம் போடுங்கள். நானும் போடறேன்."

யாதவ் சிரித்தான்.

''மிஸ் சாருமதி, விளம்பர யுக்திகளைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும் ?"

''அப்ப ஏன் என்னைத் தேடி வந்தீங்க ?"

''உங்களைப் பார்ட்னராக்க."

''அதாவது பணம் போடும் பாகஸ்தராக்க ?"

''ஆமாம்."

''மது வரட்டும். ஆலோசித்து விட்டுச் சொல்றேன்."



''சரி !"

சட்டென்று யாதவ் எழுந்தான்.

''நான் வர்றேன் சாருமதி !"

''சரி, நன்றி."

''நான் இங்கே வந்த விஷயம் ரகசியமாகவே இருக் கட்டும். முக்கியமாக ஷீலா நாயருக்குத் தெரிய வேண்டாம். அது ஒரு ஓட்டை வாய்."

''சொல்ல மாட்டேன்."

யாதவ் வெளியேறினான்.

அலை ஓய்ந்தாற் போல் அமைதி நிலவியது.

திடீரென மதுவுக்குத் தகவல் கொடுக்க வேண்டும் என்ற வேகம் எழுந்தது. கடிகாரத்தைப் பார்த்தாள். மூன்றரை. வழக்கமாக இந்த வேளையில் அவன் அந்தேரி யில் இருப்பான். மாதுங்கா, காட்கோபர் இந்த இடங் களை விட அந்தேரி அதிகத் தூரத்தில் இல்லை.

டெலிபோன் செய்தாள். அவளுடைய அதிருஷ்டம் மதுவே டெலிபோனை எடுத்தான்.

விஷயத்தை ரத்தினச்சுருக்கமாகக் கூறிவிட்டு அவனை உடனடியாக வரும்படி கேட்டுக்கொண்டாள். மாலை ஆறு மணிக்கு முன்னால் வர முடியாது என்று கூறிய அவன் யாதவ் எப்படிப் பட்டவன் என்பதையும் கோடி காட்டி னான்.

புதுத் தெம்பு அவளுள் மலர்ந்தது— மாலையில் மது வருவான். நிச்சயமாக ஒரு மணி நேரமாவது அவனுடன் பேசலாம். பாதி பேசிக் கொண்டிருக்கையில் மனோஜ் வருவான். அதன் பிறகு இருவரும் மதுவைக் கட்டாயப் படுத்தி இரவுச் சாப்பாட்டுக்கு அமர்த்தலாம். சிநேகிதி சரஸ்வதியும் வந்துவிட்டால் இன்னும் சிறப்பாகிவிடும்.

மலர்ந்த புதுத் தென்பில் பால் பாக்கெட்டை எடுத்துக் கொண்டு சமையலறைக்கு ஓடினாள். ராத்திரி ஏதேனும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்று தோன்றியது. பாசுமதி அரிசி இருந்தது. மதுவுக்குப் புலவு என்றால் பிடிக்கும். பட்டாணியும் காரட்டும் மட்டும் வாங்கினால் போதும். மற்றக் காய்கறிகள் வீட்டிலேயே இருக்கின்றன.

பால் கொதித்தது.

டெலிபோனும் அழைத்தது.

காஸ் அடுப்பை அணைத்து விட்டு வந்தாள். போனை எடுத்தாள்.

"சாருமதி பேசுகிறேன்."

"யாரு, சாருமதியா? நான் அட்வகேட் கிருஷ்ணன் சென்னைலேர்ந்து பேசறேன். இன்னிக்குத் தாதர்லே அம்மா, மூர்த்தி, ரங்கா பெண் மாலதி எல்லோரும் புறப்பட்டிருக்கிறார்கள். நாளைக்குக் கார்த்தாலே வந்து சேருகிறார்கள்."

"அப்படியா? ரொம்ப ஸந்தோஷம்!"

"உன் தாத்தாதான் போன்லே தகவல் கொடுக்கச் சொன்னார். வீடு பூட்டியிருக்குமோன்னு கவலை அவருக்கு."

"என் அம்மா வர்றான்னா எல்லாக் கதவுகளும் தெறந்திருக்கும்."

"சௌக்கியந்தானே?"

"இருக்கோம்."

"மனோஜ் கிட்டே சொல்லு."

"சரி."

"வச்சுடட்டுமா?"



"சரி."

சாருவுக்குத் தலையைச் சுற்றியது. காதில் விழுந்ததெல்லாம் உண்மையா அல்லது கனவா என்ற பிரமை ஏற்பட்டது.

வெறும் பட்டாணியும் காரட்டும் மட்டும் வாங்கினால் போதாது, நிறையக் காய்கறிகள் வாங்க வேண்டும் என்று எண்ணினாள். அம்மாவுக்கு விசேஷமாக என்ன பிடிக்கும் என்று நினைவு கூர்ந்து பார்த்தாள் முழுக்கடலை போட்ட கத்தரிக்காய் ரசவாங்கியும், கடுகு அரைத்துப் போட்ட வெள்ளரிப் பச்சடியும் அம்மா விரும்பிச் சாப்பிடுவாள்.

மூர்த்திக்கு?

அவள் மனம் சிந்தனையில் ஓடவில்லை.

மாலுவைப் பற்றி அதிகம் நினைக்காத அவள், ஏன் ரங்கா மாமாவின் பெண் பம்பாய் வருகிறாள் என்ற கேள்வியை இரண்டு மூன்று தடவை கேட்டுப் பார்த்துக் கொண்டாள்.

## 34

பெண்களுக்கென்று பிரத்தியேகமாக இருந்த முதல் வகுப்புப் பெட்டியில் சீதா தன்னந் தனியாக உட்கார்ந்திருந்தாள். இன்னொருத்தி உஷாகிரன் என்ற பெயர் கொண்ட பிரயாணி. கடைசி நிமிடத்தில் இறங்கி வேறு ஒரு பெட்டிக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு போனது, சீதாவுக்கு ஒரு வகையில் நல்லதாயிற்று. அவள் நாடிய தனிமை கிடைத்தது.

ஆனால் அவள் விரும்பிய தனிமையே ரெயில் ஓட ஓட ஒரு பாரமாக அமைந்தது. திருவள்ளூரைக் கடப்பதற்குள் தனியே என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்க

லானாள். மூர்த்தி வைத்து விட்டுப் போன அரை டஜன் மலைப்பழமும் இரண்டு கமலாக்களும் கண்ணில் பட்டன. ஒரு பழத்தை எடுத்து உரித்தாள். ஒரு சுளையை வாயில் போட்டுக் கொண்டாள். இனிப்பாக இருந்தது. ஆனால் ருசிக்கவில்லை. மீதியை வெளியே எறியக் கை ஓங்கியது. ஆனால் மறு கணமே கையை இழுத்துக் கொண்டாள்.

பத்திரிகையைப் பிரித்தாள். கண்ணாடியைப் போட்டுக் கொண்ட பிறகும் எல்லாம் ஒரே வெள்ளையாய் அல்லது ஒரே கறுப்பாய்த் தெரிந்தன. பத்திரிகை கையினின்றும் தானாக நழுவியது.

சுற்று முற்றும் பார்த்தாள். இரண்டு மின்சார விசிறிகளும் எண்ணெய்க்காகக் கதறிக் கொண்டிருந்தன. நிறுத்த வேண்டும் என்று மனம் விரும்பியது. உடல் அசையவில்லை.

கண்களை மூடினாள்.

நாத் வந்தார். கூடவே பார்த்த— பார்க்காத பெண்களெல்லாம் அவர் படுத்திருந்த கட்டிலைச் சுற்றிச் சுற்றி எக்காளமிட்டுக் கொண்டு ஓடிக் கொண்டே இருந்தார்கள்.

நாத்தின் கண்களில், அவள் ஒரு காலத்தில் பார்த்து, அநுபவித்து, ரசித்துப் பரவசமாகிய வெறி கூத்தாடியது. இப்போது சீதா இதயக் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

பழைய நினைவுகளிலிருந்து அவள் விடுவித்துக் கொள்ள எவ்வளவோ முயன்றாள். அந்த நினைவுகள் அவளைத் துரத்திக் கொண்டு வந்தன.

அவளுடைய கல்யாணம் ஒரு தை மாதம் வெள்ளிக் கிழமை அன்று விமரிசையாக நடந்தது. அன்று இரவே முதல் இரவு.



படித்த பெண்ணே ஆனாலும் பெண்மை தோற்றுவிக்கும் அச்சம் அவள் உடல் எங்கும் வியாபித்தது. நாம் ஒரு மரக் கட்டையாகிக் கொண்டிருக்கிறோம், என்ற உணர்ச்சியில் அவள் உடல் வியர்க்க நின்றாள். சாந்தி முகூர்த்த அறையில் நாத்தின் பாட்டனாரும் பாட்டியும் பழைய கால வழக்கத்தை ஒட்டிக் கட்டிலில் சேர்ந்து உட்கார்ந்திருந்தார்கள். சீரும் சிறப்புமாக வாழ்ந்து, நன் வித்துக்களையும் உண்டாக்கி நன் முத்துக்களாக உருவாக்கிய மூத்தோர் தம்பதியாகக் கட்டிலில் உட்கார்ந்தால் சாந்தி முகூர்த்த தம்பதி சீரும் சிறப்புமாக வாழ்வார்களாம். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் முத்துக்களாய் ஜொலிப்பார்களாம்! இந்த வழக்கத்தின் அடிப்படையில், நாத்தின் தாத்தா பாட்டி உட்கார்ந்து எழுந்த பின், அவளுடைய உறவுக்காரப் பெண்களின் கெக்கலிப்பில், தங்கை அகிலாவின் நையாண்டிச் சீண்டலில் சீதா உள்ளே சென்றாள்.

அன்று நாத் அவளுடைய மனம் அறிந்த நாத்தாக இருந்தான். தான் கொடுத்து வைத்தவள் என்ற எண்ணம் ஏற்படுத்திய இறுமாப்பில் அவள் மறுநாள் கண் விழித்தாள். கல்யாணமானதும் புகுந்த வீடு சென்ற அவள், மாசி முடிந்து பங்குனி பிறக்கும் நாளன்று மாமியார் பூக் கட்டிக் கொடுத்து மஞ்சள் சரட்டை வாங்கிக் கொண்டாள். பிறந்த வீட்டிலே அம்மா முணுமுணுக்கும் வார்த்தைகள் காதில் ஒலித்தன. சாவித்திரி சத்தியவானை நினைத்துக் கூறிய வேண்டுதலாம்.

'உருகாத வெண்ணெயும் ஓர் அடையும் நான் நோற்றேன்; என்றென்றும் என் கணவன் என்னைப் பிரியாமல் இருக்கச் செய்!'

சீதா முணுமுணுத்தாள்.

புகுந்த வீட்டில் கணவன்தான் சரடு கட்ட வேண்டுமாம். அம்மா தானே கட்டிக் கொள்ளுவாள். பெண்களுக்கும் கட்டி விடுவாள்.

புகுந்த வீட்டில் கணவன் கட்டியபோது மனம் புல்லரித்தது. உடல் பரவசத்தில் சிலிர்த்தது.

அடுத்த தை மாசத்துக்குள் மனோஜ். தலைச்சன் பிறந்து குறைந்தது நான்கு மாதங்களாவது பிறந்த வீட்டில் இருக்க வேண்டும் என்று அம்மா வற்புறுத்தினாள். ஆனால் நாற்பத்தைந்து நாட்களானதுமே புருஷனைப் பார்க்கச் சீதா ஓடி விட்டாள். 'ஏன் அவசரப்பட்டு இந்தப் பிஞ்சுக் குழந்தையையும் எடுத்துண்டு ஓடி வந்தே?' என்று நாத் கடிந்து கொண்ட போது அவள் கூறிய வார்த்தைகள் நெஞ்சிலிருந்து பீரிட்டன.

"நீங்க இல்லாத உலகம் எனக்குச் சூனியமாகத் தோணறது."

மனோஜுக்கு ஐந்து வயது நடக்கையில் மீண்டும் பிறந்தகம் செல்ல வேண்டிய நிலைக்கு வந்தாள் சீதா. ஆனால் அவள் சென்னை செல்ல விரும்பவில்லை. மாறாக அம்மாவைப் பம்பாய்க்கு வரவழைத்துக் கொண்டாள்.

நாத் அலுவலகம் சென்று விட்டால் உலகமே அஸ்தமித்து விட்டதான பயம். நாத் வெளியூர் சென்று விட்டால் அவன் திரும்பி வரும்வரை எப்படிக் காலம் கழிப்போம் என்ற பீதி.

குழந்தைகள் பெரியவர்களானார்கள். கணவனிடம் சில மாற்றங்களைக் காண ஆரம்பித்தாள் சீதா.

ஒரு நாள் மதுவின் நெடி. இன்னொரு நாள் அசைவ உணவின் வாசனை.

சீதா கேட்டாள்.



"என்ன செய்யறது, சீதா? வெளி நாட்டு மனிதர்களோடு பழகறப்போ இதெல்லாம் நிர்ப்பந்தமான அவசியங்களாகி விடுகின்றன."

"வெளி நாட்டிலேயே பிறந்து வளர்ந்த பெர்னார்ட் ஷா?"

"பெர்னார்ட் ஷா எங்க ஆபீஸ்லே ஒரு பதவியில் இருந்தா என்னையே சமைச்சுச் சாப்பிட்டிருப்பார்."

சீதா இந்த இரண்டு வழக்கங்களையும் அநாவசியமாய்ப் பெரிது படுத்தவில்லை. கணவன் அன்று இருந்தது போல இன்றும் அன்புடன் இருக்கிறான். இரண்டாவது குழந்தை பிறந்ததும் நாளடைவில் அவளுடைய இடுப்பு தேவைக்கு அதிகமாகவே பருத்து, வயிறும் பெரிதாகியது. அவன் அதைப் பற்றிக் கேலியாகப் பேசினானே தவிர, கட்டிலிலிருந்து விலகிக் கொள்ளவில்லை.

அவள் அவனுக்காக இடுப்பையும் வயிற்றையும் குறைத்துக் கொள்ள என்ன என்னவோ செய்தாள். உடற்பயிற்சி முகாம்களுக்குச் சென்றாள். சர்க்கரையைக் குறைத்துக் கொண்டாள்.

அவள் மீண்டும் பழைய சீதாவாகிக் கொண்டிருக்கும் நிலையில்தான் அவள் ஒரு நாள் ஏமாந்து போனாள்.

அவளுடைய மனத்தில் அவன் ஒருவனே என்றென்றும் இருந்தான். அந்த ஜோதியைத் தவிர வேறு எதுவும் அவளுடைய இதய பீடத்தில் எரியவில்லை. அவளுடைய நாடி நரம்புகளில் எல்லாம், அவளுடைய நாளங்களில் எல்லாம், அவளுடைய மயிர்க் கால்களிலெல்லாம் அவளுடைய இதய ஜோதியின் ஒளி கோடிக் கணக்கான அகல் விளக்குகளாகச் சுடர் விட்டுக் கொண்டிருந்தது.

அன்று ஒரு நாள்.

அவள் அவனுடன் தினம் தினம் அலுக்காமல் பரவச நிலையில் பகிர்ந்து கொள்ளும் கட்டிலில் இன்னொருத்தி

நிர்வாணமாகக் கிடந்தாள். அன்றே, அக்கணமே, இதய ஜோதி அணைந்தது. நாடி நரம்புகளும் நாளங்களும் மயிர்க் கால்களும் இருள் காடுகளாயின.

ஒரு குழந்தை சிலேட்டில் எழுதியதைத் தன் எச்சிலால் அழிப்பதைப் போல் அவள் அழிக்கவில்லை. சிலேட்டையே உடைத்துப் பொடியாக்கிக் கடலிலேயே கரைத்து விட்டாள்.

அவள் நோன்புச் சரடு கட்டிக் கொண்டபோது தன் கணவன் தன்னை விட்டுப் பிரியவே கூடாது என்றுதான் வேண்டிக் கொண்டாள். ஆனால் அவளே அவனிடமிருந்தும் தன்னைத் தானே பிரித்துக் கொண்டாள்.

அப்புறம் அவளுடைய புது வாழ்க்கை ஆரம்பமாகியது. அந்த வாழ்க்கையில் இருவர் மட்டுமே நின்றார்கள். மனோஜ், சாரு.

**தி**டீரென்று ''அக்கா !'' என்ற குரல் கேட்டது.

மூர்த்தி.

''சாப்பாடு கொண்டு வந்திருக்கேன் ''

''இது என்ன ஸ்டேஷன் ?'' பிரமை பிடித்தவளைப் போலக் கேட்டாள்.

''அரக்கோணம். ரெயில் ஏற்கனவே பத்து நிமிஷம் லேட்.''

''சரி, வச்சுடு !''

''எப்ப காபி வேணும் ? கடப்பாவிலா, குந்தியிலா ?''

''எப்ப சௌகரியமோ அப்ப கொண்டு வாயேன்.''

மூர்த்தி இறங்கிப் போனான். ரெயில் நகர்ந்தது...

மனக் கண்முன் மனோஜ், சாரு வளர்ந்தார்கள். தனக்கும் தன் கணவருக்கும் இடையே ஏற்பட்டு விட்ட அகழி



யைக் குழந்தைகள் கண்ணில் படவிடாமலேயே ஜாக்கிரதை
யாக இருந்தாள். சாப்பாட்டு மேஜையில் அடிக்கிற
ஜோக்குகள், வெளி ஊர்களுக்குச் செல்லுகையில்,
'உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்!' என்ற தாப வார்த்
தைகள், ஜுரம் என்று படுத்த போது அருகில் உட்கார்ந்து
செய்த சுச்ருஷை எல்லாம் அவள் தன் குழந்தைகள்
பொருட்டு நடத்திய நாடகக் காட்சிகள்.

நாத் போன போது அவள் மனம் துக்கப்படவில்லை.
அமைதியான வருத்தம்தான் ஏற்பட்டது. இனிமேல்
அவள் வெறுக்க யாரும் இல்லை. அவர் அவளுடைய
இளமையை உபயோகித்துக் கொண்டார். பதிலுக்கு
இரண்டு ஜீவன்களைக் கொடுத்தார். அந்த ஜீவன்
களுடைய நலனுக்காக அவருடைய பணத்தை மட்டுமே
உபயோகிக்க எண்ணினாள்.

சின்னஞ் சிறு வயதிலிருந்தே இரு குழந்தைகளையும்
கவனித்து வந்த அவளுக்கு மனோஜ் முழுக்க முழுக்க,
'அப்பா பக்கமே சாய்கிறான் !' என்ற எண்ணம் உண்டா
யிற்று. ஒருவேளை, ஏற்கனவே தங்களுடைய மனத்தினா
லான விவாகரத்தை வெளிப்படுத்தி யிருந்தால் மனோஜ்
மனம் மாறி யிருப்பானோ என்னவோ ? மனோஜின்
எலும்பு முற்றிய பிறகு அவளால் ஏதும் செய்ய முடிய
வில்லை. அப்பாவிடமிருந்து அவனைப் பிரித்துத் தன்
னோடு சேர்த்து ஒட்டிக் கொள்ள முடியவில்லை.

சாரு மற்ற எல்லாப் பெண்களையும் போல அம்மா
சொல்வழி நடந்தாள். ஆனால் அவளும் கடைசியில்
அவளைக் கை விட்டு விட்டாள். நாத்தின் மரணம்
காரணமாக அப்பா வீடு செல்லுவது நியாயமில்லை
என்று மனோஜும் சாருவும் சொன்னபோது சீதா
லட்சியம் செய்யவில்லை. தன் அதிகாரத்தில் இருக்க
வேண்டியவர்கள் என்று தப்புக் கணக்குப் போட்டு
விட்டாள்.

பலன் ?

மனோஜ் பம்பாயிலேயே அம்மாவை உதறினான். சாரு, ரெயில் கல்யாண் ஸ்டேஷனை அடையும்வரை, காத்திருந்தாள்.

பிள்ளையாவது நேரடியாக நின்று போராடி ஜயித்தான். ஆனால் அவள் பெற்ற பெண் ? நேருக்கு நேர் சொல்லத் தைரியமற்றவளாய்த் தந்திரமாகக் கழன்று போனாள்.

சீதா சுற்று முற்றும் பார்த்தாள். மின்சார விசிறிகள் ஓடிக் கொண்டிருந்தன மூர்த்தி வைத்து விட்டுப் போன சாப்பாடு அப்படியே இருந்தது. பாதி தின்றுவிட்டு வைத்த மலைப்பழத்தின் தோல் காய்ந்து கிடந்தது.

சீதா கண் அயர்ந்தாள். அவளையும் மீறிய அசதிக்கு உடல் அடிமையாகியது. கண் இமைகளுக்குள்ளே அவருடைய சரித்திரத்தின் காட்சிகள் தோன்றி மறைந்தன. அப்பா— அவருடைய லட்சியங்கள், அவர் விரும்பி அணுகும் ஆல மரம்.

அம்மா— பழமைக்கும் புதுமைக்கும் நடுவே நின்று, இரண்டிலும் உள்ள நல்லவற்றை எடுத்துக் கொண்டு, எல்லாரையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும் என்ற ஒரே லட்சியம்.

சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கடைசியில் எல்லாரையும் அழவிட்டுப் போன தங்கை அகிலா.

பெண்டாட்டி பேச்சையே கேட்டு, அதனாலேயே எல்லாச் சங்கடங்களுக்கும் ஆளாகி, இப்போது தான் பெற்ற பெண்ணே சொல்லிக் கொள்ளாமல் ரெயிலேறும் நிலைக்கு உந்தப் பட்டிருப்பதையும் அறியாத ஒரு மூடன் ரங்கா.

சொகுசான வாழ்க்கைக்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற மமதையில் அழிந்து போகும் ராமு.



பெற்றவர்களின் மனம் கோணாமல் கடைசிவரை அவர்கள்தாம் என்ற எண்ணத்திலேயே ஊறிப் போய் விட்ட மூர்த்தி.

மனோஜ் சுதந்தரமாக இருக்கும் பிள்ளை. நாளைக்கு அவன் வீட்டுப் படி ஏறினால் அவளுடைய தோல்வியை அவன் தன் வெற்றியாகக் கொண்டாடுவான். மூர்த்தி, மாலு முன்னிலையிலும் கொக்கரிப்பான்.

சாரு வாய் திறந்து பேச மாட்டாள். ஆனால் அம்மா எவ்வளவு பெரிய முட்டாள் என்று அளந்து பார்ப்பாள்.

''அக்கா !"

குரல் அவளை எழுப்பியது.

''என்ன மூர்த்தி ?"

''கடப்பாவிலே தூங்கிண்டிருந்தே! குந்தியிலே பார்த்தேன். இங்கே வர்றத்துக்குள்ளே முதல் மணி அடிச்சுது. ஓடிப் போனேன். இப்ப குண்டக்கல்... என்ன அப்படித் தூக்கம் ? உடம்பு சரியில்லையா ?"

''அதெல்லாம் ஒண்ணும் இல்லே."

''சாப்பாடு அப்படியே இருக்கே !"

''கார்த்தாலே சாப்பிட்ட டிபனே செரிக்கலே. அப்படியே தூங்கிட்டேன்."

''காபி கொண்டு வந்திருக்கேன்."

சீதாவின் தொண்டை வறண்டு போயிருந்தது.

''தா."

இரண்டு தம்ளர் காபி குடித்தாள்.

''சாப்பாட்டை யாருக்காவது குடுத்து விடலாம். ரெய்ச்சூரில் பார்க்கிறேன்."

"வேண்டாம், மூர்த்தி. கார்த்தாலே புனாவிலே காபி கொண்டு வா. இந்தத் தயிருஞ் சாதத்தை ராத்திரி சாப்பிட்டுக்கறேன்."

"அப்படியா சொல்றே?"

"ஆமாம், நான் என்னைக் கவனிச்சுக்கறேன்."

"சரி."

மூர்த்தி சென்றான்.

சீதா மீண்டும் அசை போடலானாள்.

சென்னையில் அப்பா, அம்மா.

அங்கே போய் இருக்க முடியாது.

பம்பாயில் மனோஜ்.

அவள் தயவு அவனுக்குத் தேவை இல்லை.

சாரு. அம்மா இல்லாமல் தானாக இயங்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டாள். அப்படியானால் அவள் எதற்காகப் பம்பாய் போகிறாள்? அவளுடைய வயிற்றைக் கழுவவா?"

அதற்குப் பம்பாயைத் தவிர வேறு இடம் இந்த உலகத்திலேயே இல்லையா?

சொந்தமும் பந்தமும் பரஸ்பரமானவை அவளால் இனிமேல் எந்தச் சொந்தத்துடனும் உறவாட முடியாது. எந்தப் பந்தத்துடனும் ஒட்டிக் கொள்ள முடியாது.

இத்தனை நாள் வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் வீண். தந்தி அறுந்த வீணை. காற்று இல்லாத பை. சுடர் இல்லாத விளக்கு.

ஒன்றுமே இல்லாத நிலையில் எதைத் துறந்து விட்டுச் செல்ல முடியும்! எல்லாமே இருக்கும்போது எல்லாவற்றையுமே தூக்கி எறிந்துவிட்டுச் செல்லுவதுதான் அஞ்ஞானத்தின் கடைசிப் படி, ஞானத்தின் முதல்.



தான், தனது, தனக்கு என்ற எண்ணங்கள் அவளுள் அழுத்த அழுத்த அவள் இப்படியேதான் தொடர்வாள். இந்தத் தொடர்ச்சி யாருக்காக?

ஏன் இந்தப் பயணம்? இது எங்கே நிற்கும்?

நிற்கிற இடத்தின் பெயர் என்ன?

சீதா மெதுவாக எழுந்தாள். பெட்டி, சாப்பாடு, பழம், தண்ணீர்ப் பாட்டில் எல்லாம் அப்படியே கிடந்தன.

நின்ற ரெயில் ஊதியது. அவள் அவசர அவசரமாக ஓடினாள். ரெயில்வே சிப்பந்தி ஒருவன் உட்கார்ந்தவாறே கண் அயர்ந்து கொண்டிருந்தான்.

ரெயில் நகர்ந்தது. அவள் இறங்கினாள்.

ரெயில் முழுதும் அவளை விழுங்கி உமிழ்ந்த பின் பார்த்தாள். ரெயில் நிலையத்தின் பெயர்ப் பலகை கண்ணில் பட்டது.

"மந்த்ராலயம் ரோட்."

சரியான இடத்தில் தான் இறங்கி விட்டதான எண்ணம் அவளுக்குத் தோன்றியது. அவள் தன் இரு கைகளையும் வீசிக் கொண்டு நடந்தாள்.

## 35

சரியாக மாலை 6-10க்கு மது வந்தான். சாரு மட்டுமே வீட்டில் இருந்தாள். மனோஜ் அகமதாபாத்தி லிருந்து பம்பாயை ஒரு மணி நேரத்துக்குள் அடைந்து விடுவான். ஆனால் விமான நிலையத்திலிருந்து வீடு வந்து சேருவதற்குள் இன்னும் இரண்டு தடவை அகமதாபாத்துக்குப் போய் வந்து விடலாம்.

"வாருங்கள், மது."

அவன் களைத்துப் போயிருந்தான். சிற்றப்பா போனதி லிருந்து அவன் சரியாகத் தூங்கியிருக்க மாட்டான் என்று கண்கள் கூறின. எப்போதும் பிரகாசமாய்த் தோன்றும் கண்கள் ஒளி இழந்து வெளிறிப் போயிருந்தன கண்களின் கீழே கறுப்புப் பட்டைகள். செக்கச் செவேலென்று இருக்கும் நிறத்தை அவை பாதித்தன. எப்போதும் அழகாகச் சீவி யிருக்கும் தலைமுடி கலைந்து கிடந்தது.

சாரு திணுக்குற்றாள்.

சிற்றப்பா கண்களை மூடு முன் வரம் கேட்பது போல, தம் ஓட்டல்களை அவன்தான் நடத்த வேண்டும்; சித்தியை அவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டிருக்கலாம். ஆனால் அதற்காக மது இப்படியா தன் உடம்பைப் பார்த்துக் கொள்ளாமல் நாள் முழுதும் உழைக்க வேண்டும்?

''ரொம்பக் களைத்துப் போயிருக்கிங்க.''

''ஆமாம். மனோஜ் எங்கே?''

''இன்னும் வரல்லே. வந்து விடுவான். சூடா டீ கொண்டு வரட்டுமா?''

''ஒரு லிட்டர் தண்ணீர்!'' என்றான்.

''ஜில்லென்றுதானே?''

''வேண்டாம். உடம்பெல்லாம் வேர்க்கறப்போ ஜில் லென்று குடித்தால் தொண்டை கட்டிக் கொள்ளும். சாதாரணத் தண்ணீர் போதும்.''

''காரில்தானே வந்தீர்கள்?''

கேள்வியைக் கேட்டு விட்டுச் சாரு உள்ளே ஓடினாள். தண்ணீருடன் திரும்பி வந்து, தம்ளரில் ஊற்றி, டீப்பாயின் மேல் வைத்தாள்.

ஒரு தம்ளர் குடித்த பிறகு, ''மின்சார ரெயில், பஸ், நடை எல்லாந்தான்!'' என்றான் மது.



''கார்?''

''யார் அதுக்கு இப்போ அலவன்ஸ் தருகிறார்கள்? ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு என் வண்டி பத்துக் கிலோ மீட்டர் கொடுத்தால் ஜாஸ்தி. எல்லா ஓட்டல்களுக்கும் இரண்டு தடவை போய் விட்டு வந்தால் எண்பது கிலோ மீட்டர் ஆகிவிடும். அறுபது ரூபாய் மாசம் இரண்டாயிரம் வரை போய்விடும். யார் கணக்கில் எழுதுவது?''

சாரு பதில் பேசவில்லை.

'மதுவுக்கு ஏன் இந்தப் பிழைப்பு?'

''ஏன் நின்று கொண்டே இருக்கிறாய், சாரு? உட்காரேன்.''

அவள் உட்கார்ந்தாள். உள்ளே வேதனை வெடித்தது. அவள் பார்த்து ரசித்த மது எங்கே? இந்த ஓட்டல்களைப் பராமரிக்கும் மது எங்கே?

''சித்தப்பா கார் இன்னும் அப்படியே இருக்கு. அவர் வீட்டிலிருந்து மாதுங்கா ஓட்டலுக்கு மட்டும் போவார். அப்புறம் காட்கோபருக்கு ரெயில். அங்கிருந்து அந்தேரிக் குப் பஸ், ரெயில். திரும்பற போதும் அதே மாதிரி பஸ், ரெயில், கார். இப்போது நான் பெட்ரோல் செலவைக் காட்டினால் சித்தி என்ன நினைப்பாள்?''

''இப்படிச் சிரமப்பட்டு....''

''சிரமம் இல்லாமல், உழைப்பு இல்லாமல் எந்தத் துறையிலும் பணம் ஈட்ட முடியாது.''

''விளம்பரத் துறையைத் தவிர!'' என்று சிரித்துக் கொண்டே சாரு சொன்னாள்.

''யார் சொன்னார்கள்? எல்லாத் துறைகளையும் விட இந்த விளம்பரத் துறைதான் கஷ்டம், சாரு. எப்போதும் கண்ணால் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். காது

கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். படாடோபத் தால் பணம் வர்றது என்று பலர் தப்புக் கணக்குப் போடு கிறார்கள். ஒரு விற்பனைப் பொருளை மக்கள் விரும்பி நெருங்க வேண்டுமானால் அதன் குணம் மட்டும் போதாது. அந்தக் குணத்தை வெளிப்படுத்தி மக்களின் மனத்தை ஈர்க்கவும் வேண்டும். அது அவ்வளவு சுலபம் அல்ல."

"யாதவ் சொல்வதைப் பார்த்தால்..."

"யாதவ் முட்டாள் மட்டும் இல்லை. கயவனும் கூட."

"அவனுக்கு எப்படித் தெரிந்ததோ, நான் விளம்பரத் தொழிலைத் தனியாக நடத்த ஆசைப்படுகிறேன் என்று?" சாரு கேட்டாள்.

"நான் சாதாரணமாக ஷீலா நாயரிடம் சொல்லியிருக் கிறேன். 'ஆபத்தான துறையாச்சே!' என்று அவளும் கூடப் பாடினாள். அப்படிப் பாடினவள் சும்மா இருக்கக் கூடாதா? யாதவ் காதைக் கடித்திருக்கிறாள். அந்த ராஸ்கல் நேரே உன்னிடம் வந்திருக்கிறான்! அது சரி, அவனிடம் ஏதாவது வாக்குக் கொடுத்திருக்கிறாயோ? வெறும் காற்றிலே குழாய் பண்ணக் கூடியவன் அவன். ஆனால் குழாய் வழியாகக் காற்றை அனுப்பக் கூடத் தெரியாதவன்."

"உங்களிடம் கலந்து யோசித்துச் சொல்கிறேன் என்றேன்."

"முகம் உடனே சுருங்கி யிருக்குமே?"

"இல்லை. உங்களை மிகவும் பாராட்டிப் பேசினான். உங்களைப் போன்ற கெட்டிக்காரர்களை விளம்பர உலகில் விரல் விட்டு எண்ணலாம் என்றான்."

"உன்னை நன்னாப் புரிஞ்சு வைத்துக் கொண்டிருக் கிறான் ராஸ்கல்."



"இரண்டாவது தடவை."

"என்ன?"

"யாதவ்வை ராஸ்கல் என்று நீங்கள் குறிப்பிடுவது."

"என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசினால் உன் மனசுக்கு இதமாக இருக்கும், குளிர்ந்து மகிழ்வாய் என்று அவன் தப்புக் கணக்குப் போட்டுப் பேசியிருக்கிறான். 'நீ பணம் போடு. நான் கட்சிக்காரர்களை க்யூவில் நிற்க வைக்கிறேன்!' என்று சவால் விட்டிருப்பானே!"

"ஆமாம்."

"பம்பாயில் பாதிப் பேரைத் தெரியும் என்று வாய்ப் பந்தல் போட்டிருப்பான்."

"போட்டான்."

"இந்தக் கம்பெனிக் கட்சிக்காரர்களை, மெள்ள மெள்ளத் தன் சாமர்த்தியத்தால் கவர்ந்து திசை திருப்ப முடியும் என்று மார் தட்டி யிருப்பானே!"

"தட்டினான்."

"ராஸ்கல்! ராஸ்கல்!"

"உங்களுக்கு அவன் மீது அசாத்தியக் கோபம்."

"கோபந்தான். எல்லாம் தெரிஞ்ச ஒரு பணக்கார இளைஞனை அணுகி, அவனை யாதவ் நம்ப வைத்திருந் தால், எப்படியோ போகட்டும் என்று விடலாம். ஒன்றும் தெரியாத, அழகான, கொஞ்சம் பண வசதி படைத்த அநாதைப் பெண்ணை ஏமாற்ற முயலுவது கயவாளித் தனம்."

"நான் அநாதை இல்லை."

"சரி. நீ அநாதை இல்லை. உன் அப்பா கல்கத்தா விமான விபத்தில் சாகவில்லை. உன் அம்மா உன்னை லட்சியம் செய்யாமல் சென்னை போகவில்லை. உனக்குக்

கல்யாணமாகி நீ உன் புருஷனுடன் எல்லாப் பாதுகாப்புகளுடனும் இருக்கிறாய்! நீ அநாதை இல்லை!"

அவனுடைய குரலும் அவன் பேசிய விதமும் அவளைத் திகைக்க வைத்தன. மதுரமான, மெல்லிய கீதமாக வரும் குரல் எங்கே? நிறுத்தி நிதானமாகப் பேசும் வார்த்தைகள் எங்கே? சாருவால் பேச முடியவில்லை.

"உனக்கு விளம்பரத் தொழிலைப் பற்றி என்ன தெரியும்? ஒரு பெரிய நிறுவனத்தைக் கட்சிக்காரனாக ஆக்க யாதல் என்ன என்ன செய்கிறான் என்றெல்லாம் தெரியுமா? அஞ்சு லட்சம் ரூபாய் வியாபாரம் கிடைக்கக் குறைந்தது இருபதாயிரமாவது அவன் வாரி இறைப்பான். பெரிய ஒட்டலில் அறைகள், அவற்றிலே மதுக் கோப்பைகள், நிர்வாணமாக நிற்கும் பெண்கள், திருட்டுத்தனமாக வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்த ஆபாசப் படங்கள். கட்சிக்காரக் கம்பெனியின் பெரிய புள்ளிகள், தர்ம ஸ்தாபனங்களின் கர்த்தாக்கள் களியாட்டங்களில் மூழ்குவார்கள். மறுநாள் நம் விளம்பரக் கம்பெனியுடன் மூன்று வருட ஒப்பந்தம். இதுக்கெல்லாம் ஏற்பாடு செய்கிறவன் யாதல்."

"எனக்குத் தெரியாது."

"அதனால்தான் ஒன்றும் தெரியாத பெண் என்றேன்."

"இப்பவே போன் பண்ணி..."

"அவசியம் இல்லை. இன்னும் பத்து நாட்களுக்கு அட்டை போல ஒட்டிக் கொள்ளுவான்."

"என்ன செய்ய?"

"என்னை வந்து பார்க்கச் சொல்லு."

"ரொம்ப நன்றி, மது."



"புதுசா விளம்பரத் தொழில் துவங்கும் பைத்தியக்கார ஆசையை முதலில் குப்பைக் கூடையில் போடு."

"போடுகிறேன்."

"உனக்குப் பிடித்த ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டு சுகமாக இரு."

சாரு விழித்தாள்.

"நான்... நான்..."

மது எழுந்தான்.

"நான் உன் மனத்தை நன்றாகப் புரிந்து கொண்டவன், சாரு. நீ எளிதில் மனம் குழம்புகிறவள். பார்த்ததும், உனக்கு ஒன்று பிடிக்கும், அல்லது மனம் அதை வெறுக்கும். என்னைப் பார்த்ததும் உனக்குப் பிடித்து விட்டது. எனக்குந்தான். ஆனால் நம் பார்வையின் கோணங்கள் வேறு பட்டவை. நான் உன்னுடன் சில நாள் பழகினேன் என்றால், நீ என் ஏக்கம் நிறைந்த மனசுக்கு இதமாக இருந்தாய்; என் வேதனைகளுக்கு மருந்தாக இருந்தாய். உனக்கும் எனக்கும் பல வேற்றுமைகளுக்கு இடையே சில கெட்டியான ஒற்றுமைகள் இருந்தன. இரண்டு பேரும் தந்தையின் அன்பையோ, குடும்பத்தின் நிம்மதியான ஒட்டத்தையோ அறியாதவர்கள். உன் முகத்தில் நான் என்னையே பார்த்துக் கொண்டேன். ஆனால் ஒரு நாள் உன் உள் மனத்தில் மின்னிக் கொண்டிருக்கும் ஆசையின் ஒளியைக் கண்டேன். பயந்து போனேன். வாழ்க்கையில் நீ ஏமாற்றம் அடைந்தால், அதற்கு நான் காரணமாகி விடுவேனோ என்ற பயம் என்னைத் தாக்கியது. அந்தக் கணத்திலேயே உன்னை விட்டு மெல்ல விலகத் தீர்மானித்தேன். நான் உனக்கு நன்மைதான் செய்ய முடியும். உன் இளம் உள்ளத்தில் தோன்றியிருக்கிற ஆசைக்கு நீ காதல் என்று பெயர் சூட்டலாம். ஆனால் என் மனசில் அதற்குப் பெயர் நட்பு;

பாசத்தால் உண்டாகிற நேசம். இரு வித எண்ணங்களைச் சுமந்து கொண்டு தவிக்கிறாய். நல்ல வேளையாக, என் சித்தப்பா, எப்போதோ போக வேண்டியவர், தக்க சமயத்தில் போனார். உன்னை விட்டு விலக. விளம்பர உலகத்தை விட்டு விலக, அவருடைய மரணம் ஒரு வரப் பிரசாதமாக வாய்த்தது."

சாரு மௌனமாக அமர்ந்திருந்தாள். அவளுடைய மனத்தை, அதில் வீசும் ஒளிச் சுடரை மது படம் பிடித்துக் காட்டுகிறான். தப்பு இல்லாத படம். ஆனால் அவள் நினைத்தது போல, எதிர் பார்த்தது போல, அவன் அவளைக் காதலிக்கவில்லை; நட்பு, நேசம், வெறும் பாசம்.

''நான் எந்தப் பெண்ணுக்கும் புருஷனாக வாய்க்க அருகதை இல்லாதவன், சாரு. இதை நீ புரிந்து கொள்ள வேண்டும். என்னிக்குச் சித்தி ஒட்டல்களை விற்கச் சொல்லுகிறாளோ அன்னிக்கு வந்து விடுவேன். அவள் சில ஆசைகளை மனத்தில் புதைத்து வைத்திருக்கிறாள். அவை நிறைவேற என்னை எதிர்பார்க்கிறாள். ஊமைப் பெண் ஒருத்தி ஊரில் இருக்கிறாள்; அவளுடைய அண்ணா பெண். லட்சக் கணக்கான ரூபாயைக் காட்டி அவளை எனக்கு முடிக்கப் பார்க்கிறாள். யார் கண்டார் கள்? நான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு ஊரோடு போய்த் தங்கி விடலாம். ஆனால் சத்தியமாக லட்சங்களுக்காக இல்லை; என்னுடைய லட்சியங்களுக் காக. என் அம்மா அப்பாவிடம் ஊமையாக இருந்தாள். அவளை அவர் ஊமையாக்கி இருந்தார். எனக்கு ஊமைப் பெண் ஒருத்தியே மனைவியாக வாய்ப்பது இன்னும் மேல். பல லட்சங்கள் தராத இன்பம், அவளுக்கு என்னுடைய கனிந்த பார்வை ஒன்றே தரும்."

மது பேசிக் கொண்டே போனான்.

ஒரு பெண் சாரு கண் முன் நின்றாள். குட்டையா நெட்டையா? ஒல்லியா குண்டா? எதுவும் தெரிய



வில்லை. அவள் மணக் கோலத்தில் இருந்தாள். அவளு டைய உதடுகள் அசைந்தன. ஒலி கேட்கவில்லை. கண்கள் கலங்கி யிருந்தன. மது புரிந்து கொண்டான். அவளுடைய கரம் பற்றி நடந்தான்.

''சாரு... சாரு!"

பதில் இல்லை.

''என்னாச்சு உனக்கு? ஏன் அப்படியே மயக்கம் அடைந்தவளைப் போல ஆகிவிட்டாய்?"

சாரு சுதாரித்துக் கொண்டாள்.

''ஒன்றுமில்லை."

''நான் வர்றேன்."

''மனோஜ் வந்து விடுவான். சாப்பிட்டு விட்டு..."

''இல்லை. அங்கே சித்தி காத்துக் கொண்டிருப் பாள்."

''ஊமைப் பெண்?"

''அவளும் ஊரில் காத்துக் கொண்டிருப்பாள்."

''என் கதி?" அவளையும் மீறி வார்த்தைகள் வெடித்தன மூர்த்தி மின்னலாகக் கண் முன் தோன்றி மறைந்தான்.

''நாம் பிறக்கிற போதே, நமக்கு என்று ஒரு சாலை யைத் தெய்வம் விதி என்ற பெயரில் அமைத்து விடுகிறது. அது எப்படிப்பட்ட சாலை, என்ன என்ன இருக்கும், மேடு பள்ளம் எல்லாம் தெய்வத்துக்குத்தான் தெரியும். ஆனால் நாம் மனக் கோட்டை கட்டி விடுகிறோம். ஏன் தெரியுமா? அதில் பாதி சுகம் கிடைத்து விடுகிறது."

''நீங்கள் போய் வாருங்கள், மது!"

''ரொம்பச் சரி. யாதவ் வந்தால் என்னிடம் அனுப்பு!"

"நான் பார்த்துக் கொள்கிறேன், மிஸ்டர் மதுசூதனன்! அப்புறம் உங்க வருகைக்கு நன்றி. சிரமம் கொடுத்ததற்கு வருத்தப்படுகிறேன்."

மது சிரித்தான்.

"நன்றி உரையா? பேஷ். நன்றியுரை கூறி விட்டாய், சாரு. நீ மிஸ்டர் போட்டு அழைத்தாற் போல நான் மிஸ் சாருமதி என்று அழைக்க மாட்டேன். ஏன்னா எப்போதும் எனக்கு நீ சாருதான். நான் வர்றேன். காதல் திடீர்னு தோன்றுவது இயற்கை. ஆனா அதே நேரத்தில் வெறுப்பு வரக் கூடாது. இனிமேல் என்னைப் பார்க்க நீ விரும்ப மாட்டாய் என்பதை உணர்கிறேன். விருப்பமில்லாதவர் வீட்டுப் படியை மிதித்துப் பழக்கப் படாதவன் நான். ஆனா, ஒண்ணு. நீ எப்பவும் நன்னா, சந்தோஷமா, அமோகமா இருக்கணும்."

மது வெளியேறினான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, திறந்திருந்த வாயில் வழியாக மனோஜ் பிரவேசித்தான்.

சாரு சோபாவில் சாய்ந்து கண்களை மூடியிருந்தாள். கன்னங்கள் இரண்டிலும் கண்ணீர் கோலமாகப் படிந்திருந்தது.

**வா**டி ரெயில் நிலையத்தைத் தாதர் எக்ஸ்பிரஸ் அடைந்த போது இரவு மணி பதினொன்றரை. பக்க வாட்டுப் பலகையில் மாலு தூங்கிக் கொண்டிருக்க, கால்மாட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தான் மூர்த்தி. அக்கா சீதாவின் போக்கு, புதிராக இருந்தது. அரக்கோணத்தில் அவன் கொடுத்து விட்டு வந்த சாப்பாடு, குண்டக்கல்லில் சந்தித்தபோது அப்படியே இருந்தது. இதற்கு என்ன அர்த்தம்? அவள் அளித்ததை ஒதுக்கி விட்டு ரெயில் நிலையத்திலிருந்து வரவழைத்துச் சாப்பிட்டாளா? அல்லது எதுவுமே சாப்பிடவில்லையா? குண்டக்கல்லிலும் அவள் சரியாகப் பேசவில்லை. சாப்பாடோ காபியோ தேவை இல்லை என்று கூறி விட்டாள். ரெய்ச்சூரை ரெயில் அடைந்தபோது மணி ஒன்பது ஆகியிருந்தது. ஒரு முறை விரைந்து சென்று அவளைப் பார்க்க அவா எழுந்தது. ஆனால் அடக்கிக் கொண்டான். பன்னிரண்டு நிமிஷங்களேதான் ரெயில் நிற்கும். ஏழெட்டுப் பெட்டிகளைத் தாண்டிச் சென்று திரும்பி வர வேண்டும். நேரம் இருக்காது. அப்படியே ஓடி வர நேரம் இருந்தாலும், ஒன்பது மணிக்கு மேல் முதல் வகுப்புப் பெட்டி திறந்திருக்குமோ என்னவோ?



வாடி ஸ்டேஷனில் ரெயில் நின்றபோது இறங்கிப் பார்க்கலாமா என்று அவன் யோசித்தான்.

திடீரென்று அவனுடைய யோசனையை ஒரு குரல் தடுத்து நிறுத்தியது.

"நீங்கதானே மிஸ்டர் மூர்த்தி? அட்வகேட் அனந்தராமனுடைய பிள்ளை?"

"ஆமாம்."

"என் பெயர் செல்வகுமார். இதே ரெயிலில் முதல் வகுப்பில் வந்து கொண்டிருக்கிறேன்."

"ரெண்டு போகி இருக்கு, பார்த்தேன். நீங்கள் எதில்?"

"உன் அக்கா இருந்த போகிதான்."

'இருந்த' என்ற வார்த்தை அவனை உலுக்கியது.

"உடனே என்னுடன் வாருங்கள்."

"ரெயில்?"

"கார்டுகிட்டே சொல்லியிருக்கிறேன். நான் சொன்னால் ஒழிய வண்டி புறப்படாது."

இதற்குள் மாலு விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"என்ன மூர்த்திச் சித்தப்பா ?"

"இங்கேயே இரு. அடுத்த பெரிய ஸ்டேஷன் குல்பர்க்கா. அது வந்ததும் திரும்பி வர்றேன்."

"சரி, சித்தப்பா. அத்தைக்கு ஒன்றும் இல்லையே ?"

"போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்."

மூர்த்தி செல்வகுமாருடன் நடந்தான்.

"உங்கள் பெயர் மூர்த்தி; நீங்கள் அட்வகேட் அனந்த ராமனுடைய பிள்ளை என்பது தெரியும்."

"நீங்க... நீங்க... ஜஸ்டிஸ் செல்வகுமார்தானே ?"

"ஆமாம். ஒரு காலத்தில் உங்கள் தகப்பனாரிடம் ஜூனியராக இருந்திருக்கிறேன். அப்ப நீங்க ஸ்கூல்லே படிச்சிட்டிருந்தீங்க."

"என் அக்கா...?"

"அவள் இப்ப ரெயிலில் இல்லை."

மூர்த்தி இடி விழுந்தவனைப் போல அப்படியே ஸ்தம்பித்து நின்று விடவில்லை. மௌனமாய் நடந்தான்.

"அவள் டி- கோச்; நான் பீ- இல் இருக்கிறேன்."

அவன் வேகமாக நடந்தான். மனிதர்களின் நெரிசலில் வேகம் குறைந்து, பேச்சுத் தடைப்பட்டது.

முதல் வகுப்புப் பெட்டியை அடைந்ததும் இருவரும் 'டி' கோச்சினுள் பிரவேசித்தார்கள். சீதாவின் பெட்டி, கைப் பை, அரக்கோணத்தில் வைத்த சாப்பாடு, பழங்கள் எல்லாம் அப்படியே இருந்தன



"என்ன நடந்தது ?"

"ரெயில் மந்திராலயம் ரோடிலிருந்து நகரும்போது, உன் அக்கா அவசர அவசரமாக இறங்குவதைக் கவனித் தேன். நடையில் நிதானம் இல்லை. கோச்சின் முன் வராந்தாப் பாதையில் நடக்கும்போது தற்செயலாக அவள் முகத்தைப் பார்த்தேன். முகத்தில் உயிர் இல்லை."

மூர்த்தி புரிந்து கொண்டான்.

"கைப் பையைப் பார்."

எடுத்துப் பார்த்தான்.

பணம், டிக்கெட், நான்கு வளையல்கள், ஒரு சிறு சீப்பு, கெர்சீப் எல்லாம் இருந்தன.

"என் அக்கா வேண்டுமென்றே இறங்கி இருக்கிறாள்."

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன். குல்பர்க்கா வில் ஸ்டேஷன் மாஸ்டரைச் சந்தித்து மந்திராலயம் ரோட் நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம். அவளைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கஷ்டமாக இராது."

"அவசியம் இல்லை, ஜஸ்டிஸ் ஸார்."

"அப்படியா ?"

"ஆமாம். தானாகப் போனவள் தானாக வருவது தான் சரி. நான் கண்டுபிடிக்க முயன்றால் அவளுக்கே பிடிக்காது."

செல்வகுமாரால் பதில் சொல்ல முடியவில்லை. உன் இஷ்டம் என்ற தோரணையில் தலை ஆட்டினார்.

"இந்த உடைமைகளை யெல்லாம் நான் எடுத்துக் கொள்ளலாமா ?" என்றான் மூர்த்தி.

"அதில் என்ன சந்தேகம் ?"

**தா**தர் ஸ்டேஷன்.

மனோஜ் வந்திருந்தான்.

''அம்மாவை நான் அழைத்து வருகிறேன், மூர்த்தி. நீங்க ரெண்டு பேரும் இங்கேயே நில்லுங்கள். மாலு, எப்படி இருக்கே? நீயும் நானும் பார்த்துக் கொண்டு நாலு வருஷம் இருக்கும்!'' என்றான் மனோஜ்.

புன்னகையைச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்டு மௌனத்தால் பதில் சொன்னாள் மாலு.

''வா, மனோஜ். காருக்குப் போவோம்,'' என்றான் மூர்த்தி.

''அம்மா?''

''அவளுடைய பெட்டியும் கைப் பையும் என்னிடந் தான் இருக்கின்றன. வா, போகலாம்''

''அம்மாவுக்கு என்ன ஆச்சு?''

''எல்லாம் விவரமாச் சொல்றேன். இப்ப இங்கே யிருந்து கிளம்பலாம்''

**வீ**ட்டில் சாரு இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந் தாள். மூர்த்தியின் வருகையோ, மாலுவை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிறோம் என்ற நினைப்போ எந்த வித உணர்ச்சியையும் அவளிடம் ஏற்படுத்தவில்லை. அம்மா எங்கே போனாள் என்ற ஆர்வமும் உண்டாக வில்லை.

''சாரு, எப்படி இருக்கே?'' என்று கேட்டான் மூர்த்தி.

''இருக்கேன்.''

மனோஜ், மூர்த்தியிடம், ''நீங்க ரெண்டு பேரும் குளித்து விட்டு வாருங்கள். இன்னிக்கு என் சமையல்!'' என்றான்.



மூர்த்தி 'ஏன்?' என்று கேட்கவில்லை. மாலுவைப் பார்த்தான். அவள் சாரு அறையிலிருந்து வெளியேறி இன்னோர் அறைக்குள் மறைந்து போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''மாலு, நீ முதல்லே குளிச்சுட்டு வா.''

அவள் சென்றாள்.

''மனோஜ்!''

''சாரு ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாள்? நான் முன்னே பார்த்த சாருவா இல்லையே!''

''நேத்துக் கார்த்தாலே நான் பார்த்த சாருவாக இல்லை!'' என்ற மனோஜ். ''அந்த மது ஒரு புயலைக் கிளப்பி விட்டுப் போயிருக்கிறான். ஆனால் அதை இவள் வேறு விதமாகக் கற்பனை பண்ணிக் கொண்டு இப்போது குலைந்து விட்டாள்!'' என்றான்.

''மதுவா? யாரது?''

''ஒரு விளம்பரக் கம்பெனியில் வேலை பார்த்தவன், நல்லவன் அவனைச் சந்தித்த நாள் முதல் இவள் ஒரே குதூகலமாக இருந்தாள். நான் கூட எச்சரித்தேன். இப்போது பிரமை பிடிச்சவளைப் போல இருக்கிறாள். கார்த்தாலே மதுவுடன் டெலிபோன்லே பேசினேன். நேத்துச் சாயங்காலம் அவன் ஒளிவு மறைவு இல்லாமல் பேசி யிருக்கிறான். தன் பேச்சு சாருவின் மனச் சமாதானத் துக்கு வழி காட்டும் என்று அவன் எண்ணி யிருக்கிறான். ஆனா அது இவளை ஒரே அடியாய்ச் சாய்த்திருக்கிறது.''

''இப்ப என்ன செய்ய?''

''என்ன செய்ய முடியும்? தானே இழுத்து விட்டுக் கொண்ட நோய்கள். அவை தாமாகத்தான் குண மாகணும்.''

''சீதா நேத்து ; இவள் இன்று."

''ஆனா ஒரு அதிசயம் !" என்றான் மனோஜ்

''என்ன ?"

''ரெண்டு பேரும் ஏறத்தாழ ஒரே சமயத்தில்தான் இப்படி ஞானோதயம் பெற்றிருக்கிறார்கள் !"

''ஞானோதயமா ? என்ன வார்த்தை இது, மனோஜ்?"

''என்ன தப்பு ? என் அம்மா ஒரு முட்டாள் இவள் இன்னொரு முட்டாள். அம்மாவுக்கு அப்பா போனது நஷ்டமாகத் தெரியவில்லை. அவர் போட்டிருந்த மோதிரமும் கைக் கடிகாரமும் தொலஞ்சு போனதுதான் பேரிடியாக இருந்தது. மதிப்பு வேறு, விலை வேறு என்று அவள் புரிஞ்சு கொள்ளவில்லை. இந்தச் சாருவும் அப்படித்தான். மனசுக்கு இதமாக இருப்பதெல்லாம் தனக்கு உரியது என்று மனக் கோட்டை கட்டினாள், மது— பெரிய கோட்டை. அதைப் பிடிக்கலாம் என்ற நம்பிக்கை வீணானபோது, இவளால் அந்த இடியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இப்போது எல்லாம் பறி போனது போல நடந்து கொள்ளுகிறாள்."

''எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல இருக்கு!" என்றான் மூர்த்தி.

''அம்மாவும் சரி, சாருவும் சரி, யதார்த்தமாக எதையும் சிந்தித்துப் பார்க்கவில்லை. நான் முழுக்க முழுக்க யதார்த்தவாதி."

''இப்போது உன் பெருமை பேசவா சமயம் ?"

''என்ன செய்யச் சொல்றே, மூர்த்தி ? அம்மா கிட்டே எவ்வளவோ சொன்னேன், 'சென்னைக்குப் போகாதே !' என்று. போனாள். இப்ப என்னாச்சு ? சாரு கிட்டே எவ்வளவோ சொன்னேன் : 'மது நல்லவன்தான். ஆனா



நீ அவனால் கஷ்டப்படுவே !' என்று. இப்ப என்னாச்சு ? மது எதிலும் ஒட்டிக் கொள்ளாமல், மற்றவர்களை ஒட்ட வைத்துக் கொள்ளும் வசீகரம் கொண்டவன். மூர்த்தி ! நாளைக்கு நான் அவனை உனக்கு அறிமுகப்படுத்துகிறேன் பார்."

மூர்த்தி பதில் சொல்லுவதற்குள், சாரு வேறு புடைவை கட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

''சாரு, எங்கே புறப்படறே ?"

''ஆபீஸ்."

''மறுபடியுமா ?"

''ஆமாம்."

''சரி, சாப்பிட்டு விட்டுப் போ."

''இல்லை. யாதல் கூடச் சாப்பிடப் போகிறேன்."

''சாவி ?"

''இருக்கு."

''ஜாக்கிரதையாப் போ."

''சரி."

''அம்மா வரலை."

''புரிந்து கொண்டேன்."

''ஏன் என்று கூட நீ கேக்கலே."

''பிடிக்கலே."

''அப்படியா ? சரி. உன் வழியில் போய்ப் பார்."

சாரு நடந்தாள். தன்னை ஒரு பொருட்டாக மதித்துச் சொல்லிக் கொள்ளாமல் போவதை மூர்த்தி உணர்ந்தாலும், அவளுடைய செய்கை மனத்தை முள்ளாகத் தைக்கவில்லை. மனித விசித்திரங்களில் இதுவும் ஒன்று என்று நினைத்தான்.

மாலு குளியலறையிலிருந்து திரும்பும்வரை காத்திருந்தான்.

## 36

சென்னை சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷனில் மாலுவைத் தற்செயலாகப் பார்த்துத் திகைத்துப் போன ரங்கா மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்தான்.

என்னதான் கல்யாணம், ஐ.ஏ.எஸ். பிள்ளை, செலவு என்ற பிரச்னைகள் எல்லாம் தாமாகக் கழன்று, இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து, ஒரு பெரும் சுமையை இறக்கி விட்ட போதிலும், சொர்ணத்தை எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் அவன் விழித்தான்.

அவள் இப்போது திருவான்மியூரில் இருப்பாள். அம்மா அவளிடம் எல்லா உண்மைகளையும் சொல்லுகிறாளோ, இல்லையோ? சொல்லியிருந்தால் கண்டிப்பாகச் சொர்ணம் அவனை நம்ப மாட்டாள். அவனும் இந்தச் சதியில் உடந்தை என்று எண்ணுவாள்.

சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு டெலிபோன் மூலம் பேசினான். அவனுடைய அதிருஷ்டம் சொர்ணம் வீட்டில் இருந்தாள். கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே பேசினான்.

''என்ன சொர்ணம், மணி பத்து அடிக்கப் போகிறது. நீ இன்னும் திருவான்மியூர் போகலையா ?"

''இல்லை. இனிமேல்தான்."

''அப்பப் போகாதே. நான் நேரே வீட்டுக்கு வர்றேன்."

''ஆபீஸ் ?"

''மத்தியானமாப் போய்க் கொள்கிறேன்."



''என்ன இப்படி ஒரு திடீர் மாற்றம் ?"

''வந்து சொல்றேன்."

''நானும் ஒரு நல்ல சமாசாரம் சொல்றேன். நீங்க அந்தப் பக்கம் போனதும் இந்தப் பக்கம் சம்பந்தி அம்மா வந்தா. மாப்பிள்ளைக்கு மாத்தல் ஆகியிருக்கிறதாம். வந்து..."

'எந்த ஊருக்கு ?' என்று ரங்கா கேட்க, அவனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது ? போனை டக்கென்று வைத்து விட்டு, கால் இழந்த இளைஞனிடம் ஐம்பது பைசாவையும் கொடுத்து விட்டு நகர்ந்தான்.

வீட்டை அடைந்ததும் சொர்ணம் பேச விடவில்லை.

''அது என்ன அப்படித் திடீர்னு நான் பேச்சை முடிக்கறதுக்கு முன்னே போனை வைத்தீர்கள் ?"

''ஒரே கூட்டம். போனுக்கு நான் நீ என்று பறந்து கொண்டிருந்தார்கள்." என்றைக்குமே ரங்கா உண்மையைச் சொல்லிச் சமாளித்துக் கொண்டதில்லை. ஏதேனும் ஒரு பொய் தயாராக நுனி நாக்கில் நின்று கொண்டிருக்கும்.

''சம்பந்தி அம்மா என்ன சொன்னா, தெரியுமா ?"

''அதுதான் ஏதோ நல்ல செய்தின்னு சொல்ல வந்தாயா ?"

''ஆமாம்."

''அப்ப நீ சொல்ல வேண்டாம். இனிமே சம்பந்தி, ஐ.ஏ.எஸ். என்கிற வார்த்தைகளெல்லாம் உன் வாயிலிருந்து வராது."

''ஏன், ஏன், ஏன் வராது ?"

''மாலு அவனைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டாளாம். அவன் மூக்கு அவளுக்குப் பிடிக்கலையாம்.''

''யாரு சொன்னா ? மூர்த்தி அவள் சொன்னதாகச் சொல்லி யிருக்கானோ? நான் ஒண்ணு கேட்கிறேன். உங்க தம்பி மூர்த்தி ஏன் நம்ம குடும்ப விஷயத்தில் இப்படித் தலையிடறார் ?''

''இன்னமும் கூட்டுக் குடும்பம்னா நெனைச்சுண்டிருக்கான் ?'' என்று சொர்ணத்துக்காக மூர்த்தியைக் கண்டித்துவிட்டு, உள்ளுக்குள் அவனைப் பாராட்டி அவனுக்கு நன்றி சொல்லிக் கொண்ட பின், ரங்கா தொடர்ந்தான்.

''சொர்ணம், நீ இன்னமும் பேச விடவில்லை. நான் கொஞ்சம் பேசட்டுமா ?''

''நான் சொல்ல வந்த விஷயம் இன்னமும்...''

''அதெல்லாம் இனிமே அசம்பாவிதம். நம்ம பெண் மாலு இப்ப அரக்கோணத்தை நெருங்கிக் கொண்டிருப்பாள்.''

''அரக்கோணமா? அங்கே அவளுக்கு என்ன வேலை?'' என்று கேட்டாள் சொர்ணம்.

''அவள் வேலை அரக்கோணத்தில் இல்லை. பம்பாயில்.''

ஒரு கணம் சொர்ணம் ஆடிப் போனாள். சோபாவின் முதுகுத் தண்டைப் பிடித்துக் கொண்டாள்

''இனிமே நீயும் நானும் பம்பாய் போய் நம்ம பெண்ணைப் பார்த்தால்தான் உண்டு. அவளாக இன்னும் ஒரு வருஷத்துக்கு இங்கே வர மாட்டா.''

''நீங்க என்ன சொல்றேள் ? என் பெண் எங்கே ? என்னமோ அரக்கோணம், பம்பாய்னு பேத்தறேளே ? என்ன விஷயம் ? சீக்கிரம் சொல்லுங்கோ.''



''பதறாதே !''

''என் பெண்ணைப் பத்தி நான் பதறாமே யார் பதறுவா ? பக்கத்து வீட்டுக்காரியா ?''

''மாலுவுக்கு ஒரு பெரிய கம்பெனியில் நல்ல வேலை கெடைச்சிருக்கு. அதில் சேர அவள் போயிட்டா.''

ஒரு நிமிடம்— அது ஒரு மணி நேரமாக ரங்காவுக்கு நீண்டது— சொர்ணம் சிலை போல நின்றாள். பிறகு மெதுவாக, ''அப்ப என் பெண் என் வீட்டை விட்டு ஓடிட்டாளா ?'' என்று கேட்டாள்.

''நான், என்னுடைய, எனக்கு என்று உன்னையே சுத்திக் கோலம் போட்டுக் கொள்ளாதே, சொர்ணம். மாலு எனக்கும் பெண்தான். இது எனக்கும் சொந்தமான வீடுதான். அவளை நீ என்ன வேணும்னாலும் சொல்லு. ஆனா ஓடிப் போயிட்டாள்னு மட்டும் சொல்லாதே !''

''அவ செஞ்சிருக்கிற காரியத்துக்கு என்ன அர்த்தம் ?''

''உங்கிட்டேயும் எங்கிட்டேயும் சொல்லாமல் போயிருக்கா. ஏன்னா நீ அநுமதி குடுக்க மாட்டேன்னு அவளுக்கு நிச்சயமாத் தோணியிருக்கு.''

''அப்ப ?''

''மூர்த்தி முழுக்க முழுக்க உதவி பண்ணி யிருக்கான். அவன்தான் அவளைப் பம்பாய்க்கு அழைச்சுண்டு போறான்.''

''உங்க தம்பி நாசகார வேலையும் செய்யறானா ? அவன் நன்னா இருப்பானா ?''

''நல்லவர்கள் வயிறு எரிஞ்சு தீராத கோபத்திலே, அவர்களையும் மீறி, வார்த்தைகளை நாபியில் தொகுத்து உருட்டி வெளியே வீசினாத்தான் அது சாபமாறது. நீ பொரிஞ்சு தள்ளினது சாபமில்லை. உன் ஆத்திரம்.''

''இதுக்குத்தான் அவள் ஏழெட்டு நாள் முன்னாலேயே பொட்டியும் கையுமா அங்கே போனாளா ?"

''அப்படித்தான் தோணறது."

''உங்க அப்பாவுக்கும் இது தெரியுமா ?"

''தெரியாது."

''தெரியாதா ?"

''அவருக்கும் தெரியுமா தெரியாதா என்பது தெரியாது."

'நன்னாப் பேசறீர்கள்."

''பிரச்னைகள் தீர்றபோது பேச்சு என்னவோ நன்னாத்தான் மடை திறந்தாப்பல கொட்டறது."

''நீங்க நெனைச்சுண்டிருக்கேள். என் பெண் ஓடிப் போயிட்டாள்னு நாளைக்கு நாலு பேருக்குத் தெரிஞ்சா நான் என் மூஞ்சியை எங்கே கொண்டு போய்ப் புதைச்சுக்கறது ?"

''பாத்ரும் சிமென்ட் தொட்டி நெறையத் தண்ணிரைக் கொட்டி அதிலே..."

''ஓ, இவ்வளவு தூரம் பேச உங்களுக்கு நாக்கு நீண்டு விட்டதா ?"

''இப்பத்தான் பொறந்தது. பொறந்ததும் சரசரன்னு வளர ஆரம்பிச்சுது. இதப் பார், சொர்ணம், மாலு ஒரு பிடிவாதத்துடன் பெரிய வேலையில் சேரப் போயிருக்கா. கடிதம் வரும். உனக்கும் எல்லா விவரங்களும் தெரிய வரும். உன்னாலே, உன் சண்டித்தனத்தாலே, உன் பேராசையாலே, உன் கண்மூடித்தனத்தாலே நான் என் அப்பாவையே பார்க்க முடியாத நெலைக்கு வந்துட்டேன். சொத்துப் பத்திக் கேட்கத் தூண்டியதே நீ. பொண்டாட்டி பேச்சைக்



கேட்கிறவனெல்லாம் மடையன்கள்! சொன்னவன் நிச்சயமா ஒரு புத்திசாலிதான். இல்லாமப் போனா, ஓர் அனுபவஸ்தன்! இப்ப இந்த வீட்டை விற்க வேண்டாம். ஆடம்பரமாச் செலவு செஞ்சு ஒரு கலியாணத்தை நடத்த வேண்டாம். என் பெண் மாலு என் பிரச்னைகளைத் தீர்க்கப் போய் விடவில்லை. தனக்கு ஒரு நல்ல வழியைத் தேடிக் கொள்ளத்தான் போயிருக்கா. இந்தக் காலத்துப் பெண்கள் அந்தக் காலம் போல இல்லை. நன்னாச் சிந்திக்கிறார்கள். தங்களுக்கு எது நல்லது..."

''நிறுத்துங்க !" சொர்ணம் கத்தினாள். பிறகு, ''லெக்சரா பண்றேள் ?" என்றாள்.

''சரி, நரகத்திலே விழுந்து தொலை !"

''நான் இப்பவே திருவான்மியூர் போறேன்."

''நான் நரகத்துக்குப் போன்னேன். நீ சொர்க்கத்துக்குப் போறேன் என்கிறாய்."

''உங்க அப்பா வீடு உங்களுக்குச் சொர்க்கமாக இருக்கலாம். ஆனா... ஆனா..."

''எனக்கே இப்ப அந்தச் சொர்க்கத்தின் வாசல் தெறந்திருக்கலே. உன் கதி..."

''ரெண்டு வார்த்தை பேசிவிட்டு வந்தாத்தான் எனக்கு நிம்மதியா இருக்கும்!" என்றாள் சொர்ணம்.

''ஜமாய். ஆனா என் அம்மா கிட்டே மட்டும் பேசாதே. அவளுக்கு மாலு விஷயம் தெரிய நியாயமில்லை. ஒருவேளை என் அப்பாவுக்குத் தெரிஞ்சிருக்கலாம்."

''நீங்க பேசாம இருங்கோ."

''சொர்ணம் !"

''என்ன?"

21203
377966
கொளத்தூர், சென்னை-99.

''நீ திருவான்மியூர் போறதுக்கு முன்னாடி எனக்கு ஒரு விஷயம் தெரியணும்.''

''என்னவாம் ?''

''உன் அப்பனை விட என் அப்பன் பணக்காரன். உன் அப்பன் ஊரை ஏமாத்திக் காண்ட்ராக்ட் வேலை செய்து இன்னிக்கு மஞ்சக் கடுதாசி குடுக்க ஒத்தைக் காலில் நிக்கறான் ஆனா என் அப்பா ஒரு பெரிய வக்கிலா, பெரிய லட்சாதிபதியா, எழுபது வயசுக்கு மேலேயும் திடமா, ஊர் பூராவும் மெச்சும்படியா இருக்கார். எந்த விதத்திலும் நீயோ, இல்லை உன் பொறந்த வீடோ என்னையோ என் வம்சத்தையோ விட ஒசத்தி இல்லை. இனிமே நீ என்னை எதிர்த்துப் பேசினா, எடக்காப் பேசினா, குறும்பாப் பேசினா, குத்தலாப் பேசினா, குதர்க்கமாப் பேசினா, நீ சந்திக்கிற ரங்கா புது ரங்காவா இருப்பான். இது ஏதோ லேசாச் சொல்ற வார்த்தைன்னு நெனைக்காதே. எச்சரிக்கை ! புரிஞ்சுக்கோ.''

ஒரு கணம் தயங்கிய சொர்ணம், தன் இயல்பில், ''சரி, தெனமும் பாத பூஜை செஞ்சு, கண்ணில் ஒத்திக்கறேன் !'' என்றாள்.

அடுத்த கணம் அவளுடைய காது பாடியது. அவளுடைய சிவந்த கன்னத்தில் அவனுடைய நான்கு விரல்கள் பதிந்து, நான்கு பட்டைகளாகப் பிரகாசித்தன.

''என்னைக் கை நீட்டி அடிச்சுட்டேள்.''

''கை நீட்டாம அடிக்க முடியாது.''

''அடிச்சுட்டேள் ! என்னை நீங்க அடிச்சுட்டேள்!''

''ஆமாம். எச்சரிக்கைக்கு அப்புறமும் நீ குறும்பாப் பேசினே. தாலி கட்டினவன் என்கிற மரியாதை நீ குடுக்கா விட்டால் கூட நான் பொறுத்துக் கொண்டிருப்பேன். ஆனா நீ என்னை ஒரு மனிதனாக்கூட மதிக்கலே. இதுக்குக்



காரணம் நானேதான்னு இப்ப உணர்றேன். உன் அழகிலே
யும், சதையிலேயும் மயங்கி மயங்கி, பகலெல்லாம்,
ராத்திரிக் கட்டிலைப் பற்றிய மிருக நினைப்பில் ஆழ்த்தி
ஆழ்த்தி, என்னை நானே அழிச்சுண்டேன். ஆனா ஒரு
நாள் எவனுக்கும் ஞானம் வரும். நீ மரியாதையா, ஒரு
நல்ல குடும்ப ஸ்திரீ இருக்கற மாதிரி இருப்பதுன்னா இரு.
இல்லாமப் போனா, இப்பவே உன் அப்பன் குடுக்கப்
போற மஞ்சள் நிறத்தோடு ஒட்டிக்கொள்.''

அவனுடைய குரல் அவனுள்ளேயே எதிரொலித்த
போது, அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது- அவனா
இப்படி யெல்லாம் பேசியது என்று. எத்தனையோ ஆண்டு
களாக அவனுள் மறைந்து, புதைந்து கிடந்த ஆசைகள்,
கோபங்கள், எழுச்சிகளெல்லாம், இப்போது எரிமலை
வெடிப்பது போல வெடிக்கின்றன. ஓர் எரிமலையால்தான்
சொர்ணத்தைச் சமாளிக்க முடியும் என்பதைக் காலதாமத
மாக அவன உணர்ந்திருக்கிறான்.

சொர்ணம் பதில் பேசவில்லை. கண்களில் நீர்ப்
பெருக்கு எடுத்தது. கேவல் ஒலிகள் பிறந்தன.

அழுகை ஆரம்பித்தது.

அவன் வாசற் பக்கமாக வந்தான் ; காரில் ஏறினான்.

**மா**லை வீடு திரும்பியபோது சொர்ணம் இன்னும்
தலைவிரி கோலமாக ஓர் அறையில் முடங்கிக் கிடப்பாள்
என்று அவன் எதிர்பார்த்தான. அவனுக்குப் பெண்களின்
மனசு புரியாத ஒன்று.

மௌனமாய் வீட்டினுள் பிரவேசித்த அவன் கை கால்
கழுவி விட்டுச் சாப்பாட்டறைக்கு வந்தபோது, மேஜை
மீது சிற்றுண்டி காத்திருந்தது.

ஆச்சரியத்துடன் பார்த்தபடி அவன் உட்கார்ந்தான்.

ஃபிரிட்ஜிலிருந்து ஒரு பாட்டில் தண்ணீர் வந்தது. அவனுக்குப் பிடித்த பூரியும் சென்னா மசாலாவும்.

அவள் சுடச்சுடப் போட்டுக் கொண்டே இருந்தாள். அவன் விழுங்கிக் கொண்டே இருந்தான். காபி வந்தது.

இன்னமும் அவள் பேசவில்லை. அவள் ஆரம்பிக்கட்டும் என்று அவனும் பேசவில்லை.

சுமார் ஏழு மணிக்குப் பூக் கூடையுடன் சொர்ணம் பட்டுப் புடைவை உடுத்தி வந்தாள்.

''நான் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்.''

''சரி.''

''மாலு பேருக்கு ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வர்றேன்.''

''சரி.''

''எட்டரைக்குச் சாப்பிட்டாப் போதும், இல்லையா?''

''போதும்.''

அவள் மெல்ல நடந்து, திண்ணையில் நின்று செருப்பை மாட்டிக் கொண்டாள். பிறகு படி இறங்கி நடந்தாள்.

கோவில், அவள் அதிகம் நினைக்காத இடம். விடை பெற்றுக் கொள்ளுதல், அவள் செய்யாத ஒன்று. உபசாரம், அவளைப் பொறுத்த வரையில் இதுவரையில் தோன்றாத உணர்ச்சி.

ரங்கா கண்களை மூடிக் கொண்டான். ஒரு புது மனைவி உருவாகிக் கொண்டிருப்பதான பிரமை அவனுக்கு உண்டாகியது. அந்தப் பிரமையில், அவளை அடித்ததற்காக வருத்தப் பட்டான். இனிமேல் அடிக்கக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான். ஆனால் அதே சமயம் அந்த ஓர் அடியும் எச்சரிக்கையுமே அவளை மாற்றியிருக்கின்றன என்று நம்பினான்.



# 37

யாதல் சப்பாத்தி, ரொட்டி, பரோட்டா, தண்டூரி ஆகியவற்றையெல்லாம் விட, இட்லி, வடை, மசாலா தோசை, சாம்பார் இவற்றைத்தான் மிகவும் விரும்பி நாடுறவன். அன்று சாருமதி அவனை ஓட்டல் உட்லண்ட்ஸில் விருந்துக்கு அழைத்த போது, அழைப்பை விட ஓட்டலைத்தான் அதிகம் நினைத்துப் பார்த்தான். அன்று என்ன என்ன சாப்பிட வேண்டும் என்பதை மனம் ஆராய ஆரம்பித்தது.

தனக்கு எக்ஸ்பிரஸ் டவர் பதினேழாவது மாடியில் ஒரு வேலை இருப்பதாகவும், அதை முடித்து விட்டுச் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு உட்லண்ட்ஸ் ஓட்டலில் சாருவைச் சந்திப்பதாகவும் சொன்ன யாதல் சொன்னபடி அங்கே வந்து நின்றான் 'குறித்த நேரம் சொன்னபடி வருவது, அரசர்கள் காட்டும் மரியாதை' என்று யாரோ எங்கோ எழுதியதை யாரோ எங்கேயோ சொல்லிக் கேட்டிருக்கிறான் யாதல். அவனுக்குப் புத்தகங்களைப் படிப்பதை விட, மனிதர்களைப் படிப்பதில்தான் சிறு வயதிலிருந்தே நாட்டம் அதிகம் பிற்காலத்தில் அவனுடைய வியாபாரத்துக்கும் வெற்றிக்கும் மூலப் பொருள்கள் ஆண்களும் பெண்களுமே. தன்னிடம் ஏதோ ஒரு வசீகர சக்தி இருக்கிறது என்று அவன் முதலில் நினைத்து, பிறகு அதை அவனே நம்பி, அந்த நம்பிக்கையையே ஒரு சக்தியாக மாற்றிக் கொண்டவன் அவன். யார் யாரை எப்படி அணுக வேண்டும், எப்படி நடத்த வேண்டும், யார் யாரிடம் எப்படி எப்படிப் பேச வேண்டும் என்ற கலைகளையெல்லாம் நன்றாகவே பயின்றிருந்தான். ஆடிக் கறக்க வேண்டிய மாட்டை ஆடிக் கறக்க, அவன் ஆடக் கற்றிருந்தான். பாடிக் கறக்க வேண்டிய மாட்டின் முன் பாடவும் கற்றிருந்தான்.

எத்தனையோ கடப்பாரைகளை விழுங்கிச் சுக்குக் கஷாயம் இல்லாமலேயே ஜீரணம் செய்த யாதவுக்குச் சாருமதி பஞ்சு மிட்டாயாகத் தோன்றினாள். முந்தின தினம் அவள், 'மதுவைக் கேட்டு யோசித்துப் பதில் சொல்லுகிறேன்,' என்று சொன்ன போது, தன்னுடைய பயணம் தோல்விதான் என்ற முடிவுக்கு வந்திருந்தான், மதுவுக்கு அவனுடைய பூர்வ கதையிலிருந்து எல்லாம் தெரியும். அவன் மதுவை நெருங்கப் பயப்பட்டான். மதுவும் யாதவின் வழிக்கு வரவில்லை. யாதல் கம்பெனிக்கு எப்படிக் கட்சிக்காரர்களைக் கொண்டு வருகிறான் என்பது பற்றி ஒரு நாள் கூட அவனிடமோ அல்லது மற்றவர்களிடமோ கேட்டு அறிந்ததில்லை; ஆர்வமும் காட்டியதில்லை.

இதனாலேயே யாதவுக்கு மது மீது ஒரு மரியாதையும், ஏன், அச்சமும் ஏற்பட்டிருந்தன. அப்படிப்பட்ட மதுவிடம் சாரு தன்னுடைய திட்டத்தைப் பற்றியும், யாதல் அக்கறை காட்டுவதைப் பற்றியும் பேசினால் மது என்ன சொல்லுவான் என்பது தெரியாதா? அதுவும் அவன் விரும்புகிற சாருவிடம்!

ஆனால் எதிர் பாராத சுகமான அதிர்ச்சி மறுநாள் பூமாலைத் தாக்காகத் தாக்கியது. சாரு அவனை மதிய உணவுக்கு அழைக்கிறாள். அவனிடம் அந்தரங்கமாக, விளம்பர விஷயமாகப் பேச வேண்டுமாம்.

உட்லண்ட்ஸ் ஒட்டல் வாசலில் நின்றிருந்த யாதல் மனத்தில் ஒரே ஒரு கேள்விதான் எழுந்தது. "மதுவிடம் சாரு யோசனை கேட்டாளா, இல்லையா?"

கேட்டிருந்தால் இன்று அழைப்பு வர நியாயம் இல்லை. கேட்கா விட்டால், சாரு இனிமேல் இந்த மதிய உணவுக்குப் பின் கேட்கக் கூடும்.

மூன்றாவது வகையான எண்ணம் அவனுடைய உள்ளத்தில் எழவே இல்லை. மதுவின் யோசனையை



மீறிச் சாரு செயல்படக் கூடும் என்று யாதல் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லை.

திடீரென்று, "ஹலோ" என்ற குரல் கேட்டது. சாரு நின்று கொண்டிருந்தாள்

"மன்னிக்கணும்; கொஞ்சம் தாமசம் ஆயிடுத்து"

"பரவாயில்லை, சாருமதி! வா, போகலாம்"

இருவரும் உள்ளே சென்றார்கள். ஒட்டல் நிரம்பி வழிந்து, வெளியே சுகஜீவிகள் நம்பர் டோக்கன்களுடன் உட்கார்ந்திருந்தார்கள்.

நல்ல வேளையாக ஒரு பெரும் கூட்டம் சீக்கிரமாகவே உள்ளே யிருந்து வெளியேற, காத்திருந்த கூட்டம் உள்ளே பாய்ந்தது.

சூப்பைப் பல தடவை தேக் கரண்டியால் கிளறி விட்டு ஓய்ந்த சாரு, "மிஸ்டர் யாதல்! நாம ஒரு கம்பெனி ஆரம்பிக்க வேணும்னா எவ்வளவு மூலதனம் தேவைப் படும்?" என்று கேட்டாள்.

"நேத்தே சொன்னேன்னு நெனைக்கிறேன்."

"ஞாபகமில்லை."

"எனக்குந்தான்."

"சரி, இப்பத்தான் யோசிச்சுச் சொல்லுங்களேன்!"

"ஒரு லட்சம் இருந்தா அமோகமா ஒரு அதிர் வேட்டுடன் ஆரம்பிக்கலாம். நீங்க காபி ரைட்டரா இருக்கிங்க. நான் கான்வாஸிங், மீடியா மானேஜ்மென்ட் எல்லாம் பார்த்துக்கறேன். காபி ரைட்டரா இருப்பதுடன், அக்கௌண்ட் எக்ஸிகியூடிவ் வேலையும் கொஞ்ச நாள் செய்யுங்கோ. ஒரு லேஅவுட் ஆர்ட்டிஸ்ட் தேவை. ஆனா இப்போதைக்கு மாசச் சம்பளத்தில் வச்சுக் கொள்ள வேண்டாம். பாட்கே இருக்கிறான். செய்கிற வேலைக்குக் குடுத்துக் கொள்ளுவோம்."

"சரி."

"என் வீடு இருக்கு. அதில் ஒரு ரூமை அலங்காரப் படுத்துவோம். ஆனா முக்கியமான தேவை ஒரு கார்."

"என் கிட்டே இருக்கு."

"உன் அண்ணா ?" என்றான் யாதவ்.

"நான் சமாளித்துக் கொள்கிறேன்."

"சரி."

"ஒரு லட்சம் மூலதனமா தேவை ?"

"ஆமாம்."

"எதுக்கு அவ்வளவு ?"

"ஃபர்னிச்சர், சோபா செட், டேபிள்."

"டேபிளும் பர்னிச்சரில் அடக்கம் !" என்று அலுப்புடன் முகம் சிவந்த சாரு, "இதெல்லாம்தாம் என் வீட்டில் இருக்கு !" என்றாள்.

"அப்படியானால் சரி"

"இப்ப எவ்வளவு தேவை ?"

"லட்சத்தைப் போட்டுப் பிரமாதமாத் தொடங்கலாம்."

"உங்க பங்கு ?"

"அதில் பாதி."

"நான் நாளைக்கே அம்பதாயிரத்துடன் வர்றேன். நீங்க ?"

"புரியலே, சாருமதி ?"

"நீங்க பாதின்னு சொன்னீங்களே ?"

"லாபத்திலே பாதின்னுதான் !"

"அப்ப முதலீட்டில் பாதி ?"



"நான்தான். என் மூளைதான் என் அநுபவந்தான்."

"அதாவது நான் பணம் போடுவேன். நீங்க அதை லாபமாக் கொழிக்க உபயோகிப்பீங்க !"

"ஏன் ? என்ன தப்பு ? கூட்டு வியாபாரத்தில் ரெண்டு பேரும் பணம் போடவேணும் என்கிற கட்டாயம் இருக்கா என்ன ? கண்ணுக்குத் தெரியற பணத்துக்கு ஆயிரம் பத்தாயிரம் லட்சம்னு மதிப்புப் போடறோம். கண்ணுக்குத் தெரியாத மூளைக்கு அப்படிப் போடமுடியாது. ஆனா என் மூளையை யாராலும் எளிசா வெலை பேச முடியாது."

"அப்படியா, யாதவ் ?"

"ஆமாம்."

"அப்ப ஒரு நிபந்தனை..."

"நிபந்தனை எல்லாம் எனக்குப் பிடிக்காது, சாருமதி."

"என்னை நீங்க ஏமாத்த மாட்டீங்கன்னு என்ன நிச்சயம் ?"

"ஏமாத்தினாச் சொல்லுங்க."

"ஏமாந்தப்புறம் சொல்லி என்ன லாபம் ?"

"அப்ப வேண்டாம். ஷீலா நாயர் ரெடி. அவருடைய அப்பா துபாயிலிருந்து தங்கத்தை உருக்கிக் குழாய் மூலமாக வெள்ளமா அனுப்பிச்சிண்டிருக்கார்."

"அப்ப ஏன் நேத்து என் வீட்டுக்கு வந்தீங்க ?"

"நீங்க ஷீலா நாயரை விடப் புத்திசாலி, சின்னவள். ஏன், அழகியும் கூட. பெரிய பெரிய கம்பெனிகளைப் பிடிக்கப் போறப்போ, நீங்க கூட இருந்தாலே போறும்."

"ஓ! என் பெண்மையை, இளமையை உபயோகிச்சுக்கலாம்னா ?"

''ஆமாம். செக்ஸ்தான் இந்த உலகத்திலே ரொம்ப முக்கியம். இப்ப எழுத்தாளர்கள் எதை எழுதறாங்கன்னு நெனைக்கிறீங்க? செக்ஸ்தான். ஒரு பொண்ணுக்கு மார்பும் இடுப்பும் துடையுந்தான் தேவைன்னு எழுத்தாளர்கள் சொல்கிறார்களே!''

''பெண்ணுக்கு இதயம் தேவை இல்லை அல்லவா?'' சாரு சிரித்தாள்.

''இளமையின் உபயோகம் தீர்ந்த பிறகு இதயத்துக்கு எப்ப வேணுமானாலும் மெதுவாப் போகலாமே!''

''சரி, என் உடல் வனப்பை எப்படி உபயோகிக்கலாம்னு நீங்க எதிர் பார்க்கறீங்க?''

''பல விதங்களில்.''

''உதாரணம்?''

''வருஷத்துக்குப் பத்து லட்சம் ரூபாய் விளம்பரம் கொடுக்கற கம்பெனி மானேஜிங் டைரக்டர் ஒரு நாள் உங்க தோழமையை நாடி விருந்துக்கு அழைக்கலாம்.''

''வெறும் விருந்தா, இல்லே...?''

''வெறும் விருந்தில் ஆரம்பிச்சுப் பெரிய விருந்தில் முடியலாம்!''

''அதற்குப் பலியாறது என்ன, மிஸ்டர் யாதவ்? என் இதயமா? இல்லை, என் உடலா?''

''நீங்க இந்த விஷயத்திலே பழைய காலப் பெண்ணா இருக்கீங்க. க்ளியோபாட்ரா கூடத் தன்னுடைய தொடர்ந்த வெற்றிக்குத் தன் உடம்பைத்தான் குடுத்தாள்.''

''அப்போ, மூலதனம் வெறும் ஒரு லட்சம் இல்லே, கூடவே என் உடம்பும்.''



யாதவ் ஒரு மாதிரியாக அவளைப் பார்த்தான். பேச்சு இம்மாதிரித் திசை திரும்பிப் போகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''என்ன மிஸ்டர் யாதவ்? பதில் சொல்ல முடியலையா?''

''வந்து, வந்து...''

''ஒண்ணு சொல்றேன். அதுக்கு உடன் படுகிறீர்களா?''

''என்ன?''

''என்னை முதல்லே கல்யாணம் செஞ்சு கொள்ளுங்க.''

''கல்யாணமா? உன்னையா?''

''ஆமாம்.''

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். அப்படின்னா நான் அதிர்ஷ்டசாலிதான்.''

''கலியாணத்துக்குப் பிறகு, நம் விளம்பரத் தொழிலை நம் பணத்துடன் ஆரம்பிப்போம்.''

''ரொம்ப சரி. நல்ல யோசனைதான்.''

''உங்க விளம்பர உலகச் சாதனைகளுக்கு என் இளமையும் வனப்பும் தூண்டுகோலாக இருக்கட்டும். நான் ஒரு க்ளியோபாட்ராவா மாறி விடுகிறேன். பத்து லட்சம் வியாபாரம் தருகிற பெரிய கம்பெனியின் மானேஜிங் டைரக்டருடன் சிறிய விருந்தில் ஆரம்பிச்சுப் பெரிய விருந்தில் சங்கமமாகிறேன். சரிதானே? உங்களுக்கும் திருப்திதானே?''

யாதவ் முகம் திடீரென்று சுருங்கியது.

''ஏன், உங்க மனைவியை...''

''சீ, என் மனைவியை அயலான் தொடறதா?''

''கத்தாதீர்கள்!''

''போதும். வாயை மூடு!'' என்று கத்தினான் யாதவ்.

''நான் ரெண்டு பேரை விரும்பினேன். அதாவது ரெண்டு மனசுகளை. ரெண்டும் இருபத்து நாலு காரட். ஒன்று, என் மாமா. சின்ன வயசிலே ஏற்பட்ட பரவசம் பிற்காலத்தில் ஒரு வினோத ஆசையா மாறிடுத்து. ஆனா அது காதல் இல்லேன்னு புரிஞ்சுது. அப்புறம் இன்னொருத்தர் என் வாழ்க்கையிலே குறுக்கிட்டார்; மதுசூதனன். உன்னதமான ஆண் மகன். ஆனா அவர் என்னை விரும்பலே. எனக்குத் தோல்வி. இந்த அனுபவ வெறியிலே உங்களை வரவழைச்சேன் மதுவைப் பழி வாங்கணுங்கற வெறி வேறு புகுந்து கொண்டது. இப்ப உங்ககிட்டே பேசினப்புறம் உங்க உடம்பிலே எத்தனை கோடிப் புழு நெளியறதுன்னு புரிஞ்சுண்டேன். ஒரு பெண்ணை உங்க லாபத்துக்கு நீங்க பலி இடத் தயார். ஆனா உங்க மனைவியை இன்னொருவன் லேசாகக்கூட இடிக்கக் கூடாது. எத்தனை அழகான லட்சியம், யாதவ்?''

யாதவ் எழுந்தான். நகர்ந்தான். மறைந்தான்.

சாரு வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு முப்பது ரூபாய் பில்லுக்கு முப்பத்தைந்தாகக் கொடுத்து விட்டு எழுந்தாள்.

அவள் வீட்டை அடைந்தபோது மூர்த்தி மட்டுமே இருந்தான்.

''ஹலோ மூர்த்தி மாமா!''

''ஹலோ சாரு, வா. உட்கார்.'' காலையில் உதாசீனம் செய்து விட்டு அவள் வெளியேறியது நினைவுக்கு வந்தது.



''எனக்கு ஒரு சின்ன உதவி செய்யணும்.''

''என்ன வேணுமானாலும்—''

''மாமா என்கிற முறையில் நீங்க செய்யவேணும்.''

''சரி, விஷயத்தைச் சொல்லு, சாரு.''

''முதல்லே என்னைச் சென்னைக்கு அழைச்சுண்டு போகணும்.''

''சரி.''

''அப்புறம், நீங்களும் தாத்தாவும் அம்மம்மாவும் சேர்ந்து ஒரு நல்ல பிள்ளையா, எனக்கு ஏத்தவனாப் பார்த்து, என்னை அவனுக்குக் கல்யாணம் பண்ணிக் குடுக்கணும்.''

மூர்த்திக்கு உடல் புல்லரித்தது.

''சாரு, சாரு, நீயா இப்படிப் பேசறே?''

''ஆமாம். நானேதான். நான் ஒரு பெண். என்னதான் படிச்சு, என்னதான் ஒரு பெரிய நகரத்தில் இருந்தாலும், வாழ்க்கைன்னு ஒண்ணு வேணும். அடைக்கலம் தேவை. ஒரு பெண் ஒரு ஆணின் நிழலில், பசுமையான நிழலில்தான் பயம் இல்லாம வாழ முடியும். முதிர்ச்சி இல்லாத, பக்குவமடையாத மனசோடு ஓர் இறுமாப்பில் இத்தனை நாள் இருந்துட்டேன். இப்ப என் மீது உண்மையான அக்கறை உங்களுக்கும் தாத்தாவுக்கும் அம்மம்மாவுக்குந்தான் இருக்கு. என் அம்மா எங்கேன்னு கூட...''

''அவள்...''

''தெரியும். ஒரு நாள் அவளையும் தேடிப் போவோம், என்னுடைய வேண்டுகோளை நெறைவேத்த வேண்டியது. உங்க பொறுப்பு!''

''விமானத்தில் சென்னை போயிடலாமா?''

"பாத யாத்திரைக்குக்கூட நான் தயார்!" என்றாள் சாரு.

உள்ளே பொங்கி வந்த ஆனந்தத்தை மூர்த்தி தன்னுள்ளேயே அழுத்தி அடக்கிக் கொண்டான்.

## 38

**அ**னந்தராமன் தம் வீட்டில் முன் வராந்தாவில் ஒரு சாய்வு நாற்காலியில் கண்களை மூடியவராய்ப் படுத்துக் கொண்டிருந்தார். அரை மயக்கம்; அரைப் பிரக்ஞை. வீட்டின் ஆரவாரம் அவரைப் பாதிக்கா விட்டாலும், பிரக்ஞை நிலையில் யாரெல்லாமோ வந்தார்கள்; போனார்கள்.

அன்று திங்கள். புதன் கிழமை கலியாணம். ஆபட்ஸ்பரி, ராஜேசுவரி என்று பெரிய கல்யாண மண்டபங்களை ஜட்ஜ் சதானந்தம் அவர் முன் கொண்டு வந்து நிறுத்தினார். அனந்தராமன் மறுத்தார். ரங்கா, ராமு இரண்டு பேரின் கல்யாணங்களும் அவருடைய பெண்களுடைய திருமணங்களும் சென்னைச் சத்திரங்களில்தான் நடந்தன. ஆனால் அவருடைய மனம் பெற்ற பிள்ளை மூர்த்தியின் கல்யாணம் பொது மண்டபங்களில் நடக்கக் கூடாது அவருடைய வீட்டிலேயே ஒரு பெரிய பந்தல் அமைத்து அதில் நடத்த வேண்டும் என்று விரும்பினார். கோமதிகூட ஆட்சேபம் தெரிவித்தாள். சுசீலா, பிள்ளை வீட்டில் கல்யாணம் நடத்துவது அசம்பாவிதம் என்று முகம் சுளித்தாள். எல்லாச் செலவுகளையும் பெண் வீட்டாரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிள்ளை வீட்டார் பரம்பரை பரம்பரையாகக் கருத்துக்கொண்டிருந்ததால்தான் அவருடைய ஏற்பாடு அசம்பாவிதமாகப் படுகிறது என்று அனந்தராமன், தம் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்காமல் பேசினார். பந்தல் செலவு, அதன் அலங்கார ஜோடனைச் செலவு, ஏன் சாப்பாட்டுச் செலவு கூடத் தம்முடையதுதான் என்று அவர் உறுதியாகக் கூறவே, ஜட்ஜால் ஏதும் சொல்ல முடியாமற் போயிற்று. இந்த விஷயத்தில் சுசீலாவுக்குத் திருப்தி. கைப் பணம் கரையாதே!



வாசலில் பந்தல் போடும் தொழிலாளர்களிடம் மேஸ்திரி ஏதோ இரைந்து கொண்டிருந்தான். சமையல் காண்ட்ராக்டர், சிப்பந்திகளுக்குப் பற்பல ஆணைகளை விடுத்துக் கொண்டிருந்தான். கலியாணம் பற்றி விசாரிக்க யார் யாரோ வந்து வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அனந்தராமன் உள்ளூர மனம் பூரித்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே, நெஞ்சிலிருந்து இரத்தத் துளிகள் சிந்தின.

பெண் அகிலா இல்லை. அவளைப் புற்று நோய் கொண்டு போயிற்று.

பெண் சீதா இருக்கிறாளா இல்லையா என்று தெரியவில்லை.

பிள்ளை ரங்கா தம் முகத்தில் கூட விழிக்கக் கூடாது என்று அவர் கட்டளை இட்டிருந்தார்.

பிள்ளை ராமுவுக்கு ஜாமீனில் விடுதலை கிடைத்து, அவன் தன் வீட்டில் தனியாக இருக்கிறான். இன்னும் அவன் அவர் முன் வந்து நிற்கவில்லை.

பேத்தி மாலுவுக்கு 'லீவு' கிடைக்காதாம்.

பேத்தி சாரு வரப் போகிறாளா இல்லையா என்று இன்னும் நிச்சயம் இல்லை.

ரங்காவின் மனைவி சொர்ணம், ஊராரின் ஏச்சுக்கு ஆளாகாமல் இருக்கப் போன் செய்து விசாரிக்கிறாள்

ராமுவின் மனைவி ருக்மிணி, அவர் என்ன சொல்லியும் கேளாமல், பங்களாவின் 'அவுட் ஹவு'ஸிலேயே தன்

இரு குழந்தைகளுடன் ஒடுங்கிக் கிடக்கிறாள். தன் கணவனுடைய செய்கையால் பெரிய தழைத்து நிற்கும் ஒரு குடும்பத்துக்கே அவமானம் நேரிட்டு விட்டது என்று அவள் புலம்புகிறாள்.

அவருடைய கிளைகளெல்லாம் இப்படிச் சின்னா பின்னமாகச் சிதறி நிற்கையில், வீட்டில் ஒரு மங்களகரமான நிகழ்ச்சி.

நிகழ்ச்சி நடக்கப் போவதைப் பற்றி மகிழ்வதா ?

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களும் அவரைச் சுண்டிச் சுண்டி இழுத்தன.

அவருக்கு அழவும் தெரியவில்லை, சிரிக்கவும் தெரியவில்லை.

திடீரென்று, ''தாத்தா, தாத்தா!'' என்று ஒரு சிறு குரல் கேட்டது. அவருடைய கையையும் பற்றி இழுத்தது.

அனந்தராமன் கண்ணைத் திறந்து பார்த்தார்.

ராமுவின் இரண்டாவது குழந்தை; எட்டு வயதுப் பெண் ராதை.

''என்னம்மா ?''

''தூங்கிட்டிருக்கேளா, தாத்தா? ரொம்ப ஸாரி, தாத்தா !''

''இல்லேம்மா. என்ன வேணும் ?''

''எல்லாரும் ஜம்முனு இருக்கறப்போ என் அம்மா மட்டும் பழம் புடவையைக் கட்டிண்டு நிக்கறா. நான் இந்த வீட்டுக்குள்ளே வரப்படாதாம்; போகப்படாதாம்.''

''அப்படியா சொன்னாள் ?''

''ஆமாம் தாத்தா. ஏன் தாத்தா, நீ என் தாத்தா தானே ? என் அப்பாவோட அப்பாதானே ?''



''இதிலே என்ன கண்ணு, சந்தேகம் ?''

''அப்ப நானும் இந்த வீட்டுப் பொண்ணுதானே ?''

அனந்தராமன் ராதையை அப்படியே அலாக்காகத் தூக்கித் தம் மடியில் வைத்துக் கொண்டார். அவருடைய கண்கள் கனத்தன.

''என் ரத்தம் உன் உடம்பிலும் ஓடறதும்மா நீ என் பேத்தி! இந்த வீட்டுப் பெண்தான்.''

''நாளைக்கும் நாளன்னிக்குங்கூட நான் பள்ளிக்கூடம் போகணுமாம் அம்மா சொல்றா.''

''நீ போக வேண்டாம், ராதை.''

''நீங்க இங்கே ஒக்காந்து சொல்லிட்டா எப்படி? நான் அம்மா கூடத்தானே இருக்கேன்!''

''நான் உன் அம்மாகிட்டே சொல்றேன்.''

''எப்ப ?''

''சொல்றேன், கண்ணா !''

''இப்பவே''

அனந்தராமன் சிரித்தார்.

''உன் பாட்டி எங்கே ?''

''புதுச் சித்திக்கு வாங்கி யிருக்கிற புடைவை, துணி மணிகளை வர்றவாளுக்குக் காட்டிண்டு அவாளோட பேசிண்டிருக்கா.''

''சரி, பாட்டியை உடனே வரச் சொல்லு.''

''அப்புறம் ?''

''நீ இங்கேயே இரு. நானும் பாட்டியும் உன் அம்மாவைப் போய்ப் பார்க்கிறோம்.''

''நிச்சயமா ?''

''நிச்சயமா.''

சொர்ணம் அடங்கி விட்டாள். அவளுடைய பெண் மாலு சொல்லாமல் கொள்ளாமல் பம்பாய் சென்று வேலையை ஒப்புக் கொண்டது முதலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், சில நாட்களிலேயே தன் மனத்தைத் தேற்றிக் கொண்டாள். படித்துப் பட்டம் பெற்ற பெண்களுக்குச் சுயமாகச் சிந்திக்கவும் தெரியும், அவர்கள் மீது பிறர் தங்கள் கருத்துக்களைத் திணிக்கக் கூடாது என்பன போன்ற எண்ணங்களை எண்ணிப் பழகியிராத சொர்ணம் மெல்ல மெல்லச் சிந்திக்கலானாள். எவ்வளவோ உயர் பதவிகளில் எத்தனையோ பெண்கள் கொடி கட்டிப் பறக்கிறார்கள். அதே சமயத்தில் தங்கள் மனத்துக்கு இசைந்த கணவருடன் இன்பமாக இல்லறமும் நடத்துகிறார்கள். வருங்காலத்தில் மாலு தன் மனத்துக்குப் பிடித்த ஒருவனை மணம் புரிந்து கொண்டு, தன் வேலையையும் காப்பாற்றிக் கொண்டு வளம் நிறைந்த வாழ்க்கை வாழ்வாள். அவளுடைய பெண் அம்மாவுடன் சண்டை பிடித்துக் கொண்டு செல்லவில்லை தன் போக்குக்கும் மனப்பாங்குக்கும் எதிரான நிலையில் இருக்கும் தாயார் ஒரு தடையாக இருக்கக் கூடும் என்ற நிலையில்தான் மாலு சொல்லிக் கொள்ளாமல் போயிருக்கிறாள். நிச்சயமாக ஒரு லீவில் அவள் பம்பாயிலிருந்து வருவாள். அப்படி வரும் போது சொர்ணத்துக்குப் பிடித்த வண்ணத்தில் விதம் விதமான புடைவைகளை வாங்கிக் கொண்டு வருவாள்.

அவள் அலமாரியைத் திறக்கையில் கணவன் ரங்காவின் குரல் கேட்டது. காலையிலிருந்தே கணவனுடைய மன மாற்றம் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி யிருந்தது.

ஏன் இந்த மாற்றம் ?

''சொர்ணம் !'' இரண்டாம் முறையாக அழைத்தவன் அவள் இருந்த அறைக்குள் பிரவேசித்தான்.

''என்ன ?''



''புறப்படு.''

''எங்கே ?''

''நம்ம வீட்டுக்கு.''

''என்ன உளர்றீங்க ? இது யார் வீடாம் ?''

''இது அப்பாவின் இன்னொரு வீடு. என்னை அவர் முகாலோபனம் செய்ய மாட்டேன்னு சபதம் செஞ்சார்னா அதுக்கு அடிப்படைக் காரணம் நான்தான். நாம ரெண்டு பேரும் இப்ப அங்கே போறோம். அம்மா அப்பா முன்னாலே நமஸ்காரம் செய்யறோம். 'என்னை மன்னித்து விடுங்கள் !' என்றால் அப்பா மன்னித்து விடுவார். எனக்கு அவர் சுபாவம் தெரியும்.''

''என்ன குத்தம் ?''

''பேசாதே, நாளன்னிக்கு மூர்த்தியின் கல்யாணம். நான் குடும்பத்தில் மூத்த பிள்ளை.''

சொர்ணம், பழைய சொர்ணமாக இருந்திருந்தால், ஒரு நாடகம் ஆடி வெற்றி பெற்றிருப்பாள். இப்போது அவள் மனத்தில் வலு இல்லை. இத்தனை காலமாக ஒரு மமதையில் இருந்து கொண்டு அறியாமையிலேயே உழன்று கொண்டு வந்திருக்கிறாள்.

''சரி,'' என்றாள்.

''இன்னொன்று.''

''என்ன ?''

''என் அம்மா அப்பாவின் கடைசிக் காலம் வரை, அல்லது என்னுடைய கடைசி நாள் வரை, நான், நீ, நம்ம பிள்ளை மூணு பேரும் திருவான்மியூரில்தான் இருக்கப் போறோம் !''

''தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு.''

''எனக்கு வேறு விதமாப் படறது. துஷ்டர்களை விட்டு விலகி இருக்கணும். நல்லவர்கள் அருகே இருக்கணும். நீ அங்கே மருமகளா இடுப்பு ஒடிய மாவு அரைக்க வேண்டாம். நான் பழைய ரங்காவாப் போகப் போகிறேன். தயவு செய்து நீயும் ஒத்துழை.''

சொல்லிவிட்டு அவன் நகர்ந்தான்.

'இதுவும் ஒரு விதத்தில் நன்மைதானோ?' என்று தன்னுள் கேட்டுக் கொண்ட சொர்ணம் அலமாரியைப் பூட்டினாள்.

## 39

வீடு வெறிச்சோடியது.

ராமுவுக்குப் பொழுது நகர்ந்தது. ருக்மிணியும் குழந்தைகளும் இல்லை. அவர்கள் திருவான்மியூரில் அவுட் ஹவுஸில் அப்பாவின் தயவில் இருக்கிறார்கள் என்பதை, ஜாமீனில் அவனுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த அட்வகேட் கிருஷ்ணன் மூலம் அறிந்து கொண்டான். மனைவியின் கையெழுத்தைப் போட்டுப் பணம் எடுத்த குற்றம் கோர்ட் வரை போகாமல், கிருஷ்ணன், ருக்மிணியின் அனுமதியுடன், பார்த்துக் கொண்டான். இனி, பெரிய வழக்கு. பல பேர்களில் அவனும் ஒருவன். தாற்காலிகப் பதவி நீக்கம் இப்போது. இனிமேல் ஒரு மாஜி ஹைகோர்ட் ஜட்ஜை விசாரணைக் குழுவின் தலைவராக நியமிப்பார்கள். பல மாஜி மந்திரிகளும், எம்.எல்.ஏ க்களும் அதிகாரிகளும் ஒரு கோடி ரூபாய் ஊழலில் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். குழு நியமிக்கப்பட்டு, அதற்கு ஒரு தனி இடம் தேடி, அது இயங்க ஆரம்பிக்கவே குறைந்தது ஆறு மாதங்களாவது ஆகும். அப்புறம் விசாரணை நத்தையின் வேகத்தில் நடைபெறும். அதற்குள் மாஜி மந்திரிகளில் ஓரிரண்டு பேராவது மீண்டும் பதவிக்கு வருவார்கள்.



அப்படி வந்தால் விசாரணை, தண்ணீரில் விழுந்த பட்டாசு தான். அவனுக்கு மீண்டும் பதவி கிடைக்காமல் போகலாம். ஆனால் நிச்சயமாகச் சிறை வாசம் நேரிடாது.

என்ன செய்ய?

செய்த குற்றத்தை யாரிடம் சொல்லி முறையிடலாம்?

அப்பாவைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?

அவன் செய்திருக்கும் மாபெரும் லஞ்ச லாவண்யத்திலிருந்து அவர் காப்பாற்ற மாட்டார். நீதி மன்றம் நியாயம் வழங்கட்டும் என்பார். ஆனால் தன் செய்கைக்கு அவன் உண்மையாகவே வருந்துகிறான் என்றால், நிச்சயமாக அப்பா அநுதாபம் காட்டுவார். எல்லாப் பிள்ளைகளும் அவருக்குச் சமம். குற்றம் செய்தவனையும் தம் அருகே உட்கார வைத்துக் கொண்டு சாப்பிடுவார். கோபம் இருக்கலாம்; ஆனால் குரோதமும் துவேஷமும் இரா.

அவன் ருக்மிணியையும் குழந்தைகளையுங்கூட அவ்வளவாக நினைத்துப் பார்க்கவில்லை.

அப்பாதாம் விசுவரூபம் எடுத்தார்.

விசுவரூபத்தில் கால் விரலின் நுகலைத் தொட்டால் கூடப் போதும் என்று ராமுவுக்குத் தோன்றியது.

சலவை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் அணிந்து கொண்டு அவன் புறப்பட்டான்.

சென்னை சென்ட்ரல்.

'பம்பாயிலிருந்து வரும் தாதர் எக்ஸ்பிரஸ் அரைமணி நேரம் தாமதமாக நான்காவது பிளாட்பாரத்தில் வந்து சேரும்' என்று ஒலி பெருக்கி ஜன இரைச்சலுக்கிடையே அலறியது.

''இதுவும் நல்லதுக்குத்தான் !" என்றாள் ஜானா.

''ஏன் ?" என்று கேட்டான் மூர்த்தி.

''அரை மணி நேரம் உங்களுடன் பேசலாம், இல்லையா ?" என்ற ஜானா, ''வாங்க, பிளாட்பாரத்தின் கோடிக்குப் போயிடுவோம். அங்கே ஜன நெரிசல் இருக்காது !" என்றாள்.

மூர்த்தி சிரித்தான்.

''பேச என்ன இருக்கு, ஜானா ?"

''இந்த ஒரு மாசமா ஒரு அரை மணி நேரமாவது எனக்குன்னு நீங்க கெடைக்க மாட்டீர்களான்னு நான் ஏங்கிண்டிருந்தது உங்களுக்கு என்ன தெரியும் ?"

''அந்த ஏக்கந்தான் நாளன்னிக்கு முடியப் போறதே ! அப்புறம் கொஞ்ச நாட்களுக்கு நாள் பூராப் பேச்சுத் தானே ? அதற்கு அப்புறம் அதுவும் அலுத்துவிடும்."

''பேசாம, போரடிக்காம வாங்க."

இருவரும் ஒரு சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்தார்கள். ஏற்கனவே பீடி புகைத்து, சிவப்பேறிய கண்களுடன் உட்கார்ந்திருந்த ஒரு சிவப்பு முண்டாசுக்காரன் எழுந்து நடந்தான்.

''போர்ட்டர் கூடக் குடித்து விட்டு வேலைக்கு வர்றான் ! அப்பப்பா, சாராய நெடி மூக்கை ரெண்டாக்கு கிறது !" என்றாள் ஜானா

''மதுவிலக்கை எடுத்தாலும் எடுத்தார்கள், பதினெட்டு வயசுப் பிள்ளைகள் கூடக் குடிக்க ஆரம்பிச்சுட்டார்கள்!" என்ற மூர்த்தி, ''என்ன பேசணுமோ, பேசு. நான் ஒய்வு எடுத்துக்கறேன்," என்றான்.

''சரி, ஒண்ணும் பேசலே."

''அதுக்குள்ளே கோபமா ?" மூர்த்தி சிரித்தான்.



''அம்மாவுக்கு இப்ப ரொம்ப சந்தோஷம். வர்றவா போறவா கிட்டே யெல்லாம் உங்க பேர்லேயும் உங்க அம்மா அப்பா பேர்லேயும் பாமாலை தொடுக்கறா."

''இது பெரிய நியூஸ் !"

''வைர நெக்லஸ், கல் வளையல், கல்யாண ஏற்பாடு இதெல்லாம் செய்யற வேலை !"

''எப்படியோ, இனிமேல் உன் அம்மா என்னைப் பார்த்து முகம் சுளிக்க மாட்டா."

''அப்பா நம்ம ஹனிமூனுக்கு ஏற்பாடு செய்தாச்சு. இதை நாளன்னிக்குத்தான் சொல்றதுன்னு இருந்தேன். ஆனா மனசு கேட்கலே"

''எங்கே ?"

''மகாபலேஷ்வர் !"

''என்ன மகாபலிபுரமா ?"

''மகாபலேஷ்வர்"

''எங்கே இருக்கு? ஒரிஸ்ஸாவில்தானே ? கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸிலே போகணும், இல்லியா ?"

ஜானா சிரித்தாள்.

''உங்களுக்கு ஹிஸ்டரி, எகனாமிக்ஸ், ஸோஷியல் ஸயன்ஸ், மாதமாடிக்ஸ் இதெல்லாந்தான் தெரியாதுன்னு நெனைச்சேன். இப்பத்தான் தெரியறது, ஜியாகரபியும் தெரியாதுன்னு. மகாபலேஷ்வர் மகாராஷ்டிரத்திலே இருக்கு. புனாவிலிருந்தும் போகலாம்; பாம்பேயிலிருந்தும் போகலாம்."

''அப்படியா ?" என்ற மூர்த்தி சட்டைப் பையிலிருந்த இரண்டு விமான டிக்கெட்டுகளை எடுத்து ஜானாவிடம் நீட்டினான்.

"என்ன, நீங்க வேறு ஏதானும் திட்டம் தீட்டியிருக்கிறீர்களா ?"

"படிச்சுப் பார்."

"பாம்பே ஏர் பஸ் !... எப்ப வாங்கினீங்க ?"

"தேதி இருக்கே !"

"மூணு நாள் முன்னாடி ஏன் சொல்லலே ?"

"நீ ஏன் இன்னிக்குச் சொன்னே ?"

"அப்பா ரகசியமா இருக்கட்டும்னு சொன்னார்."

"அதே உன் அப்பா என் கிட்டேயும் அதையேதான் சொன்னார். அவரும் நானுந்தான் டிக்கெட் வாங்கப் போனோம்."

"அப்படியா சேதி? வீட்டுக்குப் போனதும் அப்பாவை ஒரு கை பார்க்கிறேன் !"

"இப்ப அங்கே பார், தாதர் மெட்ராஸ் பாசஞ்சர் எவ்வளவு வேகமாக வர்றதுன்னு !"

இருவரும் எழுந்தார்கள். நடந்தார்கள்.

ரெயில் நின்றது.

மனோஜ், சாரு, மாலு மூவரும் இறங்கினார்கள்.

"உங்க ரெண்டு பேருக்கும் பாராட்டுதல்கள் !" என்றான் மனோஜ்.

"ரொம்ப சந்தோஷம் !" என்றாள் சாரு.

"நீ எப்படி வந்தே ? ஒரு நாள்கூட லீவு எடுக்க முடியாதே, பயிற்சிக் காலத்தில் !" என்று மூர்த்தி மாலுவைப் பார்த்துக் கேட்டான்.

"கெஞ்சினேன். அழுதேன். நான்கு நாள் தந்தார்கள். டிரெயினிங் பீரியட் நாலு நாளைக்கு இன்னும் நீளும் !



ஹாய் ஜானா, இப்ப நீ உண்மையிலேயே அழகா இருக்கே! இல்லே சாரு ?"

"என்னிக்கும் ஜானா அழகு அழகுதான் !" என்றாள் சாரு.

"சரி சரி, புறப்படு. எனக்குப் பசிக்கிறது !" என்றான் மனோஜ்.

"உனக்கு எப்ப பசிக்கலே ? கல்யாண்லேந்து திங்க ஆரம்பிச்சிருக்கே ; ஸாண்ட்விச், சிக்கி, பேல் பூரி, சப்பாத்தி, இட்லி, வடை, கொய்யாப் பழம், வேர்க் கடலை— அப்பப்பா !" என்றாள் சாரு.

"ஆனா ஒண்ணு. அண்ணா தனியாக் கஷ்டப்படப் படாதுன்னு சாருவும் அவனுக்கு உதவி பண்ணினாள் !" என்றாள் மாலு.

"நீயுந்தான் எங்களுடன் சேர்ந்து தின்னையே ? கொய்யாப் பழத்தில் உப்பைத் தடவித் தின்னா, வயிற்றை வலிக்காதுன்னு சொன்னது யாரு ?" என்றாள் சாரு.

ஐவரும் காரில் ஏறினார்கள்.

## 40

புதன் கிழமை.

காலை ஒன்பதரை மணிக்குத் திருமாங்கல்ய தாரணம் நிறைவேறியது. அதன் பின் நடைபெற வேண்டிய திருமணச் சடங்குகளை மூர்த்தியும் ஜானாவும் அவசர அவசரமாக முடித்து விட்டு, மாலையும் கழுத்துமாக அனந்தராமனை அணுகினார்கள்.

"நாங்க தயார், அப்பா !"

''ரங்கா, ராமு, சொர்ணம், ருக்மிணி ஒரு காரில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்,'' என்றார் அனந்த ராமன்.

''எங்கே போகிறோம்னு அவர்களுக்குத் தெரியுமா ?''

''தெரிய நியாயம் இல்லை. சரி, நீ காரை எடு. அம்மா வும் அதோ வர்றா.''

''மாலையைப் போட்டுக் கொண்டே கார் ஓட்டச் சொல்கிறீர்களா, அப்பா ?''

''என்ன தப்பு? பிறத்தியார் பார்த்துச் சிரிச்சாச் சிரிக்கட்டும். இப்ப நான் செய்ய இருக்கிற காரியத்தைப் பத்தி மட்டும் சிரிக்காமலா இருக்கப் போகிறார்கள் ? இது என்னுடைய நெடுநாளைய ஆசை.''

நான்கு பேரும் காரில் ஏறிக் கொள்ள, மூர்த்தி 'ஸ்டார்ட்' செய்தான். அவனுடைய காரைத் தொடர்ந்து ரங்காவின் கார் சென்றது.

அடையாறு, ஆல மரம்.

சிறு பிள்ளையின் மகிழ்ச்சியுடன் அனந்தராமன் இறங்கினார். கோமதியின் கையைப் பிடித்துக் கொண்டார் பிறகு, ''டேய், என்னடா கையைக் கட்டிண்டு நடக்கிறே? ஜானாவின் கையைப் பிடித்துக் கொள் !'' என்றார்.

''ரெண்டு அண்ணாக்களும் கைகளை வீசிக் கொண்டு தான் நடக்கிறார்கள்!''என்ற மூர்த்தி ஜானாவின் கையைப் பிடித்தான்.

''ரொம்ப அழுத்தாதீங்க !'' என்று கூறி ஜானா சிரித்தாள்.

அனந்தராமன் ஆரம்பித்தார்.

''டேய் ! இதுதான்டா நமக்கெல்லாம் உதாரணம். நடுத் தண்டு இருக்கு பாரு, அதுதான் ஒரு சின்ன விதையி



லிருந்து புறப்பட்டு விசுவரூபம் எடுத்திருக்கு. இந்தக் கிளைகளெல்லாம் நடுத்தண்டு பெற்ற செல்வங்கள் நான் மரம்னா, நீங்களெல்லாம் கிளைகள். கிளைகள் இல்லேன்னா எல்லாம் சூனியம், என்னடா ரங்கா, புரியறதா ?''

''புரியறது.''

''டேய் ! உனக்கு ?''

''புரியறது !'' என்றான் ராமு.

''ஆனா, செயல் முறையிலே புரியாதது மாதிரி நடந்து கொள்ளுகிறீர்கள். சமூகம்னா பல குடும்பங்களின் சேர்க்கையடா. குடும்பம் சரியா இருந்துட்டாச் சமூகம் சரியாயிடும். பிள்ளைகள்னு இருந்தா, கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனா விரோத பாவம் இருக்கக் கூடாது. ஒரு குடும்பம் எப்படி இருக்கணும், கப்பும் கிளையுமா ஒரே இடத்தில் எப்படி நன்றாக வளரணும் என்று காட்டத் தான்டா ஆல மரம் தோணியிருக்கு என் கண் முன்னாலே என் கிளைகள் ஒடிஞ்சு விழறதையோ, அழுகிச் சாவதையோ என்னால் பொறுத்துக் கொள்ள முடியலே. பாரம்பரியமா, காலம் காலமாத் தொடர்ந்து வந்துண் டிருந்த கூட்டுக் குடும்பம் இப்ப நலிந்து விட்டது. ஆனா, சமூகத்திலே பல பேர் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிச்சா, அதை மந்திரி வந்து தெறக்கிறார். அதுக்கு மகத்துவம் ஏற்படறது. இந்தக் கூட்டுறவு ஐடியா தொன்று தொட்டு நம்ம புண்ணிய பூமியிலே இருந்து வர்றதுடா. இதிலே நான் தலைவர் ; நீங்க மூணு பேரும் உப தலைவர்கள். உங்க குழந்தைகள் அங்கத்தினர்கள். இதிலே பரஸ்பர அன்பும் ரத்த பாசமும் தானா ஏற் படறது. சண்டை பூசல் தெரு வரைக்கும் வர்றதில்லை என் கருத்து மாடர்னாப் படாம இருக்கலாம்.''

அனந்தராமன் தொடர்ந்தார்.

''காயத்திரி மந்திரத்தையே ஆங்கிலத்தில் சொல்லத் துடிக்கிற இந்தக் காலத்தில் என் கருத்து உளுத்துப் போன கருத்து மாதிரிப் படலாம். ஆனா, இந்த மரத்தைப் பார்த்து, இதனால மனசில் ஏற்படற எழுச்சிகளை, நீங்க அமைதியா, பொறுமையா எண்ணிப் பார்த்தீங்கன்னா, நான் பழையதைப் புதுக் கோணத்தில் சொல்றது புரியும்.''

மூன்று பிள்ளைகளும் அமைதியாக நின்றார்கள்.

அனந்தராமன் மெல்ல நடந்தார். தலையை இடிக்கும் கிளைகளைத் தடவிக் கொடுத்துக் கொண்டே அடி மரத்துக்கு வந்தார். தொட்டார். ஒரு முறை வலம் வந்தார். அவர் மீது சருகுகள் விழுந்தன. ஒரு காகம் எச்சமிட்டது.

அவர் லட்சியம் செய்யவில்லை.

மரத்தை வலம் வந்த அவர் அதன் மீது சாய்ந்து கொண்டார். தம் மூன்று பிள்ளைகளையும் பார்த்தார்.

ஒரு புது நம்பிக்கை பிறந்தது. அது ஊட்டிய தெம்பில், ''ரங்கா, ராமு, மூர்த்தி! மூணு பேரும் என் பக்கத்திலே நில்லுங்கள். சொர்ணம், என் வண்டியிலே காமிரா இருக்கு. முப்பத்தாறு போட்டோ எடுக்கலாம். நீயே எல்லாத்தையும் எடு,'' என்றார்.

சொர்ணம் போட்டோ எடுக்கலானாள். இதுவரை அவளுக்குப் புரியாத ஒரு புது அமைப்பைத்தான், நாம் போட்டோ எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அவள் அப்போது உணரவில்லை.

ஆனால் அது அவளுடைய சிந்தனையைத் தூண்டி விட்டது. மாமனாரின் முகத்தில் வீசும் பிரகாசம் உள்ளே எரியும் தீபத்தின் எதிரொளி என்பதை மட்டும் அவளால் எளிதில் உணர முடிந்தது.

21203